
# எம்.கே.டி. பாகவதர் கதை



விந்தன்



# எம்.கே.டி.
# பாகவதர் கதை

விந்தன்

அருந்ததி நிலையம்
19 கண்ணதாசன் சாலை
தியாகராய நகர்
சென்னை – 600 017.

**Rs. 50.00**

☐ M.K.T. Bagavadhar Kadhai - By Vindhan

☐ First Edition 1983, Second Edition 2000 ☐ Published by ARUNTHATHI NILAYAM 19 Kannadhasan Salai T. Nagar Chennai - 600 017. ☐ Laser by Guru Computers Chennai - 24. ☐ Printed by J.M. Process & Prints Chennai - 5. ☐

# முன்னுரை

அன்புடைய வாசகப்பெருமக்களுக்கு,

பணிவான வணககம்

காலஞ்சென்ற (எழிலிசை) ஏழிசை மன்னர் திரு எம் கே டி அவர்களின் வாழக்கை சரித்திரத்தைப் படித்துப் பார்த்தேன் உண்மையிலேயே இவர் தமிழ்த்திரைவானின் சரித்திர நாயகர்தான் ஏனெனில் அந்தப பழங்காலக கலைஞர்களிடையே தனிததன்மை வாய்நத ஒப்பற்ற திறனும், ஆற்றலும் பெற்றவர்கள்தான் முன்னணி நட்சத்திரங்களாகத் திகழ முடியும் அப்படிப்பட்ட சிறப்பு வாய்ந்த காலத்தில் தமிழ்மக்களின் ரசனையை தன் பக்கம் கவர்ந்து, தனக்கென ஓரிடத்தை திரையுலகில் வகிதது, மங்காப் புகழடைநது அமரரானவர் சரித்திர நாயகா தானே! அதிலென்ன சந்தேகம் இருககமுடியும்!!

திரு எம கே டி அவர்களின் மூலம், எனக்கு இரட்டிப்புப்பெருமை உண்டு ஒன்று அவருடைய ஆற்றலை நேரிடையாகக் கண்டும், அனுபவித்தும், அவருடன் பணியாற்றியது இரண்டாவதாக அவர் தோன்றிய அதே விஸ்வகர்மா குலத்தில நானும் தோன்றியது

இந்த நூலின் ஆசிரியர் ஏழிசை மனனரைப் பற்றி கூறும்போது, தனிப்படடயாரையும் குறிப்பிட்டு மன வருத்தம் அடையாமலும், அதே சமயத்தில் பரவலாக தற்போது கலைஞர்கள் மீதுள்ள சின்னஞ்சிறு குறைகளைக் குத்திக்காட்டி, அநதக குறைகளின்றி தங்களைத் திருத்திக் கொள்ள பிற்காலக் கலைஞர்களுக்கு சரியான வழிகாட்டியாக இந்த நூலை அமைத்துள்ளார் இதேபோல் திரையுலகில் சாதனைபடைத்த மற்ற

கலைஞர்களைப் பறறியும் ஒரு வரலாறு தேவை என்பது என விருப்பம

நூலாசிரியர் மிகவும் சிரமப்பட்டு பல தகவல்களை சேகரிதது தொகுத்து அளித்திருக்கிறார் என்பதை என்னால் நன்கு உணர முடிகிறது இந்த நூலின் இடவசதியை உத்தேசித்து மிகவும் சுருக்கமாகததான் இந்த சரிதத்தை இயற்றி உள்ளார் என நினைககிறேன் ஏனென்றால் இவரைப் போன்ற கலைஞர்களைப் பற்றி எழுத வேண்டுமானால் பல அததியாயங்கள் அல்லவா போடவேண்டும் இருப்பினும் இது அரிய முயற்சி! இது ஒரு சிறந்த காரியம்!! போற்றுவதற்குரியது என்பதில் சிறிதும் ஐயம் இல்லை

'வளர்மதி நிலையம்',
30, ராஜாபாதர் தெரு,
தி நகர், சென்னை – 600 017

அன்பன்,
கே.ஏ. தங்கவேலு.

# எம்.கே.டி. பாகவதர் கதை

## எழிலிசை மன்னர்
## எம்.கே.டி பாகவதர்
## திரையும் வாழ்வும்

***சராசரங்கள் வரும் சுழன்றே!***

*ஐம்பது நாட்கள் ஓடும் படத்தை இப்போது நீங்கள் பார்க்கிறீர்கள்; நூறு நாட்கள் ஓட்டப்படும் படத்தையும் இப்போது நீங்கள் பார்க்கிறீர்கள்.ஆயிரம் நாட்கள் ஒரே தியேட்டரில், ஒரே மூச்சில், யாரும் ஓட்டாமல் தானாகவே ஓடிய படத்தை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா?*

*அந்த அதிசயம் 1944-ம் ஆண்டு இந்தத் தமிழகத் திலே நிகழ்ந்தது. அதை நிகழ்த்திய படம் 'ஹரிதாஸ்'. அதில் நடித்தவர் தமக்குப் பின்னால் தம்மைப் போல் என்று சொல்ல வேறு யாரையுமே விட்டுச் செல்லாத திரையுலகச் சக்கரவர்த்தி திரு எம்.கே தியாகராஜ பாகவதர்.*

*'1944-க்கு முன்னாலும் அப்படி ஒரு படம் ஓடியதில்லை. அதற்குப் பின்னாலும் ஓடப் போவதில்லை!' என்ற பெயரையும் பெருமையையும் நிரந்தரமாகவே பெற்றுவிட்ட அந்தப் படம் சென்னை பிராட்வே டாக்கீஸில் ஓடிக் கொண்டிருக்கிறது. மக்கள் அந்தப் படத்தில் பாகவதர் பாடியுள்ள பாடல்களை மட்டும் அப்போது வீதிக்கு வீதி பாடிக்கொண்டிருக்கவில்லை; அதற்கு முன்னால் அவர் பல படங்களில் பாடியுள்ள பாடல்களையும் அப்படியே திரும்பத் திரும்பப் பாடிக்கொண்டிருக்கிறார்கள்.*

அத்தனையும் இன்று வரும் சினிமாப் படங்களில் பாடப்படுவது போல் எளிய சந்தங்களில் அமைக்கப் பட்டவையா? இந்துஸ்தானி மெட்டுக்களில் பாடப் பட்டவையா? இல்லை; சுருதி சுத்தமான கர்நாடக இசையில் அமைக்கப்பட்டவை; பாடப் பட்டவை.

பாகவதரால் அவற்றை எப்படி அவ்வளவு எளிமையாக, அவ்வளவு இனிமையாக, அவ்வளவு எழிலாகப் பாட முடிந்தது? படித்தவர்களால் மட்டுமல்ல; பாமரர்களாலும் அவற்றை எப்படி அவ்வளவு சுத்தமாகப் பின்பற்றி இசைக்க முடிந்தது?

அதை வெறும் 'அதிசயம்' என்று சொன்னால் போதாது; 'அதிசயத்திலும் அதிசயம்' என்றே சொல்ல வேண்டும்.

ஆம், இந்துஸ்தானி இசையை மட்டுமல்ல; கர்நாடக இசையையும் பாடுவதுபோல் பாடினால் அதை எல்லோரும் பாட முடியும்,அனுபவிக்கமுடியும், என்னும்உண்மையைப்பொறாமை மிகுந்த இந்த உலகத்துக்கு முதன் முதலில் புன்னகையுடன் எடுத்துக்காட்டிய பெருமை பாகவதரையே சேரும்.

இதைச் சிலர் மறுக்கலாம்; ஆனால் மறைக்க முடியாது!

அதோ, காரில் போகிறாரே; அவர் தமக்குப் பக்கத்தில் 'உம்'மென்று முகத்தைத் தூக்கிவைத்துக் கொண்டு உட்கார்ந் திருக்கும் தம்முடைய இளம் மனைவியைக் கடைக் கண்ணால் பார்த்துச் சிரித்துக் கொண்டே, 'ராதே, உனக்குக் கோபம் ஆகாதடி! என்று பாடுகிறார்.

இதோ, வெயிலில் வியர்க்க விறுவிறுக்க கட்டை வண்டியை இழுத்துக் கொண்டு செல்கிறானே, இவன் தனக்கு எதிர்த்தாற்போல் தலையில் புற்கட்டைச் சுமந்து வரும் பெண்ணைப் பார்த்துப் பெருமூச்சு விட்டுக் கொண்டே, 'மன்மத லீலையை வென்றார் உண்டோ?' என்று பாடுகிறான்.

# 7

அதோ, நெற்றியில் பட்டை பட்டையாக விபூதி அணிந்து கோயிலுக்குப் போய்க்கொண்டு இருக்கிறாரே ஒரு பக்தர், அவர், 'மனமே ஈசன் நாமத்தை வாழ்த்துவாய்' என்று பாடிக் கொண்டே போகிறார்.

இதோ, வாழ்க்கையில் வெறுப்புற்றுக் கையில் திருவோட்டுடன் கோயில் வாசலில் உட்கார்ந்திருக்கிறாரே ஒரு பண்டாரம், இவர் 'சொப்பன வாழ்வில் மகிழ்ந்து, சுப்பிரமணிய சுவாமி உனை மறந்தார்!' என்று பாடுகிறார்.

இப்படி எல்லோரும் தம்மை மறந்து பாடிக் கொண் டிருக்கும் வேளையில்தான் நெஞ்சைப் பிளக்கும் அந்தச் செய்தி வருகிறது!.

பாகவதர் கைதானார்!

அவ்வளவுதான்; தந்தி அறுந்த வீணைபோல் 'டங்'கென்று ஓர் ஒலி எங்கிருந்தோ ஒலிக்கிறது; வீதிக்கு வீதி ஒலித்துக்கொண்டிருந்த பாட்டுக்கள் அத்தனையும் அப்படி அப்படியே நிற்கின்றன. ஒரு கணம் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொள்கின்றனர்; மறுகணம் ஒருவருக்குத் தெரியாமல் ஒருவர் அழுகின்றனர். மேல் துண்டால் தன் முகத்தை மறைத்துக் கொண்டே திரும்புகிறார் ஒருவர்; கைக் குட்டையால் தன் கண்களைத் துடைத்துக் கொண்டே திரும்புகிறார் இன்னொருவர்.

பரஸ்பரம் கண்ணீரை மறைத்தாலும் ஒருவர் காதில் இன்னொருவருடைய விசும்பல் ஒலி விழுந்து விடுகிறது; 'இனி மறைத்துப் புண்ணியம் இல்லை!' என்று எல்லோரும் வாய் விட்டே அழுதுவிடுகின்றனர்!

யாருக்காக? அவர் கைது செய்யப்படுவதற்குக் காரணமாக இருந்த லட்சுமிகாந்தனுக்காகவா? இல்லை; பாகவதருக்காக, பாடப் பாடத் திகட்டாத அவருடைய பாடல்களுக்காக!

தம் பாட்டுத் திறத்தால் இந்தப் பாரையே அழ வைத்த பாகவதர் அழுதாரா? இல்லை; அவர் அழவே இல்லை! கடைசி வரை அழவே இல்லை!

அவரால் மட்டும் எப்படி அந்த சோகத்தைத் தாங்க முடிந்தது? அவரால் மட்டும் எப்படி அப்போதும் பழுத்த வேதாந்தியைப் போல 'சராசரங்கள் வரும் சுழன்றே!'என்ற பாடலைத் தமக்குள் முனகிக் கொண்டே போலீசாருக்குப் பின்னால் போக முடிந்தது?

அதைத் தெரிந்து கொள்ள வேண்டுமானால் அவரைப் பற்றியும், அவருடைய வாழ்க்கையைப் பற்றியும் நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

அதற்காகவே இந்தக் கதை:

**உனைக் கண்டு மயங்காத பேர்களுண்டோ?**

'அசோக்குமா'ரில் கண்ணாம்பா நடனமாட, பாகவதர் பாடும் பாடல் இது. கண்ணாம்பாவைக் கண்டு யார் மயங்கினார்களோ இல்லையோ, பாகவதைரைக் கண்டு எல்லோரும் மயங்கி னார்கள். அந்த மயக்கத்தில், 'பாகவதர்' எங்கள் மாவட்டத்தைச் சேர்ந்தவர்' என்றார்கள் தஞ்சாவூர்க் காரர்கள்; 'அதெல்லாம் ஒன்றும் இல்லை; அவர் எங்கள் மாவட்டத்தைச் சேர்ந்தவர்தான்!'என்றார்கள் திருச்சிக் காரர்கள்.

இரு சாரார் சொன்னதிலும் ஓரளவு உண்மை இருந்தது. பாகவதரின் தாயார் மாணிக்கத்தம்மாளுக்குத் தஞ்சாவூர்; தகப்பனார் கிருஷ்ணமூர்த்திக்குத் திருச்சி, பிறந்தது தஞ்சையில்; வளர்ந்தது, வாழ்ந்ததெல்லாம் திருச்சியில்.

பிறந்த தேதி : 1.3.1910.

ஆம், மாதக் கடைசியில் பிறந்து அவர் தம் தந்தையைச் சோதனைக்கு உள்ளாக்கவில்லை; மாதம் பிறக்கும் போதே அவரும் பிறந்துவிட்டார்!

இனி அவரோ, அவரைச் சேர்ந்தவர்களோ அவருடைய ஜாதகத்தைப் பார்த்து ஒன்றும் ஆகப்போவ தில்லை யாகையால் நாமும் பார்க்க வேண்டாமே!

பாகவதரின் பள்ளிப்படிப்பைப் பற்றி அதிகமாக ஒன்றும் சொல்வதற்கில்லை; பாரதியார் தாம் கற்ற ஆங்கிலக் கல்வியைப் பற்றிப் பாடினாரே, செலவு தந்தைக்கோர் ஆயிரம் சென்றது, தீதெனக்குப் பல்லாயிரம் நேர்ந்தன' என்று, அந்தக் கதைதான்! ஆம், பாரதியாரைப் போலவே தம்பி தியாக ராஜனும் அந்தத் தீதிலிருந்து தப்பிவிட்டான்.

எப்படி?. . .

அப்பா 'பள்ளிக்கூடத்துக்குப் போடா!' என்றால், பையன் திருச்சியில் உள்ள உய்யகொண்டான் ஆற்றுப் பாலத்துக்குப் போய்விடுவான். அந்தப் பாலத்திலிருந்த ஆற்றில் குதித்து ஆனந்தமாக நீந்துவதில்தான் அவனுக்கு எவ்வளவு ஆசை! ஆனாலும் சக மாணவர்கள் சும்மா இருப்பார்களா? அவர்களில் யாராவது அதைப் பார்த்து விட்டுப் போய் அவன் அப்பாவிடம் சொல்லி விடுவார்கள். அப்பா அவன் பள்ளிக்கூடம் போகாததைப் பற்றிக் கூட அவ்வளவு கவலைப்படமாட்டார்; 'தண்ணீரில் குதித்து நீந்துகிறானே, தப்பித் தவறி மூழ்கி வைத்தால் என்ன செய்வது?' என்று தான் கவலை கொள்வார். வீட்டுக்கு வந்ததும், 'நீ பள்ளிக்கூடம் வேண்டுமானால் போகாமல் இரு; ஆற்றுக்கு மட்டும் போகாதே!' என்று கண்டிப்பார்; 'சரி'என்பான் பையன். ஆனால் அது அப்போதைக்குத்தான். அப்புறம், உய்யகொண்டான் பாலத்தையும் அவனால் மறக்க முடியாது; அதிலிருந்து ஆற்றில் குதித்து நீந்துவதையும் அவனால் நிறுத்தமுடியாது. 'தந்தைக்குத் தெரிந்து தானே நீந்தக் கூடாது? தெரியாமல் நீந்தினால் என்னவாம்?' என்று தன்னைத்தானே சமாதானம் செய்து கொண்டு அவன் பாட்டுக்கு நீந்திக்கொண்டே இருப்பான். அவன் போதாத

காலம், அந்த நிலையில் ஒரு நாள் அவனைப் பார்த்துவிட்ட அடுத்த வீட்டுக்காரர் அவனுடைய அப்பாவிடம் போய் விஷயத்தைச் சொல்லி விட்டார். அவ்வளவு தான்; அப்பா ஆற்றை நோக்கி' விடுவிடு'என்று விரைந்தார். அதற்குள் வேறொரு நண்பன் மூலம் விஷயத்தைத் தெரிந்து கொண்டு விட்ட தியாகராஜன் சட்டென்று ஆற்றைவிட்டுக் கரையேறி, மணலில் விழுந்து உருண்டு புரண்டு எழுந்து நின்றான். அப்பா வந்தார்; ஏண்டா மீண்டும் நீந்த ஆரம்பித்து விட்டாயா?' என்றார். 'நான் எங்கே அப்பா, நீந்தினேன்? நானும் இவனும் இங்கே சடுகுடு அல்லவா விளையாடிக் கொண்டிருக்கிறோம்?' என்று பையன் சமாளித்தான். 'அடுத்த வீட்டுக்காரர் சொன்னது பொய்யா?'என்றார் அப்பா; 'அவர் யாரைப் பார்த்தாரோ என்னவோ?' என்றான் பையன். 'சரி சரி, வா!' என்று அவனை வீட்டுக்கு அழைத்துக்கொண்டு வந்து குளிக்கச் சொன்னார் அப்பா.

திருச்சி பாலக்கரையில் 'பழைய கோயில்' என வழங்கும் 'ஜபமாலை மாதா கோயி'லில் அப்போதிருந்த பள்ளிக் கூடமே தியாகராஜன் படித்த பள்ளிக்கூடம். வாத்தியார் பெயர் திரு. அப்பாத்துரை. ஏழைக் குழந்தைகளுக்குக் கல்வி புகட்டுவது அவருக்குத் தொண்டாயிருந்தது; தியாகராஜ னுக்கோ அது தொல்லையாயிருந்தது. காரணம் வேறொன்று மில்லை; திருப்புகழும், தேவாரமும் அந்தக் குழந்தையின் உள்ளத்தை அவ்வளவு தூரம் கவர்ந்திருந்ததுதான்.

நகைகளுக்கு நகாசு வேலைசெய்யும் தொழில் தகப்பனாருக்கு. அந்தத் தொழிலைத் தம்முடன் சேர்ந்து தம் மகனும் செய்ய வேண்டுமென்று அவர் விரும்பினார். அவருடைய விருப்பத்தைத் தம்பி தியாகராஜனும் தன்னால் முடிந்த வரை நிறைவேற்றி வைக்கத்தான் முயன்றான். ஆனால் அதற்காக அவன் சுத்தியலை எடுத்துப் பனையின் மேல் தட்டியபோது, அவன் கையாண்ட நகைகளில் நகாசு

பிறக்கவில்லை; திருப்புகழ் சப்தமும், தேவாரப் பண்ணுமே பிறந்தன. தியாகராஜன் என்ன செய்வான், பாவம்! அந்தச் சந்தத்துக்கும் பண்ணுக்கும் ஏற்பத் தன்னை மறந்து பாட ஆரம்பித்துவிடுவான். அவ்வளவு தான் தெருவோடு போய்க் கொண்டிருக்கும் மக்கள் தங்களை மறந்து விடுவார்கள்; தங்களுடைய வேலைகளை மறந்து விடுவார்கள்; தியாக ராஜனைச் சுற்றி நின்று அவனுடைய அமுதகானத்தை அப்படியே பருகி ஆனந்தத்தில் திளைக்க ஆரம்பித்து விடுவார்கள்!

தகப்பனார் வருவார்; 'என்னடா இது! ஏன் இப்படிக் கூட்டத்தைச் சேர்த்துக் கொண்டாய்?' என்பார். நானா சேர்த்தேன்? அதெல்லாம் ஒன்றுமில்லை, அப்பா! நான் பாட்டுக்கு வேலை செய்து கொண்டே பாடிக் கொண்டிருந் தேன்; இவர்கள் தாங்களாகவே வந்து அதைக் கேட்க ஆரம்பித்துவிட்டார்கள்!' என்பான் தனயன்.

'நீ பாடாமல் வேலை செய்திருந்தால் இங்கே கூட்டம் சேராமல் இருந்திருக்குமோ, இல்லையோ?' என்பார் கிருஷ்ணமூர்த்தி; இங்கே கூட்டம் சேராமல் இருந்திருந்தால் நானும் மேலே பாடாமல் வேலை செய்திருப்பேனோ இல்லையோ?' என்பான் தியாகராஜன்! தகப்பனார் சிரித்து விடுவார்.

இதே மாதிரி தன் தாயையும் தம்பி தியாகராஜன் சிரிக்க வைக்க முயன்றதுண்டு. ஆனால் . .

ஒரு நாள் விளக்கு வைக்கும் நேரம்; தன் அருமை மகனை மண்ணெண்ணெய் வாங்கிக் கொண்டு வருமாறு பணித்தார் தாயார் மாணிக்கத்தம்மாள். 'சரி' என்று பையன் அம்மா கொடுத்த காசையும், புட்டியையும் வாங்கிக் கொண்டு கடைக்குச் சென்றான். எதிர்த்தாற் போல் அரிசி முறுக்கு விற்றுக்கொண்டு வந்தான் ஒருவன். பையனுக்கு முறுக்கைக் கண்டதும் வாயை நமைத்தது; கையிலிருந்த

காசைக் கொண்டு அதை வாங்கித் தின்றுவிட்டு மண்ணெண் ணெய்க்குப் பதிலாகப் புட்டியில் தண்ணீரை நிரப்பிக் கொண்டு வீட்டுக்கு வந்தான். தாயார் உண்மையை அறியாமல் அவன் கொண்டு வந்த தண்ணீரை விளக்கில் ஊற்றி ஏற்ற முயன்றாள். 'மலைக் கோட்டை விநாயகரே, என்னைக் காட்டிக் கொடுத்துவிடாதே! உன் அருளால், தண்ணீர் மண்ணெண்ணெயாக மாறட்டும்!' விளக்கும் தட்டாமல் எரியட்டும் என்று மானசீகமாகத் தொப்பை யப்பனை வேண்டினான் பையன். இந்த மாதிரி காரியத்துக் கெல்லாம் அவர் கை கொடுப்பாரா? கை விட்டுவிட்டார்; குட்டு வெளிப்பட்டுவிட்டது. 'ஏண்டா, இப்படிக் கூடச் செய்யலாமா?' என்றாள் தாயார்; 'நான் என்னம்மா செய்வேன்? அவன் ஏன் அரிசி முறுக்கை எடுத்துக்கொண்டு எனக்கு எதிரே வர வேண்டுமாம்' என்றான் பையன்.

தாயார் சிரிக்கவில்லை; அழுதாள்!

ஏன்?. . .

கேவலம், ஒரு முறுக்குக்காகக் குழந்தை இந்த அளவுக்குத் துணியும் விதத்திலல்லவா நம் குடும்ப நிலை இருக்கிறது? இதற்கு ஒரு முடிவே கிடையாதா?

தாயார் கண்ணீரைத் துடைத்துக் கொண்டே பெருமூச்சு விட்டாள். தியாகராஜனுக்கு 'ஒன்றுமில்லை' என்று சொல்லிக் கொண்டே அவள் அவனை விட்டு அப்பால் போய் விட்டாள்.

ஆம், எழிலிசை மன்னர் திரு எம்.கே.தியாகராஜ பாகவதர் ஏழைக் குடும்பத்தில் பிறந்தவர்தான்; அவருக்கு இருந்த சொத்தெல்லாம் அவருடைய பாட்டனார் முத்து வேல் ஆச்சாரி திருச்சி பாலக்கரையில் விட்டுச் சென்றிருந்த ஓட்டுவில்லை வீடு ஒன்றுதான். அதன் மேலும் கடன் வாங்கிக் காலம் தள்ளவேண்டிய நிர்ப்பந்தம் அவருடைய தகப்பனார் கிருஷ்ணமூர்த்திக்கு. இந்த நிலையில் இரண்டே இரண்டு ரூபாய் கூலி கிடைக்கக்கூடிய வேலையைக்

கொண்டு வந்து கொடுக்கும் தம்முடைய வாடிக்கையாள ரிடம் கூட அவர் என்ன சொல்வாராம், தெரியுமா?

'ஐயா! நாளை மாலை உம்முடைய வேலை முடிந்துவிடும். நீர் மறக்காமல் வந்து இரண்டு ரூபாயைக் கொடுத்துவிட்டு உம்முடைய நகையை வாங்கிக் கொண்டு போய்விடும். இல்லாவிட்டால் கூலி இரண்டு ரூபாயோடு நிற்காது; வட்டியும் சேர்ந்துவிடும்!' என்பாராம்.

சொன்னது சொன்னபடி குறித்த நேரத்தில் அந்த வாடிக்கையாளர் வந்து தம்முடைய நகையை வாங்கிக் கொண்டு போகாவிட்டால் அதைக்கொண்டு போய் அவர் தமக்கு சேரவேண்டிய கூலிக்காக அடகு வைத்து இரண்டு ரூபாய் வாங்கிக் கொண்டு வந்து தம் மனைவியிடம் வீட்டுச் செலவுக்காகக் கொடுத்து விடுவாராம். அதற்குப் பிறகு வாடிக்கையாளர் வந்தால், என்னுடைய நிலையை நான் நேற்றே உம்மிடம் சொன்னேனோ, இல்லையோ? நீர் ஏன் நேற்றே நான் சொன்னபடி வரவில்லை? இந்தாரும், அடகுச் சீட்டு; போய் வட்டி கொடுத்து வாங்கிக்கொள்ளும்!' என்பாராம்.

தம்முடைய கூலிக்கு மேல் ஒரு பைசாக்கூட வாங்காத அவருடைய பெருந்தன்மையைப் பாராட்டிக் கொண்டே செல்வாராம் வாடிக்கையாளர்.

எவ்வளவு கொடிய வறுமை!

## ஞானக்கண் ஒன்று இருந்திடும் போதினிலே...

வீட்டில் என்னதான் வறுமையாயிருந்தாலும் அது தங்கள் குழந்தைக்குத் தெரியக்கூடாது, தெரிந்தால் அதன் வளர்ச்சி குன்றிப்போகும் என்று நினைப்பது தாய் தந்தை யரின் இயல்பு அல்லவா? அந்த இயல்பை ஒட்டியே கிருஷ்ணமூர்த்தி தம்பதியினரும் குழந்தை தியாகராஜனை வளர்த்து வந்தார்கள்.

அதனால்தானோ என்னவோ, குழந்தைகளுக்குள்ள அத்தனை குறும்புத்தனங்களும் நம் தியாகராஜனிடமும் இருந்தன. சுருக்கமாகச் சொல்லப்போனால் மற்ற 'வால்' களைப் போலவே அவனும் ஒரு 'வா'லாயிருந்தான்!

இந்த வால் இன்னும் சில வால்களைத் தன்னுடன் சேர்த்துக்கொண்டு , ஒரு நாள் சர்க்கஸ் பார்க்கப் போயிற்று. சர்க்கஸ் பார்த்து முடிந்ததும் பேசாமல் வீடு திரும்பியிருக்கக் கூடாதா? அதுதான் இல்லை; அங்கிருந்த ஒரு குரங்குக் கூண்டைக் கண்டதும் அதைப் பார்த்தது. பார்த்தபடி அப்படியே நின்றது. இந்த 'வால் இல்லாத வால்க'ளைக் கண்டதும், அந்த 'வால் இருந்த வா'லுக்கு எப்படி இருந்ததோ என்னவோ, கிரீச், கிரீச்' என்று உற்சாகமாகக் கத்திக்கொண்டே இப்படியும் அப்படியுமாகப் பாய்ந்து பாய்ந்துப் பல்லைக் காட்டிற்று. 'முன்னாள் மனிதக் குஞ்சான அதன் சேட்டைகள் இந்நாள் மனிதக் குஞ்சுகளான இவற்றுக்கு வேடிக்கையாக இருக்கவே, இவை அதற்குக் கடலை வாங்கிப் போடுவதும், அந்தக் கடலையை அது லாவகமாகப் பற்றிக் கொரிப்பதைப் பார்த்துக் கைகொட்டிச் சிரிப்பதுமாக இருந்தன.

இந்த வால் இல்லாத வால்களைப் பின்பற்றி அந்த வால் இருந்த வாலும் கைகொட்டிச் சிரிக்க முயன்றது. என்ன முயன்றும் அவர்கள் கை கொட்டும் போது எழும்பும் சத்தம் தான் கை கொட்டும்போது எழும்பாமற் போகவே, அது தன் வாலை அடிக்கடி கூண்டுக்கு வெளியே நீட்டுவதும் அதை அவர்கள் தொட்டுப் பார்ப்பதற்காகக் கைகளை நீட்டும்போது உள்ளே இழுத்துக் கொண்டு இளிப்பதுமாக இருந்தது!

இந்த வேடிக்கை நெடு நேரம் நீடிக்கவில்லை; ஏழெட்டு முறை அந்தக் குரங்கால் ஏமாற்றப்பட்ட தியாகராஜனின் நண்பர்கள், அதைக் கோல் கொண்டு குத்தத் தொடங்கினார்கள். அவர்களுடைய இம்சை தாங்காமல்

அது 'உர்ர், உர்ர்' என்றது. அதன் வேதனையை விரும்பாத தியாகராஜன், ''வேண்டாம்டா, விளையாட்டு வினையாகி விடும்'' என்று எவ்வளவோ சொல்லிப் பார்த்தான். அவர்கள் கேட்கவில்லை. மேலும் மேலும் சேட்டை செய்து கொண்டே இருந்தார்கள். அதனால் பொறுமை இழந்த குரங்கு எப்படியோ கூட்டைத் திறந்து கொண்டு வெளியே வந்து அவர்கள் மேல் பாய்ந்தது. அவ்வளவுதான்; ''அம்மாடியோவ்?'' என்று அலறியடித்துக் கொண்டே அத்தனை வால்களும் அங்கிருந்து எடுத்தன ஓட்டம்!

குரங்கு அவர்களை விடவில்லை; 'துரத்து, துரத்து' என்று துரத்திக் கொண்டே சென்றது. கடைசியில்....

மற்ற பையன்களெல்லாம் எப்படியோ தப்பித்துக் கொண்டு விட, குழந்தை தியாகராஜன் மட்டும் ஏதோ ஒரு கல் தடுக்கி எதிர்த்தாற்போலிருந்த முட்கம்பி வேலியின் மேல் விழுந்துவிட்டான்!

அதன் பலன்?...

அவனுடைய நெற்றியில் கம்பிமுள் பொத்துக் கொண்டு விட்டது. ரத்தம், ரத்தம், ஒரே ரத்தம்!

அந்த நிலையிலும் அவன் தன் நெற்றியை அழுத்திப் பிடித்துக்கொண்டே தட்டுத் தடுமாறி எழுந்து ஓடினான், ஓடிக் கொண்டே இருந்தான்!

நீண்ட நேர ஓட்டத்துக்குப் பிறகு அவன் திரும்பிப் பார்த்தபோது, அவனுக்குப் பின்னால் அவனுடைய தோழர்களும் வந்து கொண்டிருக்கவில்லை. குரங்கும் வந்து கொண்டிருக்கவில்லை. ''நல்ல வேளை, பிழைத்தேன்!'' என்று பெருமூச்சுவிட்டுக் கொண்டே அவன் மெல்ல நடந்து வீட்டுக்கு வந்தான்.

''என்னடா, நெற்றியில் காயம்? அப்பா அடித்து விட்டாரா?'' என்றாள் தாயார்.

''அதெல்லாம் ஒன்றுமில்லை, அம்மா! கடவுள் எனக்கு 'ஞானக்கண்' கொடுத்திருக்கிறார்!''என்றான் பையன், அப்போதும் சிரித்துக்கொண்டே.

''ஞானக் கண்ணாவது...?''

''ஆமாம், அம்மா! இனிமே போக்கிரிப் பயல்களுடன் சேரக்கூடாது' என்பதைத் தெரிந்து கொள்ள எனக்கு இந்த ஞானக்கண் வேண்டியிருந்தது; அதற்காகக் கொடுத்திருக்கிறார்.''

''நல்ல வேடிக்கைதான், போ! அவர்களில் யாராவது உன்னை அடித்துவிட்டார்களா, என்ன?''

''ஊஹூம்; அவர்கள் ஒரு குரங்கிடம் செய்த சேட்டை என்னை இந்தக் கதிக்கு உள்ளாக்கி விட்டது அம்மா!''

''ஐயோ, மகனே! உன் அழகான நெற்றியில் இப்படி ஓர் ஆழமான வடுவை ஏற்படுத்திக்கொண்டு விட்டாயேடா; இது அவ்வளவு சுலபமாக மறையவா போகிறது? இப்படி வா!'' என்று தன் அருமை மகனை அணைத்தபடி அழைத்துக்கொண்டுபோய், அவன் காயத்தைக் கழுவி, அதற்கு வெற்றிலையும் சுண்ணாம்பும் இடித்து வைத்துக் கட்டினாள் அவள்.

பின்னால் அந்த ஆழமான வடுகூட அவன் அழகுக்கு அழகு செய்யும் என்பதை அவள் அப்போது கண்டாளா? அல்லது, அவனைப் பற்றிப் பேசுபவர்களெல்லாம் அந்த வடுவைப் பற்றியும் பேசுவார்கள் என்பதைத்தான் அவள் கண்டாளா?

இல்லை!

அந்த வடுவை வைத்து எத்தனை கதைகள் கட்டப் பட்டன அந்நாட்களில்? அத்தனை கதைகளிலும் அவன் அப்பாவின் கோபமும்,அவர் தம் தொழிலில் கையாளும்

கருவிகளில் ஒன்றான ஊதுகுழலுமல்லவா தவறாமல் இடம் பெற்று வந்தன?

உண்மை தெரியாத உலகம், பொய் பேச மட்டும் அஞ்சவே அஞ்சாதோ?

## அரே, கிருஷ்ணா ! முகுந்தா, முராரி!

'ஞானக்கண்' பெற்ற குழந்தை தியாகராசன் அதற்குப் பின்னால் போக்கிரிப் பயல்களுடன் சேராமல் இருந்தது என்னவோ உண்மைதான். ஆனால் அதற்காக அவன் தம்பி கோவிந்தராஜனுடன் கூடச் சேராமல் இருந்துவிட முடியுமா? – சேர்ந்தான். அதன் பலன்? அதை ஏன் கேட்கிறீர்கள்!

ஒரு நாள் அவன் தன் அருமைத் தம்பியைக் கூப்பிட்டு ''தம்பி, தம்பி! ஒரு ரகசியம்!'' என்றான்; ''என்ன ரகசியம்'' என்று கேட்டான் கோவிந்தராஜன்.

''சொல்கிறேன்; யாரிடமும் சொல்லக் கூடாது!'' என்றான், அவன்.

''இல்லை; சொல்லவில்லை!'' என்றான் இவன்.

''உடனே அண்ணன் ஒரு தென்னங்குச்சியை எடுத்து வாயில் கவ்விக்கொண்டு அங்கிருந்து பெஞ்சின்மேல் அப்படியே ஒரு தாவுத்தாவி ஏறினான்; அங்கிருந்து கீழே கையை நீட்டியவாறு குதித்து, ''என்ன, புரிந்ததா?'' என்றான்.

''இல்லை'' என்றான் தம்பி.

''சரி; இப்பொழுதாவது புரிகிறதா, பார்?'' என்று அவன் தன் வாய்க்குள் சீழ்க்கை அடிப்பது போல் விரலை வளைத்து வைத்துக்கொண்டு, ''ஆய், ஊய்!'' என்றான்.

''என்ன ஆய், ஊய்?'' என்றான் இவன் அப்போதும் ஒன்றும் புரியாமல்.

''கட் கட், பட் பட்!'' என்றான் அண்ணன், தன் கையிலிருந்த தென்னங்குச்சியை வாள் வீசுவதுபோல் வீசிக்கொண்டே.

''அப்படியென்றால்?'' என்றான் தம்பி, தலையைச் 'சொறி, சொறி' என்று சொரிந்துகொண்டே.

''போடா, மண்டு! கும் கும், தம் தம்!'' என்று கட்டிலின்மேல் கிடந்த தலையணையைக் 'குத்து, குத்து' என்று குத்திக் காட்டி, ''இப்போதாவது புரிந்ததா?'' என்றான் தியாகராஜன்.

''இல்லையே! ' என்றான் கோவிந்தராஜன், அழாக் குறையாக.

''ஐயோ, ஐயோ! விட்டல் நடித்த படம் வந்திருக்குடா (இப்போதைய பிரபாத்) சினிமா சென்டரலிலே. இன்னிக்கு ராத்திரி அப்பா படுக்கையைப் போட்டதும் நம்ம ரெண்டு பேரும் நைசா நழுவி விடலாமா? படத்தைப் பார்த்துவிட்டு வந்து அவருக்குத் தெரியாமல் படுத்துக்கொண்டு விடலாம். என்ன சொல்றே?''

இப்போதுதான் தம்பிக்கு விஷயம் புரிந்தது; ''ரைட்டோ!'' என்றான் ஒரு குதி குதித்து.

''ஓ கே!'' என்றான் அண்ணன்.

போட்ட திட்டம் போட்ட படியே நடந்தது. அப்பா குழந்தைகள் இருவருக்கும் படுக்கையை விரித்துவிட்டுத் தாமும் படுக்கையை விரித்துப் படுத்தார். இருவரும் ரொம்ப ரொம்ப நல்ல பிள்ளைகளைப் போல அவருக்குப்பக்கத்தில் சுருண்டு படுத்துக் கொண்டார்கள். அவர் சற்றே கண் ணயர்ந்தது தான் தாமதம், இருவரும் மெல்ல எழுந் தார்கள். அந்தச் சமயம் பார்த்துத்தானா, ''என்னடா காற்றையே காணோம்? எங்கே விசிறி?'' என்று கேட்டுக் கொண்டே அவர் புரண்டு படுத்தார்.

திடுக்கிட்ட கோவிந்தராஜன் மீண்டும் படுத்துக் கொண்டு விட்டான். தியாகராஜனோ அப்பாவின்

தலைமாட்டில் இருந்த விசிறியை மெல்ல எடுத்து, அவருக்கு இதமாக விசிறத் தொடங்கினான். அடுத்த நிமிஷம் 'கொர், கொர்' என்ற குறட்டை ஒலி தியாகராஜனின் காதைக் குளிர வைத்து, தம்பியை தட்டி எழுப்பி, 'வா வா' சீக்கிரம் வா' என்று கைஜாடை காட்டிக் கொண்டே சினிமா சென்ட்ரலை நோக்கி நீட்டினான் கம்பி!

அந்தக் காலத்தில் பேசும் படம் ஏது? அது ஓர் ஊமைப்படம்; அடிதடிச் சண்டைகள் நிறைந்த படம். அண்ணனும் தம்பியும் அதை ஆனந்தமாகப் பார்த்து அனுபவித்து விட்டு வீடு திரும்பினார்கள். வழியில், ''டேய் கோவிந்தராஜா, ஜாக்கிரதை! அப்பாவுக்கு இந்த விஷயம் தெரியவே கூடாது; தெரிந்தால் அவ்வளவுதான்!'' என்று தன் முதுகையும் அவன் முதுகையும் தொட்டுக் காட்டி எச்சரித்து வைத்தான் தியாகராஜன்.

என்ன எச்சரித்து வைத்து என்ன பயன்? தம்பி கோவிந்தராஜன் தன் அப்பாவுக்குப் பக்கத்தில் படுத்துத் தூங்க ஆரம்பித்ததுதான் தாமதம், ''உம், அடி! உதை! குத்து!'' என்று உளற ஆரம்பித்துவிட்டான்! எதற்கு? தன் அபிமான நட்சத்திரமான விட்டலைத் தூக்கத்தில் கூட உற்சாகப்படுத்தத்தான்!

எப்படி இருக்கும், தியாகராஜனுக்கு? ''டேய், சும்மா இருடா!'' என்று மெல்ல அவனை அதட்டிப் பார்த்தான். அவனோ, ''ஒரே நாக் அவுட், ஆளே காலி!'' என்று 'ஓ'வென்று கத்த ஆரம்பித்தான்!

'இதென்ன வம்பு, இந்தப் பயல் நம்மைக் காட்டிக் கொடுத்துவிடுவான்போல் இருக்கிறதே?' என்று பயந்த தியாகராஜன், ''டேய் கோவிந்தராஜா! பேசாமல் தூங்குடா!'' என்று மீண்டும் பல்லைக் கடித்துக்கொண்டே சொல்லிப் பார்த்தான். ஊஹூம்; ''ஆ, அப்படிப்போடு! உம், இப்படிப் பிடி!'' என்றான் அவன், அப்போதும் தன் உளறலை நிறுத்தாமல்!

பாவம், என்ன செய்வான் தியாகராஜன்; இப்படித் திரும்பி அப்பாவுக்கு அவசரமாக விசிறுவதும், அப்படித் திரும்பித் தம்பியின் வாயை அவசரம் அவசரமாகப் பொத்துவதுமாகத் தவியாய் தவித்தான்!

அதற்குள், என்னடா அது? யாரை அவன் 'உதை, குத்து' என்கிறான்?'' என்றார் அப்பா, சற்றே தூக்கம் கலைந்து.

அவ்வளவுதான்; புயல் வேகத்தில் அவருக்கு விசிறிக் கொண்டே, ''ஒன்றுமில்லை, அப்பா! பஜனை அப்பா! அரேகிருஷ்ணா! முகுந்தா, முராரி! அரே கிருஷ்ணா! முகுந்தா, முராரி!'' என்ற பஜனைப் பாடலை அப்போதே படுவேகமாகப் பாட ஆரம்பித்துவிட்டான் தியாகராஜன்!

ஏன் தெரியுமா? 'அந்தப் பஜனையிலாவது அவனுடைய உளறல் அப்பாவின் காதில் விழாமல் இருக்காதா என்ற நப்பாசையால்தான். ஆனால் நடந்ததோ?...

''என்னடா, அவன் 'அடி, உதை' என்கிறான்! நீ பஜனை, அது இது என்று சொல்லிக்கொண்டு 'அரே கிருஷ்ணா, முகுந்தா, முராரி!' என்கிறாய்? என்ன விஷயம்? என்ன நடந்தது?'' என்று கேட்டுக்கொண்டே எழுந்து உட்கார்ந்து தியாகராஜனின் கையிலிருந்த விசிறியை மெல்ல வாங்கி, அதன் மட்டையைத் தயாராகத் திருப்பி வைத்துக் கொண்டு, கோவிந்தராஜனைத்தட்டி எழுப்பி விசாரிக்க ஆரம்பித்துவிட்டார் அப்பா!

அந்த விசாரணையின் முடிவில்?...

எந்த விஷயம் அப்பாவுக்குத் தெரியக்கூடாது என்று தியாகராஜன் நினைத்தானோ, அந்த விஷயம் அசட்டுத்தம்பி கோவிந்தராஜனால் அம்பலமாகிவிட்டது. அதற்கு மேல் சொல்லவா வேண்டும். ஏற்கெனவே தயாராயிருந்த விசிறி மட்டை சகோதரர்கள் இருவரையும் சேர்ந்தாற்போல் பதம் பார்க்க ஆரம்பித்து விட்டது!

கண்ணை இழந்தவன் நீயோ, நானோ?

குழந்தை தியாகராஜனை சங்கீதப் பித்தும் சினிமாப் பித்தும் மட்டும் பிடித்திருக்கவில்லை; நாடகப் பித்தும் பிடித்திருந்தது. அதிலும் திரு எஸ்.ஜி. கிட்டப்பாவின் 'ஸ்பெஷல் நாடக'மென்றால் அப்பாவின் விசிறி மட்டை அடிக்குக்கூட அஞ்சாமல் அவன் போய் வந்து விடுவான்.

அப்பா அவனுடைய கலையார்வத்தை ஏன் விரும்பவில்லை? 'கலை என்றால் கிலோ என்ன விலை? என்று கேட்கக் கூடியவரா அவர்? அதெல்லாம் ஒன்றும் இல்லை: அவருக்கும் கலை யார்வம் உண்டு. அதன் காரணமாகக் கதா காலட்சேபம் செய்பவர்களுக்கு அவர் பின்பாட்டுக்கூடப் பாடுவதுண்டு. அது மட்டுமா? அமெச்சூர் நாடகங்களில் அவர்'அயன் ஸ்திரீ பார்ட்' வேடம் தாங்கி நடிப்பதுகூட உண்டு. ஆயினும்...

அந்த நாட்களில் அம்மாதிரிக் கலைகளில் ஈடுபாடு கொண்டவர்களுக்கு அவ்வளவு மதிப்பில்லை என்பது ஒரு பக்கம் இருக்கட்டும்; அவற்றைக் கொண்டு ஓரளவாவது வயிறு வளர்க்க முடிந்ததா என்றால் அதுவும் இல்லை.

ஏதோ, பெயரளவில் நாலு பேர் பாராட்டுவார்கள். அந்தப் பாராட்டைக் கொண்டு அரிசி வாங்க முடியுமா? பருப்பு வாங்க முடியுமா? உப்பு வாங்க முடியுமா? ஒன்றும் வாங்க முடியாத அந்தப் பாராட்டைத் தாமே நாளடைவில் விரும்பாமற் போய்விட்டபோது, தன் மகன் மட்டும் ஏன் விரும்பவேண்டும்?

வேண்டாமே!

இதுதான் அவருடைய எண்ணம்.

வேண்டுமானால் 'தொண்டு' என்று நினைத்து அவர் அவற்றைச் செய்திருக்கலாம்; தம் மகனையும் செய்ய விட்டிருக்கலாம். ஆனால்...

எதையும் 'இருப்பவன்' செய்தால்தானே 'தொண்டு' என்று இந்த உலகம் ஏற்றுக்கொள்கிறது? 'இல்லாதவன்' செய்தால் அதை எங்கே 'தொண்டு' என்று ஏற்றுக் கொள்கிறது?

எனவே, அந்த வகையிலும் அவர் அவற்றைத் தொடர்ந்து செய்ய விரும்பவில்லை; தம் மகனையும் தொடர்ந்து செய்ய விடுவதற்கு இசையவில்லை.

அதன் பலன்?...

ஒரு நாள் குழந்தை தியாகராஜன் வீட்டில் சொல்லிக் கொள்ளாமல் ஓடிவிட்டான்.

எங்கே?...

அது தான் தெரியவில்லை யாருக்கும் –'ஓடு, ஓடு' என்று ஓடினார்கள்; தேடு, தேடு என்று தேடினார்கள்; தெருவெல்லாம், தெரிந்தவர் வீடெல்லாம், ஊரெல்லாம், உறவினர் இல்லமெல்லாம் சென்று சல்லடை கொண்டு சலித்துக்கூடப் பார்த்துவிட்டார்கள். ஊஹூம், தியாக ராஜனைக் காணவே காணோம்.

எப்படியிருக்கும் தாயார் மாணிக்கத்தம்மாளுக்கு?

பெற்ற வயிறு பற்றி எரிய அவள் அழுதாள்; ''கடவுளே, நான் கண்ணை இழந்தவளாகிவிட்டேன்; எனக்குக் கண்ணைக் கொடு!'' என்று தொழுதாள். ''எல்லாம் உங்களால் வந்த வினை!'' என்று தன் கணவரை இடித்துரைத் தாள்; ''போங்கள், போய் என் மகன் எங்கே இருந்தாலும், அவனை எப்படியாவது கண்டு பிடித்து அழைத்து வாருங்கள்!'' என்று கடிந்துரைத்தாள்.

தகப்பனார் கிருஷ்ணமூர்த்தி என்ன செய்வார், பாவம்! ஏதோ ஒரு வார்த்தை சொன்னதற்காகப் பையன் இப்படி ஓடிவிடுவான் என்று அவர் கண்டாரா? 'அதைத் தான் நாம் ஏன் சொன்னோம்?' என்று தம்மைத் தாமே நொந்து கொண்டு வீட்டை விட்டுப் புறப்பட்டார். வழியில் எதிர்ப்பட்டவர்களிடமெல்லாம் தம் மகனைப்

பற்றி விசாரித்துக் கொண்டே நடந்தார். கடைசியாகச் சந்தித்த நண்பர் ஒருவர் ''உம்முடைய மகனை நான் கடப்பையில் பார்த்தேன்!'' என்று சொன்னதுதான் தாமதம்; ''நிஜமாகவா?'' என்று துள்ளிக்குதித்தார் கிருஷ்ணமூர்த்தி.

''நிஜமாகத்தான்!'' என்றார் அவர்.

''அங்கே எங்களுக்குச் சொந்தக்காரர்கள்கூட யாரு மில்லையே, எங்கே தங்கியிருப்பான் அவன்?'' என்று யோசித்துக் கொண்டே வானத்தைப் பார்த்தார் கிருஷ்ண மூர்த்தி.

''ஒரு வீடா, இரண்டு வீடா? அங்கே உள்ள எல்லா வீடுகளுமே இப்போது அவனுடைய வீடுகளாய்த்தான் இருக்கின்றன!''

''அது எப்படி இருக்க முடியும்?''

''அன்று கண்ணனின் கானம் கேட்டு ஆயர்பாடியே மயங்கி நின்றது அல்லவா? அதே மாதிரி இன்று உம்முடைய மைந்தனின் கானம் கேட்டுக் கடப்பையே மயங்கி நிற்கிறது!''

''அப்படியா?'' என்று வாயைப் பிளந்த கிருஷ்ண மூர்த்தி, 'இனி அவன் போக்கில் அவனை விட்டுவிடுவது தான் சரி! என்று அப்போதே தீர்மானித்துக் கொண்டார்; அந்தத்தீர்மானத்துடன் அவர் தம்நண்பரிடம் விடைபெற்றுக் கொண்டு நேரே கடப்பைக்குச் சென்றார்.

அங்கே அவரைப் பார்த்தவர்களெல்லாம் ''நீங்களா தியாகராஜனின் தகப்பனார், நீங்களா தியாகராஜனின் தகப்பனார்?'' என்று வியப்போடு கேட்டார்கள்.

அவருக்கு ஒன்றும் புரியவில்லை, குழம்பினார். அந்தக் குழப்பத்தில், 'ஒருவேளை நாம் இவனுக்குத் தகப்பனார் இல்லையோ?' என்று அவருக்கே சந்தேகம் வந்துவிட்டது. 'எதற்கும் இன்னொரு முறை சொல்லித்தான் பார்ப்போமே?' என்று எண்ணியவராய், ''ஏன் நான்தான் இவனுடைய தகப்பனார்!'' என்றார் கொஞ்சம் தயக்கத் துடனேயே.

''இவன் உங்கள் வீட்டில் பிறந்திருக்க வேண்டிய பிள்ளை இல்லை ஐயா, இவன் தேவாவதாரம்; இவனுடைய கானம் தேவாமிருதமான கானம்!'' என்றார்கள் அவர்கள் பரவசத்துடன்.

இதைக் கேட்ட கிருஷ்ணமூர்த்திக்குப் பெருமை தாங்கவில்லை; தம் மகனை இறுக அணைத்துக்கொண்டு, ''நான்தான் இவனுடைய தந்தை; நான்தான் இவனுடைய தந்தை!'' என்றார் ஒரு முறைக்கு இரு முறையாக.

அதற்குப் பின் அவருக்கு என்ன தோன்றிற்றோ என்னவோ, ''ஏண்டா, நான்தானே உன் தந்தை?'' என்று தம் மகனையே அசடு வழியக்கேட்டார்.

மகன் சிரித்தான்!

''ஏன் சிரிக்கிறாய்?'' என்றார் அப்பா.

''இந்த உலகத்தில் நீங்கள்தான் எனக்குத் தந்தை; அதில் உங்களுக்குச் சந்தேகமே வேண்டாம். ஆனால்...''

''ஆனால் என்னடா?''

''அந்த உலகத்தில் எனக்கு வேறொரு தந்தை இருக்கிறார் அப்பா!''

''யார் அவர்?''

''எங்கிருந்தோ வந்த என்னிடம் இங்குள்ள இத்தனை பேரும் அன்பும் ஆதரவும் காட்டும் அளவுக்கு என்னை அருகதை யுள்ளவனாகப் படைத்திருக்கும் ஆண்டவன்தான் அந்தத்தந்தை!'' என்றான் பையன் தன்னைச்சுற்றி நின்றவர்களை நன்றியுணர்ச்சியுடன் நோக்கிக்கொண்டே.

இப்போது தகப்பனார் சிரித்தார்; சிரித்துவிட்டு, ''உனக்கு மட்டும் இல்லையடா, கண்ணா! இந்த உலகத்தி லுள்ள அத்தனை பேருக்கும் அவர்தான் தந்தை, வா, போகலாம்!'' என்றார்.

''இவ்வளவு பேரையும் விட்டு விட்டா என்னை அங்கே வரச் சொல்கிறீர்கள்?'' என்றான் பையன் கண்களில் நீர் மல்க.

''இனி அவர்களை நீ விட்டாலும் அவர்கள் உன்னை விடமாட்டார்கள்; எங்கிருந்தாலும் தேடி வந்து விடுவார்கள். வாடா, போகலாம்!'' என்றார் தந்தை மீண்டும்.

பையன் அப்போதும் தயங்கினான். தன்னைச் சுற்றியிருந்தவர்களைப் பிரிய மனமின்றி.

''அம்மா உனக்காக அங்கே உண்ணாவிரதம் இருந்து கொண்டிருக்கிறாள்; உன்னைப்பார்த்த பிறகு தான் அவள் தன் விரதத்தை முடிக்கப் போகிறாளாம்!'' என்றார் தந்தை.

அதற்கு மேல் தனயன் தயங்கவில்லை; தாமதிக்க வில்லை. ''இதோ வந்துவிட்டேன் அம்மா, இதோவந்து விட்டேன்!'' என்று தன்னை மறந்து சொன்ன அவன், ''உங்கள் அனைவருக்கும் என் நன்றி; உங்களுடைய அன்பும் ஆதரவும் என்றும் என் நினைவில் இருக்கும்'' என்று தன்னைத் தக்க சமயத்தில் தடுத்தாட் கொண்டவர்களிட மெல்லாம் சொல்லிவிட்டுத் தன் தந்தையுடன் புறப்பட்டான்.

வழியில்...

கண் இழந்த தமக்குக் கண் கொடுத்தது போல் காணாமற் போன தம் மகனைக் கண்டெடுத்துக் கொடுத்த ஏழுமலையானைத் தரிசிக்கவேண்டும் போலிருந்தது கிருஷ்ணமூர்த்திக்கு; திருப்பதிக்குச் சென்றார் தியாகராஜ னுடன். அவர்கள் போவதற்குள் அங்கே தரும தரிசனம் நடந்து முடிந்துவிட்டது. அதற்கு மேல் வேங்கடமுடை யானை வெறுங்கையுடன் சேவிக்க முடியுமா? அதற்குப் பணம்? அந்தப்பணத்துக்கும் அவர்களுக்கும் தான் ரொம்ப ரொம்ப தூரமாச்சே! யாராவது பணமுள்ளவர்கள் வரமாட்டார்களா? அவர்களுக்காகவாவது எம்பெருமானை மறைத்திருக்கும் அந்தத்திரை கொஞ்சம் விலகாதா? அவரை நாம் ஆசை தீரத் தரிசிக்க மாட்டோமா?'' என்று அவர்கள் காத்திருந்தனர், காத்திருந்தனர்.

நீண்ட நேரத்துக்குப் பிறகு அவர்கள் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த அந்தப் புண்ணியவான்களில்

ஒருவர் வந்தார்; அவருக்காகத் திரை கொஞ்சமாக அல்ல; கொஞ்சம் தாராளமாகவே விலகிற்று.

ஆகா! நம்பிக்கையொளி வீசும் அந்த நாமதாரியைத் தரிசித்தது தான் தாமதம்; தியாகராஜன் தன்னை மறந்து பாட ஆரம்பித்து விட்டான்!

ஒரு பாட்டு, இரண்டு பாட்டு, மூன்று பாட்டு...

அவனை நிறுத்தவிடவில்லை அதற்குள் அங்கே சேர்ந்து விட்ட பக்தர் கூட்டம். "பாடு!ம், பாடு! மேலே பாடு! மேலே மேலே பாடு! நீ பாடிக்கொண்டே இரு; நாங்கள் கேட்டுக்கொண்டே இருக்கிறோம்!" என்று அவனைச் சுற்றிச் சப்பணம் போட்டு உட்கார்ந்து விட்டார்கள்!

பார்த்தார் தகப்பனார்; 'பாடு!ம், பாடு, என்ற இத்தனை பேரை மெய்மறந்து சொல்லவைக்கும் இவனுடைய பாட்டை, 'நிறுத்து!ம், நிறுத்து!' என்றல்லவா நாம் சொல்லிக் கொண்டிருந்தோம்? என்ன மதியீனம்!

இப்படி எண்ணி வருந்திய அவர், தம்மையும் மீறிய ஏதோ ஓர் உணர்ச்சியால் கண்களிலிருந்து தாரை தாரையாக நீர் வடிய நின்றார்.

அதற்குள், "ஆகா! திவ்வியமான கானம்! தெய்வீக மான கானம்! தேவாமிருதமான கானம்!" என்று வாய் விட்டுச் சொல்லிக்கொண்டே அங்கே வந்து சேர்ந்த கோயில் பேஷ்கார், "நீங்கள்தானா பெறற்கரிய இந்தப் பிள்ளையைப் பெற்றவர்? என்றார் கிருஷ்ணமூர்த்தியை நோக்கி.

"அடியேன்தான்!" என்றார் அவர் அடக்கத்துட னும், அதே சமயத்தில் அளவிட முடியாத ஆனந்தத்துடனும்.

"இந்தாருங்கள், எம்பெருமான் திருச்சூரணம். இதைக் குழந்தையின் நாவில் தடவுங்கள். கண்ணனின் வேணுகானத்துக்கு இருந்த மகிமை உங்கள் குழந்தையின் தேவகானத்துக்கும் இருக்கும்!" என்று சொல்லித் கொண்டே தாம் கையோடு கொண்டு வந்திருந்த திருச்சூரணத்தை எடுத்துக் கிருஷ்ணமூர்த்தி நீட்டிய கையில் வைத்தார்.

அதைக் கண்ணில் ஒற்றி எடுத்து, அவர் சொன்னது சொன்னபடியே குழைத்து, குழந்தை தியாகராஜனின் நாவில் தடவினார் கிருஷ்ணமூர்த்தி.

அதற்குப் பின் அவனுடைய கானத்தில் வெறும் தேன்மட்டும் கலந்திருப்பதாகத் தோன்றவில்லை அவருக்கு; பாலும் கலந்திருப்பதாகத் தோன்றிற்று!

''போதும் என்று சொல்ல எனக்கு வாய் வரவில்லை; ஆனாலும் சொல்கிறேன். குழந்தைக்குத் திருஷ்டிபட்டு விடக் கூடாதே என்பதற்காக, போய் வாருங்கள்; வீட்டுக்குப் போனதும் இவன் அன்னையிடம் சொல்லி இவனுக்கு திருஷ்டி கழிக்கச் சொல்லுங்கள்!'' என்று தியாகராஜனை ஆசீர்வதித்தார் பேஷ்கார்.

அவருடைய ஆசீர்வாதத்துடன் தம் மகனை அழைத்துக் கொண்டு திருச்சிக்கு வந்து சேர்ந்தார் கிருஷ்ண மூர்த்தி.

மகனைக் கண்டதும் மாணிக்கத் தம்மாளின் வயிறு மட்டும் அல்ல. மனமும் குளிர்ந்தது. இழந்த கண்ணை மீண்டும் பெற்ற மகிழ்ச்சியில் அவள் அவனுக்கு யாரும் சொல்லாமலே திருஷ்டி கழித்து நெட்டி முறித்தாள்!

## அன்னையும் தந்தையும் தானே...

தன் வழியிலிருந்து தந்தை விலகிக்கொண்ட பிறகு, திருச்சி நகரத்தில் தியாகராஜன் கலந்து கொள்ளாத பஜனை கோஷ்டியே இல்லையென்று ஆயிற்று. ஒவ்வொரு கோஷ்டியினரும் 'நான் முந்தி, நீ முந்தி' என்று போட்டி போட்டுக்கொண்டு அவனை அழைத்துச் சென்றார்கள். காரணம் வேறொன்றும் இல்லை; சுண்டலும் வடையும் இல்லாமலே தியாகராஜன் கலந்து கொண்ட பஜனைக்குக் கூட்டம் சேர்ந்ததுதான்!

''என் அண்ணார் எதையும் தேடிப்போனவர் அல்ல; எல்லாமே அவரைத்தேடிவந்தவைதான்!'' என்று பாக

வதரின் சகோதரர்களில் ஒருவரான திரு.சண்முகம் சந்தர்ப்பம் வாய்க்கும்போதெல்லாம் தம் தோளை உயர்த்திச் சொல்வதுண்டு. அதுஓரளவு உண்மை தான் – அந்த நிலை சினிமா உலகில் பிரவேசித்த பிறகு பாகவதருக்கு வர வில்லை. பிரவேசிப்பதற்கு முன்னாலேயே வந்துவிட்டது.

இதை வைத்துத்தான் திரு என். எஸ்.கிருஷ்ணன் ஒருமுறை மனம் விட்டுச் சொன்னார்:

''மக்கள் பாகவதரைத் தேடிக்கொண்டு வருகிறார் கள்; நானோ அவர்களைத் தேடிக்கொண்டு போகிறேன்!''

ஆகா! கலைவாணரைத் தவிர வேறு யாரால் இசைவாணரைப் பற்றி இரண்டே வார்த்தைகளில் இப்படி ஒரு கருத்தை உதிர்க்க முடியும்?

திருச்சி நகரத்தில் பரவிய தியாகராஜன் புகழ் திரு எப்.ஜி.நடேசய்யரின் காதுக்கு எட்டியது. 'யார் இந்த நடேசய்யர்?'என்கிறீர்களா? சொல்கிறேன்; ரயில் இலாகாவில் வேலைபார்த்துக்கொண்டே 'ரசிக ரஞ்சனி சபா' என்று ஒரு சபாவை அந்த நாளிலேயே திருச்சியில் நிறுவி, பல அமெச்சூர் நாடகங்களை அரங்கேற்றி, காசில் மட்டுமே கண்ணை வைக்காமல் கலைத் தொண்டு புரிந்தவர் அவர். அது மட்டும் அல்ல; தம்மால் அரங்கேற்றப்படும் நாடகங்களில் அவர் ஏதாவது ஒரு வேடம் தாங்கி நடிப்பதும் உண்டு. அந்த நடேசய்யர் ஒருநாள் கிருஷ்ணமூர்த்தியைத் தேடி வந்தார். எந்தக் கிருஷ்ணமூர்த்தியை? தியாகராஜாவின் அப்பாவான கிருஷ்ணமூர்த்தியைத்தான்! எதிர்பாராமல் தம் வீட்டுக்கு வந்த அவரை, 'வரவேணும், வரவேணும்!''என்று எழுந்து நின்று, இருகைகளையும் கூப்பி வரவேற்றார் கிருஷ்ணமூர்த்தி.

தம்மைக் கண்டதும் இவ்வளவு பவ்யமாக வர வேற்ற அவரை ''உட்காருங்கள்!'' என்று சொல்லிக் கொண்டே நடேசய்யரும் உட்கார்ந்தார்.

''இந்த ஏழையைத் தேடி...'' என்று இழுத்தார் கிருஷ்ணமூர்த்தி.

''ஏழை என்ன சுவாமி, ஏழை? 'பணம் இல்லை' என்ற ஒரே காரணத்துக்காக ஒருவன் ஏழையாகி விடுவானா? அதெல்லாம் ஒன்றுமில்லை; ஒரு செல்வம் இல்லையென் றால் இன்னொரு செல்வம்!''

''அப்படி ஒரு செல்வமும் அடியேனுக்கு இருப்பதாகத் தெரியவில்லையே!''

''ஏன் இல்லை? உமக்குத்தான் பொருட் செல்வம் இல்லையென்றாலும் அருட்செல்வம் வேண்டிய மட்டும் இருக்கிறதே, ஐயா! இல்லாவிட்டால் அப்படி ஒரு மணியான பிள்ளை உமக்குப் பிறந்திருக்குமா?''

''எனக்கு மூன்று பிள்ளைகள்; எந்தப் பிள்ளையைச் சொல்கிறீர்கள் நீங்கள்?''

''ஏன், உம்முடைய மூத்தபிள்ளை தியாக ராஜனைத்தான் சொல்கிறேன். அவன் தேவாரம் பாடினால் ஞானப்பால் குடித்துப் பாடிய அந்தத் திருஞானசம்பந்தனின் நினைவு அல்லவா வருகிறது எனக்கு!''

''ஏதோ, பெரியோர் ஆசீர்வாதம். அப்படியே இருக்கட்டும்.''

''வெறும் ஆசீர்வாதம் மட்டும் செய்துவிட்டுப் போக நான் இவ்வளவு தூரம் வரவில்லை; எனக்கு ஒரு பையன் வேண்டும். ஆமாம்! அவன் எப்படிப்பட்ட பையனாயிருக்க வேண்டும் தெரியுமா? இந்த ரசிக மகா ஜனங்கள் இருக்கிறார்களே, ரசிக மகா ஜனங்கள் – இவர்கள் அவன் சிரித்தால் தாங்களும் சிரிக்க வேண்டும்; அவன் அழுதால் தாங்களும் அழ வேண்டும். அவனை யாராவது அடித்தால் இவர்கள் உடனே எழுந்து சென்று அவனை அடித்தவனை அடித்து நொறுக்கத் துடிக்க வேண்டும்; அவனை யாராவது கொன்றால் இவர்கள் உடனே பாய்ந்து சென்று அவனை

கொன்றவனைக் கொன்றே போட்டுவிடத் துணிய வேண்டும். அந்த அளவுக்கு ஜனங்களை உணர்ச்சி வசப்படுத்தக் கூடிய அழகு வாய்ந்த ஒரு பையன், சர்வ லட்சணங்களும் பொருந்திய ஒரு பையன் எனக்குத் தேவை. என்ன சொல்கிறீர்?''

''நான் சொல்ல என்ன இருக்கிறது? அப்படி ஒரு பையனை நான் உங்களுக்கு எங்கிருந்து தேடிக் கொடுப்பேன்?'' என்று கிருஷ்ணமூர்த்தி கையைப் பிசைந்தார்.

நடேசய்யரோ 'கடகட'வென்று சிரித்தார்; சிரித்து விட்டு ''சுவாமி! தேடாமலேயே கொடும், உம்முடைய தியாகராஜனை!'' என்றார்.

''தியாகராஜனையா! எதற்கு?'' என்று திடுக்கிட்டுக் கேட்டார் கிருஷ்ணமூர்த்தி.

இருக்காதா? -அவனை யாராவது அடித்தால், அடித்தவனை ஜனங்கள் அடிக்கவேண்டும்; அவனை யாராவது கொன்றால், கொன்றவனை ஜனங்கள் கொன்றே போட்டுவிடவேண்டும் என்றெல்லாம் சொல்லிவிட்டுக் கேட்டால்?

''என்ன, பயந்துவிட்டீரா? பயப்படாதீர்! உம்முடைய மகனை நான் அந்த மாதிரி சோதனைகளுக்கெல்லாம் உள்ளாக்கிவிடமாட்டேன். அடுத்த மாதம் நம்முடைய ரசிக ரஞ்சனி சபாவில் 'அரிச்சந்திரா' நாடகத்தை நான் அரங் கேற்றவிருப்பதுதான் உமக்குத் தெரியுமே! அதில் தியாகராஜன் லோகிதாசனாக நடிக்க வேண்டும் என்பது என் ஆசை. அதற்கு வேண்டிய சர்வ லட்சணங்களும் அவனிடம் பொருந்தியிருக்கின்றன. நீர் என்ன சொல்கிறீர்?'' என்றார் நடேசய்யர் மீண்டும்.

''கலை என்ற அம்சத்தை மட்டும் வைத்துப் பார்த்தால், நாடகக்கலை என்னவோ நல்ல கலைதான். ஆனால் அதில் நடிப்பவர்கள் ஏனோ வாழ்க்கையிலும் நடிக்க ஆரம்பித்துவிடுகிறார்கள்; அதுதான் எனக்குப் பிடிக்க

வில்லை. அதனாலேயே நடிப்பதை நான் என்னோடு நிறுத்திக் கொள்ள வேண்டுமென்று இருந்தேன்...''

''நீர் சொல்வது ஒரு விதத்தில் சரிதான் என்றாலும், முற்றிலும் சரி என்று சொல்லிவிட முடியாது. ஏனெனில், நாடகத்தில் நடிக்காமலேயே பலர் வாழ்க்கையில் நடித்துக் கொண்டிருக்கிறார்கள்; அவர்களைப் பார்க்கும்போது மனிதன் பிறக்கும்போதே நடிகனாகப் பிறக்கிறானோ என்ற சந்தேகம் கூடச் சில சமயம் எனக்கு வந்துவிடுகிறது! ஆகவே அதற்காக நீர் அஞ்சவேண்டாம். எனக்குத் தெரிந்தவரை, தான் பிறந்த வீட்டுக்கு மட்டும் விளக்கேற்றி வைக்கத் தியாகராஜன் பிறந்திருக்கவில்லை. இருண்டு கிடக்கும் கலை உலகத்துக்கும் விளக்கேற்றி வைக்க அவன் பிறந்திருக் கிறான் என்றே நான் நினைக்கிறேன். அதை நீர் ஏன் தடுக்க வேண்டும்?''

கிருஷ்ணமூர்த்தி ஒரு கணம் யோசித்தார்; மறுகணம், ''இல்லை; தடுக்கவில்லை, உங்கள் விருப்பம் எப்படியோ அப்படியே செய்யுங்கள்!'' என்றார் பெரு மூச்சுடன்.

நடேசய்யர் மகிழ்ச்சியுடன் அவரிடமிருந்து விடை பெற்றார்.

உள்ளே இருந்தபடி இவர்களது உரையாடலை ஒட்டுக் கேட்டுக் கொண்டிருந்த தியாகராஜனோ ஓர் எம்பு எம்பிக்குதித்து ஓடித் தன் தாயாரின் கால்கள்இரண்டையும் சேர்த்துப் பிடித்துக் கொண்டு, ''அம்மா, அம்மா! அப்பா சம்மதித்து விட்டார். அம்மா!'' என்று உற்சாகத்தின் உச்சியில் நின்று 'கத்தோ கத்து' என்று கத்தினான்.

''எதற்குடா சம்மதித்து விட்டார்?'' என்றாள் அம்மா அமைதியாக

நான் நாடகத்தில் நடிக்க அப்பா சம்மதித்து விட்டார், அம்மா!'' என்றான் பையன், தலைகால் புரியாமல்.

அவளோ, ''உனக்கு ஏண்டா, அந்தக் கூத்தாடிப் பிழைப்பு?'' என்றாள் சோர்வுடன்.

''போம்மா! நடேசய்யர் அதைப் பிழைப்புக்காகவா நடத்துகிறார்? கலைக்காக நடத்துகிறார் அம்மா, கலைக்காக நடத்துகிறார்!'' என்றான் அவன், அப்போதே எல்லாம் தெரிந்தவனைப்போல.

''என்ன கலையோ? காசு என்று வரும்போது எல்லாக் கலையும் கொலையாகத்தான் போய்விடுகிறது!''

''அதையெல்லாம் பார்க்க வேண்டியவர்களே பார்க்காத போது நாம் மட்டும் ஏம்மா, பார்க்கவேண்டும்?''

''என்னவோ, உன் இஷ்டம் போல் செய்; அதற்காக நீ இன்னொரு முறை கடப்பைக்கு ஓடி வைக்காமல் இருந்தால் சரி!'' என்றாள் தாயார்.

பையன் சிரித்தான்!

தியாகராஜன் கலந்துகொண்ட முதல் நாடகம் அது. உங்களுக்குத்தான் தெரியுமே. 'அமெச்சூர் நாடகங்களுக்கு யார் சிரித்துக் கொண்டே வருகிறார்கள்? மூக்கால் அழுது கொண்டே தானே வருகிறார்கள், ''எப்படியோ ஒரு டிக்கெட்டை என் தலையில் கட்டிவிட்டான். பாவி! போய் பார்த்துத்தான் தொலைப்போமே என்று பஸ்ஸுக்கும் டிபனுக்கும் வேறு செலவழித்துக்கொண்டு வந்து சேர்ந்தேன்!'' என்று அலுத்துக்கொண்டே அல்லவா வருகிறார்கள்? அப்படிப்பட்டவர்களையும் தன்னால் உணர்ச்சி வசப்படுத்த முடியும் என்பதை அன்றே தியாக ராஜன் நிரூபித்துக் காட்டிவிட்டான்!

காலகண்டருக்காகச் சந்திரமதி காட்டுக்கு வந்து தர்ப்பைப்புல் அறுக்கும் காட்சி அப்போது நடந்து கொண்டிருந்தது. ''அம்மா, பசிக்குதே! தாயே, பசிக்குதே!'' என்று லோகிதாசன் வேடம் ஏற்றிருந்த தியாகராஜன் பாடிக் கொண்டே அம்மாவின் முந்தானையைப் பிடித்துக் கொண்டு

அவளுக்குப் பின்னால் வந்து கொண்டிருந்தான். அந்தப் பாட்டை அவன் பாவத்தோடு பாடிய விதமும், அந்த பாவத்துக்கேற்ப அவன் நடித்தவிதமும், அதைப் பார்த்துக் கொண்டிருந்தோரை என்ன செய்தனவோ என்னவோ, அவர்களில் சிலர், ''இந்தக் குழந்தையை இப்படிப்பட்ட பசிக் கொடுமைக்கு உள்ளாக்கிய அந்த மாபாவி கால கண்டன் எங்கே இருக்கிறான்? அவனை இழுத்து வாருங்கள் இப்படி; சிண்டைப் பிய்த்து எறிந்து விடுகிறோம்!'' என்று கத்திக்கொண்டே மேடையின் மேல் தாவி ஏற ஆரம்பித்து விட்டார்கள்.

அவ்வளவுதான்; திரை விழுந்தது. காலகண்டர் வேடம் தாங்கி நின்றவர் அவசரஅவசரமாகத் தம்முடைய வேட்டியைத் தூக்கிப் பிடித்துக்கொண்டு, எந்தப்பக்கம் ஓடுவது? என்று தெரியாமல் இப்படியும் அப்படியுமாகப் பாய்ந்து பாய்ந்து ஓடினார்!

தர்மசங்கடமாகப் போய்விட்டது நடேசய்யருக்கு; ''ஐயா! இது நிஜமாக நடக்கவில்லை, ஐயா! நாடகத்துக்காகப் பையன் அப்படி நடிக்கிறான், ஐயா! உட்காருங்கள்; தயவு செய்து உட்காருங்கள். அமைதி, அமைதி!'' என்று கையமர்த்தி அவர்களை உட்கார வைப்பதற்குள் அவர் பாடு 'போதும், போதும்!'என்று ஆகிவிட்டது.

அதற்குமேல்தான் ''ஓ, இது நாடகமா? நிஜமாக அப்படி யொன்றும் நடக்கவில்லையா?'' என்று அவர்கள் தங்களைத் தாங்களே அசடு வழியக் கேட்டுக்கொண்டே உட்கார்ந்தார்கள்.

''அதுதானே பார்த்தேன், பையனை அப்படிப் பொறுக்கிப் போட்டிருக்கிறார்கள் ரசிக ரஞ்சனி சபையார்!'' என்றார் அவர்களில் ஒருவர்.

''நடேசய்யர் 'செலக்ஷன்' என்றால் சும்மாவா?'' என்றார் இன்னொருவர்.

அதற்குள் விழுந்த திரை உயர்ந்தது. அணைக்கப் பட்ட விளக்குகள் மீண்டும் 'குபீ'ரென்று எரிந்தன. பசியால் துடிக்கும் தன் குழந்தை லோகிதாசனைச் சமாதானம் செய்து கொண்டே சந்திரமதி தர்ப்பைப்புல் அறுக்கும் காட்சி மறுபடியும் தொடர்ந்தது.

திடீரென்று ''ஆ!'' என்று ஓர் அலறல்; ''அம்மா! பாம்பு, பாம்பு!பாம்பு என்னைக் கடித்து விட்டது. அம்மா என்று கதறிக் கொண்டே ஒரு காலைப் பிடித்து நொண்டிய வாறு கீழே சாய்ந்தான் லோகிதாசனான தியாகராஜன்!

அவன் கீழே சாய்ந்தானோ இல்லையோ, ''ஐயோ , என் மகனே!'' என்ற புலம்பல் அந்தக் கொட்டகையின் முகட்டை எட்டி, வெளியே ஊடுருவி எதிரொலித்தது!

அடி வயிற்றிலிருந்து பீறிக்கொண்டு வந்த அந்தப் புலம்பல் யாருடையது என்கிறீர்கள்?

சந்திரமதி வேடம் தாங்கியவருடையதா? இல்லை; 'கூத்தாடிப் பிழைக்கத் துணிந்த தன் அருமை மகன் தியாகராஜ'னை லோகிதாசன் வேடத்தில் பார்த்துக் களிக்க வேண்டுமென்று வந்திருந்த சாட்சாத் மாணிக்கத்தம்மா ளுடையது தான்!

கொட்டகையில் மீண்டும் ஒரே பரபரப்பு; எல்லோரும் அந்த அம்மாள் இருந்த இடத்தை நோக்கி ஓடினார்கள்.

''என்ன? என்ன அம்மா, நடந்தது?''

சுற்றி நின்று மூலைக்கு மூலை கேட்டதுதான் மிச்சம்; பதில் சொல்ல மாணிக்கத்தம்மளுக்குப் பேச்சு மில்லை, மூச்சுமில்லை!

*தாயினும் கோயிலிங்கேது?...*

யார் என்ன சிகிச்சை செய்தும், யார் என்ன தேறுதல் சொல்லியும் மாணிக்கத்தம்மாளின் மூர்ச்சை தெளிய வில்லை. ''அம்மா, அம்மா! இதோ பார், அம்மா! நிஜமாக என்னைப் பாம்பு கடிக்கவில்லை, அம்மா! நிஜமாக நான் செத்துப் போகவில்லை, அம்மா! உயிரோடு தான் இருக்கிறேன்; இதோபாரேன்!'' என்று சாட்சாத் தியாக ராஜனே மேடையை விட்டு இறங்கிவந்து தன் அம்மாவின் முகத்தைத் தொட்டுத் திருப்பிய பிறகுதான் அவள் மூர்ச்சை தெளிந்து எழுந்தாள்.

பாவம், 'அரிச்சந்திரா' நாடகத்தின்படி பரமசிவன் 'ரிடபவாகன ரூடராய்' வந்து தனக்கு உயிர்ப்பிச்சை அளிக்கு முன்னரே அவன் தன்னுடைய தாயாருக்காகத் தனக்குத் தானே உயிர்ப்பிச்சை அளித்துக் கொள்ள வேண்டியதாயிற்று!

வேறு வழி?

அதற்குமேல் அம்மாதிரி கட்டங்கள் ஏதுமில்லாத தால் நாடகம் இனிதே நடந்து முடிந்தது.

இரவு மணி பத்து இருக்கும்; திரு.எப்.ஜி. நடேசய்யரின் பரிபூரண ஆசீர்வாதத்துடன் தங்கள் குழந்தை தியாகராஜனை அழைத்துக்கொண்டு கிருஷ்ண மூர்த்தி தம்பதியர் வீடு திரும்பிக் கொண்டிருந்தார்கள். அப்போது, 'நில்லுங்கள்!' என்று அவர்களுக்குப் பின்னாலிருந்து ஒரு குரல் கேட்டது; இருவரும் நின்று திரும்பிப் பார்த்தார்கள்.

திரு பொன்னுவய்யங்கார் அவர்களை நோக்கி அவசரஅவசரமாக வந்து கொண்டிருந்தார்.

அந்த நாளில் பிரசித்தி பெற்ற பிடில் வித்வானா யிருந்து வந்தவர் அவர்; அத்துடன் சங்கீத வாத்தியாரும்கூட.

'இவர் ஏன் தங்களை நிற்கச் சொல்லவேண்டும்?' என்று ஒன்றும் புரியாமல் கிருஷ்ணமூர்த்தி தம்பதியர் நின்றதும் பொன்னு வய்யங்கார் விடுவிடுவென்று வந்து

தியாகராஜனின் கையைப் பற்றிக்கொண்டு, ''இனி இவன் உங்கள் வீட்டுப் பிள்ளையில்லை; எங்கள் வீட்டுப் பிள்ளை!'' என்றார் தமக்கே உரிய அதிகாரத் தொனியில்.

''ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்?'' என்றார் கிருஷ்ண மூர்த்தி..

''சங்கீத ஞானம் இவனுக்கு இயற்கையாகவே வாய்ந்திருக்குடா! கேள்வி ஞானத்தைக் கொண்டு ஒரு பிள்ளை இவ்வளவு அழகாகப் பாடி இதுவரை நான் கேட்ட தேயில்லை; அதனால்தான் சொன்னேன்!'' என்றார் அய்யங்கார்.

''அப்படியா? ரொம்ப சந்தோஷம்; வரட்டுமா என்று திரும்பினார் கிருஷ்ணமூர்த்தி, தூக்கக் கலக்கத்தில் சீக்கிர மாக வீடுபோய்ச் சேரவேண்டுமே என்று.

''வரட்டுமாவது! நாளையிலிருந்து கும்மட்டிச் சட்டி யையும் இடுக்கியையும் நீயே கட்டிக்கொண்டு அழு; அவற்றை இவன் தலையில் மட்டும் கட்டி வைக்காதே! பேசாமல் பொழுது விடிந்ததும் இவனை நீ என் வீட்டுக்கு அனுப்பிவிடு; நான் இவனுக்கு சங்கீதச் சிட்சை செய்து வைக்கிறேன்!''

'சிட்சை என்றால் சும்மாவா? சன்மானம் ஏதாவது...''

''அதெல்லாம் ஒன்றும் வேண்டாம்; இவனை நீ என்னிடம் சிட்சை பெற அனுப்பி வைப்பதே எனக்குச் சன்மானம் அளித்த மாதிரி!''

அதற்கு மேல் என்ன சொல்லமுடியும் கிருஷ்ண மூர்த்தியால்? 'தங்கள் சித்தம்; என் பாக்கியம்' என்பது போல் தம்மனைவியின் முகத்தைப் பார்த்தார்; 'கூத்தாடிப் பிழைப்பதைவிடப் பாடிப் பிழைப்பது எவ்வளவோ மேல்தான்'' என்பதுபோல் அவள் அவருடைய முகத்தைப் பார்த்தாள். அதற்குள், ''என்ன விழிக்கிறீர்கள். சம்மதந் தானே?''என்று கேட்டுவிட்டு, ''என்னடா, உனக்கும் சம்மதந்தானே?''என்று தியாகராஜனைக் கேட்டார் பொன்னுவய்யங்கார்.

''சம்மதம்தான், மாமா!'' என்றான் அவன்.

''சபாஷ், மாப்பிள்ளை!'' என்றார் அவர்.

''மறுநாளே 'வாதாபி கணபதிபஜே'என்று சங்கீதச் சிட்சை ஆரம்பமாயிற்று. அதைத் தொடர்ந்து பலக் கிருதிகள், கீர்த்தனைகள், சாகித்யங்கள், சிந்துகள்.:.

இந்தச் சிந்துகளில் 'நொண்டிச்சிந்து' என்று ஒன்று உண்டல்லவா? அந்தச் சிந்தில், காடு நின்று காவல்கொண்டு பாடுகின்ற பாவையே!' என்று ஒரு பாடல், அந்தப் பாடலை ஒரு நாள் தன்குருவுக்கு எதிரே நின்று தியாகராஜன் பாடக்கேட்ட ஒருவர், மறுநாள் அவன் வீட்டுக்கு வந்தார். தன்னைவிட வயதில் கொஞ்சம் பெரியவராகத் தோன்றிய அவரை, ''யார் நீங்கள், எங்கே வந்தீர்கள்?'' என்று மெல்ல விசாரித்தான் தியாகராஜன்.

நான் பொன்னுவய்யங்கார் வீட்டுக்கு எதிர் வீட்டில் இருக்கிறேன், என் பெயர் வெள்ளியங்கிரி. உங்களைப் பார்க்கத்தான் வந்தேன்!'' என்றார் அவர்.

''எதற்கு?''

''எனக்கும் நொண்டிச் சிந்து பாடவேண்டும் போலிருக்கிறது; கொஞ்சம் சொல்லித் தரவேண்டும்.''

''யார், நானா?''

''ஆமாம்.''

தியாகராஜன் சிரித்தான்; 'ஏன் சிரிக்கிறீர்கள்?'' என்று கேட்டார் வந்தவர்.

''போயும் போயும் என்னையா குருவாகக் கொள்ளப் பார்க்கிறீர்கள் நீங்கள்?'' நான் இன்னும் மாணவன் ஐயா' மாணவன்!''என்றான்.

''அது தெரியும் எனக்கு; ஆனாலும் அய்யங்கார் என்னைச் சீடனாக ஏற்றுக்கொள்வதற்கு வேண்டிய பாக்கியம் எனக்கு இன்னும் கிட்டவில்லை. அதனால் தான்...''

''என்னைத் தகப்பன் சாமியாகச் சொல்கிறீர்களா?''

''அப்படியென்றால்?''

''தந்தைக்கு உபதேசம் செய்த முருகனைப்போல என்னை உங்களுக்கு சங்கீதச் சிட்சை செய்து வைக்கச் சொல்கிறீர்களா என்று கேட்கிறேன்!''

''ஆரம்பத்திலிருந்து சொல்லி வைக்க விரும்பா விட்டாலும் அந்த நொண்டிச் சிந்து பாடலை மட்டுமாவது சொல்லிவையுங்களேன்?''

''எந்த நொண்டிச் சிந்து பாடலை?''

''அதுதான் 'காடு நின்று காவல் கொண்டு பாடுகின்ற பாவையே என்று பாடுவீர்களே, அந்தப் பாடலை!''

''ஏன், உங்களுக்காக எந்தப் பாவையாவது காடு நின்று காவல் கொண்டு பாடிக் கொண்டிருக்கிறாளா, என்ன?''

''அதெல்லாம் ஒன்றுமில்லை; அந்தப்பாட்டில் எனக்கு ஏதோ ஒரு மயக்கம்...''

''அப்படியா? வாருங்கள், அந்த மயக்கத்தைத் தெளிய வைக்கிறேன்!'' என்று தியாகராஜன் அவரைத் தன் அறைக்கு அழைத்துக்கொண்டு போய், ''காடு நின்று காவல் கொண்டு பாடுகின்ற பாவையே!'' என்று நொண்டியடித்துக் கொண்டே பாடினான்.

''ஏன் நொண்டியடித்துக் கொண்டே பாடுகிறீர்கள்?'' என்றார் அவர், ஒன்றும்புரியாமல் ,

''நொண்டிச் சிந்து என்றால் சும்மாவா? நொண்டி யடித்துக்கொண்டே பாடித்தான் அதைக் கற்றுக்கொள்ள வேண்டும்!'' என்றான் தியாகராஜன்.

அவ்வளவுதான்; ''அட கடவுளே! அதுகூடத் தெரியாமல் போச்சே எனக்கு!'' என்று அவரும் ''காடு நின்று நொண்டி யடித்துக்கொண்டே பாட ஆரம்பித்து விட்டார்!

''அவர் நொண்ட இவன் நொண்ட, அந்த வீடே 'தண், தண்' என்று அதிர ஆரம்பித்துவிட்டது.

அடுக்களையிலிருந்த மாணிக்கத்தம்மாள் இந்தச் சத்தத்தைக் கேட்டதும், ''அங்கே என்னடா சத்தம்?'' என்று குரல் கொடுத்தாள்.

''ஒன்றுமில்லையம்மா,நொண்டிச்சிந்து கற்றுக் கொடுக்கிறேன்!'' என்றான் பையன்.

''யாருக்கு?'' என்றாள் தாயார்.

''என்னுடைய சீடனுக்கு!''

''சீடனுக்கா! நீயே இன்னும் சீடனாயிருக்கிறாய்; உனக்கு வேறே சீடன் வந்து சேர்ந்துவிட்டானா?''என்று கேட்டுக்கொண்டே அவள் அடுக்களையை விட்டு வெளியே வந்தாள். இருவரும் வியர்க்க விறுவிறுக்க நொண்டியடித்துக் கொண்டிருந்ததைக் கண்டதும் அவளுக்கு 'அழுவதா, சிரிப்பதா?' என்று தெரியவில்லை. ''ஏண்டா, இப்படிக் கூடச் செய்யலாமா?'' என்றாள்.

''நான் என்னம்மா செய்தேன்?'' என்றான் தியாகராஜன்.

''இவர் உன்னைவிட மூத்தவராயிருப்பார் போல் இருக்கிறதே! இவரை நீ இப்படி எள்ளி நகையாடலாமா?''

''நான் என்னம்மா செய்வேன்? இவர் என்னை விட்டால் தானே?''

''அதற்காக இப்படியா செய்வார்கள்? ஆனானப் பட்ட ஸ்ரீராமச்சந்திர மூர்த்தி ஏன் அவ்வளவு கஷ்டப் பட்டார், தெரியுமா?''

தெரியாதே, அம்மா!''

''அவருடைய சித்தி கைகேயிக்குக் 'கூனி, கூனி' என்று ஒரு தோழிஇருந்தாள். சிறு வயதில் அந்தத்தோழியின் கூனைப்பார்க்கும் போதெல்லாம் ராமனுக்கு வேடிக்கையா

யிருக்கும். அந்தக் கூனை உண்டிவில்லால் குறி பார்த்து அடித்துவிட்டு அவன் சிரிப்பான். இந்த வேடிக்கை பிடிக்காத கூனி கைகேயிக்குத் தூபம்போட, அவள் தன் கணவரான தசரதருக்கு தூபம் போட, அதனால் பட்டத்துக் குரிய ராமன் காட்டுக்குப் போய் பதினாலு வருஷங்கள் படாதபாடு பட்டான். இதெல்லாம் எதனால் வந்த வினை? பெரியோரை எள்ளி நகையாடியதால் வந்த வினைதானே? வேண்டாம்டா கண்ணு இந்த விளையாட்டு? இன்றோடு இதை விட்டுவிடு! என்ன, விட்டுவிடுகிறாயா?''

''விட்டுவிடுகிறேன், அம்மா!''

''இப்படிச் சொன்ன தியாகராஜன் உடனே தன்னிடம் பாடம் கேட்க வந்தவர் பக்கம் திரும்பி, என்னை மன்னித்துவிடுங்கள், ஐயா! இனி உங்களை எள்ளி நகையாடியது போல் நான் யாரையும் எள்ளி நகையாட மாட்டேன். வேண்டுமானால் அந்தப்பாட்டை நான் உங்களுக்கு எழுதித் தருகிறேன்; அதைப்பாடும் விதத்தையும் எனக்கு தெரிந்தவரை சொல்லித்தருகிறேன். நீங்களே மனப்பாடம் பண்ணிக்கொண்டுவிடுகிறீர்களா?''என்றான்.

''நன்றி; அப்படியே செய்யுங்கள்!'' என்றார் அவர்.

சொன்னது சொன்னபடி செய்து அவரை அனுப்பி விட்டு ''அம்மா, இனி நான் சாட்சாத் ராமச்சந்திர மூர்த்தியாக இல்லாவிட்டாலும் உங்களுக்குப் பிடித்த பிள்ளையாக இருப்பேன். அம்மா!'' என்றான் தியாகராஜன்.

''இனி என்னடா, இனி? எனக்கு நீ எப்பொழுதுமே பிடித்தபிள்ளைதான்!'' என்று அவனை ஆரத் தழுவிக் கொண்டாள் தாயார்.

## மௌன குருவே, அரனே!...

உடலை உணர்ச்சிகளுக்கு இரையாக விட்டு விட்டாலும் உள்ளத்தை மட்டும் உணர்ச்சிகளுக்கு இரையாக

விடாமல் காத்துக்கொண்ட பெருமை இந்த நாட்டிலே சிலருக்கு உண்டு. 'யார் அந்தச் சிலர்?' என்று விழிக்காதீர்கள்; அவர்களே சித்தர்கள்.

அந்தச் சித்தர்கள், நாம் அறிந்த அந்தப் பதினொண்மரோடு நின்று விட்டார்களா? இல்லை; பத்தொன்பதாவது சித்தர், இருபதாவது சித்தர், இருபத்தோராவது சித்தர், என்று இன்றும் இந்த மண்ணிலே பிறந்து கொண்டுதான் இருக்கிறார்கள்; வளர்ந்துகொண்டுதான் இருக்கிறார்கள்; வாழ்ந்துகொண்டுதான் இருக்கிறார்கள்.

ஆனால்...

நாம்தான் அவர்களை அறிந்து கொள்வதில்லை; அறிந்து கொள்ள முயல்வதும் இல்லை.

காரணம்?...

சித்தர்கள் என்ற பெயரிலே பல எத்தர்கள் இன்று. இந்த நாட்டிலே நடமாடிக் கொண்டிருப்பதுதான்!

அந்த எத்தர்கள் வரிசையிலே சேராத சித்தர் ஒருவர் பாலக்கரையிலே இருந்தார்.

அவருடைய இயற்பெயர்?...
தெரியவில்லை.
மக்கள் இட்ட பெயர்?...
குழுமியானந்த சுவாமிகள்!
குழுமியா?

ஆமாம்; உய்ய கொண்டான் ஆறு இருக்கிறதே ஆறு. அது பாலக்கரை வழியாக வந்து பிரியும் இடத்துக்குக் குழுமி என்று பெயராம். அந்த இடத்துக்கு அமைதியை நாடிவந்து, அங்கேயே சமாதியும் கொண்டு விட்ட மேற்படி சுவாமிகளை அந்த இடத்தின் பெயரை வைத்தே 'குழுமி யானந்த சுவாமிகள்' என்று மக்கள் அழைக்க ஆரம்பித்து விட்டார்கள். சித்து பல செய்து மக்களின் சிந்தையை வெகுவாகக் கவர்ந்திருந்த அந்த சுவாமிகளை நம் தியாக

ராஜன் என்னவோ தன் வாழ்நாளில் பார்க்கவில்லைதான்; ஆயினும் அவரைப்பற்றி நிறையக் கேள்விப்பட்டிருந்தான்.

ஏதாவது ஒரு குச்சியை எடுத்து வைத்துக்கொண்டு அவர் தம் கையிலுள்ள கத்தியால் அதை எப்பொழுது பார்த்தாலும் சீவிக் கொண்டே இருப்பாராம். அவர் என்ன சாப்பிடுகிறார், எப்பொழுது தூங்குகிறார் என்பது யாருக்கும் தெரியாதாம். அவற்றைத் தெரிந்து கொள்ள யாராவது முயன்றால் அக்கணமே அவர் தம்முடைய அங்கங்கள் அனைத்தையும் மூலைக்கு ஒன்றாகச் சிதறவிட்டுவிட்டுக் கடகடவென்று சிரிப்பாராம். கை வேறு, கால்வேறு, தலை வேறு, முண்டம் வேறு என்று சிதறிக்கிடக்கும் சுவாமி களைப் பார்த்துக் கொண்டு நிற்க யாருக்குத்தான் தைரியம் இருக்கும்? அவர்கள் அந்தப் பயங்கரக் காட்சியைக் கண்டதும் பதறி அவருடைய அங்கங்களைப் போலவே மூலைக்கு ஒருவராகச் சிதறி ஓடி விடுவார்களாம்.

சிறிது நேரம் கழித்துத் திரும்பி வந்து பார்த்தால், சுவாமிகள் முழு உருவில் அமர்ந்து, மறுபடியும் ஏதாவது ஒரு குச்சியை எடுத்து வைத்துக்கொண்டு அமைதியாகச் சீவிக்கொண்டே இருப்பாராம்!

அந்தச் சமயம் பார்த்து அவரை யாராவது மெல்ல நெருங்கி, அவரிடம் தங்கள் குறையை வெளியிட்டால், ''போங்கடா! ஆசையை விடாதவரை உங்கள் துன்பம் உங்களைத் தொடர்ந்து கொண்டு தான் இருக்கும்; போங்கடா, போங்க!'' என்று விரட்டுவாராம். தப்பித் தவறி ''குறையா, கொஞ்சம் குனி!'' என்று குனிந்தவன் தலையில் கொஞ்சம் மண்ணை எடுத்துப் போட்டால் அவனுடைய குறையெல்லாம் ஒரே நொடியில் தீர்ந்துவிடுமாம்.

இத்தகைய மகானிடம் யாருக்கும் மதிப்பும் மரியாதையும் ஏற்படுவது இயல்புதானே? அந்த இயல்பை யொட்டித் தியாகராஜனும் அவரிடம் மதிப்பும் மரியாதையும் கொண்டான்.

அதனால்தானோ என்னவோ, பிற்காலத்தில் ஒரு வகையில் சித்தனாகவே வாழ்ந்து மறைந்த பாகவதர் தம்முடைய சங்கீத அப்பியாசத்துக்கு ஏற்ற இடமாக அந்த சுவாமிகளின் மடத்தையே கொண்டார். அதற்குப் பின்...

பொழுது விடிவதற்கு முன்னால் தியாகராஜன் அந்த மடத்துக்குப் போய்விடுவான். எதிர்த்தாற்போல் இருந்த உய்யக்கொண்டான் ஆற்றில் இறங்கி, தொண்டைவரை தண்ணீரில் மூழ்கி நின்று கணீரென்று பாடுவான். இப்படி விடியும்வரை பாடிய பின் வீட்டுக்கு வருவான். கண்ணாடிக்கு முன்னால் நின்று பாடி, தான் பாடும்போது தன்னுடைய முகம் அஷ்டகோணலாகக் காட்சியளிக்காமல் இருக்கிறதா என்று கவனிப்பான். ஆம், அழகு தன்னுடைய சங்கீதத்தில் மட்டும் இருந்தால் போதாது; 'பாடும்போது அது தன்முகத்திலும் இருக்கவேண்டும் என்று அவன் நினைத்தான்.

நியாயந்தானே? சிலர் பாடும்போது அவர்களுடைய முகம் போகிற போக்கைப் பார்த்தால், ஐயோ பாவம், இவர் ஏன் நமக்காக இவ்வளவு சிரமப்படவேண்டும்? நிறுத்திக் கொள்ளுங்கள் ஐயா, நாங்கள் எழுந்து போய்விடுகிறோம்!' என்று நமக்கே சில சமயம் சொல்லத் தோன்றுகிறதல்லவா? கண்ணாடி அப்பியாசத்துக்குப் பின் காலைச் சிற்றுண்டியை அருந்திவிட்டுக் கிராமபோனை எடுத்து வைத்துக் கொள்வான் தியாகராஜன். அதில் திரு. கிட்டப்பாவின் ரிகார்டுகளைப் போட்டுக் கேட்டுக்கொண்டே இருப்பான். 'அன்றொரு நாள் குட்டி அருஞ்சிறையில் இட்டேன் நான்' என்ற பாடலைக் கேட்கும்போது ''அடாடா, மன்னன் எப்படிப் பாடுகிறான்!' என்று தனக்குத்தானே வியந்து கொள்வான்.

மகாராஜபுரம் விசுவநாதய்யர் கச்சேரி எங்கேயாவது நடக்கிறதென்று தெரிந்தால் போதும்; எந்த வேலையாயிருந் தாலும் அதை ஒத்திப் போட்டுவிட்டு அவருடைய கச்சேரியைக் கேட்க போய்விடுவான்.

ஆம், பின்னாளில் திரு பொன்னுவய்யங்காரை மட்டும் அவன் தன் குருநாதராகக் கொண்டிருக்கவில்லை; இந்த உலகத்திலுள்ள அத்தனை சங்கீத வித்வான்களையுமே தன் குருநாதர்களாகக் கொண்டான். யாரிடம் எந்தச் சிறப்பைக் கண்டாலும் அந்தச் சிறப்பைத் தன்னுடைய பாணியோடு இணைத்துப் பாட அவன் தயங்கியதே இல்லை. அதே சமயத்தில் யாருக்காகவும் அவன் தன்னுடைய தனித்தன்மையைக் கைவிட்டதுமில்லை.

உதாரணமாக, மகான் தியாகய்யரைப் பற்றி ஒரு கதை உண்டல்லவா! ஸ்ரீ ராமபிரானிடம் அளவு கடந்த பக்தி கொண்டிருந்த அவர் எப்பொழுது பார்த்தாலும் ராமர் சிலையைக் கட்டிப் பிடித்துக்கொண்டு, 'ராமா, ராமா!'என்று பாடிக்கொண்டே இருப்பாராம். அதை விரும்பாத அவருடைய அண்ணா ஒரு நாள் அவர் இல்லாத நேரத்தில் அந்தச் சிலையை எடுத்துக் காவேரியில் போட்டு விட்டாராம். எங்குதேடியும் அதைக் காணாத அவர், 'ராமா, உ னை நான் எங்கு தேடுவேனடா?' என்று உள்ளம் உருகப் பாடினாராம். 'நேநெந்து வெதகுதுரா? – ஹரி, நேநெந்து வெதகுதுரா?' என்னும் அந்தக் கீர்த்தனையைத் தியாகராஜன் பாடும்போது எந்த விதமான சங்கதியும் போட்டுப் பாடமாட்டான். 'ஏன்?' என்று யாராவது கேட்டால், அந்த நிலையில் மகான் தியாகய்யர் அந்தக் கீர்த்தனையைச் சங்கதியுடன் பாடியிருக்க முடியாது!' என்பான் உண்மைதானே?

இதனால் என்ன நடந்தது என்கிறீர்கள்? அந்தக் கீர்த்தனையை அவன் வாயால் பாடக்கேட்ட குருநாதர் மட்டுமல்ல; அவன் அப்பாவும் அவனுடன் சேர்ந்து அழ வேண்டியதாயிற்று.

ஆம்,பாவம்தான் முக்கியம் தியாகராஜனுக்கு; சங்கதி அல்ல.

அதற்காக அதை அவன் அறவே விட்டுவிடுவதும் இல்லை. தக்க இடத்தில் அதற்குத் தரவேண்டிய இடத்தைத் தந்தே வந்தான்.

தன்னையும் தன்னுடைய சங்கீத ஞானத்தையும் தியாகராஜன் இப்படியெல்லாம் 'அசுர சாதகம்' செய்து வளர்த்துக் கொண்டு வந்தபோது ஒரு வேடிக்கையான சம்பவம் நிகழ்ந்தது. அதாவது, ஒரு நாள் வழக்கம்போல் அடுக்களைக்குப் போன அவனுடைய தாயார் மாணிக்கத் தம்மாள் விழுந்து விழுந்து சிரித்துக் கொண்டே வெளியே வந்தாள்.

காரணம், வேறொன்றுமல்ல; ஒரு பூனைதான்!

குறுகிய வாயுள்ள ஒரு செம்பு; அந்தச் செம்பில் பால்வாங்கி வைத்திருந்தாள் அவள். அதைக் குடிப்பதற் காகச் செம்புக்குள் தலையை விட்டிருக்கிறது பூனை– பலன்? தலையை வெளியே எடுக்க முடியவில்லை!

'மியாவ், மியாவ்!'

'பால் கிடைக்காவிட்டாலும் பரவாயில்லை; தலை வெளியே வந்தால் போதும்! என்று ஆகிவிடுகிறது பூனைக்கு!

இந்தக் காட்சியைப் பார்த்த மாணிக்கத்தம்மாளால் எப்படி விழுந்து விழுந்து சிரிக்காமல் இருக்கமுடியும்?

'இதைத் தான் மட்டும் அனுபவித்தால் போதாது; தன் மகனும் அனுபவிக்கவேண்டும்' என்று நினைத்த அவள், ''தியாகராஜா, தியாகராஜா! இந்த வேடிக்கையைப் பார்த்தாயா?'' என்று குரல் கொடுத்துக் கொண்டே அவனைத் தேடிவெளியே வந்தாள்.

அவனோ?...

அந்தப் பூனையைப் போலவே குறுகிய வாயுள்ள ஒரு பானைக்குள் தன் தலையை விட்டுவிட்டு, அதை வெளியே எடுக்க முடியாமல் தவியாய்த் தவித்துக் கொண்டிருந்தான்!

ஏன்?

ஒன்றும் புரியவில்லை மாணிக்கத்தம்மாளுக்கு; 'அந்தப் பானையில் நாம் அவனுக்குப் பிடித்த அரிசி முறுக்கோ, அதிரசமோ கூடச் செய்து வைக்கவில்லையே? இவன் ஏன் அதற்குள் தலையை விட்டு விட்டு இப்படி அவதிப்படுகிறான்?' என்று எண்ணி வியந்து கொண்டே அவனை நோக்கி ஓடினாள்.

**சொப்பன வாழ்வில் மகிழ்ந்து...**

தாயார் மாணிக்கத்தம்மாள் தன்னை நெருங்கு வதற்குள் பானைக்குள்ளே இருந்த தலையை எப்படியோ விடுவித்துக் கொண்ட தியாகராஜன், "என்ன, அம்மா! பயந்து விட்டாயா?" என்றான் சிரித்துக்கொண்டே.

நல்லகூத்துத்தான், போ! அப்படி என்ன இருந்தது அந்தப் பானையில்? ஏன் அதற்குள் தலையை விட்டாய்?" என்றாள் தாயார்; முகவாய்க் கட்டையின் மேல் கையை வைத்து.

"பானைக்குள்ளே ஒன்றுமில்லை, அம்மா! அதற்குள் தலையை விட்டுக் கொண்டு பாடினால் தொனி நன்றாயிருக்குமாம்!"

என்னவோ, போ! இத்தனை கஷ்டப்பட்டுச் சாதகம் செய்கிறாய்; பலன் எப்படி இருக்கிறதோ, என்னவோ?"

"அதைப் பற்றிக் கவலைப்பட நாம் யார்? பகவான் இருக்கிறார்!"என்றான் பையன்.

"கீதாசாரியன்கூட அப்படித் தான் சொல்லியிருக் கிறான். அவன் அருளால் உன் சங்கீதம் சிறக்கவேண்டும்; உன்னுடைய முயற்சியில் நீ வெற்றி காணவேண்டும்" என்று தனக்கு எதிர்த்தாற் போல் இருந்த கிருஷ்ண பரமாத்மாவின் படத்தைப் பார்த்துக் கைகூப்பினாள் அவள்.

மாணிக்கத்தம்மாளின் பிரார்த்தனைக்குக் கிருஷ்ண பரமாத்மா செவிசாய்த்தாரோ இல்லையோ, திரு கோவிந்

தாச்சாரி செவி சாய்த்தார். 'யார் இந்தக் கோவிந்தாச்சாரி?' என்கிறீர்களா? சொல்கிறேன்: இவர்தான் தியாகராஜனின் சித்தப்பா; கொஞ்சம் வசதியுள்ளவர். 'வசதி' என்றால் என்ன வசதி?' என்று கேட்க மாட்டீர்களென்று நினைக்கிறேன் – பண வசதிதான். அந்த வசதி இருந்தால்தான் மற்ற வசதிகளெல்லாம் தாமாகவே வந்து சேர்ந்துவிடுமே!

ஆனால் ஒன்று – பணம் உள்ள இடத்தில் குணம் இருப்பதில்லை; குணம் உள்ள இடத்தில் பணம் இருப்பதில்லை. இந்த இரண்டும் சிலரிடம் அபூர்வமாகச் சேர்ந்திருப்பதுண்டு அல்லவா? அந்தச் சிலரில் கோவிந்தாச்சாரி ஒருவர். தியாகராஜனின் கானாமிருதகானத்தைக் கேட்டுப் பரவசமுற்ற அவர், அவனுடைய முதல் கச்சேரியைச் சீரும் சிறப்புமாக அரங்கேற்ற விரும்பினார். அதற்காகப் பக்கவாத்தியக்காரர்கள் சிலரை அவர் அணுகியபோது, ''அந்தப் பையனுக்கா? நாங்கள் வாசிக்க மாட்டோம்!'' என்று மறுத்து விட்டனர். காரணம் வேறொன்றும் அல்ல; 'அதனால் தங்கள் அந்தஸ்து குறைந்துவிட்டால் என்ன செய்வது?' என்ற அச்சந்தான்.

அந்த அச்சத்தில் அர்த்தம் ஒன்றும் இல்லை என்பதை உணர அவர்களுக்கு வெகு நாட்கள் ஆகவில்லை; அரங்கேற்றம் நடந்த அன்றே அதை அவர்கள் உணர்ந்து விட்டார்கள்.

ஆம், கோவிந்தாச்சாரியின் முயற்சியால் தியாகராஜனின் முதல் குருவான பொன்னுவய்யங்காரே அவனுடைய முதல் கச்சேரிக்குப் பிடில் வாசிக்க ஒப்புக் கொண்டது அவன் தன் வாழ்க்கையில் அடைந்த முதல் வெற்றி. இரண்டாவது வெற்றி, 'அபிநவ நந்திகேசுவரர்' புதுக்கோட்டை திரு. தட்சணாமூர்த்தி பிள்ளையவர்களின் சீடர்களில் ஒருவரான திரு தட்சணாமூர்த்தி ஆச்சாரி தியாகராஜனின் கச்சேரிக்கு மிருதங்கம் வாசிக்க ஒப்புக் கொள்ளாதது!

'அது எப்படி வெற்றியாகும்?' என்கிறீர்களா? இல்லாவிட்டால் ஆனானப்பட்ட தட்சணாமூர்த்தி பிள்ளையவர்களே தியாகராஜனின் அரங்கேற்றத்துக்கு வந்து கஞ்சிரா வாசித்திருக்க முடியுமா?

அந்தக் கதையையும்தான் கொஞ்சம் கேளுங்களேன்: கோவிந்தாச்சாரிக்கு மதுரை ஆச்சாரி என்று ஒரு நண்பர். தம் குலத்தொழிலைச் செய்து வந்து அவர், ஊரோடு இயங்கி வந்த பஜனை கோஷ்டிகள் சிலவற்றுக்கு அவ்வப்போது மிருதங்கம் வாசிப்பதைத் தம்முடைய பொழுதுபோக்காகக் கொண்டிருந்தார். கடைசியாக அவரை அணுகி, ''பையனின் அரங்கேற்றத்துக்கு நீங்களாவது வந்து மிருதங்கம் வாசியுங்களேன்!'' என்றார் கோவிந்தாச்சாரி.

''தட்சணாமூர்த்திஆச்சாரியைக் கூட்பிட்டீர்கள் போல் இருக்கிறதே, அவர் என்ன சொன்னார்?'' என்று மதுரை ஆச்சாரி கேட்டார்.

''அந்த வெட்கக்கேட்டை ஏன் கேட்கிறீர்கள்? அவரும் அவனுக்கு வாசிக்க முடியாது என்று சொல்லி விட்டார்!'' என்றார் அவர் சோர்வுடன்.

''அப்படியா? நான் அவரை வாசிக்க வைக்கிறேன்!'' என்று மதுரை ஆச்சாரி அப்பொழுதே புதுக்கோட்டைக்குப் புறப்பட்டுப் போனார். சாட்சாத் தட்சணாமூர்த்தி பிள்ளை அவர்களையே நேரில் பார்த்து விஷயத்தைச் சொன்னார். ''அப்படியா சொன்னான் அந்தத் தட்சிணா மூர்த்தி? நீங்கள் ஊருக்குப் போய் அவனை நான் மிருதங்கத்தோடு அரங்கேற்றத்துக்கு வரச்சொன்னதாகச் சொல்லுங்கள்; நானும் அன்றைக்கு அங்கே வந்து அவன் வாசிக்கிறானா, இல்லையா என்று பார்த்து விடுகிறேன்!'' என்றார் பிள்ளையவர்கள்.

'நிறை குடம் தளும்பாது' என்பதை நேருக்கு நேராகக் கண்டு மகிழ்ந்த மதுரை ஆச்சாரி, பிள்ளை

யவர்களை வணங்கி விடை பெற்றுத் திருச்சிக்கு வந்தார். கோவிந்தாச்சாரியிடம் விஷயத்தைச் சொன்னார். அவ்வளவு தான்; அடுத்த நாளே 'திருச்சி பெரிய கம்மாளர் தெருவில் உள்ள காளியம்மன் கோயிலில் 'அபிநந்தி கேசுவரர்' திரு தட்சிணாமூர்த்தி பிள்ளையவர்களின் தலைமையில் விசுவ குல திலகம் எம்.கே.தியாகராஜனின் முதல் கச்சேரி அரங்கேற்று விழா நடைபெறும். வருக வருக, அனைவரும் திரண்டு வருக! என்ற சுவரொட்டிகள் மூலைக்கு மூலை காட்சியளிக்க ஆரம்பித்துவிட்டன.

'விசுவ குல திலகமாவது! அது ஜாதி வெறியைக் காட்டவில்லையா? என்று இந்நாளில் சிலர் முகத்தைச் சுளிக்கலாம். உண்மை: இந்தக் காலத்தில் அது கொஞ்சம் மறைமுகமாகக் காட்டப்படுவது உண்மை. அந்தக் காலத்திலோ அது கொஞ்சம் பகிரங்கமாகவே காட்டிக் கொள்ளப்பட்டது – வித்தியாசம் அவ்வளவே!

அந்த ஜாதி வெறிகூடத் தியாகராஜ 'ஆசாரி'யின் பாட்டுக்குத் தட்சணாமூர்த்தி 'ஆச்சாரி'யை மிருதங்கம் வாசிக்க விடவில்லை யென்றால், சர்வ வல்லமையுள்ள 'அந்தஸ்து' எதையெல்லாம் கடந்து நிற்கிறது என்பதை நீங்களே பார்த்துக் கொள்ளுங்களேன்.!

திருச்சி வாசிகள் அனைவரும் ஆவலோடு எதிர் பார்த்துக் கொண்டிருந்த அந்த நாளும் வந்தது. எந்த நாள்? தியாக ராஜனின் முதல் கச்சேரி அரங்கேறிய நாள்தான். கூட்ட மாவது கூட்டம், எண்ணில் அடங்காத கூட்டம்! மைக்? பேசக்கூடாது. ஆனாலும் அபிநவ நந்திகேசு வரருக்காக எங்கிருந்தோ ஒரு 'டேபிள் பே'னை மட்டும் கொண்டு வந்து அவருக்கு எதிர்த்தாற்போல் வைத்துச் சுழல விட்டிருந் தார்கள். ''முருகா, முருகா!''என்று அவர் தம் வழக்கம் போல் வாய்விட்டுக் கூறிக்கொண்டே சபைக்கு வந்து உட்கார்ந்தார். பதினாறு வயதே நிரம்பியிருந்த பையன் தியாகராஜனைப் பார்த்ததும், ''முருகனின் அவதாரம் போலவே இருக்கி

றானே!'' என்றார். அவனுடைய தோற்றம் அவ்வளவுதூரம் அவருடைய சிந்தையைக் கவர்ந்தது. அடுத்தாற்போல் தம்மைக் கண்டதும் கூனிக்குறுகி உட்கார்ந்த தட்சிணா மூர்த்தி ஆச்சாரியை நோக்கி, ஏண்டாப்பா, தட்சணாமூர்த்தி நீ வாசிக்கிறாயா? இல்லை, நானே வாசிக்கட்டுமா?'' என்றார், அவரிடம் இருந்த மிருதங்கத்தைத் தம் பக்கமாக நகர்த்திக் கொள்ள முயன்று கொண்டே.

''வேண்டாங்க, நானே வாசிக்கிறேனுங்க!'' என்றார் அவர் அதற்கு இடம் கொடாமல்.

''அப்போ நான் கஞ்சிராவை எடுத்துக் கொள்கிறேன்'' என்று பிள்ளையவர்கள் கஞ்சிராவை எடுத்துக் கொண்டார்.

''இந்தக் கச்சேரிக்கு நீங்கள் வருவீர்கள் என்று நான் கொஞ்சங்கூட எதிர்பார்க்கவில்லை; பையன் கொடுத்து வைத்தவன்!'' என்று உணர்ச்சி மேலிடக் கூறிக்கொண்டே பொன்னுவய்யங்கார் பிடிலை எடுத்துக்கொண்டார்.

''நீரும் கொடுத்து வைத்தவர்தான்; இல்லா விட்டால் இவனுக்கு முதல் குரு என்ற பெருமை உங்களுக்குக் கிடைத்திருக்குமா?''என்றார் பிள்ளையவர்கள்.

தம்புரா சுருதி கூட்ட, கச்சேரி 'ஜம்'மென்று ஆரம்ப மாயிற்று.

'மைக் இல்லைதான். அதனால் என்ன? பையன் எடுக்கும்போதே நாலறைக் கட்டை சுருதியில் அல்லவா பாடுகிறான்.

கூட்டத்தில் ஒரு சத்தமில்லை; ஒரே நிசப்தம்.

''ஆகா!''

''ஆகாகா!''

''அற்புதம்!''

''அபாரம்!''

''பையன் சாகித்தியத்தை மட்டும் கவனித்துப் பாட வில்லை; அந்தச் சாகித்தியத்தை இயற்றும்போது சாகித்திய

கர்த்தாவின் மனோநிலை எப்படி இருந்திருக்கும் என்பதையும் கவனித்துப் பாடுகிறான்!''

'என்ன கற்பனை, என்ன கற்பனை!''

'ராகத்துக்காக எந்த வார்த்தையையும் அவன் சிதைக்கவில்லை, பார்த்தீர்களா?'

''ஆலாபனைகளையெல்லாம் நெடில் எழுந்து வரும் இடத்தில் வைத்துக் கொள்கிறான்; குறில் எழுத்து வரும் இடத்தில் அதைப் போட்டுக் குழப்புவதைத் தவிர்க்கிறான்!''

''அருவருக்கத் தக்க அங்க சேஷ்டைகள்...?

''ஊஹூம்!''

''தமிழ் இசைக்கு இவன் கொடுக்கும் பிரதானம்...''

''மெச்சத் தக்கது சுவாமி, மெச்சத்தக்கது!''

இத்தகைய பராட்டுரைகள் கூட்டத்தினரிடையே யிருந்து மட்டும் வந்துகொண்டிருக்கவில்லை; பிள்ளையவர்களிடமிருந்தும் வந்து கொண்டிருந்தது. அது மட்டுமல்ல. ''இதுவரை எத்தனையோ இளம் வித்வான்கள் எனக்கு முன்னால் பாடியிருக்கின்றனர். அவர்களில் யாரும் இவனைப்போல் இத்தனை தைரியமாக எனக்கு முன்னால் பாடி இது வரை நான் கேட்டதேயில்லை!'' என்று வேறு சொல்லிவியந்தார். தியாகராஜனோ, ''எல்லாம் அம்பாள் அருள்; இல்லாவிட்டால் தங்களைப் போன்ற பெரியவர்களின் அன்பும் ஆசியும் எடுக்கும்போதே எனக்குக் கிடைத்திருக்குமா?'' என்றான் தன்னடக்கத்துடன்.

இந்த நிலையில் முதலில் அவனுக்கு மிருதங்கம் வாசிக்க மறுத்த தட்சணாமூர்த்தி ஆச்சாரி என்ன நினைத்தார் என்கிறீர்கள். ''அடாடா, எவ்வளவுநல்ல சந்தர்ப்பத்தை நாம்இழக்க விருந்தோம்? இவனுக்கு மிருதங்கம் வாசிப்பதால் இப்போது நம்முடைய அந்தஸ்து உயர்ந்து கொண்டல்லவா இருக்கிறது!'' என்று நினைத்தார்.

அவர் மட்டும் என்ன? ஆரம்பத்தில் தியாக ராஜனுக்குப் பக்கவாத்தியம் வாசிக்க மறுத்த அத்தனை பேருமே அப்படித் தான் நினைத்தார்கள்.

இத்தனை கோலாகலத்துடன் கச்சேரி நடந்து கொண்டிருந்தபோது, ''ஐயோ!'' என்று ஓர்அவலக்குரல் எங்கிருந்தோ வந்தது. அதைத் தொடர்ந்து, ''என்ன, என்ன நடந்தது?'' என்ற கூக்குரல்கள் நாலா பக்கங்களிலிருந்தும் எழுந்தன. கோவிந்தாச்சாரி பதட்டத்துடன் கூட்டத்தை விலக்கிக் கொண்டு போய்ப் பார்த்தார். 'அபிநவ நந்தி கேசுவர' ருக்காக எங்கிருந்தோ கொண்டுவந்து வைக்கப் பட்டிருந்த 'டேபிள்பே'னில் கைவைத்த சிறுவன் ஒருவன் 'ஷாக்'குக் குள்ளாகிச் சற்றுத் தூரத்தில் தூக்கியெறியப்பட்டி ருந்தான். பேச்சு மூச்சற்றுக்கிடந்த அவனைச் சுற்றிநின்ற கூட்டம் ''ஐயோ ஆரம்பத்திலேயே இப்படி ஓர் அசம்பா விதம் நிகழ்ந்து விட்டதே!''என்று முணுமுணுத்துக் கொண்டி ருந்தது.

விஷயத்தை அறிந்த பிள்ளையவர்கள், ''கவலைப் படாதீர்கள்; முருகன் இருக்கிறான்!'' என்று சொல்லிக் கொண்டே எழுந்து அவர்களை நோக்கிவிரைந்தார்.

### அற்பப் பணப்பேய் பிடித்தே...

பிள்ளையவர்கள் வந்ததும் சிறுவனைச் சுற்றி நின்ற கூட்டம் சற்றே விலகிக் கொண்டது. ''முருகா! இந்த நேரத்தில் இங்கே இப்படி ஓர் அசம்பாவிதம் நடக்கக் கூடாதென்று உனக்குத் தெரியாதா? இவனைக் கொஞ்சம் எழுப்பி விட்டுவிடடா!'' என்றார். அவ்வளவு தான்; பையன் தூங்கி விழித்தவன்போல் விழித்து, ''ஏன், என்ன நடந்தது? என்னைச்சுற்றி ஏன் இந்தக்கூட்டம்?'' என்றான் ஒன்றும் புரியாமல்.

''வேறு என்னடா, நடக்கவேண்டும்? 'குரங்கி லிருந்து வந்தவன்தான் மனிதன்' என்பதைக் கண்மூடிக் கண்

திறக்கும் நேரத்தில் நிரூபித்துவிட்டாயே? போ, போய் ஒரு பக்கமாக உட்கார். இன்னொருமுறை 'டேபிள் பே'னில் கையை வைத்து, முருகனுக்கு அனாவசியமாகத் தொந்தரவு கொடுக்க வைத்துவிடாதே!'' என்றார் பிள்ளையவர்கள்.

சிறுவன் வெட்கித் தலை குனிந்து ஒரு பக்கமாகப் போய் உட்கார்ந்தான்.

அதற்குமேல் அன்றையக் கச்சேரியில் எந்தவிதமான அசம்பாவிதமும் நிகழவில்லை; எல்லாம் நல்லபடியாகவே நடந்து முடிந்தது. திரு. தட்சிணாமூர்த்தி பிள்ளையவர்கள் கடைசியாகச் சொன்னார்.

''கர்நாடக சங்கீத உலகத்துக்கு முருகன் அளித்திருக்கும் வரப்பிரசாதம் தியாகராஜன். இவனால் தமிழிசை வளரும்; வாழும். அவற்றுடன் இவனும் வாழ்வான். இவன் வாழும் போது தன் பெட்டியைக்கூடத் தங்கச்சாவி கொண்டு திறப்பான் என்பதில் எனக்குச் சந்தேகமேயில்லை!''

ஆம், பிற்காலத்தில் அவன் தன் பெட்டியைத் தங்கச்சாவிகொண்டு திறந்தானோ இல்லையோ, சென்னை மயிலையில் உள்ள கபாலி டாக்கீசைத் தங்கச் சாவிக் கொண்டு திறந்து வைத்தான்.

ஆக, ஏதோ ஒரு விதத்தில் பிள்ளையவர்களின் வாக்கு பலித்தது.

அதற்குப்பின் ஒன்றன் பின் ஒன்றாக எத்தனையோ கச்சேரிகள், பாராட்டுரைகள்...

அவற்றால் பெருமையும் புகழும் தான் வந்து குவிந்தனவே தவிர, பணம்வந்து குவியவில்லை.

குவியாவிட்டால் போகட்டும்; கஷ்டமில்லாமல் காலம் தள்ளவாவது முடிந்ததா என்றால், அதுவும் இல்லை.

'கலை கலைக்காகவே!'' என்று கொஞ்சம் வசதியுள்ளவர்கள் வேண்டுமானால் சொல்லிக் கொண்டிருக்க

லாம்; வசதியில்லாதவர்கள், 'கலை கலைக்காக மட்டுமல்ல; ஓரளவு காசுக்காகவும்தான்!'' என்று தானே சொல்ல வேண்டியிருக்கிறது?

ஆகவே, சங்கீத உலகத்தோடு நாடக உலகத்தையும் சேர்த்துக்கொண்டால் என்ன? என்ற எண்ணம் தியாக ராஜனின் உள்ளத்தில் எழுந்தது. அதன் பயனாக முதலில் ஓரிரு நாடகங்களையாவது நடத்தக் கற்றுக் கொள்ள வேண்டும் என்று அவன் தீர்மானித்தான். அதற்காக அந்தக் காலத்தில் பிரசித்தி பெற்றிருந்த நடராஜ வாத்தியார் என்பவரை அவன் நெருங்கினான். அந்த நாளில் அபூர்வமாக பி.ஏ.வரை படித்திருந்த அவர் 'குடியரசு,' 'திராவிடன்,' 'தமிழரசு' போன்ற பத்திரிகைகளின் ஆசிரியராகவும் இருந்திருக்கிறார். அது மட்டுமல்ல; 'ஞானகுமாரி நளின சிங்காரி'போன்ற பிரபலப் பாடல்கள் அவரால் இயற்றப் பட்டவைதாம். சர்வ லட்சணங்களும் பொருத்தியிருந்த தியாக ராஜனைக் கண்டதும் அவர், ''இயல் இசை, நாடகம் ஆக முத்தமிழ்க் கலா வித்வ சிரோண்மணியாக விளங்க வேண்டியவன் நீ. உன்னைத் தேடி நானே வரவேண்டு மென்று இருந்தேன்; அதற்குள் நீயே என்னைத் தேடி வந்துவிட்டாய். வா உட்கார். இனி நீ வெறும் தியாகராஜன் இல்லை; தியாகராஜபாகவதர்!''என்று அன்றே அவனுக்குப் பாகவதர் பட்டத்தைச்சூட்டி, அவனை அன்புடன் இன்முகம் காட்டி வரவேற்றார். எதிர்பாராத இந்த வரவேற்பு தியாக ராஜனின் இதயத்தை இன்பத்தால் நிறைத்தது. தனக்கு வேண்டிய நாடகங்களை அவரிடமிருந்து எழுதி வாங்கிக் கொண்ட தோடு அவன் நிற்கவில்லை; தன் வாழ்நாள் முழுவதும் அவரையே தன்னுடைய உற்ற தோழனாகவும் கொண்டார்.

நாடகம் எழுதிவிட்டால் போதுமா? அதை நடத்து வதற்கு வேண்டிய பயிற்சி தர வேண்டாமா? அதற்காக அந்த நாளில் அக்கலையிலே தேர்ச்சி பெற்றிருந்த திரு.நரசிம்மய்யங்கார் என்பவரைப்பிடித்தார்கள். புகழ்

பெற்ற நடிகை எம்.எஸ்.விஜயாவின் பெரியப்பாவான இவர் பாகவதருக்கு நடிப்பதற்கு வேண்டிய பயிற்சியை மனமுவந்து அளித்தார்.

முதல் நாடகத்தை அரங்கேற்றுவதற்குப் பணம் வேண்டாமா? அதற்கு வேண்டிய ஏற்பாட்டைச் செய்தவர் திரு.மாணிக்கம் ஆச்சாரி என்பவராவர்.

இவர் தியாகராஜபாகவதரின் அத்தை மகன், இவருடைய முயற்சியால் பாகவதரின் முதல் 'ஸ்பெஷல்' நாடகம் பொன் மலையில் உள்ள 'ஆபீஸர்ஸ்லை'னிலே அரங்கேறிற்று.

அதற்குப் பின் பல காண்ட்ராக்டர்கள் தியாகராஜ பாகவதரைத் தேடி வந்தார்கள். அவர்களுடன் அவர் எந்த விதமான பேரமும் பேச விரும்பவில்லை; அதற்குரிய தகுதி தமக்கு இருப்பதாகவும் அவர் நினைக்கவில்லை. ஆகவே, அந்தப் பொறுப்பை நடராஜ வாத்தியாரிடம் ஒப்படைத்து விட்டு அவர் அதிலிருந்து விலகிக்கொண்டார்.

'நடிகன் நடிகனாகத்தான் இருக்கவேண்டும்; வியாபாரியாகக் கூடாது' என்பது அவருடைய எண்ணமோ என்னவோ, யார் கண்டார்கள்?

இதனால் அவருடைய அப்பா கிருஷ்ணமூர்த்திக்கும் அவருக்கும் இடையே ஓரளவு மனத்தாங்கல் கூட ஏற்பட்டது. அதன் காரணமாக, "என் பையனின் நாடகத்துக்குப் பேரம் பேச நான் இருக்கும்போது அந்த நடராஜ வாத்தியார் யார்? " என்று அவர் பொறுமினார். ஆனால் அந்தப் பொருமலை அவர் பாகவதரிடம் காட்டிக்கொள்ள வில்லை; அவருடைய தாயார் மாணிக்கத் தம்மாளிடம் காட்டிக் கொண்டார். அவளோ, "பையன் எதையும் தெரியாமல் செய்யமாட்டான்; எல்லாம் தெரிந்து தான் செய்வான். நீங்கள் பேசாமல் இருங்கள்!" என்று ஒரு போடு போட்டு விட்டாள்.

பாகவதர் சிரித்தார்!

''சிரிப்பு என்னடா வேண்டியிருக்கிறது, சிரிப்பு?'' என்று அவர் மேல் எரிந்து விழுந்தார் கிருஷ்ணமூர்த்தி.

''பணம் வந்தால் பகையும் சேர்ந்துவரத்தான் செய்யும், அப்பா! அதற்கு நாம் இடம் கொடுக்கக்கூடாது!'' என்றார் பாகவதர்.

இப்படியாக நாடகத் துறையிலே பிரவேசித்த தியாகராஜ பாகவதர், புதுக்கோட்டையிலே ஒரு சோதனைக்கு உள்ளானார். அங்கிருந்த பிரகதாம்பாள் தியேட்டரிலே அன்று அவருடைய நாடகம் நடப்பதாக இருந்தது. எதிர்பார்த்தபடி வசூல் ஆகவில்லை என்பதற்காகக் காண்ட்ராக்டர் பயந்து, யாரிடமும் சொல்லிக் கொள்ளாமல் ஓடிவிட்டார்!

நாடகத்தை மேலே எப்படி நடத்துவது? நம் குழுவைச்சேர்ந்தவர்களின் கணக்கை எப்படித் தீர்ப்பது? நாடகம் முடிந்ததும் ஊருக்கு எப்படித் திரும்பிப்போவது? வாங்கிய முன் பணம் கூட எப்பொழுதோ செலவாகி விட்டதே!...

கையைப் பிசைந்தார் பாகவதர்; அதைத் தவிர அப்போது வேறொன்றும் செய்யத் தோன்றவில்லை அவருக்கு!

அதற்குள் 'வொய்ங், வொய்ங்' என்ற விசில் சத்தமும், 'எங்கே அந்தக் காண்ட்ராக்டர் இழுத்து வா, அவனை! இன்னும் எத்தனை மணிக்கு நாடகம் நடத்தப் போகிறானாம்?' என்ற இரைச்சலும் ரசிக மகா ஜனங்களிடையேயிருந்து எழுந்தன.

'இன்னும் கொஞ்ச நேரத்தில் கல் மாரி பொழிய ஆரம்பித்துவிடுமோ?' என்ற அச்சத்தில் பாகவதர் தலையைக் கையால் அழுத்திப் பிடித்துக் கொண்டு தவித்தார்.

அப்போது அவருக்குக் கைகொடுத்தவர் யார் என்கிறீர்கள்?

வேறு யாருமில்லை; சகநடிகர்தான்.

அந்த நாளில் பாகவதருடன் எந்தக் கதாநாயகிகளும் நடித்துக் கொண்டிருக்கவில்லை; அதற்கு நம் சமூகமும் அனுமதிக்கவில்லை; 'கதாநாயகர்கள்'தான் 'கதாநாயகி களாக நடித்துக் கொண்டிருந்தார்கள். அந்த வழக்கத்தை யொட்டி அன்று அவருடன் கதாநாயகியாக நடிக்கவிருந்த வர் அவருடன் குருகுல வாசம் செய்தவரும், அவருடைய அருமைநண்பருமான திரு டி.பி.ராமகிருஷ்ணன் என்பவ ராவர். தற்போது திருச்சி வானொலியில் நிலைய வித்வானாகப் பணியாற்றிக்கொண்டிருக்கும் அவர், "எந்த நிலையிலும் மனிதன் தைரியத்தை இழந்துவிடக் கூடாது; நாம் நாடகத்தை நடத்துவோம்; நடப்பது நடக்கட்டும்!" என்றார்.

அதற்கு மேல் பாகவதர் தயங்கவில்லை; தாமதிக்க வில்லை; வேடம் தரிக்க ஆரம்பித்துவிட்டார்.

அன்றைய நாடகம் 'வள்ளித்திருமணம்.' பாகவதர் வேலன் வேடன் விருத்தனாகவும், டி.பி.ராமகிருஷ்ணன் வள்ளியாகவும் நடித்தனர்.

நேரம் ஆக, ஆகக் காண்ட்ராக்டர் எதிர்பார்த்தபடி மட்டும் அல்ல; எதிர்பாராத விதமாகவும் கூட்டம் சேர்ந்து விட்டது.

அப்புறம் வசூலுக்கு கேட்பானேன்? எல்லாச் செலவும் போக எஞ்சியிருந்ததைக் காண்ட்ராக்டர் வந்தால் கொடுத்து விடுமாறு தியேட்டர்காரரிடம் தெரிவித்து விட்டுத் தம் சகாக்களுடன் நிம்மதியாக ஊருக்குத் திரும்பினார் பாகவதர்.

**ஒரு பிழையும் செய்தறியேன்...**

வருமானத்தை வைத்துப் பார்க்கும்போது, சங்கீதத் துறையைவிட நாடகத்துறையே மேல் என்று நினைத் தாலும், பாகவதர் அதற்காக இதைவிடவில்லை; இதற்காக

அதை விடவில்லை. இரண்டு துறைகளிலுமே ஈடுபாடு கொண்டு, அவற்றில் மேலும் மேலும் தம் கவனத்தைச் செலுத்தி வந்தார்.

நவாப் நாதஸ்வரம் கேட்ட கதை தெரியுமல்லவா உங்களுக்கு? ஒரு சமயம் நாதஸ்வர வித்வான் ஒருவருக்கு நவாப்தர்பாரில் கச்சேரி செய்யும் சந்தர்ப்பம் வாய்த்தது. நவாப்பைக் குஷிப்படுத்த முயன்றார் வித்வான். கச்சேரி முடிந்தது; சன்மானம் கொடுக்கும் கட்டம் வந்தது. நாதஸ்வர வித்வானுக்கு ஒரு பங்கு சன்மானம் அளித்த நவாப், ஒத்து ஊதியவருக்கு மட்டும் இரண்டு பங்கு சன்மானம் அளித்தார். ஒன்றும் புரியாமல் தம்மை வெறித்துப்பார்த்த நாதஸ்வர வித்வானுக்கும் தவில் வித்வானுக்கும் அவர் சொன்ன சமாதானம்:

''உங்களைவிட அவனுக்குத்தான் கஷ்டம் அதிகம்; எவ்வளவு நேரம் 'தம்'பிடித்து ஊதினான் அவன்!''

இந்த நவாப்பின் நிலையில்தான் அந்தகக் காலத்து ரசிகர்களில் பலர் இருந்தார்கள். அவர்கள் சங்கீதம் பாடுவதை விட சுவரம் பாடுவதையே அதிகம் விரும்பி னார் கள். அந்த சுவரத்தை ஒரு நடிகரோ,பாடகரோ எவ்வளவுக் கெவ்வளவு நேரம் 'தம்'பிடித்துப் பாடுகிறாரோ' அவ்வளவுக்கவ்வளவு நேரம் அவர்கள் கரகோஷம் செய்து தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்து வந்தார்கள்.

இத்தகைய ரசிகர்களைத் தாமும் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தவேண்டும் என்பதற்காகப் பாகவதரும் சுவரம் பாடக் கற்க முயன்றார். அதற்காக அந்நாளில் சுவரம்பாடுவதில் தேர்ச்சி பெற்றிருந்த திரு.சூசையாப்பிள்ளை என்பவரை அவர் அணுகினார். அவர் பாடக் கற்றுக் கொடுத்ததோடு நிற்கவில்லை; கச்சேரிகள் பலவற்றுக்கும் ஏற்பாடு செய்தார். பிள்ளை ஏற்பாடு செய்யும் கச்சேரிகள் பெரும்பாலும் கிறிஸ்தவர் வீட்டுக் கச்சேரிகளாக இருக்கும்.அங்கே போய் அரியைப் பற்றியும் சிவனைப் பற்றியும் மட்டுமே பாடிக்

கொண்டிருக்க முடியுமா? ஏசுநாதரைப் பற்றியும் பல பாடல் களைப் பாடுவார். அவற்றில் மிகப் பிரசித்தமான பாடல் இது:

'நாலு கிணற்றுத் தண்ணி
நடுக்கிணற்று உப்புத்தண்ணி
நல்ல தண்ணியாகச் செய்தவர் – என் ஏசுவே
நல்ல தண்ணியாகச் செய்தவர்'

பாகவதர் இந்தப்பாட்டை முணுமுணுத்துக் கொண்டே வீட்டுக்குள் நுழைந்தால் போதும்; ''என்னடா, நாளை மத்தியானம் முருங்கைக்காய் சாம்பார் வைக்க வேண்டுமா?'' என்று சிரித்துக்கொண்டே கேட்பாள் தாயார். ''ஆமாம், அம்மா!'' என்று பாகவதரும் சிரித்துக்கொண்டே பதில் சொல்லிவிட்டுத் தம் அறைக்குப் போவார்.

இப்படி ஒரு முறையல்ல, பலமுறை அம்மா கேட்பதையும், அண்ணா பதில் சொல்வதையும் கவனித்துக் கொண்டிருந்த தம்பிமார்களுக்கு ஒன்றும் புரியவில்லை. 'நாலுகிணற்றுத் தண்ணிக்கும், முருங்கைக்காய் சாம்பா ருக்கும் என்ன சம்பந்தம்? அந்தப் பாட்டை அண்ணா பாடிக் கொண்டு வரும் போதெல்லாம் அம்மா ஏன் அப்படிக் கேட்கிறாள்? அண்ணா ஏன் அப்படிப் பதில் சொல்கிறான்?'' என்று அவர்கள் யோசித்தனர், யோசித்தனர், அப்படி யோசித்தனர். யோசிக்க யோசிக்கக் குழப்பம் மிஞ்சியதே தவிர, விஷயம் இன்ன தென்று விளங்கவில்லை.

அண்ணாவைக் கேட்கலாமென்றாலோ அந்த அளவுக்குத் தைரியம் அக்காலத்துத் தம்பிமார்களுக்கு ஏது? அதிலும் தங்கள் அண்ணாவிடம் அவர்கள் கொண்டிருந்த அன்பும் மரியாதையும் இருக்கின்றனவே, அவை அளவிடற் கரியன. அவற்றைப் பற்றி இதோ அவர்களே சொல்வதைக் கேளுங்கள்.

''எங்கள் அண்ணாரை நாங்கள் நேருக்கு நேராக நின்று கூடப்பார்க்க மாட்டோம். ஏதாவது ஒரு தூணின்

மறைவில் நின்று எட்டி எட்டித்தான் பார்ப்போம். ஏன்? பயமா? அப்படியொன்றும் இல்லை; அதற்கு அவசியமும் இருக்க வில்லை. நாங்கள் அவரை மனமாற நேசித்தது போலவே அவரும் எங்களை மனமாற நேசித்துத்தான் வந்தார். ஆனாலும் ஏனோ தெரியவில்லை. அவர் எங்களால்கூட அவ்வளவு எளிதில் நெருங்க முடியாதவராயிருந்தார்!''

இந்தக் காலத்தில் எந்தத் தம்பியாவது இப்படி யிருக்க நீங்கள் பார்க்கிறீர்களா?

அதற்காக அந்த நாலு கிணற்றுத்தண்ணிக்கும் முருங்கைக் காய் சாம்பாருக்கும் உள்ள சம்பந்தத்தைத் தெரிந்து கொள்ளாமல் இருக்கவும் அவர்களால் முடிய வில்லை; அம்மாவை ஒரு நாள் மெல்ல நெருங்கி, ''அம்மா, அம்மா! நாலு கிணற்றுத் தண்ணி, நடுக்கிணற்று உப்புத் தண்ணி, என்று அண்ணா பாடிக்கொண்டு வரும் போதெல் லாம், என்னடா நாளை மத்தியானம் முருங்கைக்காய் சாம்பார் வைக்கவேண்டுமா?' என்று நீங்கள் கேட்கிறீர் களே, அது ஏன் அம்மா!'' என்று தங்கள் விழிகளில் ஆசை பொங்கக் கேட்டார்கள்.

அவளும் அவ்வளவு சுலபமாக அந்தக் கதையை அவர்களிடம் சொல்லிவிடவில்லை. ''போங்கடா, அதெல்லாம் உங்களுக்கு ஏன்?'' என்று கேட்டு அவர்களை விரட்டினாள்.

'அம்மாதானே, அடித்தால்கூட வலிக்காது!' என்று எண்ணியோ என்னவோ, ''அம்மா, அம்மா! சொல், அம்மா? அம்மா!அம்மா! சொல் அம்மா?'' என்று அவர்கள் அவளைக் 'கெஞ்சு, கெஞ்சு' என்று கெஞ்சினார்கள். அதற்கு மேல் அவள் சொன்னாள்.

''சங்கீத வித்வான் சூசையாப்பிள்ளையை உங்க ளுக்குத் தெரியுமல்லவா?''

''தெரியும்''

''அவர் உங்கள் அண்ணாவின் குருமார்களில் ஒருவர். அவர் ஏற்பாடு செய்யும் கச்சேரி எதுவாயிருந்தாலும் அதற்கு அண்ணா தட்டாமல் போய்வருவான். தாம் ஏற்பாடு செய்யும் கச்சேரிக்கு அவர் ரூபாய் பதினைந்து என்று 'ரேட்' பேசுவாராம். அதில் பத்து ரூபாயைத் தாம் எடுத்துக் கொண்டு மீதி ஐந்து ரூபாயை உங்கள் அண்ணாவிடம் கொடுப்பாராம். அந்த ஐந்தை வாங்கிக்கொண்டு அவன் திரும்பும்போது, 'கொஞ்சம் நில்லுடா!' என்று சொல்லிக் கொண்டே அவர் அவனுக்குப் பின்னால் வருவாராம். அவன் நின்று, 'என்ன வேண்டும்? என்று கேட்டால், 'இரண்டு சுருட்டு வேண்டும்' என்பாராம். 'சரி'என்று தன் கையிலுள்ள ஐந்து ரூபாய் நோட்டை மாற்றி இரண்டு சுருட்டுகளை வாங்கிக்கொடுத்தால் 'மீதிச் சில்லறை எங்கே!' என்று கேட்பாராம். அதையும் அவரிடம் கொடுத்தால், ரூபாய் மூன்றை உங்கள் அண்ணாவிடம் கொடுத்துவிட்டுப் பாக்கியை அவர் எடுத்துக் கொள்வாராம் 'போகட்டும் மூன்று ரூபாயாவது மிஞ்சியதே!' என்று உங்கள் அண்ணா திரும்பினால், 'கொஞ்சம் நில்லுடா!' என்று சொல்லிக் கொண்டே அவர் மீண்டும் அவனுக்குப் பின்னால் வருவாராம். 'என்ன வேண்டும்?' என்று கேட்டுக் கொண்டே நின்றால், 'ஒன்றும் வேண்டாம். உன் அம்மாவிடம் சொல்லி நாளை மத்தியானம் முருங்கைக்காய் சாம்பார் வைக்கச் சொல்; நான் சாப்பிட வருகிறேன்' என்பாராம். இது தான் அவர் சொல்லிக்கொடுத்த 'நாலு கிணற்றுத்தண்ணி, நடுக்கிணற்று உப்புத் தண்ணி' என்ற பாட்டுக்கும் 'முருங் கைக்காய் சாம்பா'ருக்கும் உள்ள சம்பந்தம்!''

''இந்தச் சம்பந்தத்தைப் பற்றி அண்ணார் ஒன்றுமே சொல்வதில்லையா, அம்மா?''

''அவன் என்ன சொல்கிறான்? 'அந்தப் பதினைந்து ரூபாய்க்காக அவர் அத்தனை பாடுபடவேண்டியதில்லை. என்னைக் கேட்டால் அதை நானே அவரிடம் அப்படியே கொடுத்துவிட்டு வந்துவிடுவேன்' என்கிறான்!''

*அன்றே இப்படிச் சொன்ன பாகவதரை அப்போது சூசையாப்பிள்ளை மட்டுமே புரிந்துகொள்ளவில்லை? இப்போதும் இந்தஉலகம் கூடத்தான் புரிந்துகொள்ள வில்லை!*

***சத்வகுண போதன்...***

*பழம் பெரும் நடிகைகளான ரத்னாபாய், சரஸ்வதி பாய், ரமணிபாய் போன்றோர் மெல்ல மெல்ல நாடக மேடைக்கு வந்து கொண்டிருந்த காலம் அது. அந்தக் காலத்தை அனுசரித்து, அதுவரை தம்முடன் பெண் வேடம் தாங்கி நடித்து வந்த ஆண்களை வேறு வேடங்கள் தாங்க விட்டுவிட்டு ஒரு பெண்ணையே பெண்ணாக நடிக்கத் தேர்ந்தெடுத்துக் கொண்டு விட்டார் பாகவதர். அந்தப் பெண்ணின் பெயர் கமலா. வெறுங்கமலா இல்லை; குரங்குக் கமலா!*

*'அதென்ன, குரங்குக் கமலா? பார்ப்பதற்கு குரங்கு போல் இருப்பாரோ?' என்று எண்ணிவிடாதீர்கள். அவர் என்னவோ அழகாய்த்தான் இருப்பாராம்; அவருடைய சேட்டைகள்தான் கொஞ்சம் குரங்குச்சேட்டைகளாக இருக்குமாம். அதனால் அவருடைய பெயருடன் அந்தப் பட்டப் பெயரும் ஒட்டிக் கொண்டுவிட்டது.*

*ஆரம்பத்தில் அது அவருக்கு வெறுப்பைத் தந்தாலும், பின்னால் அதுவே அவர் விரும்பும் சிறப்புப் பெயராகிவிட்டது.*

*ஆனாலும் பாகவதர் அவரைச் சும்மா விட்டாரா? அதுதான் இல்லை. எங்கேயாவது ஒரு குரங்கைக் கண்டால், ''குரங்கு, குரங்கு!''என்பார்; ''என்னையா கூப்பிட்டீர்கள்?'' என்று கமலா கேட்டால், ''இல்லை; அதோ பார், அந்தக் குரங்கைச் சொன்னேன்!'' என்பார் ''ஆமாம், போங்கள்!'' என்று அவள் ஊடினால், ஆண்களைவிட பெண்கள் ஒரு விதத்தில் உயர்ந்தவர்கள், அது எந்த விதத்தில் என்று*

தெரியுமா உங்களுக்கு?'' என்பார். ''தெரியாதே!'' என்பாள் கமலா. ''ஆண்கள் பெண்களின் அழகைக் குணமாகக் கொள்கிறார்கள்; பெண்களோ ஆண்களின் குணத்தை அழகாகக் கொள்கிறார்கள்!'' என்பார். அவ்வளவுதான்; அதைக் கேட்ட மாத்திரத்தில் கமலாவின் உச்சி குளிர்ந்துவிடும்.

அதுமட்டுமா? புதிதாகக் கிடைத்த கதாநாயகியுடன் தமிழ்நாட்டின் மூலை முடுக்குகளிலெல்லாம் நாடகம் நடத்துவதற்காக அவர் திக்விஜயம் செய்யும்போது, வழியில் எத்தனையோ விதமான பேச்சுக்கள், சிரிப்புகள்...

அதிலும், புதிருக்கு மேல் புதிராகப் போட்டுப் பிறரைத் திணற அடித்து வேடிக்கை பார்ப்பதில் பாகவதருக்கு இருந்த ஆர்வம் இருக்கிறதே, அதைச் சொல்லி முடியாது.

நாலுபேர் ஒன்று சேர்ந்துவிட்டால் போதும்; ''நான் ஒரு புதிர் போடட்டுமா?'' என்று ஆரம்பித்துவிடுவார் அவர்.

''போடுங்கள்!'' என்பர் அவருடன் செல்லும் நாடகக் குழுவினர்.

''வாழ்க்கையின் முடிவு என்ன?''

''மரணம்!''

''இல்லை.''

''மோட்சம்!''

''அதுவும் இல்லை.''

''நரகம்!''

''ஊஹூம்; நான் சொல்லட்டுமா?''

''சொல்லுங்கள்!''

''கை! வாழ்க்கை கையன்னாவில் தானே முடிகிறது'' என்பார் அவர்.

''அடக் கடவுளே! இது தெரியாமல் போச்சே எங்களுக்கு!'' என்று நாடகக்குழுவினர் வியப்பார்கள்.

அடுத்தாற்போல், ''நானும் என் ஆகாரமும் கறுப்பு; அது என்ன?'' என்பார் பாகவதர்.

''நீங்களும் உங்கள் ஆகாரமும் கறுப்பா! இல்லையே? நீங்கள் சிவப்பு, உங்கள் ஆகாரம் வெளுப்பு இல்லையா?'' என்பர் நாடகக் குழுவினர்.

சரி உங்களுக்கு தெரியவில்லை என்றால் நான் சொல்கிறேன். அதுதான் புகைவண்டி என்பார்

''நான் அதைக் கேட்கவில்லை; இரண்டையும் கறுப்பாகக் கொண்டது எது என்று கேட்கிறேன்!''

''இரண்டும் கறுப்பாகவா? அது, அது...''

''நான் சொல்லட்டுமா?''

''சொல்லுங்கள்!''

''புகை வண்டி!'' என்பார் அவர்.

''பார்த்தீர்களா? இப்போது நாங்களும் உங்களுடன் அதில் தான் பிரயாணம் செய்து கொண்டிருக்கிறோம், அப்படியும் அது தெரியாமல் போய்விட்டது எங்களுக்கு!'' என்று தங்களைத் தாங்களே நொந்து கொள்வார் நாடகக் குழுவினர்.

''சரி, இந்தப் புதிருக்காவது உங்களால் விடைகாண முடிகிறதா என்று பாருங்கள்!'' எனச் சொல்லிவிட்டு, ''ஒன்றுக்கு இரண்டு கால்கள் உண்டு; ஆனால் பாதங்கள் இல்லை. அது என்ன?'' என்பார் பாகவதர்.

''பாதங்கள் இல்லாத கால்கள் அது என்ன கால்கள்?'' என்று யோசிப்பர் யோசிப்பர், அப்படி யோசிப்பர் நாடகக் குழுவினர்.

''நான் சொல்லட்டுமா?'' என்பார்.

''சொல்லுங்கள்'' என்பர் நாடகக் குழுவினர்.

''அதுதான் பேண்ட் ஐயா, பேண்ட்!'' என்று சொல்லிச் சிரிப்பார் பாகவதர்.

இப்படி ஏதாவது புதிர்போட்டுத்தான் அவர் தம் பொழுதைக் கழிப்பாரே தவிர, அதற்காகச் சீட்டாட மாட்டார். சிகரெட் குடிக்க மாட்டார்; பிறரைப்பற்றி வம்பும் பேசமாட்டார்; அவையெல்லாம் தீயவை, ஒதுக்க வேண்டியவை என்பதை அவர் நன்கு உணர்ந்திருந்தார். உணர்ந்திருந்ததோடு மட்டுமல்ல; அவற்றைத் தம் வாழ்நாள் முழுவதும் மறக்காமலும் இருந்தார்.

புதிர் போடுவதில் மட்டும் பாகவதர் வல்லவரா யில்லை; சிலேடையாகப் பேசுவதிலும் வல்லவரா யிருந்தார்.

ஒரு சமயம் பிரமுகர் ஒருவர் தம் வீட்டில் அவருக்கு விருந்து வைத்தார். சாம்பார், ரசத்துக்குப் பிறகு கெட்டித்தயிர் பரிமாறப் பட்டது. அதைச் சோற்றில்விட்டுப் பிசைந்த பாகவதர், ''நாங்களும் சென்னையில் தயிர்விட்டுக்கொண்டு சாப்பிடுகிறோம். என்ன பிரயோசனம்? அது மானங்கெட்ட தயிராகவல்லவா இருக்கிறது!'' என்றார்.

அவருடன் அமர்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்த வர்களுக்கு ஒன்றும் புரியவில்லை; 'மானங்கெட்ட தயிரா! அது என்ன தயிர்?' என்பதுபோல் அவர்கள் அவருடைய முகத்தைப் பார்த்தனர்.

''இந்தத்தயிரில் உள்ள ஆடை கையைப் பிசுபிசுக்க வைக்கிறதே! அந்தத் தயிரில் ஆடை ஏது, வாடைதான் ஏது?'' என்றார் பாகவதர். அப்பொழுதுதான் புரிந்தது ஆடை, என்றால் உண்ணும் பால் ஆடையையும் குறிக்கும். உடுத்தும் 'நூல் ஆடை'யையும் குறிக்கும் என்பது அவர்களுக்கு!

இப்படியாகப் பலரைக் கவர்ந்த பாகவதர் கடைசியாகச் செட்டி நாட்டுக்குச் சென்றபோது, அங்கிருந்த மான கிரிலேனாவையும் கவர்ந்தார்.

''யார் இந்த மானகிரி லேனா?'' என்கிறீர்களா?

அவர்தான் பின்னாளில் 'கிருஷ்ணா பிக்சர்ஸ்' என்ற ஒரு நிறுவனத்தைச் சென்னை தியாகராய நகரில் நிறுவி, ஒரே நட்சத்திரப் படங்களாக எடுத்துத் தள்ளிய திரு இலட்சுமணன் செட்டியார் என்பவராவர்.

கைராசிக்காரர் அவர்; பலரை கை தூக்கிவிட்ட பெருமை அவரைச் சேர்ந்தது.

ஆம், நாள் ஒன்றுக்கு முதன் முதலாக பாகவதருக்கு மட்டும் ரூபாய் ஐம்பது சம்பளம் என்று பேசி, ஐம்பது நாடகங்களுக்கு அவர் பாகவதரை ஒப்பந்தம் செய்தார்.

ஐம்பதாவது நாடகத்தின் முடிவில்...

'போர்ட்டூரர் கார்' ஒன்றுவாங்கி, அதை அவர் பாகவதருக்குப் பரிசாக அளித்து மகிழ்ந்தார்.

இப்படி ஒரு 'காண்ட்ராக்ட'ரை இந்த நாளில்கூட உலகத்தில் பார்க்க முடியாதல்லவா?

அதற்குப் பின் பாகவதரின் சம்பளம் நாள் ஒன்றுக்கு ரூபாய் ஐம்பது என்று மட்டும் இருக்கவில்லை; நூறு, நூற்றைம்பது, இருநூறு, இருநூற்றைம்பது, முன்னூறு என்று உயர்ந்துகொண்டே போயிற்று.

எல்லாம் மானகிரிலேனாவின் அருள்தான் என்றாலும், பாகவதர் அதைப் பகவான் அருள் என்றே நினைத்தார்.

### ஞான குமாரி, நடனசிங்காரி...

மகான் தியாகய்யரிடம் மற்ற வித்வான்களுக்கு எவ்வளவு பக்தி இருந்ததோ, அவ்வளவு பக்தி தியாகராஜ பாகவதருக்கும் இருந்தது. ஆயினும் ஏனோ தெரியவில்லை, அவருடைய பேரால் ஆண்டுதோறும் திருவையாறில் நடக்கும் உற்சவத்தில் பாகவதரை மற்றவர்கள் பாட விடுவதில்லை.

பாகவதருக்கோ அந்த உற்சவத்தில் தாமும் ஒரு தடவையாவது பாடவேண்டும் என்று ஆசை. அதற்காக ஒரு சமயம் அவர் ஒரு நாள் அல்ல; இரண்டு நாட்கள் பெரு முயற்சி செய்தார். அதன் பேரில் ''எண்ணிப் பதினைந்தே நிமிடங்கள்தான் நீர் பாடலாம்; அதற்கு மேல் பாடக்கூடாது. என்ன, சம்மதமா?'' என்று உற்சவ நிர்வாகிகள் அவரைக் கேட்டார்கள்.

''ஆத்ம சாந்திக்கான ஆராதனைக்காகத்தானே, அது போதும்!'' என்றார் பாகவதர்.

அதற்கு மேல் அவருக்குப் பாட அனுமதி அளிக்கப் பட்டது. அப்போது பகல்மணி பன்னிரண்டு; நல்ல உச்சி வேளை. பசி எல்லோருடைய வயிற்றையும் கிள்ளிக் கொண்டிருந்தது. பாகவதர் பாட ஆரம்பித்தார். அவர் பாடத்தொடங்கியதிலிருந்து கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டே இருந்த நிர்வாகிகள் சரியாகப் பதினைந்து நிமிடங்கள் ஆனதும், ''நிறுத்தும்!'' என்றனர்.

அவ்வளவுதான்; ''நிறுத்தாதீர்கள்!'' என்று கூட்டத் திலிருந்து ஒரு குரல் கணீரென்று ஒலித்தது. அதைத் தொடர்ந்து பல குரல்கள்:

''மேலே பாடுங்கள்!''

''நிறுத்தவேண்டாம்; மேலே பாடுங்கள்!''

பாகவதர் என்ன செய்வார் பாவம், நிர்வாகிகளின் முகார விந்தங்களைப் பரிதாபத்தோடு பார்த்தார். அவர்களோ, 'இதற்குத்தான் உம்மைப் பாட அனுமதிக்க முடியாது என்று நாங்கள் அப்போதே சொன்னோம்; கேட்டீரா? இப்போது அவர்கள் சொல்வதை நாங்கள் எப்படிக் கேட்காமல் இருக்கமுடியும்? பாடித் தொலை யுங்கள்!'' என்பதைப் போல் அவரைப் பார்த்தனர்.

பாகவதர் தொடர்ந்து பாடினார். ஒரு மணிநேரம் அல்ல; மூன்று மணிநேரம் தொடர்ந்து பாடினார். செவிக்கு

உணவு கிடைத்ததும் வயிற்றுக்கு உணவு கிடைக்காத குறையைக் கூடக் கூடியிருந்தோர் மறந்துவிட்டனர்.

பொது மக்கள் என்னதான் விரும்பினாலும் உற்சவ நிர்வாகிகளுக்கு விரோதமாக பாகவதர் மேலே பாட விரும்பவில்லை; கச்சேரியை முடித்துக்கொண்டு புறப் பட்டார். ''நாளைக்கும் இங்கே வந்து நீங்கள் பாட வேண்டும்;'' என்று கேட்டுக்கொண்டே கூட்டம் அவரைத் தொடர்ந்தது.

பாகவதருக்கு ஒன்றும் புரியவில்லை; நின்றார். ''நாளைக்கு இங்கே வந்து பாட முடியுமென்று எனக்குத் தோன்ற வில்லையே !'' என்று கையைப் பிசைந்தார்.

அப்போது அந்த வழியாக வந்த திரு.ராஜமாணிக்கம் என்பவர், ''இங்கே பாட முடியாவிட்டால் என்ன? பாடு வதற்கு வேறு இடமாயில்லை? நீங்கள் வாருங்கள்; நான் அதற்கு வேண்டிய ஏற்பாடு செய்கிறேன்!'' என்று பாகவதரைத் தம் வீட்டுக்கு அழைத்துக் கொண்டு போனார். ராஜமாணிக் கத்தைப் பற்றி நன்கு அறிந்திருந்த பொதுமக்கள், 'எப்படியும் பாகவதரின் கச்சேரியை இன்னொருமுறை கேட்கும் வாய்ப்பு நமக்குக் கிட்டும்' என்ற திருப்தியுடன் கலைந்து சென்றனர்.

அவர்கள் எதிர்பார்த்தது வீண் போகவில்லை; மறுநாள் மாலையே தஞ்சாவூர் நாணயக்காரச் செட்டித் தெருவிலுள்ள இராமலிங்க சுவாமிகள் மடத்தில் பாகவதரின் கச்சேரி நடந்தது. கூட்டம் திருவையாறுக்கா போகும்; தஞ்சாவூருக்குத் திரும்பிவிட்டது!

பார்த்தார் பாகவதர்; மற்ற வித்வான்கள் தம்முடைய மனத்தைப் புண்படுத்தினாலும் பாகவதர் அவர்களுடைய மனத்தைப் புண்படுத்த விரும்பவில்லை; முதல்நாள் கச்சேரியுடன் திருச்சிக்குத் திரும்பிவிட்டார் – மகான் தியாகய்யரிடமும் மக்களிடமும் மானசீகமாக மன்னிப்புக் கேட்டுக் கொண்டுதான்.

ஊருக்கு வந்து பார்த்தால் கோல்டன் கம்பெனி கோவிந்தசாமி வந்து பாகவதருக்காகக் காத்துக் கொண்டிருந்தார்.

'யார் இந்தக் கோல்டன் கம்பெனி கோவிந்தசாமி?'' என்கிறீர்களா? – இவர் அந்த நாளில் பிரபல நாடகக் காண்ட் ராக்டராயிருந்தவர். பிரசித்தி பெற்ற கோல்டன் கம்பெனி சாரதாம்பாள் என்ற நடிகை இவருடைய மனைவிதான்.

அவரைப் பார்த்ததும், ''என்ன விஷயம்?'' என்றார் பாகவதர்.

''நல்ல விஷயந்தான்!''என்றார் அவர்.

சொல்லுங்கள்?''

''டி.கே.சண்முகம் பாய்ஸ் கம்பெனியை உங்களுக்குத் தெரியுமோ இல்லையோ?''

''தெரியும்.''

''ஒரு வருட ஒப்பந்தத்தில் அவர்களை நான் பொன்னமராவதிக்கு அழைத்துக்கொண்டு வந்திருக்கிறேன்.''

''தொடர்ந்து நாடகம் போடத்தானே?''

''ஆமாம்; ஆனால் வசூல்தான் ஆகமாட்டேன் என்கிறது!''

''ஏன், அவர்கள் நன்றாக நடிப்பார்களே?''

''அவர்கள் என்னவோ நன்றாகத்தான் நடிக்கிறார்கள்; ஜனங்கள் தான் பார்க்கமாட்டோம் என்கிறார்களே!''

''காரணம்?''

''நடிப்பை விடப் பாட்டைத்தான் இப்போது ஜனங்கள் அதிகமாக விரும்புகிறார்கள்.''

''அதற்காக?''

''நீங்கள் வந்து ஒரு 'ஸ்பெஷல் நாடகம்' போட்டுத் தரவேண்டும்.''

''டி.கே.எஸ்ஸுக்கு விரோதமாகவா? மன்னிக்க வேண்டும்; அது என்னால் முடியாத காரியம்.''

''இல்லை; அவருடைய சம்மதத்துடன்தான். தம்மால் எனக்கு நஷ்டம் ஏற்படுவதை அவர்கூட விரும்பவில்லை.''

''அப்படியானால் உங்கள் விருப்பத்தை நிறைவேற்றி வைக்க நான் தயாராயிருக்கிறேன்.''

''மகிழ்ச்சி!'' என்று அன்றே பாகவதரை அழைத்துக் கொண்டு பொன்னமராவதிக்கு வந்தார் கோவிந்தசாமி.

மறுநாள் 'வள்ளி திருமணம்' நாடகம் போடு வதென்று முடிவாயிற்று.

'கோல்டன் சாரதாம்பாள் வள்ளி; பாகவதர் வேலன், வேடன், விருத்தன்' என்று 'போஸ்டர்'கள் அச்சிடப்பட்டு மூலைக்கு மூலை ஒட்டப்பட்டன.

பாகவதரை முதன்முதலாகப் பார்த்த திரு டி.கே. சண்முகம் அவருடைய அழகிலும், அற்புதமான சாரீரத்திலும் அப்படியே சொக்கி நின்றார்.

பாகவதர் தமக்கே உரிய தன்னடக்கத்துடன், ''நான் ஒன்றும் தெரியாதவன்; புதிதாக நாடக மேடைக்கு வந்திருக் கிறேன். நீங்கள் பாய்ஸ் கம்பெனி நடிகர்கள்; நன்றாக நடிக்கவும் பேசவும் தெரிந்தவர்கள். நான் ஏதாவது தவறு செய்தாலும் நீங்கள்தான் அதைச் சரிப்படுத்திக் கொண்டு போகவேண்டும்!'' என்றார் அவரிடம்.

பாகவதரிடம் இத்தகைய தன்னடக்கத்தை சண்முகம் எதிர்பார்க்கவில்லை; பதிலுக்கு என்ன சொல்வது, என்ன செய்வது என்று ஒன்றும் புரியாமல் வியப்பே உருவாய் நின்றார்...

''நாளை இரவு நீங்கள் எங்களுடன் நாரதராக நடிக்கவேண்டும்'' என்றார் பாகவதர்.

''மகிழ்ச்சி!'' என்றார் சண்முகம்.

மறுநாள் கூட்டத்துக்குக் கேட்க வேண்டுமா? –ஒரே கூட்டம், வசூலுக்கும் குறைவில்லை.

பாகவதர் மேடையில் தோன்றியது தான் தாமதம், ''ஞானகுமாரி, ஞானகுமாரி'' என்று மக்கள் குரல் கொடுத்தனர்.

சக்தியிடமிருந்து முருகன்வேல் பெறுவதற்காகப் பாடும்அந்தப் பாட்டை அன்று பாகவதர் தேவகாந்தாரியில் தேவகானம் போல் பாடினார்.

ஒரே கரகோஷம்!

அந்தக் கரகோஷத்தில் மற்றவர்கள் இருந்த இடமே தெரிய வில்லை!

**கல்லோ, இரும்போ?...**

நாடக உலகத்தில் மட்டுமல்ல; சினிமா உலகத்திலும் பாகவதருடன் கதாநாயகிகளாக நடித்த நடிகைகளில் குறிப்பிடத்தக்கவர் திருமதி எஸ்.டி. சுப்புலட்சுமி, இவர் தமக்குப் பதினைந்து வயது நிறையும் முன்னரே எம்.கே.டி. யுடன் நடிக்க ஆரம்பித்துவிட்டார்.

பாகவதருடன் இவர் முதன் முதலாக ஜோடி சேர்ந்து நடித்த நாடகம் வள்ளிதிருமணம். இது கேரளத்திலுள்ள கொல்லம் தியேட்டரில் நடந்தது.

எம்.கே.டி அப்போது பதினெட்டு வயது நிறைந்த காளை; எஸ்.டி.எஸ்.ஸோ பதினைந்து வயது கூட நிறையாத கன்னி. இந்த வயதில் இருவருக்கும் இயற்கையான குறும்புத்தனம் இருக்கத்தானே இருக்கும்? அதற்கு ஏற்றாற் போல் அந்தக் காலத்து நாடக வாத்தியார்களும் நடிகர் நடிகையர்களுக்கு இயற்கையாயுள்ள குறும்புத்தனத்தைத் தங்கள் பாட்டாலும் வசனத்தாலும் வளர்த்து, அதைத் தாங்கள் வேடிக்கை பார்த்து மகிழ்ந்ததோடு, ரசிகர்களையும் வேடிக்கை பார்த்து மகிழ வைத்துக் கொண்டிருந்தார்கள்.

அதன் பலன்?...

கழுகாசலக் காட்சியுடன் அன்று நாடகம் ஆரம்ப மாகிறது. சாட்சாத் முருகனைப் போலவே பாகவதர் மேடையில் தோன்றுகிறார். அந்தக் கோலத்தில் அவரைப் பார்த்ததும் ரசிகர்கள் வழக்கம்போல் தங்கள் கன்னத்தில் போட்டுக் கொள்கின்றனர்.

இந்த பக்தி நீடிக்கவில்லை; அடுத்தாற்போல் தினைப்புலக் காட்சி வருகிறது. வள்ளி 'ஆலோலம்' என்று குரல் காட்டித் தினைப்புலத்துக்கு வரும் காக்கை குருவி களைக் கவண்கல்லால் அடித்து விரட்டிக் கொண்டிருக் கிறாள். நாரதரின் பேச்சைக் கேட்டு வேடன் உருவில் வந்து நின்ற வேலன் அவள் அழகில் சொக்கி, அவளிடம் தன் காதலைப் பல வழிகளில் வெளியிடுகிறான். அவள் மசிய வில்லை. அதனால் தாபம் மிஞ்சிய வேடன், ''உன்மனம் இரும்போ, கல்லோ, பாறையோ?'' என்று பாடுகிறான்.

பாட்டின்படி, 'பாறையோ?' என்பதோடு முதல் அடி நிற்கவேண்டும். ஆனால் நிற்கவில்லை; மேலும் வளருகிறது.

எப்படி?...

''உன்மனம் கல்லோ, இரும்போ, பாறையோ, குட்டிச்சுவரோ?''

அவ்வளவுதான்; கதாநாயகன் கதாநாயகியைப் பார்த்துக் 'குட்டிச்சுவரோ?' என்று குறும்புத் தனமாகக் கேட்டுவிட்டானோ இல்லையோ, கூட்டத்தில் ஒரே கலகலப்பு!

''ஆஹாஹா!''

''த்சொ,த்சொ!''

''ஹியர்,ஹியர்!''

''ஒன்ஸ்மோர், ஒன்ஸ்மோர்!''

இப்படி நாலா பக்கங்களிலிருந்தும் கூக்குரல்கள். எப்படி இருக்கும் எஸ்.டி.எஸ்.ஸுக்கு? ஒரே வெட்கமாய்ப் போய்

விடுகிறது; முகம் செக்கச் செவேரென்று சிவந்து விடுகிறது; அதைப் பார்க்கப் பார்க்கப் பாகவதருக்கு மட்டு மல்ல; ரசிகர்களுக்கும் ஒரே கும்மாளம்; குஷி! நாடக வாத்தி யாரான நடராஜப் பிள்ளை இந்தச் சந்தர்ப்பத்தை நழுவ விடுவாரா? ''ம், பாடு! அந்த அடியையே திருப்பிப் பாடு!'' என்று தம் சீடனுக்குத் திரை மறைவிலிருந்து கட்டளையிடுகிறார். எம்.கே.டி.பொங்கி வரும் சிரிப்பை அடக்கிக் கொண்டு பாடுகிறார்

''உன்மனம் இரும்போ, கல்லோ, பாறையோ, குட்டிச் சுவரோ?''

''சபாஷ்!''

''வொண்டர்புல்!''

ரசிகர்களின் குதூகலத்தையும் பாகவதரின் குமிழ்ச் சிரிப்பையும் பார்க்கப் பார்க்கப் பற்றிக்கொண்டு வருகிறது எஸ்.டி.எஸ்.ஸுக்கு. முகத்தை ஒரு வெட்டு வெட்டித் திருப்புகிறார். தம்முடைய வெறுப்பைக் காட்ட. ரசிகர்களோ அந்த வெட்டில்கூட எஸ்.டி.எஸ்.ஸின் கொள்ளை அழகைக் காண்கின்றனர். அதற்கு மேல் கேட்க வேண்டுமா? 'வொய்ங், வொய்ங்'என்ற சீழ்க்கை ஒலி காதைப் பிய்த்துக் கொண்டு போகிறது.

''ஸைலன்ஸ், ஸைலன்ஸ்!''

தியேட்டர்காரர் என்னதான் கையமர்த்தியும் ரசிகர்கள் கேட்கவில்லை; 'விசில்'அடிப்பதை விட்டு விட்டு, ''ஒன்ஸ்மோர், ஒன்ஸ்மோர்!'' என்று மீண்டும் இரைகிறார்கள். பாகவதர் மீண்டும் பாடுகிறார்.

''உன் மனம் இரும்போ, கல்லோ, பாறையோ, குட்டிச் சுவரோ?''

எஸ்.டி.எஸ்.ஸுக்கு ஆத்திரம் தாங்கவில்லை. 'இன்னொரு முறை இப்படிப் பாடினால் எனக்குக் கெட்ட கோபம் வரும், ஆமாம்!' என்று எச்சரிப்பதுபோல் பாகவதரைப் பார்க்கிறார். அவரும் போனாற் போகிற தென்று அத்துடன்

அந்த அடியை விட்டுவிட்டு அடுத்த அடிக்குப் போய்விடுகிறார்.

ரசிகர்களுக்கு இதில் ஏமாற்றம் தான் என்றாலும் அன்றைய நாடகம் எப்படியோ ஒரு வழியாக நடந்து முடிந்துவிடுகிறது.

அடுத்தநாடகம் விருதுநகரில் –அதே ஜோடி; அதே நாடகம்.

எம்.கே.டி.யும், எஸ்.டி.எஸ்.ஸும் கேரளத்தில் சண்டையிட்டுக் கொண்டது போல் இங்கேயும் சண்டையிட்டுக் கொள்வார்கள் என்று எதிர்பார்த்து ரசிகர் படை திரண்டு வந்திருக்கிறது. அவர்கள் எதிர்பார்த்தது வீண் போகவில்லை; தினைப்புலக் காட்சி வந்ததும் பாகவதர், ''உன்மனம் கல்லோ, இரும்போ, பாறையோ, குட்டிச் சுவரோ?''என்று வழக்கம்போல் ஆரம்பிக்கிறார்.

இம்முறை எஸ்.டி.எஸ். அதைக் கேட்டுக்கொண்டு சும்மா இருக்கவில்லை; ''குட்டிச்சுவரைத் தேடி எதுவரும், தெரியுமா?''என்று 'வெடுக்'கென்று கேட்டு விடுகிறார். பாகவதரோ தம்மை மறந்து, ''கழுதை!'' என்று சொல்லி விடுகிறார்.

அவ்வளவுதான்; கூட்டத்தில் ஒரே ஆரவாரம், கையொலி!

ரசிகர்கள் அனைவரும் பாகவதரைக் கைவிட்டு விட்டு எஸ்.டி.எஸ்.ஸுக்கு 'சபாஷ்!'போட ஆரம்பித்து விடுகின்றனர்.

அதற்காக எம்.கே.டி வருந்தவில்லை. ஒரு பெண்ணிடம் அதிலும் ஓர் அழகான பெண்ணிடம் அசட்டுத்தனமாக நடந்து அகப்பட்டுக் கொண்டுவிட்டால் வருந்தக் கூடிய வயதா அவருடைய வயது?

சிரிக்கிறார்; குலுங்கக் குலுங்கச் சிரிக்கிறார். ரசிகர்களும் அவருடன் சேர்ந்து சிரித்துவிடுகிறார்கள்.

ஆனாலும் மறுநாள் காலைப் பத்திரிகை களிலெல்லாம் 'நாடக மேடையில் கழுதை!' என்ற தலைப்பில் அந்தச் செய்தி கொட்டை கொட்டையான எழுத்துக்களில் பிரசுரமாகித் தமிழ் நாட்டையே ஒருகலக்கு கலக்கி விடுகிறது.

இந்தச் சண்டை இத்துடனாவது நின்றதா என்றால் அதுதான் இல்லை; வசனத்தில் வந்துவிடுகிறது.

அங்கே அன்று 'கோவலன்' நாடகம். எம்.கே.டி கோவலன்; எஸ்.டி.எஸ் மாதவி.

இம்முறை தகராறு பாட்டில் வரவில்லை; வசனத்தில் வந்துவிடுகிறது.

கதைதான் உங்களுக்குத் தெரியுமே? - மாதவி நடனமாடிக் கொண்டே வீசி எறியும் மாலை கோவலனின் கழுத்தைத் தேடி வந்து விழுந்துவிடுகிறது. ஏற்கனவே தான் விதித்த நிபந்தனையின்படி, ''என்னுடன் எழுந்து வாரும் என் துரையே,'' என்று மாதவி பாடிக்கொண்டே வந்து கோவலனின் கையைப் பிடித்து இழுக்கிறாள். ''எங்கு என்னை அழைக்கின்றாய், இயம்புமங்கையே?'' என்று கோவலனும் பாடிக்கொண்டே அவள் பிடித்த கையை உதறி விட்டுக் கேட்கிறான். இப்படியாக அவள் இழுக்க இவன் மறுக்க, அவள் இழுக்க இவன் மறுக்க, இருவருக்கு மிடையே ஆரம்பமான தர்க்கம் சூடு பிடித்ததும் பாட்டை முடித்துக்கொண்டு இருவரும் சுடச்சுட வசனம் பேசுவதில் இறங்கிவிடுகின்றனர்.

''தாசியல்லவா நீ 'தா' என்றால் 'தந்தால்தான் தாசி', 'சி'என்றால் 'தராவிட்டால் சிச்சீ!'என்றல்லவா அர்த்தம்?'' என்று சொல்லி, எஸ்.டி.எஸ்.ஸைவேண்டுமென்றே வம்புக்கு இழுக்கிறார் எம்.கே.டி.

கோபம் பொத்துக்கொண்டு வந்துவிடுகிறது எஸ்.டி. எஸ் ஸுக்கு; ''கம்பரைவிட நீர் கற்றறிந்தவரோ? அவர்

'தாசி' என்றால் என்னவென்று சொல்கிறார் தெரியுமா உமக்கு?'' என்று தாம் இருப்பது நாடக மேடை என்பதைக் கூட மறந்து 'சவால்' விடுகிறார்.

''என்ன சொல்கிறார்?'' என்கிறார் எம்.கே.டி.

''தா'' என்றால் 'அன்னை' 'சி'என்றால் 'லட்சுமி' என்று சொல்கிறார். அதாகப்பட்டது, நாங்கள் அன்னைக்கு அன்னையாகவும்,லட்சுமிக்கு லட்சுமியாகவும் இருக்கிறோ மாக்கும்' என்கிறார் எஸ்.டி.எஸ்.

அவ்வளவுதான்; ரசிகர்கள் மறுபடியும் எம்.கே. டி.யைக் கைவிடுகிறார்கள்; எஸ்.டி.எஸ்.ஸுக்கு 'சபாஷ்!' போடுகிறார்கள்.

அதையும் வரவேற்கிறார் பாகவதர் – ஏன்? அவர் தோல்வியுறுவது ஓர் அழகான பெண்ணிடம் பாருங்கள்!– ஆடவர் உலகத்துக்கே உரிய இயல்பு அல்லவா இது?

**அம்பா, நீ இரங்காயெனில்...**

பதினெட்டாவது வயதிலேயே ஓரளவுக்குச் சம்பாதிக்க ஆரம்பித்தவிட்ட பாகவதர், இந்தக் காலத்துப் பிள்ளைகளைப் போலத் தங்களையும் தங்களுடைய நலனையும் மட்டுமே கவனித்துக் கொள்ளவில்லை; தம்மைக் கவனித்துக் கொண்டதோடு, தம்முடைய குடும்ப நலனையும் கவனித்தார். அதன் பயனாக அவருடைய பாட்டனார் விட்டுச் சென்றிருந்த வீட்டின் மேல் வாங்கப்பட்டிருந்த கடன் அடைக்கப்பட்டது; ஓட்டு வில்லை வீடாக இருந்த அந்த வீடு இடித்துத் தகர்க்கப்பட்டு மாடி வீடாகக் கட்டப்பட்டது.

நொடித்துப் போயிருந்த பாகவதருடைய குடும்பம் மெல்லமெல்ல அவரது பெரு முயற்சியால் எழுந்து நிற்க முயன்றுகொண்டிருந்தபோது, அவர் படுத்த படுக்கை யாகிவிட்டார். காரணம், அப்போது ஊரெங்கும் போட்ட பெரியம்மை அவருக்கும் போட்டுவிட்டதுதான்.

கலைஞனுக்கு அம்மை போட்டால் கவலைக்கு கேட்க வேண்டுமா? மற்றவை எப்படியாவது இருக்கட்டும்; 'முகவெட்டு' அவனுடைய முதல் 'மூலதனம்' அல்லவா? அது இந்த அம்மையால் கெட்டு விடக்கூடாதே என்ற கவலை பாகவதருக்கு.

தாயார் மாணிக்கத்தம்மாளுக்கோ, 'எது எப்படி யாவது போகட்டும்; பையன் பிழைத்து எழுந்தால் போதும்' என்ற கவலை. அதற்காக அவள், ''என் பிள்ளையை எப்படியாவது பிழைக்க வைத்து விடடி, அம்மா! உனக்கு நான் அவன் முடியைக் கொடுக்கிறேன்'' என்று தஞ்சை மாரியம்மனுக்குப் பிரார்த்தனை செய்து கொண்டாள்.

அந்தப் பிரார்த்தனையின் பயனாகத்தானோ என்னவோ, பாகவதர் வெகு சீக்கிரத்திலேயே பிழைத் தெழுந்தார். அவர் பயந்தபடி, அவருடைய முகமும் அவ்வளவாகப் பாதிக்கப்படவில்லை.

மாணிக்கத்தம்மாளின் மகிழ்ச்சிக்குக் கேட்க வேண்டுமா? பையனை உடனே தஞ்சை மாரியம்மன் கோவிலுக்கு அழைத்துக்கொண்டு போய்மொட்டை அடித்துவிட்டாள்!

போயிற்று; பாகவதரின் கட்டுக் குடுமி அன்றுடன் போயிற்று. ஆம், பாகவதர் அதுவரை குடுமிதான் வைத்துக் கொண்டிருந்தார். நாடகங்களில் நடிக்கும்போது மட்டும் 'விக்'வைத்து நடித்துக் கொண்டிருந்தார்.

அப்படியானால் பிரசித்தி பெற்ற அந்தப் 'பாகவதர் கிராப்' அவருக்கு எப்படி வந்தது? அதைப்பற்றி அவருடைய அருமைத் தம்பி திரு.எம்.கே.கோவிந்தராஜ பாகவதர் கூறுவதைக் கேளுங்கள்.

''என் அண்ணாவின் கிராப்பைப் பின்பற்றி பலர் பலவிதமாகத் தங்கள் முடியைக் கத்தரித்துக் கொண்டு திரிந்ததை நான் அறிவேன். உண்மையில் அவர் தம் முடியை அப்படியெல்லாம் கத்தரித்துவிட்டுக் கொண்டதே

கிடையாது. மாரியம்மனுக்கு பிரார்த்தனை செலுத்திய பின் அவருடைய முடி அந்த அளவே வளர்ந்து நின்றுவிட்டது. அதற்குப் பிறகு அது வளரவும் இல்லை; அதை வெட்டி விட்டுக் கொள்வதற்காக அவர் எந்த சலூன் காரரையும் அழைக்கவும் இல்லை. சுயமாக க்ஷவரம் செய்து கொள்ளும் அவர் தம்முடைய முகத்தை மட்டுமே அவ்வப்போது க்ஷவரம் செய்துகொள்வார்.''

இதுவே 'பாகவதர் கிராப்' பின் ரகசியம். இந்த ரகசியம் தெரியாமல் அன்று மட்டும் என்ன, இன்றும் எத்தனை பேர் அவரைப்போலவே கிராப் வைத்துக் கொள்ள வேண்டும் என்று ஆசை கொண்டு படாதபாடு பட்டுக் கொண்டிருக்கின்றனர்!

இரண்டு மூன்று மாத கால ஓய்வுக்குப் பின் மறுபடியும் நாடக மேடைக்கு வந்தார் எம்.கே.டி. 'சினிமா உலகத்துக்கு வந்த பிறகே அவருக்குப் பெயரும் புகழும் கிடைத்தன!' என்று இன்னும் சிலர் தவறாக நினைத்துக் கொண்டிருக்கின்றார்கள். அது உண்மை அல்ல; அதற்கு முன்னரே அவர் அவற்றை வேண்டிய அளவுக்கு அடைந்து விட்டார்.

அதன் காரணமாக ஓய்வு ஒழிச்சல் இன்றி நாடகம், கச்சேரி என்று ஏதாவது ஒன்று அவருக்கு நாள்தோறும் இருந்தது. இந்த நிலையில் அவருக்கு எப்போது ஓய்வு கிடைத்தது என்பதைப்பற்றி அவருடைய தம்பிகளில் இன்னொருவரான திரு எம்.கே. சண்முகம் சொல்வதைக் கேளுங்கள்:

''வீராதி வீரனாக விளங்கிய நெப்போலியன் தன்னுடைய குதிரையின் மேல் ஆரோகணித்துச் செல்லும்போது தான் சற்றே கண்ணயர்ந்து ஓய்வு எடுத்துக் கொள்வார்.''

இந்த நிலையில் ஊர்ஊராகப் போய்க் கொண்டிருந்த பாகவதர் ஒரு சமயம் மன்னார் குடிக்குப் போனார். வேறு எதற்கு? நாடகம் நடத்தத்தான். அங்கே 'வள்ளித்திருமணம்'

'கோவலன், ''பவளக்கொடி' ஆக மூன்று நாடகங்கள் தொடர்ந்து நடக்கவிருந்தன. இந்தக் காலத்து நாடக மென்றால் மூன்று மணி நேரத்தோடு முடிந்துவிடும். அந்தக்காலத்து நாடகமோ அப்படி முடிந்து விடுவதில்லை. இரவு ஒன்பது மணிக்கு மேல் ஆரம்பித்தால் விடிய விடிய அது நடக்கும். அந்த வழக்கத்தையொட்டி முதல் நாள் நாடகம் நடந்து முடிந்தது. இரண்டாவது நாள் இரவு நடக்கவிருந்த நாடகத்துக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துவிட்டு, பாகவதர் தாம் தங்கியிருந்த விடுதியில் ஓய்வு எடுத்துக் கொண்டிருந்தார்.

அப்போது கையில் பையுடன் யாரோ ஒருவர் அந்த விடுதியைத்தேடி வந்தார். வாசலில் நின்று கொண்டிருந்த திருமதி எஸ்.டி.சுப்புலட்சுமி, ''யார் நீங்கள்?'' என்று அவரை விசாரித்தார்.

''எனக்குக் கும்பகோணம்; பாகவதரைப் பார்க்க வந்திருக்கிறேன்!'' என்றார் அவர்.

''எதற்கு?''

''அதை அவரிடம்தான் சொல்லவேண்டும்.''

''அப்படியா? நேற்று இரவில் இருந்து அவருடைய நாடகம் இங்கே நடந்து கொண்டிருக்கிறது. இன்று இரவும் நாடகம் நடக்கவிருக்கிறது. அவர் இப்போது தான் கொஞ்சம் ஓய்வு எடுக்கப்போனார்...''

''எடுக்கட்டும்; அவர் எழுந்திருக்கும் வரை நான் காத்திருக்கிறேன்.''

''மகிழ்ச்சி, உட்காருங்கள்!'' என்று அவரை வெளியே உட்கார வைத்துவிட்டு எஸ்.டி.எஸ்.உள்ளே போனார்.

சிறிது நேரத்துக்கெல்லாம் வெளியே வந்த பாகவதரைக் கண்டதும், ''வணக்கம்''என்றார் வந்தவர், சட்டென்று எழுந்து நின்று.

பதிலுக்கு ''வணக்கம்'' என்று சொல்லிவிட்டு, ''உட்காருங்கள்!''என்றார் பாகவதர்.

''இருக்கட்டும்...!'' என்று வந்தவர் நின்று கொண்டே தாம் கையோடு கொண்டு வந்திருந்த பைக்குள் கையைவிட்டார். அதிலிருந்த புத்தம்புது சீப்பு ஒன்றை எடுத்து பாகவதரிடம் கொடுத்து, ''இந்தச் சீப்பால் உங்கள் தலையைக் கொஞ்சம் சீவுங்கள்!''என்றார்.

பாகவதருக்கு ஒன்றும் புரியவில்லை. வந்தவரை மேலும் கீழுமாகப் பார்த்தார். 'கீழ்ப்பாக்கத்தில் இருந்து தப்பி வந்தவ'ராகவும் தெரியவில்லை.மன்னார்குடி எங்கே இருக்கிறது; கீழ்ப்பாக்கம் எங்கே இருக்கிறது?

அப்படியே இருந்தாலும் அவர் சொன்னபடி செய்வது தான் இப்போதைக்கு நமக்கு நல்லது என்று தீர்மானித்து அவர் கொடுத்த சீப்பைக் கொண்டு தன் தலையைச் சீவினார் பாகவதர்.

வந்தவருக்கு மகிழ்ச்சி தாங்கவில்லை. ''அதை அப்படியே கொடுங்கள், அதை அப்படியே கொடுங்கள்!'' என்று பாகவதரின் கையில் இருந்த சீப்பை வாங்கித் தம் பைக்குள் பத்திரமாக வைத்துவிட்டு, வேறொரு சீப்பைத் தம்மடியிலிருந்து எடுத்தார். அது பல்லெல்லாம் ஒடிந்து போன சீப்பு!

அந்தச் சீப்பைப் பாகவதரிடம் காட்டி, ''போன வருஷம் உங்களை நான் பொள்ளாச்சியில் சந்தித்தேன். அப்போது நீங்கள் சீவிக் கொடுத்தசீப்பு இது. இதன் பல் எல்லாம் ஒடிந்து விடவே இப்போது புதிய சீப்பொன்று வாங்கிக்கொண்டு வந்து உங்களைச் சீவிக் கொடுக்கச் சொன்னேன்'' என்ற அவர், அதையும் வீசி எறியாமல் தம் மடியில் மறுபடியும் வைத்துக்கொண்டு, ''நான் வருகிறேன்; வணக்கம்!'' என்று சொல்லிவிட்டு நடையைக் கட்டினார்.

அதுவரை அவரைக் கவனித்துக்கொண்டிருந்த எஸ்.டி.எஸ்.என்ன, வேறு யாரால்தான் சிரிக்காமல் இருக்கமுடியும்? 'இப்படியும் ஒரு ரசிகர் உண்டா?' என்று அவர் சிரித்தார்.

பாகவதரோ சிரிக்கவில்லை; அதற்குப் பதிலாக வைத்தவிழி வாங்காமல் அவரையே பார்த்துக் கொண்டிருந்த அவர், ''என்னிடம் இத்தனை ஈடுபாடு கொண்டுள்ள இவரைப் போன்ற ரசிகர்களுக்கு நான் என்ன கைம்மாறு செய்யப்போகிறேன்?'' என்றார் தம் நெஞ்சு நெக்குருக.

''நடிகன் உணர்ச்சி மயமானவன்; பெண்கள் விஷயத்தில் அவன் சில சமயம் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியாமற் போவதற்கு அதுவும் ஒரு காரணம்'' என்று கலை உலகத்தோடு சம்பந்தப்பட்ட சிலர் நாசூக்காகச் சொல்வதுண்டு. அது ஒரு நாள் பாகவதரின் தந்தையான கிருஷ்ணமூர்த்தியின் காதுக்கும் எட்டியது. அவ்வளவுதான்; அவர் உடனே தம்மகனுக்கு விழுந்து விழுந்து பெண் தேட ஆரம்பித்துவிட்டார்.

அவர் ஊரில் இல்லாத சமயம் பார்த்து, நடராஜ வாத்தியார் பாகவதரைத் தேடி வந்தார்.

''ஏன், அவர் இருக்கும் சமயத்தில் வந்தால் என்ன?'' என்று உங்களில் யாரும் கேட்க மாட்டீர்களென்று நினைக்கிறேன். 'வாத்தியாரைக் கண்டால் அவருக்குப் பிடிக்காது!'' என்றுதான் உங்களுக்கு ஏற்கனவே சொல்லி யிருக்கிறேனே!

வந்தவரை வரவேற்று, ''என்ன விஷயம்?'' என்று விசாரித்தார் பாகவதர்.

''ஒன்றுமில்லை; எழுத்தாளனுக்குப் புகழ் கிடைக்கும் அளவுக்குப் பணம் கிடைப்பதில்லை என்பது தான் உங்களுக்குத் தெரியுமே? அந்தப் பணம் இப்போது எனக்குக் கொஞ்சம் தேவை யாயிருக்கிறது. அதை நீங்கள்

பணமாகக் கொடுத்துத்தான் உதவ வேண்டும் என்பதில்லை; எனக்காக மூன்று நாடகங்கள் நடித்துக் கொடுக்கச் சம்மதித்தால் கூடப் போதும். மற்றவற்றுக்கு நானே ஏற்பாடு செய்துவிடுகிறேன்!''என்றார் வாத்தியார்.

''ரொம்ப சந்தோஷம்; உங்களுக்கு அந்த வகையில் ஏதாவது செய்யவேண்டும் என்ற நானே பல சமயம் நினைத்ததுண்டு. இப்போது நீங்களே அதற்கு வேண்டிய ஏற்பாட்டைச் செய்வதாகச் சொல்கிறீர்கள். பேஷாகச் செய்யுங்கள்; நான் வந்து நடித்துக் கொடுக்கிறேன்'' என்று பாகவதர் உடனே தம் சம்மதத்தைத் தெரிவித்துவிட்டார்.

வாத்தியாரின் மகிழ்ச்சிக்குக் கேட்க வேண்டுமா? 'குட்டி அமெரிக்கா'என்று அந்நாளிலேயே பெயர் பெற்றிருந்த கோயமுத்தூரிலே பாகவதரை வைத்து மூன்று நாடகங்கள் நடத்த அவர் திட்டமிட்டு, அவற்றுக்கான 'போஸ்டர்'களையும் உடனே அச்சிட்டு மூலைக்கு மூலை ஒட்ட ஏற்பாடு செய்து விட்டார்.

இந்த விஷயம் பாகவதரின் தந்தையான கிருஷ்ண மூர்த்திக்குத் தெரிய வந்ததுதான் தாமதம், ''நடக்காது; இந்த நாடகங்கள் என் உடம்பில் உயிருள்ள வரை நடக்காது!'' என்றார் அவர்.

''நடக்கும்; இந்த நாடகங்கள் என் உடம்பில் உயிருள்ள வரை நடக்கும்!'' என்றார் பாகவதர்.

''உனக்குத் தெரியாது; 'நான் இல்லாவிட்டால் பாகவதர் இல்லை' என்று அவர் ஊரெல்லாம் சொல்லிக் கொண்டிருக்கிறார்!''

''நீங்களும் தான் 'என் மகன் இல்லாவிட்டால் நடராஜ வாத்தியார் இல்லை' என்று ஊரெல்லாம் சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள்!''

''அதற்காக?''

''இதெல்லாம் மனிதனின் இயற்கையான பலவீனங்கள் அப்பா! அதைவைத்து நாம் ஒருவரை

விரும்புவதோ, வெறுப்பதோ கூடாது. நம்மை வைத்து அவர் வளர்ந்திருக்கிறார் என்றால், அவரை வைத்து நாமும் வளர்ந்திருக்கிறோம் என்பதையும் நாம் ஒப்புக் கொள்ளத் தான் வேண்டும். இந்த விஷயத்தில் தயவு செய்து நீங்கள் தலையிட வேண்டாம். இது உங்களுக்குப் பிடிக்க வில்லையென்றால் கொஞ்சம் ஒதுங்கியிருங்கள்; நான் மட்டும் கோயமுத்தூருக்குச் சென்று நாடகங்களை நடத்திக் கொடுத்துவிட்டு வந்துவிடுகிறேன்!''

''முடியாது; தலையிருக்காமல் வால் ஆடுவதா? கூடாது!''

பாகவதர் சிரித்தார்; தாமும் சிரித்துத் தம் தந்தை யாரையும் சிரிக்க வைக்கும் முயற்சியில் அவர் சொன்னார்.

''நன்றிக்கு நாய் வாலைத்தானே ஆட்டுகிறது?''

''நாம் நாய்கள் அல்லடா, மனிதர்கள்!''

''அதனால் தான் நமக்கு வால் இல்லையே என்று நான் அவருக்குத்தலையை ஆட்டி வைத்தேன்!''

''இப்படியெல்லாம் பேசி என்னை நீ உன்னுடைய இஷ்டத்துக்கு இணங்க வைத்துவிட முடியாது. அடுத்த வாரம் உனக்குக் கல்யாணம்; பெண்ணுக்குத் தஞ்சாவூர்; பெயர் கமலம். கலியாணத்துக்கான ஏற்பாட்டை நான் நிம்மதியாகச் செய்யவேண்டுமானால் நீ இந்தக் கோய முத்தூர் பயணத்தை உடனே நிறுத்து!''

''கலியாணத்துக்குக் குறுக்கே நான் நிற்கவில்லை; நீங்களும் வாத்தியருக்காக நான் நடித்துக் கொடுக்கவிருக்கும் நாடகத்துக்குக் குறுக்கே நிற்கவேண்டாம்!''

இதைச் சொன்னதும் பாகவதர் விர்ரென்று வெளியே போய்விட்டார். ''என்னை அறியாமல் அது எப்படி நடந்து விடும்? பார்க்கிறேன் ஒரு கை!'' என்று கருவினார் கிருஷ்ணமூர்த்தி.

கோயமுத்தூர் நாடகத்துக்கு முதல்நாள்; அப்பாவுக்கு தெரியாமலாவது அந்த நாடகங்களை எப்படியாவது வாத்தியாருக்காக நடத்திக் கொடுத்து விடவேண்டுமென்று நினைத்த பாகவதர், "இனி கோயமுத்தூர் நாடகத்திலிருந்து நான் தப்ப வேண்டுமானால் எனக்கு ஒரே ஒரு வழி தான் இருக்கிறது; நான் தேவ கோட்டைக்குப் போய் இரண்டு நாட்கள் இருந்துவிட்டு வருகிறேன்!" என்று தம் தந்தையிடம் சொல்லிக் கொண்டு புறப்பட்டார். அங்கிருந்து கோயமுத்தூருக்குப் போய் விடுவோம் என்ற அவருடைய தீர்மானமும் அவருடைய அப்பாவுக்கு எப்படியோ தெரிந்துவிட்டது. 'திருட்டுப் பயலே, என்னையா ஏமாற்றப் பார்க்கிறாய்?' என்று வெஞ்சினம் கொண்ட அவர் , பாகவதரை தொடர்ந்து தேவகோட்டைக்குப் போனார். அங்கே தந்தைக்கும் மகனுக்கும் இடையே நடந்த வாக்குவாதம் தடித்து, "நான் உங்களுக்கு மகனும் இல்லை; நீங்கள் எனக்குத் தந்தையும் இல்லை!" என்று பாகவதர் சொல்லும் அளவுக்கு வந்து நின்றது.

முடிவு?...

பாகவதரின் நண்பர்கள் அவருடைய தந்தையாரைப் பலவந்தமாகப் பிடித்து ஒரு காரில் ஏற்றித் திருச்சிக்கு அனுப்ப வேண்டியதாயிற்று!

அதற்குப் பின்னாவது பாகவதரின் கோயமுத்தூர் பயணம் நின்றதா என்றால் அதுதான் இல்லை; தொடர்ந்தது.

இரவுமணி ஏழு இருக்கும்; பாகவதரின் கார் திருச்சியைக் கடந்து பத்தாவது மைலில் போய்க் கொண்டிருந்தது.

டமார்!...

இப்படி ஒரு வெடிச்சத்தம் கேட்டதும் காரை நிறுத்தி 'என்ன?'என்று கீழே குனிந்து பார்த்தார்கள் பாகவதரின் நண்பர்கள்.

டயர் ஒன்று வெடித்திருந்தது!

'இருக்கவே இருக்கிறது ஸ்டெப்னி!' என்று அந்த வெடித்த டயருக்குப் பதிலாக அதை மாற்றிப் போட்டுக் கொண்டு, அவர்கள் தங்கள் பயணத்தைத் தொடர்ந்தனர்.

அடுத்த பத்தாவது மைலில்...

டமார்!

அதே வெடிச்சத்தம் காரை நிறுத்தி, மறுபடியும் கீழே குனிந்து பார்த்தால் இன்னொரு டயர் காலி!

'இதென்ன வம்பு? அப்பாவின் சாபமா?' என்று சுற்றும்முற்றும் பார்த்தார் பாகவதர்.

அவருடைய காரைத் தொடர்ந்து இன்னும் சில கார்கள் அந்த வழியே வந்து கொண்டிருந்தன. அந்தக் காருக்குரியவர்களின் உதவியால் இரண்டாவதாக வெடித்த டயரையும் சரி செய்து கொண்டு பாகவதர் தம் நண்பர்களுடன் அங்கிருந்து புறப்படும்போது மணி ஐந்து!

காலை ஏழு மணி இருக்கும்; கரூர் ஆற்றங்கரையைப் பாகவதரின் கார் நெருங்கியபோது, எல்லோருக்கும் குளிக்க வேண்டும் போல் தோன்றிற்று. இரவு முழுவதும் டிரைவருக்கு உதவியாகக் காருக்குக் கீழே படுத்து மண்ணில் உருண்டு புரண்டு எழுந்தவர்களல்லவா? ஆற்றைக் கண்டதும் ஆனந்தமாக இறங்கிக் குளித்தார்கள்.

குளித்துவிட்டு வந்த பிறகுதான் பாகவதரைத்தவிர வேறு யாரும் மாற்றுடைகள் கொண்டு வரவில்லை என்பது தெரிந்தது. "அதனால் என்ன, என் பெட்டியில் உள்ளவற்றை எடுத்து அணிந்து கொள்ளுங்கள்!" என்றார் பாகவதர்.

பெட்டியைத் திறந்து பார்த்தால், அதில் இருந்தவை எல்லாம் சரிகை வேட்டிகளும், சரிகை அங்கவஸ்திரங்களும், சில்க் ஜிப்பாக்களுமாக இருந்தன.

அவற்றைவிட்டால் வேறுவழி?... பாகவதரின் நண்பர்கள் அனைவரும் அவரைப் போலவே சரிகை

வேட்டி, சில்க் ஜிப்பா, சரிகை அங்கவஸ்திரம் அணிந்து கோலாகலமாகக் காட்சியளித்தனர்!

போதாக்குறைக்கு அவர்கள் மேல் கமகமக்கும் அத்தரையும் எடுத்துப் பூசிவைத்தார் பாகவதர்.

இந்தச் சமயத்தில், ''எதற்கும் புதிய டயர் ஒன்று வாங்கி வைத்துக் கொண்டால் நல்லது'' என்று அவர்களை எச்சரித்து வைத்தார் டிரைவர்.

''சரி, நீங்கள் அந்த வேலையைப் பாருங்கள்; நாங்கள் இப்படி நடந்தே போய் காலை ஆகாரத்தை முடித்துக் கொண்டு இங்கே வந்து விடுகிறோம்'' என்று டயருக்குரிய பணத்தை அவரிடம் கொடுத்துவிட்டுப் பாகவதர் தம் நண்பர்களுடன் நடந்தார்.

நாலடி எடுத்து வைத்தார்களோ இல்லையோ, பாகவதரைத் திருவாவடுதுறை இராஜரத்தினம் பிள்ளை யென்றும், அவருடன் சென்றவர்களை அவருடைய கோஷ்டியினர் என்றும் நினைத்துக்கொண்டு விட்ட ஒரு ரசிகர் கூட்டம் ''இன்று எந்த ஊரில் மேளம், இன்று எந்த ஊரில் மேளம்?'' என்று வாய் ஓயாமல் கேட்டுக்கொண்டே அவர்களைத் தொடர்ந்தது.

பாகவதர் மறுத்துப் பார்த்தார்; ரசிகர்கள் கேட்க வில்லை. ''எங்களையா ஏமாற்றப்பார்க்கிறீர்கள்?'' என்று படுசமர்த்தாகச் சிரித்துக்கொண்டே அவர்களைத் தொடர்ந்தார்கள்.

'இது அவர்கள் தவறும் இல்லை. இந்த சரிகை வேட்டி, துண்டுகள் செய்யும் வேலை!' என்று நினைத்த பாகவதர், 'சரி, நாமும் தான் இவர்களுக்காகக் கொஞ்சநேரம் இராஜரத்தினம் பிள்ளையாகவும், மீனாட்சிசுந்தரம் பிள்ளை யாகவும் நடித்துப் பார்ப்போமே?'என்று துணிந்து, ''ஏது, என்ன தான் மறைத்தாலும் நீங்கள் எங்களை விட மாட்டீர்கள் போல் இருக்கிறதே? இன்றிரவு கோயமுத்தூரில் மேளம்!''என்று சொல்லி வைத்தார்.

அவ்வளவுதான்; அடுத்த நிமிஷமே அருகிலிருந்த ஒரு பெரிய மனிதர் வீட்டுக்குப் பாகவதர் தம் நண்பர்களுடன் அழைத்துச் செல்லப்பட்டார். அங்கே காலை ஆகாரம் எல்லோருக்கும் இலவசமாக வழங்கப்பட்டது. நல்ல வேளை நாதசுரமோ தவிலோ அவர்கள் வசம் அப்போது இல்லை ஆதலால், 'ஒரு பாட்டாவது வாசித்து விட்டுப் போங்கள்!' என்று ரசிகர்கள் அவர்களை வற்புறுத்தாமல் விட்டுவிட்டார்கள்!

ரசிகர்களுடைய அன்புத்தொல்லையிலிருந்து 'தப்பினோம், பிழைத்தோம்' என்று கோயமுத்தூருக்கு வந்து பார்த்தால், அங்கே நடராஜ வாத்தியாரையும் காணோம்; நாடகத்துக்கு வேண்டிய ஏற்பாடுகளையும் காணோம்!

''இதென்ன, வாத்தியார் நம்மை இப்படிக் கைவிட்டு விட்டாரே? இவருக்காக அப்பாவைக் கூட அவ்வளவு தூரம் வெறுத்துக்கொண்டு நான் இங்கே படாத பாடுபட்டு வந்து சேர்ந்தேனே!''

இப்படி வாய்விட்டுச் சொல்லி வருந்திய பாகவதர் அதற்குமேல் ஒரு கணம்கூட அங்கே தாமதிக்கவில்லை; அப்படியே திரும்பித் திருச்சிக்குவந்தார். ''அப்பா, இனி உங்களுடைய பேச்சை நான் மீறப்போவதில்லை!''என்றார்.

தந்தையின் சந்தோஷத்துக்குக் கேட்க வேண்டுமா? அடுத்த மூன்றாவது நாளே செல்வன் தியாகராஜனுக்கும் செல்வி கமலத்துக்கும் 'ஜாம், ஜாம்'என்று திருமணம் செய்து வைத்தார்.

ஆனால் அந்தத் திருமணத்தில் பாகவதர் மேளம் வாசிக்கவில்லை; வேறு யாரோ வாசித்தார்கள்!

## ஆடு, பாம்பே!...

''உற்ற கலைமடந்தை இன்னும் ஓதுகிறாள்!'' என்று அவ்வைப்பிராட்டி சொன்னாளல்லவா? அவளுடைய

வாக்கை அப்படியே பின்பற்றித் தாம் தொழிலாகக் கொண்டுவிட்ட சங்கீதத்தை ஆரம்பத்திலிருந்து கடைசி வரை எங்கெல்லாம் முடியுமோ அங்கெல்லாம் பயின்று வந்தவர் பாகவதர். அதனாலேயே அவருடைய சங்கீதம் கற்பனை வளம் மிகுந்ததாயிருந்ததோடு, ''ஒருசிலர் மட்டுமே கேட்டு அனுபவிக்கக் கூடியதாயிருந்த கர்நாடக சங்கீதத்தை மக்கள் அனைவருமே கேட்டு அனுபவிக்கக் கூடியதாகச் செய்தவர் பாகவதர்!'' என்று சித்தூர் திரு. சுப்பிரமணியம் பிள்ளை அவர்களே பாராட்டும்படியாகவும் உயர்ந்திருந்தது.

இத்தகைய உயர்வுக்குப் பாகவதரின் உழைப்பும் ஊக்கமும்தான் பெரும்பாலும் காரணமென்றாலும், புகழ் பெற்ற ஆலத்தூர் சகோதரர்கள், பாபநாசம் சிவன், திருவாவடு துறை ராஜரத்தினம் பிள்ளை, விளாத்திகுளம் சுவாமிகள் ஆகியோரின் வழியை அவர் தக்க இடத்தில் தக்கவாறு பின்பற்றிப் பாடியதும் ஓரளவு காரணமாகும்.

ஒருசமயம் பாகவதர் விளாத்திகுளம் சுவாமி களுடன் திருச்சியிலிருந்து சென்னைக்குக் காரில் வந்து கொண்டிருந்தார். அப்படிவரும்போதெல்லாம் காரின் ஹாரனையே சுருதியாக வைத்துக்கொண்டு பாகவதரும் சுவாமிகளும் மாறிமாறிப் பாடிக் கொண்டே வருவது வழக்கம். அந்த வழக்கத்தை யொட்டி அன்றும் அவர்கள் பாடிக்கொண்டே வந்தார்கள்.

சென்னையில் தாம் தங்கியிருந்த பங்களாவுக்குப் பாகவதர், சுவாமிகளுடன் வந்து சேரும்போது இரவுமணி பத்துக்கு மேல் இருக்கும். தாங்கள் வருவதை அவர்கள் முன்கூட்டியே அறிவித்திருந்ததால், சாப்பாடு தயாரா யிருந்தது. இருவரும் சாப்பிட்டுவிட்டு மறுபடியும் பாட ஆரம்பித்தார்கள்.

சுவாமிகள் எப்போதுபாடினாலும் சண்முகப்பிரியா, சிந்து பைரவி, நாடகப்பிரியா, புன்னாகவராளி ஆகிய

ராகங்களைத்தான் திரும்பத்திரும்பப் பாடுவார்கள். அவர்களுடன் பாடும்போது பாகவதரும் அதே ராகங்களைத் தான் திரும்பத்திரும்பப் பாடுவார். அன்றும் அப்படித்தான் நடந்து கொண்டிருந்தது.

வராந்தாவில் உட்கார்ந்தபடி இதைக் கேட்டுக் கொண்டிருந்த அந்த வீட்டுச் சிப்பந்திகளில் ஒருவன் சுற்று முற்றும் பீதியுடன் பார்த்துக்கொண்டே சொன்னான்.

''புன்னாகவராளியை யார் பாடினாலும் பாடலாம்; பாகவதர் பாடக்கூடாது. அதுவும் இந்த நேரத்தில், இந்த மாதிரி இடத்தில் உட்கார்ந்துகொண்டு அவர் அதைப் பாடவே கூடாது.''

இன்னொருவன் கேட்டான்:

''ஏன், பாடினால் என்னவாம்?''

''அதைச் சொன்னால் நீ இங்கே இவ்வளவு அமைதியாக உட்கார்ந்து கொண்டிருக்கமாட்டாய்; விழுந்தடித்துக் கொண்டு எழுந்து ஓடுவாய்!''

''எங்கே, அதைச் சொல்லித்தான் பாரேன்?''

''அவசரப்படாதே! இன்னும் கொஞ்ச நேரத்தில் நான் சொல்லாமலே நீ அதைப்பார்ப்பாய்!''

அவன் இப்படிச் சொல்லி வாய்மூடியதுதான் தாமதம், 'ஸ்ஸ்ஸ்'என்று ஒரு சீறல் சத்தம் கேட்டது; அந்தச் சத்தத்தைத் தொடர்ந்து நல்லபாம்பு ஒன்று படம் எடுத்து ஆடிக்கொண்டே அவர்களை நோக்கி மெல்லமெல்ல நகர்ந்து வந்தது.

அவ்வளவுதான்; ''பாம்பு பாம்பு!''என்ற அலறிக் கொண்டே அவர்களில் சிலர் அங்கிருந்து தலைதெறிக்க ஓடினார்கள்.

இன்னும் சிலரோ ''ஆஹா! ரசிகன் என்றால் இவனல்லவா உண்மையான ரசிகன்!''என்று சொல்லிக் கொண்டே அங்கு நின்று, அது ஆடுவதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

வேறு சிலரோ,''இந்தப் பாம்பு தன் தலையை ஆட்டுவது யாரையும் காக்காய் பிடிப்பதற்காக அல்ல என்று சர்வ நிச்சயமாகச் சொல்லிவிடலாம்!'' என்று சொல்லிச் சிரித்தார்கள்.

அதற்குள் கையில் கழியுடன் அங்கே ஓடிவந்த ஒருவர் ஆடிக்கொண்டிருந்த பாம்பை ஓர் அடி அடிக்க, அந்தச் சத்தத்தைக் கேட்டதும் பாகவதர் பாடுவதை நிறுத்திவிட்டு, ''அடிக்காதீர்கள், அதை அடிக்காதீர்கள்! ஆடியது அதன் குற்றமானால், அது ஆடும் படியாக பாடியது என்குற்றமல்லவா?''என்று சொல்லிக்கொண்டே அங்கு பறந்தோடி வந்தார்.

ஆனால் அதற்குள்...

குறி தவறாமல் விழுந்த அடி அந்தப் பாம்பை குற்றுயிராகக் கூடவிட்டு வைக்கவில்லை; கொன்றே விட்டது!

பாகவதர் அழுதார்!

நல்லபாம்பாயிருந்தால் என்ன, அவர் ஒரு நல்ல ரசிகனை இழந்துவிட்டார் அல்லவா?

பாம்பை அடித்தவனுக்கு எப்படி இருந்திருக்கும்? அவன் தன் கையிலிருந்த கோலைக் கீழே விட்டெறிந்து விட்டு ''என்னை மன்னித்துவிடுங்கள்!''என்றான் பாகவதரிடம்.

''உன்னை மன்னித்தால் பாம்பு மறுபடியும் உயிர் பெற்று எழுந்துவிடுமா, என்ன? அதெல்லாம் பொய்; மனிதர்கள் தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொள்வதற்காகச் செய்து கொள்ளும் வார்த்தை ஜாலங்கள்!'' என்ற பாகவதர், ''இப்படித்தான் கெட்டவர்களிலும் நல்லவர்கள் இருக்கிறார்கள், என்பதை அறியாமல் இந்த உலகம் அவர்களில் பலரை அடிக்காமலே கொன்று விடுகிறது!'' என்று தொடர்ந்து சொல்லிப் பெருமூச்சு விட்டார்.

அப்புறம் என்ன?

பாகவதர் கையாலேயே அந்தப்பாம்பு அடக்கம் செய்யப்பட்டது; அவருடைய கையாலேயே அதற்குப் பாலும் வார்க்கப்பட்டது.

எல்லாம் முடிந்து திரும்பிப் பார்த்தால், கண்ணில் நீர்வடிய விளாத்திகுளம் சுவாமிகள்,நின்று கொண்டிருந்தார்.

சங்கீதத்தில் மகா மேதையான அவர்கள் கண்களில் நீரைக் கண்டதும் பாகவதருக்கு ஒன்றுமே புரியவில்லை. "என்ன சுவாமி, என்ன?'' என்று பதறிப்போய் கேட்டார்.

''ஒன்றுமில்லை; என்னுடைய ஊர்பாம்புகள் நிறைந்த ஊர். அங்கே நானும் எத்தனையோ இரவுகள் உட்கார்ந்து புன்னாகவராளி பாடியிருக்கிறேன்.இப்படி ஒரு பாம்பு வந்து என் பாட்டை ரசித்து நான் பார்த்ததே இல்லை. இதுவோ பட்டணம்; இங்கே பாம்பு அபூர்வம். இப்படிப்பட்ட இடத்தில் இன்றிரவு நீர் உட்கார்ந்து புன்னாகவராளி பாடியிருக்கிறீர். அதைக்கேட்டு ரசிக்க ஒரு பாம்பும் வந்திருக் கிறதென்றால் என்ன அத்தாட்சி வேண்டும்? ஆண்டவன் உமக்கே உமக்கென்று அளித் திருக்கும் இந்த வரப்பிரசாதத்தை ஒரு கணம் எண்ணிப் பார்த்தேன்; என் கண்களில் என்னையும் அறியாமல் நீர் சுரந்துவிட்டது!''என்றார் சுவாமிகள்.

''அப்படியா? நீங்கள் அப்படி நினைக்கிறீர்கள்; நான் எப்படி நினைக்கிறேன், தெரியுமா?'' என்றார் பாகவதர் புன்னகையுடன்.

''எப்படி?'' என்றார் சுவாமிகள்.

''எல்லாம் உங்களுடைய வரப்பிரசாதம் என்று நினைக்கிறேன்'' என்றார் பாகவதர்.

ஆம், ஒரு மேதை தம்மை மேதை என்று சொன்ன போதுகூட அவருடைய தலை கனக்கவில்லை; மார்பு புடைக்கவில்லை. எல்லாம் எப்போதும்போல அப்படி அப்படியே இருந்தன.

இந்தக் காலத்தில் யார் அப்படியே இருக்கிறார்கள்?

**அம்மையப்பா உனதன்பை மறந்தேன் ! ...**

தமிழ் நாட்டில் மட்டுமல்ல; கடல் கடந்த நாடுகளிலும் பாகவதரின் புகழ் வெகுவேகமாகப் பரவிக் கொண்டிருந்த காலம் அது. அந்தக்காலத்தில் அவர் ஒரு முறை இலங்கைக்குப்போய் வந்தாலும் போய் வந்தார் - சிங்கப்பூர், மலேஷியா, தென்னாப்பிரிக்கா போன்ற நாடுகளிலெல்லாமிருந்துகூட அவருக்கு அழைப்புக்கு மேல் அழைப்பாக வந்து கொண்டிருந்தது. அப்படி வந்த அழைப்பு களில் இலங்கையிலிருந்து இரண்டாவது முறையாக வந்த அழைப்பு குறிப்பிடத்தக்கதாகும். காரணம், அந்த அழைப்பு பாகவதருக்கு அளவு கடந்த பெருமையை மட்டும் தேடிக்கொடுக்கவில்லை; அளவு கடந்த சோகத்தையும் தேடிக் கொடுத்துவிட்டதுதான்.

திரு. ஒன்னுக்கோன் என்பவரை இங்கே உள்ள வர்கள் ஒரு வேளை அறியாவிட்டாலும், இலங்கையில் உள்ளவர்கள் நன்கு அறிந்திருப்பார்கள். பிரபல நாடகக் காண்ட்ராக்டரான அவருடைய அழைப்பை ஏற்றுத்தான் பாகவதர் இரண்டாவது முறையாக இலங்கைக்குப் போயிருந்தார். இம்முறை அவருடைய குழுவுடன் நடராஜ வாத்தியார் செல்லவில்லை; தந்தை கிருஷ்ணமூர்த்தி சென்றிருந்தார்.

சென்ற இடமெல்லாம் சிறந்த வரவேற்பு. கூட்டம் கொட்டகைகளுக்கு உள்ளே மட்டுமல்ல, வெளியேயும் நிரம்பி வழிந்தது. வசூலுக்கு எந்த இடத்திலும் குறை வில்லை. தங்க மெடல்களும், நற்சான்றிதழ்களும் வந்து குவிந்தவண்ணம் இருந்தன. இவற்றையெல்லாம் பார்த்த கிருஷ்ணமூர்த்தி மகிழ்ச்சியின் எல்லைக்கே போய்விட்டார். அந்தச் சமயத்தில் இந்த உலகமே அவருக்குத் துச்சமாகப் பட்டது. 'இனி தமக்கும் தம்முடைய குடும்பத்துக்கும் ஒரு குறைவுமில்லை; தம் மகனால் தாமும் நிமிர்ந்து நிற்கலாம்; தம்முடைய குடும்பமும் நிமிர்ந்து நிற்கும்' என்ற தைரியம் அவருக்கு ஏற்பட்டுவிட்டது.

இந்த நிலையில் தம்மை மறந்து தம் மனத்தை எங்கெல்லாமோ அடிக்கடி அலைய விட்டுக்கொண்டிருந்த அவர், ஒரு நாள் இரவு குளிக்கும் அறைக்குச் செல்ல வேண்டிய அவசியம் நேர்ந்தது. அவர் சென்ற சிறிது நேரத்திற்கெல்லாம் 'தடால்'என்று ஒரு சத்தம். ''என்ன ஐயா, என்ன?'' என்று திடுக்கிட்டுக் கேட்டுக்கொண்டே அவருக்கு உதவியாக ஊரிலிருந்து வந்திருந்த சிறுவனான ராமன் ஓடிப் போய்ப் பார்த்தான். வழுக்கி விழுந்த அவருடைய தலையை அங்கிருந்த வாளி வெட்டியிருந்தது. பெருகி உறைந்த ரத்தத்துக்கிடையே அவருடைய உயிரற்ற உடல் விழுந்து கிடந்தது.

அந்தக் கோலத்தில் அவரைக் கண்டதும் பயந்துபோன சிறுவன், ''பாகவதர் ஐயா, இங்கே ஓடி வாருங்களேன்! பாகவதர் ஐயா, இங்கே ஓடி வாருங் களேன்!'' என்று குரல் கொடுத்தான்.

''என்ன ராமா, என்ன?'' என்று கேட்டுக்கொண்டே வந்து பார்த்த பாகவதர், ''அப்பா!'' என்று ஓர் அலறு அலறி அவர் மேல் விழுந்து அவருடைய மார்பில் தம் முகத்தைப் புதைத்துக் கொண்டது தான் தாமதம், அவருடன் அந்த விடுதியில் தங்கியிருந்த அனைவரும் எழுந்து ஓடோடியும் வந்து அவரைச் சூழ்ந்து கொண்டனர்.

விஷயம் தம் காதுக்கு எட்டியதும் திரு. ஒன்னுக் கோனும் விரைந்து வந்தார். ''வருத்தப்படாதீர்கள்; இறப்பும் பிறப்பும் வாழ்க்கை நதியின் இருகரைகள் தானே?'' என்று சொல்லி அவர் பாகவதரை ஒருவாறு தேற்றி, ''உங்கள் தாயாருக்கும் சகோதரர்களுக்கும் தந்தி கொடுத்து விடட்டுமா? அவர்கள் வந்ததும் இவரை இங்கேயே அடக்கம் செய்து விடலாம்!''என்றார்.

''அது அவ்வளவு சரியில்லை. இவர் பிறந்து வளர்ந்தது திருச்சியில். இவரைக் கடைசி முறையாகப்

பார்க்கவிரும்புபவர்கள் பலர் அங்கே இருப்பவர்கள். அவர்களுக்காகவாவது இவரை நாம் அங்கேகொண்டு போய்த்தான் அடக்கம் செய்யவேண்டும்!'' என்றார் பாகவதர் கலங்கிய கண்களுடன்.

''இலங்கையிலிருந்து இதை இந்தியாவுக்கு எடுத்துக் கொண்டு போவதென்பது அவ்வளவு சுலபமில்லையே?''

''முயன்று பாருங்கள்; அதற்காக எவ்வளவு செலவானாலும் பரவாயில்லை.''

''இதற்குச் செலவுகூட அவ்வளவு முக்கியமில்லை; சர்க்காரிடம் செல்வாக்குள்ள யாருடைய உதவியாவது நமக்கு உடனே கிடைப்பதுதான் முக்கியம். அதற்கு யாரைப் பிடிக்கலாம் என்பது தான் இப்போது என்னுடைய யோசனை!''

பாகவதர் ஒரு கணம் யோசித்தார்; மறுகணம், ''தவமணி தேவியின் தந்தை கதிரேசன் இருக்கிறாரே, அவர் பிரபல வக்கீல் அல்லவா? அவரைப் பிடித்துப் பாருங்களேன்!''

''யாரைப் பிடித்தாலும் சரி; இவர் திடீரென்று மரணமடைந்திருப்பதால் இவருடைய சடலத்தை இங்கே சோதித்துப் பார்க்காமல் நம்மிடம் கொடுக்கமாட்டார்கள்.''

''யார் எப்படி வேண்டுமானாலும் சோதித்துப் பார்த்துக்கொள்ளட்டும்; கடைசியாக இவரை நம்மிடம் ஒப்படைத்தால் சரி!'' என்றார் பாகவதர்.

எதற்கும் நான் போய் கதிரேசனைப் பார்த்துவிட்டு வருகிறேன். நீங்கள் இங்கேயே இருங்கள்!'' என்று சொல்லிவிட்டு ஒன்னுக்கோன் புறப்பட்டார்.

அப்போதிருந்த நிலையில் அவர் புறப்பட்ட நிமிஷத்திலிருந்தே பாகவதர் அவரை ஒவ்வொரு நிமிஷமும் எதிர்பார்க்க ஆரம்பித்துவிட்டார்.

அந்த மட்டும் திரு. கதிரேசன் பாகவதரைக் கைவிட வில்லை; பெருமுயற்சி செய்து அவர் தம் தந்தையாரின்

சவத்தைத் திருச்சிக்கு எடுத்துக் செல்வதற்குரிய அனுமதியைச் சம்பந்தப்பட்டவர்களிடமிருந்து வாங்கித் தந்துவிட்டார்.

வழக்கமான சோதனைகள் அனைத்தும் முடிந்தபின் 'கிருஷ்ணமூர்த்தியின் சவப்பெட்டி'என்று சொல்லப்பட்ட 'ஒரு சவப்பெட்டி'பாகவதரிடம் ஒப்படைக்கப்பட்டது.

அவருக்கு ஒரு சந்தேகம் – அது தம் தந்தையின் சவப்பெட்டியாக இருக்குமா என்று!

ஆனாலும் அதற்காக அவர் தாமதிக்கவில்லை; அதை உடனே திருச்சிக்கு எடுத்துச் செல்வதற்காக ஒரு தனி ரயில் பெட்டியையே ஏற்பாடு செய்துவிட்டார்.

அந்தப் பெட்டியில் அழகான மலர் வளையத்தோடு கிருஷ்ணமூர்த்தியின் சவப்பெட்டி வைக்கப்பட்டது. அத்துடன் பாகவதர் மட்டும் தம் குழுவினருடன் செல்ல வில்லை; திரு. ஒன்னுக்கோனும் அவர்களுடன் சென்றார்.

தலைமன்னாரிலிருந்து திருச்சிக்கு வருவதற்குள் பாகவதருக்கு இன்னொரு சந்தேகமும் எழுந்தது. இந்தச் சவப்பெட்டிக்குள் 'சவம்' என்று ஒன்று இருக்குமா; இல்லை அதுவும் இருக்காதா என்பதுதான் அது!

இந்தச் சந்தேகங்களையெல்லாம் வழியிலேயே தீர்த்துக்கொள்வதற்கு வேண்டிய அவகாசமும் அவருக்குக் கிடைக்கவில்லை. காரணம், செய்தி அறிந்த மக்கள் ஸ்டேஷனுக்கு ஸ்டேஷன் திரண்டு வந்து, பாகவதரிடம் தங்கள் வருத்தத்தைத் தெரிவித்துக் கொண்டதோடு, அதே ரயிலில் திருச்சிக்கு வரவும் ஆரம்பித்து விட்டதுதான்!

ஒருவழியாகச் சவப்பெட்டி வந்த ரயில் திருச்சி சந்திப்பை அடைந்தது. அங்கே பாகவதரின் தாயார் மாணிக்கத்தம்மாள், அவருடைய சகோதரர்கள், மற்றுமுள்ள சுற்றத்தார் அனைவரும் வந்திருந்தனர்.

ரயில் பெட்டியிலிருந்து சவப்பெட்டியை இறக்கியதும், ''இதை இப்படியே இடுகாட்டுக்கு எடுத்துக்கொண்டு போய்விடுவதுதான் நல்லது!''என்றார் அவர்களைச் சேர்ந்த ஒரு பெரியவர்.

'அதற்கா இவ்வளவு தூரம் கொண்டுவந்தேன்?' என்று நினைத்த பாகவதர், ''ஏன்!'' என்றார்.

''வெளியே இறந்தவரை மீண்டும் உள்ளே எடுத்துச் செல்வது நல்லதல்ல!''என்றார் அவர்.

''அப்படியா?'' என்று ஒருகணம் யோசித்த பாகவதர், மறுகணம் உற்ற நண்பர் ஒருவரை நோக்கி, ''முதலில் நீங்கள் இந்தச் சவப்பெட்டியைத் திறந்து இதற்குள் அப்பாவின் சடலம் இருக்கிறதா என்று பாருங்கள்!''என்றார்.

காலியாயிருந்தால் பெரியவர் சொல்வது போல் இடுகாட்டுக்கே எடுத்துக்கொண்டு போய்விடலாம் என்பது அவருடைய எண்ணம்!

ஆனால் பெட்டியைத் திறந்ததும்...

ஸ்ரீமான் கிருஷ்ணமூர்த்தி பைஜாமா, ஷேர்வாணி எல்லாம் அணிந்து, என்றுமில்லாத அழகுடன் காட்சி அளித்துக் கொண்டிருந்தார்!

அவ்வளவுதான் ''அப்பாவை வீட்டுக்குக் கொண்டு போகத்தான் வேண்டும்!'' என்றார் பாகவதர்.

''வேண்டாம், அவர் கெட்டாலும் மற்றவர்கள் நன்றாயிருக்கவேண்டும்; அவரை வீட்டுக்குக் கொண்டு போகவே வேண்டாம்!'' என்றார் பெரியவர்.

''என்ன சாஸ்திரமோ, என்னவோ! எங்கள் வீட்டுக்கு எதிர்த்தாற்போலிருக்கும் பெரியம்மாவின் வீட்டுக்காவது கொண்டு போகலாம், இல்லையா?''

''அதற்கு உங்கள் பெரியம்மா சம்மதிக்க வேண்டாமா?''

''சம்மதிப்பார்! தம் கணவருக்குப் பிறகு அந்த அம்மாள் அந்த வீட்டை வைத்துக்கொள்வதாக இல்லை; விற்று விடுவதாக இருக்கிறார். அவர் விரும்பினால் அதற்குரிய தொகையைக் கொடுத்து அதை நானே இவருக்காக வாங்கிக்கொண்டு விடுகிறேன்!'' என்றார் பாகவதர்.

'' அப்படியானால் சரி''என்று எல்லோரும் அதற்கு அனுமதித்தார்கள்.

உடனே பாண்டு வாத்தியம் முழங்க, கிருஷ்ண மூர்த்தியின் சவப்பெட்டி பாகவதரின் பெரியம்மா வீட்டுக்கு எடுத்துச் செல்லப்பட்டது. அங்கே பொதுமக்களின் பார்வைக்காக அது வைக்கப்பட்டதும் ஆயிரக்கணக்கான மக்கள் ஒருவர்பின் ஒருவராக வந்து, அதற்குத் தங்கள் கடைசி அஞ்சலியைச் செலுத்திவிட்டு சென்றனர்.

மறுநாள் காலை 10 மணிக்குத் திறந்த காரில் உயரமாக அமைக்கப்பட்டிருந்த மேடையின் மேல் கிருஷ்ண மூர்த்தியின் சவப்பெட்டி வைக்கப்பட்டு ஊர்வலமாக எடுத்துச் செல்லப் பட்டது. அந்தக் காருக்கு முன்னால் பாகவதர் நடந்து செல்ல, ஆயிரமாயிரம் மக்கள் அவரைத் தொடர்ந்து சென்றனர்.

ஆம், அவருக்கு நேர்ந்த துயரத்தைத் தங்களுக்கு நேர்ந்த துயரமாகவே அவர்கள் கருதினர்!

கடைசியாகப் பாகவதரின் தந்தை சமாதி வைக்கப் பட்டார்.

மண்ணுலகில் தம் மகன் மேல் தம்மைத் தவிர வேறு யாரும் உரிமை கொண்டாடுவதை விரும்பாத அந்த ஆத்மா விண்ணுலகிலாவது அதைவிட்டுக் கொடுத்ததோ, என்னவோ?

**தந்தைசொல் மிக்கதோர் மந்திரமில்லை...**

தந்தை கிருஷ்ணமூர்த்தி மறைந்து ஒரு மாத காலம் ஆகியிருக்கும். அதற்கு மேல் பாகவதரை விட்டுவைக்கத்

தமிழ் கூறும் நல்லுலகம் விரும்பவில்லை; ''எங்கள் ஊருக்கு வாருங்கள், எங்கள் ஊருக்கு வாருங்கள்!'' என்று அவருக்கு அழைப்புக்குமேல் அழைப்பாக விட்டுக்கொண்டே இருந்தது. எதற்கு? நாடகம் நடத்தவும், கச்சேரி செய்யவும் தான்!

மக்களிடம் செலுத்தும் அன்பே மகேசனிடம் செலுத்தும் அன்பு அல்லவா? பாகவதராலும் அந்த அழைப்புகளை நீண்ட நாட்கள் தட்டிக் கழித்துக் கொண்டிருக்க முடியவில்லை. ''அப்பா இருந்தால்கூட அதை விரும்பமாட்டார்!'' என்று நினைத்த அவர், அந்த அழைப்புக்களில் சிலவற்றை உடனே ஏற்றுக்கொண்டார்.

நாகர்கோயிலில் ஒரு நாடகம். கோடைகால மானதால் வெப்பம் இரவுவரைகூடத் தணியாமலிருந்தது. ஒப்பனை அறையிலிருந்த சக நடிகர்கள் அனைவரும் ஆளுக்கொரு குளிர்பானத்தை அருந்திக்கொண்டிருந்தனர். பாகவதருக்கு எதிர்த்தாற்போல் வைக்கப்பட்ட குளிர் பானம் மட்டும் அப்படியே இருந்தது. அதைப் பார்த்த திருமதி எஸ்.டி.சுப்புலட்சுமி, ''என்ன பாகவதர் ஸார், 'கூல்டிரிங்க்' சாப்பிடவில்லையா?'' என்றார்.

பாகவதர் பதிலுக்கு ஒன்றும் சொல்லவில்லை. அவருடைய முகத்தை ஏறிட்டுப் பார்த்துவிட்டுப் பேசாமல் இருந்துவிட்டார்.

எஸ்.டி.எஸ்.ஸும் அதற்குமேல் அவரைத் தொந்தரவு செய்ய விரும்பாமல் அப்பால் போய்விட்டார்.

அவருடைய தலை மறைந்ததும், ''ஏன், அன்றொரு நாள் நிகழ்ந்த அந்தச் சம்பவத்தை நினைத்துக்கொண்டு விட்டீர்களா?'' என்றார் பாகவதருக்கு அருகிலிருந்த நண்பர் ஒருவர்.

அவ்வளவுதான்; பாகவதரின் கண்கள் கலங்க ஆரம்பித்துவிட்டன; 'குபுக்'கென்று அவர் அழுதேவிட்டார்!

ஆம், எதிர்த்தாற்போல் இருந்த குளிர் பானமும், 'என்ன பாகவதர் ஸார், கூல் டிரிங்க் சாப்பிடவில்லையா?' என்று எஸ்.டி.எஸ்.கேட்ட கேள்வியும் சற்றே மறந்திருந்த தந்தையைச் சட்டென்று அவருடைய நினைவுக்குக் கொண்டு வந்துவிட்டன.

அந்த அளவுக்குப் பாகவதரின் உள்ளத்தில் இடம் பெற்றிருந்த அந்தச் சம்பவத்தை நேரில் கண்ட நெல்லை நண்பர் திரு தியாகராஜன் செய்யும் 'நேர்முக வர்ணனை' யைக் கேளுங்கள் :

''பாளையங்கோட்டை பிஷப் சார்ஜெண்ட் பள்ளியில் நான் ஆசிரியர் பயிற்சி பயிலும்போது திரு எம்.கே.தியாகராஜ பாகவதரின் 'பவளக்கொடி' நாடகம் திருநெல்வேலி ராயல் டாக்கீஸில் நடைபெற்றது. அது பற்றிய விளம்பரத்தைப் பார்த்த நான், என் பெயருடைய இவருடைய நாடகத்தை எப்படியாவது பார்த்தே தீர வேண்டும் என்ற எண்ணத்தாலும், திரு எஸ்.ஜி.கிட்டப்பாவே ஒரு சமயம் மேடையில் தோன்றி பாகவதரைப் பாராட்டியிருக்கிறார் என்று கேள்வி பட்டிருந்ததாலும் அன்றைய நாடகத்திற்குச் சென்றிருந்தேன். கூட்டம் எக்கச்சக்கமாயிருந்ததால் பலருக்கு டிக்கெட் கிடைக்க வில்லை. ஒரு பக்கம் கூட்டத்தினரின் நெரிசல்; இன்னொரு பக்கம் 'எல்லோருக்கும் டிக்கெட் கொடு, எல்லோருக்கும் டிக்கெட் கொடு!' என்ற கூச்சல் – இத்தனை அமர்க்களங் களுக்கிடையில் நாடகம் ஆரம்பமாயிற்று.

பாகவதர் அர்ஜுனன்; எஸ்.டி.எஸ்.அல்லி, பவளக்கொடி; திரு தேவுடு அய்யர் ஆர்மோனியம், பின்பாட்டு; மிருதங்கம் யார் என்று ஞாபகமில்லை. துவக்கத்தில் 'பபூன்' வேடம் தரித்தவர் வந்து போனார். அவருக்குப் பின்னால் எஸ்.டி.எஸ்.வரும் கட்டம். அப்போது எஸ்.டி.எஸ் ஸுக்கு நல்ல உடல் அமைப்பு, நல்ல சாரீரம். அவருக்கும் ஆர்மோனியக்காரருக்கும் பாட்டில் கடுமையான போட்டி ; கேட்கப் பரமானந்தமாயிருந்தது.

எஸ்.டி.எஸ்ஸுக்குப் பிறகு பாகவதர் வரும் கட்டம். அவர் வருகிறார் என்று தெரிந்ததும் தியேட்டரில் ஒரே அமைதி; நிசப்தம். பாகவதர் வருவதற்கு முன்னால் அலட்சியமாக ஆர்மோனியம் வாசித்துக் கொண்டிருந்த தேவுடு அய்யர் இப்போது தம் ஆர்மோனியத்தை மட்டுமல்ல; சட்டையையும் சரிப்படுத்திக் கொண்டு நாலரைக் கட்டை சுருதியை அழுத்தினார். அவ்வளவுதான்; கரகரப்பிரியாவில் மகான் தியாகய்யரின் கீர்த்தனை ஒன்றைப் பாடிக் கொண்டே பாகவதர் மேடையின்மேல் கம்பீரமாகத் தோன்றினார். அதற்குமுன் எத்தனையோ நாடகங்களையும் நடிகர்களையும் பார்த்துப் பார்த்து அலுத்துப்போயிருந்த நான், எம்.கே.டியின் தோற்றத்தைக் கண்டே மெய் மறந்து போனேன். 'ராஜபார்ட்'உடையும், தலையில் கிரீடமும் – அடாடா, அவரையே பார்த்துக்கொண்டு இருக்கலாம் போல இருந்தது.

கீர்த்தனை முழுவதையும் பாடி முடித்த பின் அவர் தேவுடு அய்யர் பக்கம் வந்தார். சிட்டாசுரம் ஆரம்ப மாயிற்று. ஆஹா! அந்தப் போட்டி–எம்.கே.டி.பாட, தேவுடு அய்யர்அதைத் திரும்பப் பாட, இரண்டு பேரும் மாறி மாறிப் பாடிக்கொண்டே இருந்தார்கள். சபையில் ஒரே அமைதி; நிசப்தம். அப்போது என் பக்கத்திலிருந்த ஒருவர் தம் நண்பரிடம், 'கொஞ்சம் பொடி கொடப்பா!' என்று கேட்க, அவர் பொடி கேட்டவரின் தலையில் அடித்து, ஏண்டா, பொடி கேட்கும் நேரமா இது? பேசாமல் இருடா!' என்று அதட்டினார்.

போட்டி மேலும் வலுத்தது. கடைசி முடுக்கு சிட்டாசுரத்தில் என்னை மறந்து நான் 'ஆஹா!' என்று வியந்தபடி எழுந்தேன். எனக்குப் பின்னால் இருந்த ஒருவர் என் தோளைப் பிடித்து அழுத்தி, 'உட்காரும்!' என்று சொன்னபிறகுதான் எனக்குச் சுய நினைவு வந்தது.

மக்களின் கரகோஷத்துக்கு இடையே நாடகம் ஒரு வழியாக முடிந்தது. பாகவதரை நேரில் பார்க்கவேண்டும் என்ற ஆசையில் நான் ஒப்பனை அறைக்குள் நுழைந்தேன். நாடகக் காண்ட்ராக்டர் 'போங்கள், வெளியே போங்கள்!' என்று எல்லோரையும் விரட்டிக் கொண்டிருந்தார். காரணம், என்னைப் போல் பலர் பாகவதரை நேரில்காண அங்கே வந்துவிட்டதுதான்! அந்த நிலையில் எனக்கும் இன்னும் சிலருக்கும் மட்டுமே அவரைப் பார்க்க எப்படியோ வாய்ப்புக் கிடைத்தது.

பாகவதர் கீழே அமர்ந்து முகத்தில் பூசியிருந்த பவுடரைக் கலைத்துக் கொண்டிருந்தார். அதைக் கலைத்த பிறகும் அவருடைய அழகு முகத்தில் களை கொட்டிக் கொண்டிருந்தது. அப்போது யாரோ ஒருவர் குளிர் பானம் ஒன்றைக்கொண்டு வந்து அவருக்கு எதிரே வைத்தார். அது சமயம் தன்னுடைய ஒப்பனையைக் கலைத்துவிட்டு அங்கே வந்த எஸ்.டி.எஸ்., 'என்ன பாகவதர் ஸார்! கூல்டிரிங்க் அப்படியே இருக்கிறதே? சாப்பிடவில்லையா?''என்று நாடகப் பாணியில் கேட்டார். அதற்குப் பாகவதர் தந்த பதில் என்ன தெரியுமா? ஒரு புன்சிரிப்பு மட்டுமே!

இது எனக்கு வியப்பை அளித்தது. 'நாடகத்தில் இரண்டு பேரும் 'போடு, போடு' என்று போடுகிறார்கள்; இங்கே என்னடா என்றால் பாகவதர் வாயைக்கூடத் திறக்காமல் இருக்கிறாரே?' என்றேன் நான்.

பக்கத்தில் இருந்தவர் சொன்னார்:

'ஸ், பேசாமல் இரும்! பாகவதர் பக்கத்தில் அவருடைய தகப்பனார் இருக்கிறார்; அதனால்தான் அவர் வாயைத்திறக்காமல் இருக்கிறார்!'

இதைக்கேட்டதும், 'தந்தையிடம் அவ்வளவு மரியாதையா பாகவதருக்கு!' என்று எண்ணி மேலும் வியந்தேன் நான்.

இது உண்மை; முற்றிலும் உண்மை. தந்தைக்கும் தனயனுக்கு மிடையே எத்தனையோ தகராறுகள் இருந் திருக்கலாம். ஆயினும் பாகவதர் அவரிடம் வைத்திருந்த மதிப்பு அவற்றால் என்றுமே குறைந்ததில்லை.

நாகர்கோயில் நாடகத்துக்குப் பிறகு ஜலகண்ட புரத்தில் ஒரு நாடகம். அங்கேயும் 'பவளக்கொடி' தான்; அதே ஜோடிதான்.

இரவு பத்து மணிக்கு நாடகம் ஆரம்பமாகவிருந்தது. கூட்டமோ சொல்லிமுடியாத கூட்டம். அந்தச் சமயம் பார்த்துத்தானா கோடைமழை 'கொட்டு, கொட்டு' என்று கொட்டவேண்டும்?

நாடகம் நடக்கவிருந்த கொட்டகையோ கீற்றுக் கொட்டகை. அந்தக் கொட்டகைக்கு வெளியே மட்டும் அல்ல; உள்ளேயும் தண்ணீர் புகுந்துவிட்டது. வெள்ளம்; ஒரே வெள்ளம்!

இந்த மழையைப்பற்றிக் கூடியிருந்த மக்கள் கொஞ்சமாவது கவலைப்பட்டார்களா என்றால் அதுதான் இல்லை; சந்தோஷப் பட்டார்கள். ஏன் அந்த ஊரில் ரொம்ப நாட்களாக மழையே இல்லையாம்; பாகவதர் வந்தவேளை மழை 'கொட்டு, கொட்டு' என்று கொட்டுகிறதாம்!

ஆனால் பாகவதர் அவர்களைப் போல் சந்தோஷப் படவில்லை; "இந்த மழையில் நாடகத்தை நடத்தி உங்களை யெல்லாம் தொல்லைக்குள்ளாக்க நான் விரும்பவில்லை. இதே நாடகத்தை நாளை இரவு இதே தியேட்டரில் நடத்துகிறேன்; போய்வாருங்கள்!" என்றார் கைகூப்பி.

மக்கள் கேட்கவில்லை; "எத்தனையோ நாட்கள் காத்திருந்து, எத்தனையோ தூரத்திலிருந்து நாங்கள் உங்களுடைய நாடகத்தைப் பார்க்க வந்திருக்கிறோம். மழையாவது, கிழையாவது! நீங்கள் நனைந்துகொண்டே நாடகம் நடத்தினால் நாங்களும் அதை நனைந்து கொண்டே பார்க்கத் தயார்!" என்று சொல்லிவிட்டார்கள்.

அப்புறம் என்ன; நடிகர்கள் ஆளுக்கொரு குடையைப் பிடித்துக்கொண்டு நாடகம் நடத்தினார்கள்; மக்களும் ஆளுக்கொரு குடையைப் பிடித்துக்கொண்டு பரம சந்தோஷமாக அதைப் பார்த்து ரசித்தார்கள்!

இப்படிப்பட்ட மக்கள் பாகவதரைத் தம் தந்தைக் காகக் கூட ஒரு மாத காலத்துக்கு மேல் துக்கம் அனுஷ்டிக்க விடாமல் போனதில் வியப்பென்ன?

**பூமியில் மானிடராய்ப் பிறந்திருந்துமோர்...**

ஒரு துறையில் பெயரும் புகழும் பெற்று விளங்கும் ஒருவன், அதே துறையைச் சேர்ந்த இன்னொருவன் தன்னை மிஞ்சப்பார்க்கும்போது அவனைத் தன்னால் முடிந்தவரை மட்டந்தட்டி வைக்க முயல்வது இயற்கை. இந்த இயற்கைக்கும் விரோதமாயிருந்தார் பாகவதர். தம்முடைய வழியைப் பின்பற்றி யாராவது பாடினாலோ, நடித்தாலோ அவர் பரம சந்தோஷப்படுவார். இது பிடிக்காத சிலர் ''உங்களுக்கு நீங்களே குழி தோண்டிக் கொள்கிறீர்கள்!'' என்று அவரை எச்சரிப்பார்கள். பாகவதரோ அதை மறுத்து ''இல்லை, எனக்கு நானே பெருமை தேடிக்கொள்கிறேன்!'' என்பார்.

''எங்களுக்கு அப்படித் தோன்றவில்லை; நீங்கள் தேடிக் கொண்ட பெருமையை இன்னொருவருக்காக இழப்பதாகவே தோன்றுகிறது?'' என்பார்கள் அவர்கள்.

'கிடையவே கிடையாது; என்னுடைய வழியைப் பின்பற்றி ஒருவன் பாடுகிறான் என்றால், என்னுடைய வழியைப் பின்பற்றி ஒருவன் நடிக்கிறான் என்றால், அது எனக்குத்தான் பெருமை தருவதாக இருக்குமே தவிர, அவனுக்கு ஒருநாளும் பெருமை தருவதாக இருக்காது!'' என்பார் பாகவதர்.

ஆம், ஒவ்வொருவருக்கும் ஒரு 'தனி வழி' இருக்க வேண்டும் என்பது அவருடைய அபிப்பிராயம்.

இந்த வழியைப் பற்றி அவர் ஒருநாள் தம் நண்பர்களுடன் பேசிக் கொண்டிருந்தபோது ''உங்களைப் போல் தான் கிட்டப்பாவும் சொல்லிக்கொண்டிருக்கிறார்!'' என்றார் அவர்களில் ஒருவர்.

பாகவதர் சிரித்தார்.

''ஏன் சிரிக்கிறீர்கள்?'' என்றார் நண்பர்.

''ஒன்றுமில்லை; சும்மா சிரித்தேன்!''என்று பாகவதர் மழுப்பினார்.

நண்பர் விடவில்லை; ''நீங்கள் காரணமில்லாமல் சிரிக்க மாட்டீர்களே! கதையைச் சொல்லுங்கள்?'' என்று அவரை வற்புறுத்தினார்:

அதற்குமேல் பாகவதர் சொன்னார்.

வெளியூரில் விலைபோகும் சரக்கு உள்ளூரில் விலைபோகாது என்பார்கள். அதற்கு நேர் விரோதமானது என்னுடைய கதை. எனக்கு வெளியூர்களில் எவ்வளவுக் கெவ்வளவு மதிப்பு இருந்ததோ அவ்வளவுக்கவ்வளவு மதிப்பு உள்ளூரிலும் இருந்தது.

உள்ளூரில் என்றால் உள்ளூரை மட்டுமே சொல்கிறேன்; என் வீட்டில் எனக்கு அந்த மதிப்பு இல்லை!

ஆமாம்; நாடகத்துறையில் நான் ஈடுபடுவதை விரும்பாத என் அப்பா அப்போது என்னை வீட்டைவிட்டுத் துரத்திவிட்டார்! நண்பர்கள் சிலருடைய உதவியுடன் நான் அந்தச் சமயத்தில் திருச்சியிலுள்ள சிந்தாமணி சத்திரத்தில் தங்கியிருந்தேன். ஒரு நாள் ஒரு குதிரை வண்டி வந்து அந்தச் சத்திரத்துக்கு முன்னால் நின்றது. நான் எட்டிப்பார்த்தேன்; அந்த நாளில் பிரசித்தி பெற்ற நடிகர்களில் ஒருவராயிருந்த திரு. எஸ். ராதாகிருஷ்ண பாகவதர் நாலைந்து பேருடன் வண்டியை விட்டு இறங்கி உள்ளே வந்து கொண்டிருந்தார். 'திரு. எஸ்.ஜி. கிட்டப்பாவின் குழுவில் உள்ள இவர் நம்மைத் தேடி ஏன் வரவேண்டும்?' என்று நான் ஒன்றும் புரியாமல் விழித்தேன்.

'நமஸ்காரம். இவர்கள் நாடகக் காண்ட்ராக்டர்கள்; திருச்சி பாலக்கரைக் கொட்டகையில் கிட்டப்பாவின் நாடகங்களை நடத்துவதற்காக இங்கே வந்திருக் கிறார்கள்!' என்று அவர்களை எனக்கு அறிமுகப்படுத்தி வைத்தார் எஸ்.ஆர்.பாகவதர்.

நானும் பதிலுக்கு என்னுடைய நமஸ்காரத்தைத் தெரிவித்துவிட்டு,''அப்படியா, ரொம்ப சந்தோஷம்!' என்றேன்.

'இங்கே கிட்டப்பாவின் முதல் நாடகமாக 'வள்ளித் திருமணம்' நடக்கவிருக்கிறது. கே.பி.சுந்தராம்பாள் வள்ளி; கிட்டப்பா வேலன், வேடன், விருத்தன். நீங்கள் அந்த நாடகத்தில் நாரதராக நடிக்கவேண்டுமென்று இவர்கள் விரும்புகிறார்கள்.'

'ஏன், நீங்கள் தானே அவருடைய நாடகங்களில் நாரதராக நடிப்பது வழக்கம்?'

'ஆமாம்; அதற்குரிய சம்பளத்தை வேண்டுமானால் இவர்கள் எனக்குத் தந்துவிடுவதாகச் சொல்கிறார்கள். எனக்குப் பதிலாக நீங்கள் நாரதராக நடித்தால் இன்னும் கொஞ்சம் விசேஷமாக இருக்குமென்று இவர்கள் நினைக்கிறார்கள்.

'அதற்கு நீங்கள் சம்மதித்து விட்டீர்களா'

'சம்மதிக்காமல் என்ன' எனக்குத்தான் தொழில் செய்யாமலே சம்பளம் கிடைத்துவிடுகிறதே!'

'அதுவா பெரிது? சிலருக்கு இதில் தன்மானப் பிரச்னை வந்து குறுக்கிடுமே?'

'குறுக்கிடுவதாவது! அதெல்லாம் ஒன்றுமில்லை; வேண்டுமென்றே சிலர் அதை இழுத்துப் போட்டுக் கொண்டு அவஸ்தைப்படுவார்கள். அந்த மாதிரி அவஸ்தை களுக்கெல்லாம் நான் எப்போதுமே என்னை உள்ளாக்கிக் கொள்வதில்லை. என்னைப் பொறுத்தவரை எனக்குப்

பதிலாக நீங்கள் நாரதராக நடிப்பதில் எனக்குப் பரம திருப்தியே. நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? அதை முதலில் சொல்லுங்கள்!'

'உங்களுக்கு இதில் சம்மதம் என்றால் எனக்கும் சம்மதமே!' என்றேன் நான்.

'இதுதான் என்னை வியப்புக்குள்ளாக்குகிறது! ஏனெனில், தற்போது நாடக உலகில் கிட்டப்பாவின் அளவுக்கு உயர்ந்து நிற்பவர் நீங்கள். அத்தகையவர் அவர் கதாநாயகனாக நடிக்கும் ஒரு நாடகத்தில் நாரதராக நடிக்க ஒப்புக்கொண்டது நாங்கள் செய்த பாக்கியம். இந்தாருங்கள், இதில் நாரதருக்கான பத்துப் பாடல்களும், அவற்றுக்கான வசனங்களும் இருக்கின்றன, பார்த்துக் கொள்ளுங்கள்!' என்ற அவர் என்னிடம் ஒரு நோட்டை எடுத்து நீட்டிவிட்டு 'நீங்கள் விரும்பினால் இதிலுள்ள பாடல்களை நான் பாடிக் காட்டுகிறேன்; வசனங்களையும் பேசிக் காட்டுகிறேன்!' என்றார்.

'அப்படியே செய்யுங்கள்; அதுதான் நல்லது!' என்றேன் நான்.

அதற்கு மேல் நாலைந்து நாட்கள் அவர் தொடர்ந்து வந்து எனக்குப் பயிற்சி கொடுக்க, நான் அந்தப் பாடல்களையும் வசனங்களையும் மனப்பாடம் செய்து கொண்டு விட்டேன்.

இதில் எஸ்.ஆர்.பாகவதருக்குப் பரிபூரண திருப்தி; ஒருவிதத்தில் பெருமையுங்கூட. ஏனெனில், என்னுடைய குருநாதர்களில் அவரும் ஒருவராகிவிட்டார் அல்லவா?

நாடகம் நடைபெறவேண்டிய நாள் வந்தது. நான் அதற்குச் செல்வதற்காகத் தயாராகிக் கொண்டிருந்தேன். அப்போது நாடகக் காண்ட்ராக்டர்களில் ஒருவர் ஓடோடி வந்து 'பாகவதர் ஸார், மன்னிக்கவேண்டும்' என்றார் தட்டுத்தடுமாறி நின்று.

'ஏன்?' என்றேன் நான்.

'உங்களுக்கு அனாவசியமாகச் சிரமம் கொடுத்து விட்டோம்!'

'இந்த உலகத்தில் எதுதான் சிரமமில்லை? எல்லாமே சிரமம்தான்! ஏன், நாடகம் நின்றுவிட்டதா!'

'இல்லை; அதை எப்படிச் சொல்வது என்றுதான் எனக்கு விளங்கவில்லை!

'சும்மா சொல்லுங்கள்?'

'கோபித்துக் கொள்ள மாட்டீர்களே?'

'மாட்டேன்; எப்பொழுதாவது கோபித்துக் கொண்டாலும் என்னை நானே கோபித்துக் கொள்வதுதான் என் வழக்கம். நீங்கள் தைரியமாகச் சொல்லுங்கள்?'

'தம்முடன் நீங்கள் நாரதராக நடிப்பதை...

'நடிப்பதை...?'

'கிட்டப்பா...?'

'விரும்பவில்லை; எபபொழுதும் போல எஸ்.ஆர். பாகவதர்தான் அவருடன் நாரதராக நடிக்கவேண்டுமாம்!' என்று ஒருவாறு விஷயத்தைச் சொல்லி முடித்தார் அவர்.

நான் சிரித்தேன்!

'எல்லாவற்றுக்கும் சிரிப்புத்தானா?' என்றார் என்னை ஏற்கெனவே ஓரளவு அறிந்து வைத்திருந்த அவர்.

'இல்லை; சிலசமயம் அழுவதும் உண்டு!' என்றேன் நான்.

'எதற்காக?' என்றார் அவர்.

'கிட்டப்பாவைப் போன்றவர்களுக்காக!' என்று சொல்லிவிட்டு நான் மீண்டும் சிரித்தேன். 'வருகிறேன்!' என்று அவர் போய்விட்டார்.

இந்தச் சம்பவத்துக்குப் பிறகு நாலைந்து வருடங்கள் எப்படியோ ஓடிவிட்டன. திரு. கிட்டப்பா என்னுடன்

நடிக்க விரும்பாததால் என் பெயரோ, புகழோ மங்கிவிட வில்லை; மாறாக வளர்ந்தது. இந்த நிலையில் ஒரு நாள் எஸ்.ஆர். பாகவதர் என்னைப் பார்க்கவந்தார். 'அன்று ஏன் கிட்டப்பா உங்களுடன் நடிக்க விரும்பவில்லை, தெரியுமா? இன்று இத்தனை பேரோடு புகழோடு விளங்கவிருக்கும் உங்களுடன் அன்று தான் ஏன் நடிக்க வேண்டும் என்று அவர் நினைத்தது தான் காரணம்!' என்றார்.

அதனால் என் உச்சி குளிர்ந்து விடவில்லை யாயினும், ''திரு எஸ்.ஜி.கிட்டப்பாவிடமும் அந்தப் பலவீனம் இருக்கிறது என்பதை உங்களுக்கு உணர்த்துவதற் காகவே நான் இந்தக் கதையைச் சொன்னேன்!'' என்று தம் கதையைச் சொல்லிமுடித்தார் பாகவதர்.

''அப்படியா? அது தெரியாதே எனக்கு?'' என்று நண்பர் வாயைப் பிளந்தார்!

## ஆதியே, பரஞ்சோதியே!

''ரோமாபுரி தீப்பற்றி எரியும்போது நீரோ மன்னன் பிடில் வாசித்துக் கொண்டிருந்தான்!'' என்று சொல்கிறார்க ளல்லவா? அந் மன்னனைக் கூட ஒரு சமயம் சேலம் வாசிகள் தூக்கியடித்து விட்டார்கள். காரணம் வேறொன்றும் அல்ல, பாகவதரின் பாட்டுக் கச்சேரிதான்!

அந்த ஆண்டு சேலம் நகரசபையார் நடத்திக் கொண்டிருந்த பொருட்காட்சியில் பாகவதர் பாட வந்திருந்தார். அப்போது அந்த நகரசபையின் தலைவரா யிருந்தவர் திரு பி.ரத்தினசாமிப்பிள்ளை என்பவராவார். அவர் பாகவதரின் இசையரங்குக்காக மிகப் பெரிய அளவில் கொட்டகை போட ஏற்பாடு செய்திருந்தார். அப்படி யிருந்தும் அன்று வந்திருந்த கூட்டம் அந்தக் கொட்டகைக் குள் அடங்குவதாயில்லை. மேற்கொண்டு வசதி செய்து கொடுப்பதற்கும் வழியில்லாததால் டிக்கெட் கொடுப்பது நிறுத்தப்பட்டது.

அவ்வளவுதான்; பாகவதரின் கச்சேரியைக் கேட்க வேண்டுமென்பதில் தங்களுக்கிருந்த ஆர்வத்தில் மக்கள் பொருட்காட்சியைச் சுற்றிலும் கட்டியிருந்த தட்டிகளை யெல்லாம் பிய்த்து எறிந்து விட்டு உள்ளே நுழைய ஆரம்பித்துவிட்டனர். பாதுகாப்புக்காகப் போடப்பட்டிருந்த போலீஸாரோ அவர்களி டமிருந்து தங்களை பாதுகாத்துக் கொள்வதற்கே படாதபாடு படவேண்டியிருந்தது.

இந்த நிலை பொருட்காட்சியின் உள்ளே மட்டும் இல்லை; வெளியேயும் இருந்தது. அதைச் சுற்றிலும் இருந்த மரங்கள், மின்சாரக் கம்பங்கள் அனைத்தும் அப்போது மாங்காயோ தேங்காயோ காய்த்துக் தொங்கும் மரங்களாக விளங்கவில்லை; மனிதர்களே காய்த்துத் தொங்கும் மரங்களாக விளங்கின. எங்கு நோக்கினும் தலைகள், தலைகள்,தலைகள்...

மற்றவர்களுடைய கச்சேரிகளில் ஆண்களின் தலைகள் தான் அதிகமாயிருக்கும்; பாகவதருடைய கச்சேரிகளிலோ பெண்களின் தலைகள்தான் அதிகமா யிருக்கும். அன்றும் அதற்குக் குறைவில்லை.

கட்டுக்கடங்காத கூட்டத்தைக் கட்டுப்படுத்த அப்போது ஒரே வழிதான் இருந்தது. அதாவது, பாகவதர் உடனே பாட ஆரம்பிக்கவேண்டும். அதைத் தவிர வேறு வழியேயில்லை என்று ஆகிவிட்டது.

இதை உணர்ந்த பொருட்காட்சியின் நிர்வாகிகள் குறிப்பிட்ட நேரத்துக்குக் கொஞ்சம் முந்தியே பாகவதரைப் பாடுமாறு வேண்டினர். அவரும் சந்தர்ப்பத்தை உணர்ந்து தம் பக்க வாத்திய க்காரர்களை ஒரு நோக்கு நோக்கினார். அன்றையக் கச்சேரிக்குப் பாகவதரின் நெருங்கிய சகாவான சேலம் நாகரத்தினம் தம்பூராவை மீட்ட, மருங்காபுரி சமஸ்தான வித்வான் கோபாலகிருஷ்ணய்யர் பிடிலும், அருப்புக்கோட்டை தட்சணாமூர்த்தி ஆச்சாரி கஞ்சிராவும்

வாசித்தார்கள். மாயூரம் திரு வேதநாயகம் பிள்ளை அவர்களின் பாடலான 'ஆதியே, பரஞ்சோதியே!'என்ற பாடலைத் தேவமனோகரி ராகத்தில் பாகவதர் பாட ஆரம்பித்ததுமே கூட்டம் கட்டுக்கு அடங்கிவிட்டது. கச்சேரியும் களை கட்டிவிட்டது.

முதல் பாட்டு முடிந்ததும், ''ஒரு நிமிஷம்!''என்று தன் காமிராவைத் தூக்கிப்பிடித்துக் கொண்டே பாகவதரை நோக்கி வந்தார் பத்திரிகை நிருபர் ஒருவர். ''எனக்கும் ஒரு காப்பி!'' என்றார் பாகவதர்.

நிருபர், ''அவசியம் தருகிறேன்!'' என்றார்.

''உங்களைக் கேட்கவில்லை; இவரைக் கேட்கிறேன்!'' என்று தமக்குப் பக்கத்தில் உட்கார்ந்து கூஜாவிலிருந்து காப்பியை டம்ளரில் ஊற்றிக் குடித்துக் கொண்டிருந்த மிருதங்க வித்வானைக் காட்டினார் பாகவதர்.

கூட்டத்தில் ஒரே சிரிப்பு!

இந்தச் சமயத்தில், ''ஐயோ செத்தேன்!''என்று ஒரு கூக்குரல்; பாகவதர் திடுக்கிட்டு எழுந்து பார்த்தார்.

கம்பத்தில் தொற்றிக்கொண்டிருந்த ஒருவன் மின்சாரத்தால் தாக்குண்டு கீழே விழுந்து செத்தான்.

அவனைப் போலவே தொற்றிக் கொண்டிருந்த இன்னொருவனுக்கும் அதே கதி!

மற்றொருவனும் அதே மாதிரி தாக்குண்டு கீழே விழுந்து துடித்தபோது அவனைக் கொண்டு போய் ஆஸ்பத்திரியில் சேர்த்துவிட்டு வந்தார்கள்.

இந்தக் களேபரத்தில் பாகவதரால் மேலே பாடவா முடியும்? அவர் மக்கள் இருந்த திசையை நோக்கிக் கைகூப்பி, ''என்மனம் சரியில்லை; இந்த நிலையில் என்னை மேலே பாடச் சொல்லி வற்புறுத்தாதீர்கள். தயவு செய்து கலைந்து செல்லுங்கள்!''என்றார்.

மக்கள் கேட்கவில்லை; ''அவர்கள் போனால் போகிறார்கள்; நீங்கள் மேலே பாடுங்கள்!''என்று எதிர்கோஷமிட்டார்கள்.

'இறப்பும் பிறப்பும் இரவும் பகலும் போல!' என்று அவர்கள் நினைத்தார்களோ என்னவோ?

அப்போது அங்கே வந்திருந்த டாக்டர் திரு பி.வரதராஜுலு நாயுடு, ''அமைதி, அமைதி!''என்ற கையமர்த்திக்கொண்டே மேடையின் மீது ஏறினார். ''இப்படி ஒரு கூட்டத்தை இதற்கு முன் சேலத்தில் கண்டதில்லை. ஏன், ஆனானப்பட்ட காந்திமகான் இங்கே வந்திருந்தபோது கூட அவரை வரவேற்க இவ்வளவு பெரிய கூட்டம் இந்த இடத்தில் கூடவில்லை. தமிழிசையின் மகத்தான சக்தியை நான் இப்போதுதான் கண்கூடாகக் காண்கிறேன். ஆயினும் நடக்கக் கூடாதது நடந்துவிட்டது. இசைவெறியால் மின்சார வெறிக்கு நம் சகோதரர்களில் இருவர் பலியாகிவிட்டனர். மூன்றாமவர் சந்தேகத்துக் கிடமான நிலையில் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருக்கிறார். இந்தச் சோக நிகழ்ச்சிகள் பாகவதரின் இதயத்தைக் கசக்கிப் பிழிந்து கொண்டிருக்கின்றன. மக்கள் அபிமானத்துக்காக அவர் தம்முடைய மனிதாபிமானத்தைக் கைவிடவிரும்ப வில்லை. ஆகவே தம்மை மேற்கொண்டு பாடச் சொல்ல வற்புறுத்தாமல் உங்களைக் கலைந்து செல்லுமாறு வேண்டுகிறார். இது நியாயமாகப் படவில்லையா உங்க ளுக்கு! குயிலின் பாட்டுக்கூடத் தன்னிச்சையாகப் பாடும்போது தான் இனிக்கும்; எடுக்கும். வற்புறுத்திப் பாடச்சொன்னால் இனிக்கவும் இனிக்காது; எடுக்கவும் எடுக்காது. அதே மாதிரிதான் மனிதனும். அவரைத் தயவுசெய்து வற்புறுத்திப் பாடச் சொல்லாதீர்கள்.அப்படிப் பாடும் பாடல் எடுபடாது. எங்கே,'இந்தச் சந்தர்ப்பம் தவறினால் இன்னொரு சந்தர்ப்பம் வாய்க்காமலா போய்விடப் போகிறது?'என்று மனத்தைத் தேற்றிக்

கொண்டு கலைந்து செல்லுங்கள், பார்க்கலாம்?'' என்று உள்ளம் உருக வேண்டினார்.

''ஒரு நிபந்தனை!''என்றார் கூட்டத்தில் இருந்த ஒருவர்.

''என்ன நிபந்தனை?'' என்றார் நாயுடு.

''பாகவதரையும் மேடையின் மேல் ஏற்றுங்கள்; இவ்வளவுதூரம் வந்ததற்கு அவரை ஒரு முறை கண்குளிரப் பார்த்துவிட்டாவது போகிறோம்!'' என்றார் அவர்.

''அதுதான் சரி; அதுதான் சரி!'' என்று அவர் சொன்னதை மற்றவர்கள் ஆமோதித்தனர்.

''அப்படியே ஏற்றுகிறேன்; அவரைப் பார்த்ததும் நீங்கள் போய்விடவேண்டும்!''என்று பாகவதரை மேடையின் மேல் ஏற்றினார் நாயுடு.

மக்கள் பார்த்தார்கள். ஒருமுறையல்ல; பல முறை பார்த்தார்கள். பார்த்தபிறகு என்ன சொன்னார்கள்?

''மனுஷனை நேருக்கு நேராகப் பார்த்தபிறகு அவர் பாடுவதைக் கேட்காமல் போகக்கூடாது என்றல்லவா தோன்றுகிறது? பாடச் சொல்லுங்கள்; நடந்ததை மறந்து எங்களுக்காக அவரை மேலே பாடச் சொல்லுங்கள்!'' என்று சொன்னார்கள்!

அதற்கு மேல் நாயுடுதான் என்ன செய்வார் பாவம், பேசாமல் உட்கார்ந்துவிட்டார்.

பாகவதரும் வேறு வழியின்றிப் பாடினார்.

ஆனால் நாயுடு சொன்னதுபோல அந்தச் சம்பவத் துக்குப் பிறகு அவர் பாடிய பாடல்கள் எடுபட வில்லை. ராகம் பிசகிற்று; தாளம் தவறிற்று; பாடல்களின் வரிகள் பல இடையிடையே மறந்தன. அவற்றை இன்னொருவர் அவருக்கு ஞாபகப்படுத்த வேண்டிய தாயிற்று.

ஆனால் இத்தனை குறைகளையும் பாகவதரும் பக்கவாத்தியக்காரர்களும்தான் உணர்ந்தார்களே தவிர மக்கள் உணரவில்லை. அப்படி ஒரு மயக்கம் அவர்களுக்கு!

ஒரு வழியாகக் கச்சேரி முடிந்தது. அன்றிரவு பிரமுகர் ஒருவர் வீட்டில் பாகவதர் தங்கியிருந்த போது, "இப்போது உங்களுக்கு ஓர் அருமையான சந்தர்ப்பம் வாய்த்திருக்கிறது!" என்றார் அவருடைய அந்தரங்க நண்பர் ஒருவர்.

"எதற்கு?" என்றார் பாகவதர்.

"மேலும் கொஞ்சம் விளம்பரம் தேடிக்கொள்ளத் தான்."

"எப்படி?"

"மின்சாரத்தால் தாக்குண்டு செத்தார்களே இருவர், அவர்கள் இருவருடைய குடும்பத்துக்கும் தலைக்கு ஆயிரம் ரூபாய் கொடுப்பதாகச் சொல்லுங்கள். அதை நீங்கள் கொடுப்பதற்கு முன்னாலேயே அது பற்றி எல்லாப் பத்திரிகைகளிலும் கொட்டை எழுத்துக்களில் வருவதற்கு வேண்டிய ஏற்பாட்டை நான் உடனே செய்துவிடுகிறேன்!" என்றார் அவர்.

பாகவதர் சிரித்தார்!

"ஏன் சிரிக்கிறீர்கள்!" என்றார் அவர்.

"எரியும் வீட்டில் சுருட்டுப் பற்றவைக்க வேறுஎவனையாவது தேடுங்கள்!" என்றார் பாகவதர் வெறுப்புடன்.

நண்பருக்கு என்னவோ போல் ஆகிவிட்டது. அதற்கு மேல் ஒன்றும் சொல்லாமல் போய்விட்டார்.

ஆனால் நடந்தது என்ன என்கிறீர்கள்?

நண்பர் சொன்னது போல் பாகவதர் அவர்கள் இருவருடைய குடும்பங்களுக்கும் தலைக்கு ஆயிரம் ரூபாய் கொடுக்கத்தான் செய்தார்.

ஆனால் எப்படி?

அது கொடுத்தவருக்கும், வாங்கியவருக்கும் மட்டுமே தெரியும்!

'அப்படியானால் அது எப்படி உங்களுக்குத் தெரிந்தது?' என்று நீங்கள் என்னைக் கேட்கிறீர்களா?

வாங்கியவர்களின் சொந்தக்காரர்களில் ஒருவர் அண்மையில் சொல்லித்தான் அது எனக்குத் தெரிந்தது.

எப்படி? பாகவதரின் நன்கொடை!

## ஆடுவதும் பாடுவதும்...

வருமானத்தைப் பற்றிய கவலை இல்லாவிட்டாலும் அதற்குரிய வரியைக் கட்டித் தொலைக்க வேண்டுமே என்ற கவலை இந்த உலகத்தில் சில புண்ணியாத்மாக்களுக்கு உண்டு. அவர்களில் குறிப்பிடத் தக்கவர்கள் கலைஞர்கள். அந்தக் கலைஞர்களில் ஒருவராக வாழ்ந்த பாகவதருக்கும் அக்கவலை இருந்தது. அதன் காரணமாக அவர் ஒரு சமயம் சொன்னார்:

''மரணம் ஒரே ஒரு முறைதான் வந்து மனிதனைக் கொல்கிறது; வரியோ வருடாவருடம் வந்து அவனைக் கொன்று கொண்டே இருக்கிறது!''

இத்தகைய வரியிலிருந்து தப்புவதற்காகவே புகழ் பெற்ற கலைஞர்களில் சிலர் உதவி நிதி நாடகம் என்றும், உதவிநிதிக் கச்சேரி என்றும் ஆடுவதும், பாடுவதும் உண்டு. பாகவதரோ அவர்களுக்கு முற்றிலும் விரோதமாயிருந்து வந்தார். மூக்கால் அழுதுகொண்டாவது அவர் கட்ட வேண்டிய வரியைக் கட்டித் தொலைப்பாரே தவிர, அதற்காக உதவி நிதிநாடகம் என்றும், உதவி நிதிக் கச்சேரி என்றும் சொல்லி ஊருக்கு மட்டுமல்ல; அரசாங்கத்துக்கும் 'கைகொடுக்க மாட்டார். அதற்குக் காரணம் வரி என்று ஒன்று இல்லாமல் அரசாங்கம் இயங்கமுடியாது

என்பதையும், அரசாங்கம் என்று ஒன்று இல்லாமல் மக்கள் நிம்மதியாக வாழ முடியாது என்பதையும் அவர் நன்கு உணர்ந்திருந்ததுதான்.

இதை உணர்ந்திருந்த அவர் ஏனோ இன்னொன்றை மட்டும் உணர்ந்திருக்கவில்லை. அதாவது, 'பொய்க்கு மட்டுமல்ல; உண்மைக்கும் இந்தக்காலத்தில் விளம்பரம் தேவை' என்பதுதான் அது.

அதனாலேயே அவர் உண்மையான உதவி நிதி நாடகங்கள் எத்தனையோ நடத்தியிருந்தும், உண்மை யான உதவி நிதிக் கச்சேரிகள் எத்தனையோ செய்திருந்தும், அவையனைத்தும் பொய்யாய், பழங்கதையாய், கனவாய் மெல்லப்போய்விட்டன!

அப்படிப் போய்விட்ட உதவி நிதி நாடகங்களில் ஒன்று விளாத்திகுளம் சுவாமிகளுக்காக நடத்திக் கொடுத்தது.

மதுரையை அடுத்த ஒரு கிராமத்தில் நடக்கவிருந்த அந்த நாடகத்துக்குப் பாகவதர், திருமதி எஸ்.டி.சுப்பு லட்சுமி, திரு.ராமநாதன் ஆகியோருடன் தம் காரில் சென்றுகொண்டிருந்தார். வழியில் ஒரு காட்டாறு; திடீரென்று அதில் வந்த வெள்ளம் அவர்களை மேலே போகவிடாமல் தடுத்துவிட்டது.

அதற்காக பாகவதர் கலங்கினாரா? இல்லை; பெரிய ஜமக்காளம் ஒன்றை எடுத்து ஆற்றங்கரையில் விரித்துப் போட்டுத் தம் சகாக்களுடன் உட்கார்ந்துவிட்டார். "ஆஹா! ஒரு பொது இடத்தில் இவ்வளவு சுதந்திரமாக உட்கார்ந்து எத்தனை நாட்களாகிவிட்டன! நான் பாடகனாகவும், நடிகனாகவும் ஆனாலும் ஆனேன்; எங்கே போனாலும் என்னைச் சுற்றி ஒரே கூட்டம், ஒரு கணம் என்னை நிம்மதியாக இருக்கவிடுகிறார்களா ரசிக மகாஜனங்கள்? அவர்களுடைய அன்புத்தொல்லையில் சிக்கிநடிகைகள்தான் தவிக்கிறார்க ளென்றால் நடிகர்களுமல்லவா தவிக்கவேண்டி யிருக்கிறது!"

என்று எஸ்.டி.எஸ்ஸைப் பார்த்துக் கொண்டேபேச ஆரம்பித்து விட்டார்.

ராமநாதனோ ஆர்மோனியப்பெட்டியைத் தூக்கி எதிர்த் தாற்போல் வைத்துக்கொண்டு, ''நாடகத்தை இங்கேயே நடத்த ஆரம்பித்துவிடுவோமா?''என்றார்.

''நாடகம் எதற்கு? 'எங்கிருந்தோ வந்தான்!' என்ற பாரதி பாடலைப் பாடுங்கள்; அதற்குள் வெள்ளம் வடிந்து விடும்!''என்றார் எஸ்.டி.எஸ்.

இரவு ஒன்பது மணிக்கு நாடகம். மணிபத்தும் ஆயிற்று; வெள்ளம் வடிந்த பாடாயில்லை.

''இதற்கு மேல் வெள்ளம் வடிந்தாலும் நாம் அங்கே போய் எப்படி நாடகத்தை நடத்தமுடியும்? இன்னொரு நாளைக்கு ஒத்திவைத்துக் கொள்வோமே!''என்றார் ராமநாதன்.

''நாமோ பத்துப் பன்னிரண்டு பேர்; நமக்காகக் காத்துக்கொண்டிருப்பவர்களோ ஆயிரக்கணக்கான பேர். அவர்களுடைய செளகரியத்தை நாம் கவனிப்பதா? நம்முடைய செளகரியத்தை அவர்கள் கவனிப்பதா?'' என்றார் பாகவதர்.

''அப்படியானால்...''என்று இழுத்தார் எஸ்.டி.எஸ்

''எப்படியும் இன்றிரவு நாடகத்தை நடத்தியே ஆகவேண்டும். நம்மால் விளாத்திகுளம் சுவாமிகளுக்கும் நஷ்டம் வரக்கூடாது; நாடகத்தை எதிர்பார்த்துக் காத்திருக்கும் மக்களுக்கும் கஷ்டம் வரக்கூடாது!'' என்றார் பாகவதர்.

அவர் வழிபட்டு வந்த முருகனின் அருளாலோ என்னவோ, கிட்டத்தட்ட ஒரு மணிக்கு வெள்ளம் வடிந்தது. இக்கரையிலுள்ள இவர்களுக்கு உதவுவதற்காக அக்கரையிலிருந்து இருபது இருபத்தைந்து பேர் கைகளில் நீண்ட கழிகளுடனும், 'காஸ் லைட்டு'களுடனும் ஒரு மொட்டை மாட்டுவண்டி ஓட்டிக்கொண்டு வந்தார்கள். அந்தவண்டி கொண்டமட்டும் பெண்களையும் வயதான சிலரையும்

ஏற்றிவிட்டு, ''நாம் இருவரும் நடந்தே போய்விடுவோமா?'' என்றார் பாகவதர், ராமநாதனை நோக்கி.

''இந்தச் சகதியிலா?'' என்றார் அவர்.

''சகதியாவது! குழந்தைகளுக்கு இதைக்கண்டால் எவ்வளவு குஷியாக இருக்கும், தெரியுமா?'' என்றார் இவர்.

''நாம் குழந்தைகள் இல்லையே?''

''இல்லாவிட்டாலும் என்ன? இப்போதைக்கு நாம் உருவத்தில் குழந்தைகளாக முடியாவிட்டாலும் உள்ளத்திலாவது குழந்தைகளாக வேண்டியதுதான்!'' என்று பாகவதர் சகதியில் இறங்கி நடக்கவே ஆரம்பித்துவிட்டார்.

அதற்குமேல் ராமநாதன் என்ன செய்வார், பாவம்! அவருடைய சாரீரம் மட்டுமல்ல, சரீரமும் கொஞ்சம் கனமானது. அந்தக் கனமான சரீரத்தைத் தூக்கமுடியாமல் தூக்கிக்கொண்டு, அவர் பாகவதருக்குப் பின்னால் நடக்க முடியாமல் நடந்தார்!

அவருக்கு முன்னால் நடந்த பாகவதர் சும்மாவாவது நடந்தாரா? அதுதான் இல்லை; ''ஆஹா! என்ன சுகம், என்ன சுகம்! சதக், சதக்! என்ன தாள லயம். என்ன தாள லயம்! இப்படித் தாள லயத்தோடு நடக்க நாம்கொடுத்து வைத்திருந்தோமே!'' என்று படுகுஷியாகப் பேசிக் கொண்டே நடந்தார்.

ராமநாதனுக்கு எப்படியிருக்கும்? ''உங்களுக்குள்ள சந்தோஷத்தில் நீங்களும் குழந்தைகளைப்போலச் சகதியை வாரிமேலே பூசிக்கொண்டு விடப் போகிறீர்கள்? ''என்றார் சற்றே எரிச்சலுடன்.

''வாரி வேறு பூசிக்கொள்ளவேண்டுமா, என்ன? அந்தச் சிரமத்தை நமக்கு வைக்க வேண்டாம் என்றுதான் அதுவே நம்மேல் தெறித்து விழுந்து கொண்டே வருகிறதே!'' என்றார் பாகவதர் சிரித்துக்கொண்டே.

''உங்களுக்கு எல்லாம் சிரிப்பாயிருக்கிறது!'' என்று ராமநாதன் முணுமுணுத்தார்.

''எனக்கும் சேர்த்து அழ நீங்கள் இருக்கும்போது நான் வேறு அழுவானேன் என்றுதான் அழவில்லை!'' என்றார் பாகவதர், அப்போதும் அவரை விடாமல்.

இப்படி இவர்கள் பேசிக்கொண்டே செல்ல, இவர்களுக்கு முன்னால் கைகளில் கழிகளுடன் வந்திருந்த ஆட்கள் அங்கங்கே கழியை ஊன்றி ஆழம்பார்த்து, இவர்களைத் தக்க வழியில் அழைத்துச் சென்றார்கள்.

அக்கரையை இவர்கள் அடையும்போது மணி ஒன்றாகிவிட்டது. ''இரவு எட்டுமணிக்கே நீங்கள் இங்கே வந்துவிடுவீர்கள் என்று நாங்கள் உங்களுக்காகச் சமைத்து வைத்திருந்தோம். இப்போது எல்லாம் ஆறி அவலாய்ப் போய் விட்டன. அதை எப்படிப்பரிமாறுவது என்றுதான் யோசனையாயிருக்கிறது! என்றார் நாடக நிர்வாகிகளில் ஒருவர்.

''அடாடா! இதைச் சொன்னதைவிடச் சொல்லா மலே இருந்திருக்கலாமே நீங்கள்?'' என்றார் பாகவதர்.

''ஏன்?''

''இதுவரை பசியே பெரிய மனசு பண்ணி எங்களை மறந்திருந்தது; இப்போது நீங்கள் அதற்கு எங்களை நினைவூட்டி விட்டீர்களே?''

''அதனாலென்ன, நீங்கள் தவறாக நினைக்க வில்லையென்றால்...?''

''மனிதன் பிறந்ததே பெரிய தவறு; அதைவிடப் பெரிய தவறுவேறொன்று இருக்கவா போகிறது? நீங்கள் இருப்பதைப் போடுங்கள்!'' என்று பாகவதர் முதலில் சப்பணம் போட்டு உட்கார்ந்தார்.

அவரைத் தொடர்ந்து எல்லோரும் அப்படியே உட்கார்ந்தனர்.

சாப்பிட்டு முடிந்ததும் ஒப்பனை செய்து கொண்டு ஒருவர் பின் ஒருவராக மேடைக்கு வந்ததுதான் தாமதம், அதுவரை காத்திருந்த சிரமத்தைக்கூட மறந்து மக்கள் அவர்களை ஆரவாரத்தோடு வரவேற்றார்கள்.

கோழி கூவிற்று.

நாடகம் முடிந்ததா? –இல்லை.

கிழக்கு வெளுத்தது.

நாடகம் முடிந்ததா?–இல்லை.

பின் எப்போது முடிந்தது?

காலை ஏழு மணிக்கு முடிந்தது!

பாகவதர் தம் பரிவாரங்களுடன் புறப்பட்டார். அக்கரையிலுள்ள காரை அடையவேண்டுமானால் மறு படியும் ஆற்றைக் கடக்கவேண்டும். இருப்பதோ ஒரேஒரு மொட்டை மாட்டுவண்டி; அது பெண்களுக்கும் வயதான வர்களுக்கும் தான் சரியாயிருக்கும். ராமநாதன் மீண்டும் தம்முடன் இந்தச் சகதியில் நடக்கத் தயாராயிருப்பாரா?...

பாகவதர் யோசித்தார்; அவருக்கு ஒரு யுக்தி தோன் றிற்று. "ஓய், ராமநாதன்! உமக்கும் எனக்கும் பந்தயம்!" என்றார்.

"என்ன பந்தயம்?" என்றார் ராமநாதன்.

"இருவரும் இந்தச் சகதியில் ஓடி ஆற்றைக் கடக்கவேண்டும். நீர் முதலில் கடந்தால் உமக்கு நான் நூறு ரூபாய் கொடுத்துவிடுகிறேன்; நான் முதலில் கடந்தால் நீர் எனக்கு நூறுரூபாய் கொடுத்துவிடவேண்டும்; என்ன சொல்கிறீர்?" என்றார் பாகவதர்.

அவ்வளவுதான்; ராமநாதனுக்கு ரோஷம் பொத்துக் கொண்டு வந்துவிட்டது. "உங்களைவிட நான் தடித்திருக் கிறேன் என்று பார்க்கிறீர்களா?" என்றார்.

"இல்லாவிட்டால் என்னை நீர் ஜெயித்து விடுவீரா? எங்கே, ஜெயித்துவிடும் பார்ப்போம்?" என்று பாகவதர் வேட்டியை வரிந்துகட்டினார்.

''சரி, பார்ப்போமா?''என்று ராமநாதனும் தம்முடைய வேட்டியை வரிந்து கட்டினார்.

ஒன், டூ, த்ரீ...

இருவரும் எடுத்தார்கள் ஓட்டம்!

ஆனால் ஜெயித்தது யார் என்கிறீர்கள்?

ராமநாதன்தான்?

''உலகத்தைச் சுற்றி ஓடிவரும் போட்டியில் தொந்திக்கணபதி முருகனை ஜெயித்ததுபோல நீர் என்னை ஜெயித்துவிட்டீரே, ஐயா!''என்றார் பாகவதர். ராமநாதனின் தொந்தியைத் தடவிவிட்டுக்கொண்டே.

''அந்தத் தொந்திக்கணபதி ஓடாமலே ஜெயித்தார்; இந்தத் தொந்திக் கணபதி ஓடியல்லவா ஜெயித்திருக்கிறார்? எடுங்கள், நூறு ரூபாயை?'' என்று கறாராகக் கையை நீட்டினார் ராமநாதன்.

அவர் நீட்டிய கையில் நூறு ரூபாய்க்கு இருநூறு ரூபாயாக எடுத்து வைத்தார் பாகவதர். அந்த இருநூறு ரூபாயையும் பாகவதரின் 'பாக்கெட்'டில் திரும்பப் போட்டுவிட்டு, ''உங்களை நான் பாட்டில் ஜெயிக்கா விட்டாலும் ஓட்டத்திலாவது ஜெயித்தேனே, அந்தப் பெருமையே எனக்குப்போதும்!'' என்றார் ராமநாதன்.

எப்படி நண்பர்கள்?

**பவளக்கொடி மீதிலாசை...**

சினிமா! எப்படியோ பிறந்து, எப்படியோ வளர்ந்து விட்ட அது, இன்று எத்தனை பேரைப் பிடித்து எப்படி எப்படியெல்லாம் ஆட்டிவைத்துக் கொண்டிருக்கிறது!

அந்த உலகில் எந்தப் பாடுபட்டாவது நுழைந்து விடவேண்டும் என்பதற்காகச் செய்யும் வேலையைக் கூட விட்டுவிட்டு, சினிமா ஸ்டூடியோக்களைச் சுற்றிச் சுற்றிவந்து கொண்டிருப்போர் எத்தனைபேர்!

அதற்காக சலூன்காரர்களின் உயிரை 'உண்டு, இல்லை'என்று வாங்கி அவர்கள் செய்து கொள்ளும் சிகையலங்காரங்கள்...

வைத்துக் கொள்ளும் அரும்பு வகை மீசைகள்...

பார்க்கும் பார்வை, சிரிக்கும் சிரிப்பு, நடக்கும் நடை...

ஆஹா! அவையனைத்தும் பார்ப்பவர்களின் அனுதாபத்தைப் பெறக் கூடியவையாயிருந்தாலும், அவற்றுக்காக அவர்கள் நெஞ்சை நிமிர்த்தி நிற்கும் அசட்டுத்தனம்...

பிறர் விரும்பாவிட்டாலும் தங்களுடைய சொந்தச் செலவிலேயே அவர்கள் போடும் வேஷங்கள், செய்து கொள்ளும் விளம்பரங்கள், நடத்திவரும் நாடகங்கள்...

அவற்றைப் பார்ப்பதற்கு அவர்கள் பணம் கொடுத்து ஆள் பிடிக்க வேண்டியிருந்தால் அதில் அவர்களுக்குள்ள பரவசம்...

'பைத்தியக்கார ஆஸ்பத்திரியிலிருந்து தப்பி வந்து விட்டவர்களோ இவர்கள்!' என்றுகூட அல்லவா நம்மை நினைக்க வைத்துவிடுகிறார்கள் அவர்கள்!

இந்த மாதிரி அவஸ்தைகள் எதுவும் இல்லாமலே திரை உலகில் நுழைந்த பெருமை பாகவதருக்கு உண்டு.

ஆம், ஏற்கனவே அறிவித்திருந்ததுபோல், சங்கீத உலகத்தைக்கூட அவர் தேடிக்கொண்டு போகவில்லை; அது தானாகவே அவரைத்தேடிக்கொண்டு வந்தது. நாடக உலகத்தைக்கூட அவர் தேடிக்கொண்டு போகவில்லை; அது தானாகவே அவரைத் தேடிக்கொண்டு வந்தது. சினிமா உலகத்தைக்கூட அவர் தேடிக் கொண்டு போகவில்லை; அதுவும் தானாகவே அவரைத் தேடிக்கொண்டு வந்து விட்டது.

சென்னை 'சால்ட் க்வார்ட்டர்'ஸுக்கு எதிர்த்தாற் போல் இருந்த 'ராயல்தியேட்ட'ரை நம்மில் பலர் இன்னும் மறந்திருக்க மாட்டார்கள். அந்தத் தியேட்டரில்தான் ஒருநாள்

பாகவதரின் 'பவளக்கொடி' நாடகம் நடந்தது. எஸ்.டி. சுப்புலட்சுமி பவளக்கொடி; பாகவதர் அர்ச்சுனன். ஜோடி தான் பிரசித்தி பெற்ற ஜோடியாயிற்றே, கூட்டத்திற்குக் கேட்கவா வேண்டும்? தியேட்டர் நிரம்பி வழிந்தது.

பொதுமக்கள் மட்டும் அன்று அந்த நாடகத்தைப் பார்க்க வந்திருக்கவில்லை; படாதிபதிகள் சிலரும் பார்க்க வந்திருந்தார்கள். அவர்களில் ஒருவர் திரு ஏ.எல்.ஆர். எம். செட்டியார் என்பவராவர்.

ஏதாவது ஒரு நாடகம் வெற்றிகரமாக நடந்தால், அதை உடனே படமாக்கச் சில படாதிபதிகள் இப்போது முன்வருகிறார்களல்லவா? அந்த வழக்கத்துக்கு முதன் முதலில் வித்திட்ட பெருமை ஏ.எல்.ஆர். எம். மைத்தான் சேரும்.

அவருக்குப் 'பவளக்கொடி' நாடகத்தை ரொம்பப் பிடித்திருந்தது. தம் நண்பர் ஒருவரைக் கூட்டாளியாகச் சேர்த்துக்கொண்டு அவர்'பவளக்கொடி' நாடகத்தை உடனே படமாக்க விரும்பினார். அப்படி ஓர் எண்ணம் பாகவதருக்கே அப்போது இருக்கத்தான் இருந்தது. ஆயினும் தமக்கே உரிய பெருந்தன்மையின் காரணமாக அவர் ஏ.எல்.ஆர்.எம்.மின் விருப்பத்துக்கு இணங்கித் தம் எண்ணத்தைக் கைவிட்டார்.

இணங்கிய பின் இன்னநடிகையைத்தான் தமக்கு ஜோடியாகப் போடவேண்டுமென்றோ, இன்ன நடிகர்தான் 'வில்ல'னாக வரவேண்டுமென்றோ, அவர் சொல்ல வில்லை. அது மட்டுமல்ல; இன்னார்தான் கதை – வசனம் எழுத வேண்டுமென்றோ, இன்னார்தான் பாடல் புனைய வேண்டுமென்றோ, இன்னார்தான் 'செட்'அமைக்க வேண்டு மென்றோ, இன்னார்தான் மேக்கப் போடவேண்டு மென்றோ, இன்னார்தான் 'லைட்' பாயாக வந்து லைட் போடவேண்டுமென்றோ, இன்னார்தான் 'காமிரா'மேனாக

வந்து படம்பிடிக்க வேண்டுமென்றோ, இன்னார்தான் டைரக்டராக வந்து டைரக்ட் செய்ய வேண்டுமென்றோ அவர் அடம் பிடிக்கவில்லை. இவையெல்லாவற்றும் மேலாக இருந்தது 'கொள்கை, கிள்கை' என்று சொல்லிக் கொண்டு, தாம் நடிக்கும் 'பவளக்கொடி'படத்தில் சாட்சாத் கிருஷ்ணபரமாத்மாவுக்குப் பதிலாக யாராவது ஒரு 'சீர்திருத்தச் செம்மல்' வந்து அர்ச்சுனனுக்கும், பவளக் கொடிக்கும் 'சீர்திருத்தத் திருமணம்' செய்து வைக்க வேண்டுமென்று அவர் சொல்லாமல் விட்டது!

பாகவதர் கொள்கை என்று ஏதாவது ஒன்றை வைத்துக் கொண்டிருந்தார் என்றால் அது 'தொழில் வேறு, கொள்கை வேறு' என்பதுதான். இரண்டையும் ஒன்றாகப் போட்டு அவர் என்றுமே குழப்பியதில்லை.

அத்துடன், அவர் தம் வாழ்நாளில் தம்முடைய தலைவர் என்று யாரையும் ஏற்றுக்கொள்ளவில்லை. அப்படி யாரையாவது அவர் தலைவராக ஏற்றுக் கொண்டி ருந்தார் என்றால், அந்தத்தலைவர், தலைவர்களுக் கெல்லாம் தலைவரான கடவுள் என்றுதான் சொல்ல வேண்டும். அதனால் இன்று ஒரு தலைவர், நாளை ஒரு தலைவர், நாளை மறுநாள் ஒரு தலைவர், என்று தம் சுய நலத்துக்கு ஏற்றாற் போல் அவ்வப்போது தலைவர்களை மாற்றிக் கொண்டி ருக்க வேண்டிய அவசியமும் அவருக்கு இல்லாமற்போய் விட்டது.

எல்லாம் பேசி முடிந்த பின், "படத்தில் நடிப்பதற்கு நீங்கள் இப்போது எங்களிடத்தில் என்ன எதிர்பார்க்கி றீர்கள்?" என்று ஏ.எல்.ஆர்.எம்.கேட்டார். "இதுவரை நான் யாரிடமும் எதையும் கேட்டுவாங்கியதில்லை; அவர்க ளாகவே கொடுப்பதைத்தான் வாங்கிக் கொண்டிருக் கிறேன். அதேமாதிரி நீங்களும் கொடுப்பதைக் கொடுங்கள்; திருப்தியுடன் வாங்கிக்கொண்டு சொன்னபடி நடித்துக் கொடுக்கிறேன்!" என்றார் பாகவதர்.

இதில் ஏதாவது நயவஞ்சகம் இருக்குமோ, 'நல்ல பிள்ளை' என்று பெயர் எடுக்கவேண்டும் என்பதற்காக இப்படிச் சொல்லி விட்டு 'கால்ஷீட்' என்று போனால் யார் அதிகப்பணம் கொடுக்கிறார்களோ அவர்களுக்குக் 'கால்ஷீட்' கொடுத்துவிட்டு 'இன்னும் ஆறு மாதங்களுக்கு இந்தப்பக்கம் வராதீர்கள்; எனக்கு வேறு வேலை இருக்கிறது!' என்று கழுத்தறுப்பாரோ! எனப் பயந்த ஏ.எல்.ஆர்.எம். ''உண்மையாகத்தானே சொல்கிறீர்கள்?' என்று மீண்டும் கேட்க, ''அதுவே நான் வழிபடும் கடவுள்; என்னை நம்புங்கள்!''என்றார் பாகவதர் வினயத்துடன்.

அதற்கு மேல் டைரக்டராக யாரைப் போடுவது என்று அவர்கள் யோசித்தார்கள். அப்போது வெற்றிகரமான டைரக்டராக மட்டுமல்ல, கைராசிக்கார டைரக்டராகவும் விளங்கிவந்தவர் திரு.கே.சுப்பிரமணியம். அவரைப் பிடித்துப்போட்டார்கள்.

அந்த நாளில் அடையாறிலிருந்த ஒரு ஸ்டூடியோ வில் 'ஷூட்டிங்' ஆரம்பமாயிற்று. அது ஆரம்ப மான வேளையோ என்னவோ ஏ.எல்.ஆர். எம்முக்கும் அவருடைய கூட்டாளிக்கும் எடுக்கும்போதே ஏதோ ஓர் அபிப்ராய பேதத்தின் காரணமாகச் சண்டை வந்துவிட்டது.

''இனி இருவரும் சேர்ந்து தொழில் செய்வது உங்களுக்கும் நல்லதல்ல, எனக்கும் நல்லதல்ல; பிரிந்துவிடுவோம்'' என்றார் ஏ.எல்.ஆர்.எம்.

''அப்படியானால் நான்போட்ட பணத்தைக் கொடுத்துவிடுங்கள்!'' என்றார் கூட்டாளி.

''இப்போது என் கைவசம் பணமில்லை; படம் முடிந்த பிறகு கொடுக்கிறேன்!'' என்றார் அவர்.

''முடியாது; இப்போதே கொடுக்க வேண்டும்!'' என்றார் இவர்.

''கொடுக்காவிட்டால் என்ன செய்வீர்கள்?'' என்றார் அவர்.

''அதை இப்போது சொல்வானேன்? கொஞ்சம் பொறுத்துப் பாருங்கள்;'' என்று கறுவிக்கொண்டே வெளியே வந்தார் இவர்.

வந்தவர் நேராக வக்கீல் வீட்டுக்குப் போனாரா என்றால், இல்லை; கோர்ட்டுக்குச் சென்றாரா என்றால் இல்லை; 'ஸ்டே ஆர்டர்' வாங்கி 'ஷூட்டிங்'கை நிறுத்தினாரா? என்றால் அதுவும் இல்லை!

பின் என்னதான் செய்தார்?

என்றைக்காவது ஒருநாள் 'பவளக்கொடி' படப் பிடிப்பு நடக்கிறதென்று தெரிந்தால் போதும். மிகப்பெரிய 'பல்ப் ஹாரன்'னுடன் கூடிய ஒரு 'டூரர் காரில்' அவர் ஸ்டூடியோ வாசலுக்கு வந்துவிடுவார். 'ஸைலன்ஸ் ப்ளீஸ்' ரெடி பார் டேக், ஸ்டார்ட்!' என்று டைரக்டர் சொல்ல, உதவி டைரக்டர் 'டப்' என்ற 'க்ளாப்'அடிக்க வேண்டியதுதான் தாமதம், ஸ்டூடியோ வாசலில் 'டூரர் காரு'டன் தயாராக வந்து காத்திருக்கும் கூட்டாளி, 'பாம், பாம், பாம், பாம்ப பாம்!' என்று ஹாரன் அடிக்க ஆரம்பித்துவிடுவார். 'கட், கட்!'என்று எரிச்சலுடன் கத்திவிட்டு, 'இதென்ன நியூ சென்ஸ்', என்பார் டைரக்டர்.

படாதிபதி ஏ.எல்.ஆர்.எம்.வெளியேவந்து, உம்முடைய வேலைதானா? மரியாதையாக வெளியே போகிறீரா, இல்லையா?' என்பார்; 'என் பணத்தைக் கொடும், போகிறேன்!' என்பார் அவர்.

'கொடுக்கமுடியாது; உம்மால் என்ன செய்ய முடியுமோ அதைச் செய்து கொள்ளும்!' என்று சொல்லி விட்டு ஏ.எல்.ஆர்.எம். உள்ளே வருவார்.

'மறுபடியும் 'ஷூட்டிங்' ஆரம்பமாகும். ஸைலென்ஸ் ப்ளீஸ்' ரெடி பார்டேக், ஸ்டார்ட்!' என்று

டைரக்டர் சொல்ல, உதவி டைரக்டர் 'டப்'என்று 'க்ளாப்'அடிப்பார். அவ்வளவுதான்; வெளியே மறுபடியும் 'பாம், பாம்பபாம், பாம், பாம்ப பாம்!' என்று 'பல்ஹாரன்' அலற ஆரம்பிக்கும்.

டைரக்டர் என்ன செய்வார் பாவம், 'சிவனே!' என்று உட்கார்ந்துவிடுவார்.

இப்படி ஒருமுறை அல்ல; இரண்டு முறை அல்ல; நாலைந்து முறைகள் தொடர்ந்து நடந்துவந்தது.

பார்த்தார் பாகவதர்; பணத்துக்காக நண்பர்கள் இருவரும் இப்படிப் பகை வளர்ப்பதை அவர் விரும்ப வில்லை.கூட்டாளியைக் கூப்பிட்டார்; அவருடைய கணக்கைத் தாமே தீர்த்து அனுப்பிவைத்தார்.

இதை அறிந்த ஏ.எல்.ஆர்.எம்.கண்ணில் நீர் துளிர்க்கச் சொன்னார்.

''படாதிபதிகளின் காலை வாரி விடும் நடிகர்களைத் தான் இதுவரை நான் பார்த்திருக்கிறேன். கைகொடுக்கும் ஒரு நடிகரை இப்போது தான் என் வாழ்நாளிலேயே முதன் முதலாகப் பார்க்கிறேன்!''

## காணக் கண் கோடி வேண்டும்...

சினிமா உலகில் சேர்ந்த பிறகு பாகவதரின் பெயரும் புகழும் எப்படிப் பல்கிப் பெருகி வளர்ந்தன என்பதை நான் ஒருவர் சொல்வதைக்காட்டிலும் அவருடைய ரசிகர்களில் ஒருவர், சக நடிகர்களில் ஒருவர், டைரக்டர்களில் ஒருவர் சொல்வது இன்னும் சிறப்பாக இருக்குமென்று நினைக்கிறேன்.

இதோ, முதலில் அவருடைய ரசிகர்களில் ஒருவ ரான 'கோலார் மாப்பிள்ளை' சொல்வதைக் கேளுங்கள்:

''ஏறக்குறைய இருபது வருடங்களுக்கு முன் ஒரு நாள் என்னுடைய உறவினர்களுடன் நான் ஆலய தரிசனம் செய்வதற்காகத் திருச்சி, தஞ்சை செல்லும் நோக்கத்துடன், பெங்களூரில் இரவு வண்டி ஏறி, விடியற்காலை ஈரோடுக்கு வந்து சேர்ந்தேன். அதற்குமேல் வண்டி போகாது என்று சொன்னார்கள். காரணம் என்னவென்று கேட்ட எனக்கு, அவர்கள் காட்டியது ஒரு மக்கள் சமுத்திரத்தை!

சுமார் பத்தாயிரம்பேர் அங்குள்ள தண்டவாளத்தில் உட்கார்ந்து அடம்பிடித்துக் கொண்டிருந்தனர். மூன்று மணிநேரமாக அவர்கள் அப்படி உட்கார்ந்திருக்கலாம். எதற்காக? எம்.கே.டி.பாகவதர் எர்ணாகுளத்தில கச்சேரி செய்துவிட்டு, 'கொச்சி எக்ஸ்பிரஸி'ல் வருகிறாராம். அந்த வண்டியை நிறுத்தி, பாகவதரை வெளியே வரச்சொல்லி அவர்கள் பார்க்கவேண்டுமாம்.

நானும் இறங்கி ஓர் உயரமான இடத்தைப் பிடித்துக் கொண்டு, மேலும் இரண்டு மணிநேரம் காத்திருந்தேன்.

வந்தது ரயில்; பிளாட்பாரத்திற்குள் நுழைய முடியாமல் நின்றது.

சில நிமிஷங்கள் சென்றன. குங்குமப்பூ போல் சிவந்த மேனி; ஒளிவீசும் முகம் – ஆம், பாகவதர் வெளியே வந்து கைகூப்பி நின்றார்.

'மேக்கப் போடாமலேயே ஒரு சினிமா நட்சத்திரம் இவ்வளவு அழகாக இருக்கமுடியுமா?' என்று மக்கள் வியந்தனர். 'பாகவதருக்கு ஜே!' என்ற கோஷம் வானைப் பிளந்தது.

மூன்று நான்கு முறை பாகவதர் மீண்டும் வெளியே வந்து கைகூப்பிய பிறகு, ஒருவாறாக அவர்கள் ரயிலை விட அனுமதித்தனர். இதனால் 'கொச்சி எக்ஸ் பிரஸ்'எத்தனை மணிநேரம் 'லேட்' என்கிறீர்கள்? – ஐந்து மணிநேரம் லேட்!

ஒரு சினிமா நடிகருக்கு இத்தகைய வரவேற்பை, ஒரு வெறியுடன் கூடிய ஈடுபாட்டை மக்களிடையே நான்

கண்டது அந்த ஒரு நிகழ்ச்சியில்தான்; அதற்குப் பின் காணவேயில்லை.

அது மட்டுமா? ஜோலார்ப் பேட்டை ஜங்ஷனில் ஒரு நாள், இரவு மணி பதினொன்று. சேலம் வண்டிக்காகக் காத்திருந்து அலுத்துப்போன நான் காலாற நடந்து பிளாட்பாரத்தின் கோடிக்குச் சென்றேன்.

சற்று இருள் சூழ்ந்த இடம். அங்கிருந்த புங்க மரத்தின் கீழ் சிலர் நின்று பேசிக் கொண்டிருந்தனர். ஓர் இனிமையான குரல்; பேசுவதும் பாடுவது போலவே இனிமையாக இருந்தது. அந்தக் குரலுக்கு உரியவர் பாகவதர்தான், நண்பர்கள் புடைசூழ அவர் ஏதோ ஒரு விவாதத்தைச் சூடாக நடத்திக் கொண்டிருந்தார். நான் வணக்கம் என்றேன்; 'கோலார் மாப்பிள்ளையா? வாங்க, வாங்க!' என்றார்.

பாகவதர் வந்திருப்பதை அதற்குள் மோப்பம் பிடித்து விட்ட பிரயாணிகள் ஓடோடியும் வந்து எங்களைச் சுற்றி முற்றுகையிட்டுவிட்டனர். அவர்களில் ஓர் இளைஞர், எழுதப் படிக்கத் தெரியாதவர், பாகவதரை நெருங்கி, 'அந்தத் தடியன் பி.வி.(பி.யு) சின்னப்பா பிக்சர் எங்களுக்குப் பிடிக்கிறதேயில்லை. அவனை ஏன் ஸார், சினிமாவிலே நடிக்க விடறாங்க?' என்று ஏதேதோ தாறுமாறாகப் பேசினார்.

பாகவதர் சிரித்தார்; சிரித்துவிட்டுச் சொன்னார்:

'நீங்க இன்னும் அந்த நடிகரின் பெயரையே சரியாகத் தெரிஞ்சுக்கலையே? படத்தின் தரம் உங்களுக்கு எப்படிப் புரியப்போவுது? பி.யு.சின்னப்பா என் அருமை நண்பர்; அவரைத் தூஷிப்பது நீங்கள் எனக்குச் செய்யும் அவமானம்!' என்றார் பாகவதர்.

இளைஞர் வெட்கித் தலை குனிந்தார். கூடி நின்ற அனைவரும் பாகவதரின் பெருந்தன்மையை வெகுவாகப் போற்றினர்.

இவை ரசிகர் கண்ட காட்சிகள்; அடுத்தாற்போல சகநடிகர்களில் ஒருவரான திரு எம்.ஜி.ஆர்.கண்டகாட்சியை இதோ அவரே விவரிப்பதைப் பாருங்கள்:

''பத்துப் பதினைந்து ஆண்டுகளுக்கு முன் ஒரு நாள் திருமதி டி.ஆர்.இராசகுமாரி அம்மையார் அவர்களின் 'புதுமனை புகுவிழா'அன்று சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. திரு சி.எஸ்.ஜெயராமன் பாடிக் கொண்டிருந்தார். மக்கள் வெள்ளம்போல் திரண்டிருந்தார்கள். 'கார்த்திகை விளக்கு' வைப்பதுபோல் சுற்றிலும் மின்சார விளக்குகள் போடப்பட்டிருந்தன. மூலை முடுக்கிலுள்ளவர்களின் முகங்களும் நன்கு தெரியுமாறு அவை அமைக்கப்பட்டிருந்தன. மேடைக்கருகில் நானும் உட்கார்ந்திருந்தேன். என்னை மற்றவர்கள் கவனிக்கும் அளவுக்கு நான் அப்போது விளம்பரம் பெற்றிருக்கவில்லை. ஆனால் மற்றவர்களின் செயலை, ஆற்றலைக் கவனித்துச் சிந்திக்கும் அளவுக்கு நான் மனப்பாங்கு பெற்றிருந்தேன்.

சி.எஸ்.ஜெயராமன் நன்றாகப் பாடிக் கொண்டிருந்தார். மக்களும் வெகுவாக ரசித்து, அவ்வப்போது கைதட்டித் தங்கள் மகிழ்ச்சியை வெளியிட்டுக் கொண்டிருந்தார்கள். திடீரெனக் கூட்டத்தினிடையே சலசலப்பு ஏற்பட்டது. 'என்ன குழப்பம்?' என்று நான் திரும்பிப் பார்த்தேன்; கைதட்டல்கள் ஒலித்தன.

ஆமாம், பாகவதர் அவர்கள் கூட்டத்தின் ஒருபுறத்தில் வந்து கொண்டிருந்தார்கள்!

அவரைச்சுற்றி ஏதோ ஓர் ஒளி வீசிக் கொண்டிருந்ததாக நான் அப்போது உணர்ந்தேன்.

மேடைக்கு அருகில் அவருக்கென நாற்காலி போடப்பட்டிருந்தது. சி.எஸ்.ஜெ.தொடர்ந்து பாடிக் கொண்டிருந்தார்.

பாகவதர் அவர்கள் எங்கெங்கு தலை ஆட்டினார்களோ, ரசித்தார்களோ அங்கங்கே மக்களும் தலையாட்டி

னார்கள்; ரசித்தார்கள். சொல்லப்போனால் 'பாகவதர் அவர்களே தலையாட்டுகிறார்; ரசிக்கிறார்; ஆமோதிக்கிறார்; நாமும் ரசிக்கத்தான் வேண்டும்' என்பதுபோல் இருந்தது அது.

இரண்டொரு பாடல்களைக் கேட்டு ரசித்தபிறகு, மக்களின் நெருக்கடியிலிருந்து தப்பிச் செல்வதற்காகப் பாகவதர் அவர்கள் எழுந்து போனார்கள். நான் அப்போது என்ன நினைத்தேனோ, அதை இப்போது அப்படியே எழுதுகிறேன்.

அங்கே எத்தனையோ விளக்குகள் போடப்பட்டிருந்தாலும், பாகவதர் அவர்கள் அந்த இடத்தைவிட்டு அகன்றதும் ஏதோ ஓர் இருள் கப்பிக்கொண்டதுபோல் தோன்றியது. எனக்கு மட்டுமல்ல; அங்கிருந்த அத்தனை பேருக்கும் அப்படித்தான் தோன்றியது.

பொன் நிறமான மேனி: பொன்நிறமுள்ள சட்டை, கழுத்தைச் சுற்றிச் சரிகை மட்டும் தெரியும் மேல்வேட்டி; காதுகளிலும் கைகளிலும் மின்னும் வைரங்கள். நெற்றியில் சவ்வாதுப்பொட்டு; தலையில் அழகான சுருண்டமுடி. இவை அத்தனையும் தங்கத்தால் வார்த்தெடுக்கப்பட்ட ஓர் உருவத்தில் வைரங்கள் பதித்ததுபோல் காட்சியளித்தன. சுருங்கச் சொல்லப்போனால், தங்கத்தாலான ஓர் உருவம் உயிர்பெற்று வருவது போலவே இருந்தது அது.

பாகவதர் அவர்கள் அன்று அந்தக் கூட்டத்தை விட்டுப் போனதும் அந்த இடத்திலும், தங்கள் மனத்திலும் இருள் கப்பியது போலவே மக்கள் உணர்ந்தார்கள்.''

நடிகர் சொன்னதைக் கேட்டீர்களா? இதோ, டைரக்டர் சோமு சொல்வதைக் கேளுங்கள்:

''பல ஆண்டுகளுக்கு முன் ஒரு நாள்; பாகவதர் உடுமலைபேட்டைக்கு வந்திருந்தார். அந்த ஊரில் 'ஊர்க் கவுண்டர்' என்பவர் பிரபலமான ஒரு செல்வந்தர்.

அவருடைய இல்லத்திற்குத்தான் பாகவதர் எதிர்பாராத விதமாக வருகை புரிந்திருந்தார். அவர் வந்திருக்கும் செய்தியை அறிந்ததும் வெள்ளம்போல் மக்கள் திரண்டு விட்டனர்.

பாகவதர் அந்தச் செல்வந்தருக்காகச் சில சினிமாப் பாடல்களைப் பாடினார். கேட்டுக் கிறுகிறுத்தது கூட்டம். தேனில் வண்டென எல்லோரும் மயங்கினார்கள். நெஞ்சை அள்ளும் காந்த சக்தி பெற்றிருந்த அந்த அபூர்வ முகத் தோற்றம் பார்த்தோர் கண்களை அப்படியே நிலைக்க வைத்தது.

தமக்கு இசை விருந்து அளித்த பாகவதருக்கு 'ஊர்க்கவுண்டர்' ஆயிரம் ரூபாய்களை ஒரு தட்டில் வைத்து அவரிடம் கொடுக்க வந்தார். பாகவதர் அதை ஏற்றுக் கொள்ளாமல், 'இங்கே நான் பணத்திற்காகப் பாட வரவில்லை. இன்று நான் லட்சக் கணக்கில் பணம் சம்பாதிப்பதற்கு அடிப்படையாக, ஆதியில் ஒரு நாள் தாங்கள் என்னிடம் கருணை காட்டினீர்கள். அது என் எண்ணத்தைவிட்டு எப்பொழுதும் மறைந்ததேயில்லை. இளம் சிறுவனாக, வறுமையின் வளர்ப்புப் பிள்ளையாக, என் தந்தையுடன் உங்கள் மாளிகையின் வாயிலுக்கு நான் ஒரு நாள் வந்தேன்; 'என் பாட்டைக் கேளுங்கள்' என்றேன். 'ஆகட்டும், பாடு குழந்தாய்!' என்றீர்கள். பாடினேன்; கேட்டீர்கள். என்னைப் பாராட்டவும் செய்தீர்கள். சட்டென்று பத்துரூபாயை எடுத்து, 'இதை வைத்துக் கொள்'என்று என்கையில் கொடுத்து, என்னை ஆசீர்வதித்தீர்கள். அன்று நீங்கள் கொடுத்த 'அந்தப் பத்துரூபாய்' இன்று பல்லாயிரக்கணக்கில் சம்பாதிக்கும் தகுதியைப் பெற எனக்கு அடிப்படையாக அமைந்துவிட்டது. அதற்காக என் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளவே இன்று நான் இங்கே வந்தேன்; பாட்டும் பாடினேன்; வருகிறேன்' என்று விடை பெற்றார்.

கூடியிருந்தவர்கள் வியப்பில் ஆழ்ந்தனர்.

சொல்லு, பாப்பா! –

'ஒரு படம் வெற்றிகரமான படமா, இல்லையா?' என்பதைத் தீர்மானிப்பது இப்போதெல்லாம் அடிக்கடி மாறிக்கொண்டே வருவதை நீங்கள் அறிவீர்கள். முதலில் நூறு வாரங்கள் ஓடிய படத்தை 'வெற்றிப்படம்!' என்றார்கள்; பிறகு நூறு நாட்கள் ஓடிய படத்தை 'வெற்றிப்படம்' என்று சொல்லி விடுகிறார்கள்.

என்ன முன்னேற்றம், என்ன முன்னேற்றம்!

இந்த 'முன்னேற்'றத்துக்குக் கூடத் தங்களையோ, தங்கள் நடிப்பையோ சம்பந்தப்பட்ட நடிகர்கள் நம்புவதில்லை; தாங்கள் சார்ந்துள்ள ஏதாவது ஒர அரசியல் கட்சியையே பெரிதும் நம்புகிறார்கள்.

என்ன தன்னம்பிக்கை, என்ன தன்னம்பிக்கை!

நல்ல வேளையாகக் கலையுலகத்துக்கு இந்த மாதிரிப் பெருமை எதையும் தேடி வைத்தபுண்ணியம் பாகவதரைச் சேரவில்லை; அவர் தம்மையும் தம்முடைய நடிப்பையும் மட்டுமே நம்பி நடித்த முதல் படமான 'பவளக் கொடி' நூறு காட்சிகள் அல்ல; நூறு நாட்கள் அல்ல; நூறு வாரங்கள், ஓடிற்று.

நகரங்களில் மட்டுமல்ல; சிற்றூர்களிலும் குக் கிராமங்களிலும் கூட ஓடிற்று.

இத்தனைக்கும் அவர் பெயரால் எந்த ஊரிலும் சங்கமும் கிடையாது; மன்றமும் கிடையாது.

கூலிக்கு ஆள் பிடித்து மற்ற நடிகர்கள் நடித்த படங்கள் சம்பந்தப்பட்ட 'போஸ்டர்க'ளில் அவர் சாணியும் அடிக்கச் சொல்லவில்லை;வெற்றிலைப்பாக்குப் போட்டுத் துப்பவும் வைக்கவில்லை.

'காலரி மாஸ்டர்க'ளுக்கு முன் கூட்டியே 'டிக்கெட்' வாங்கிக்கொடுத்து, தம்முடைய தலையைப் படத்தில்

கண்ட போதெல்லாம் அவர் கை தட்டச் சொன்னாரா என்றால் அதுவும் கிடையாது; 'விசில்'அடிக்கச் சொன்னாரா என்றால் அதுவும் கிடையாது.

இப்படி ஒரு முன்னேற்பாடும் இல்லாமலே ஒரு படம் நூறு வாரங்கள்—அதாவது, எழுநூறு நாட்கள், இரண்டாயிரத்து நூறு காட்சிகள் ஓட வேண்டுமென்றால் அந்தப் படம் மக்களை எந்த அளவுக்குக் கவர்ந்திருக்க வேண்டும்?

அது மட்டுமா? இப்போது வரும் படங்களில் மிஞ்சிப்போனால் பத்துப்பன்னிரண்டு பாடல்கள்; இல்லையென்றால் ஏழெட்டோடு சரி.

அவற்றையே முழுவதும் கேட்பதற்கு இந்த நாளில் ஆள் இல்லை. ஓரிரண்டு பாடல்களைக் கேட்டதுமே ரசிகர்களில் பலர் எழுந்து 'கூல் டிரிங்க்' குடிக்க வெளியே போய் விடுகிறார்கள்; சிகரெட் பிடிக்கப் போய்விடுகி றார்கள்.

தன் மனைவி மக்களுடனோ, நண்பர்களுடனோ வராதவர்கள் நேரே வீட்டுக்கோ அல்லது 'பீச்'சுக்கோ கூடப் போய்விடுகிறார்கள்.

பாகவதர் நடித்த 'பவளக்கொடி' படத்தில் மொத்தம் எத்தனை பாடல்கள் என்கிறீர்கள்? – ஐம்பத்தைந்து பாடல்கள். அவற்றில் பல பாகவதரால் பாடப்பட்டவை தான். ஆயினும் அவற்றைக் கேட்கும்போது எந்த ரசிகராவது 'கூல் டிரிங்க்' குடிக்க வெளியே போனாரா? சிகரெட் பிடிக்க வெளியே போனாரா?

இல்லை; இல்லவே இல்லை.

இத்தகைய 'காந்தர்வ கானரத்னம்' கச்சேரி செய்யும் போது என்ன நினைத்தார்? ரசிகர்கள் ''சினிமாப் பாட்டுப் பாடுங்கள்!''என்றால், ''கர்நாடக சங்கீதத்தில் கரை கண்டவன் நான்; என்னையா சினிமாப் பாட்டுப் பாடச்

சொல்கிறீர்கள்?''என்று சீறி எழுந்து, துண்டை உதறித் தோளில் போட்டுக்கொண்டு, ரசிகர்களை அவமதித்தாவது தமக்கு மரியாதை தேடிக்கொள்ள வேண்டுமென்று நினைத்தாரா? இல்லை; ''சாம்பாரும் ரசமும் பரிமாறிக் கொண்டிருக்கும் போது 'மோர் பரிமாறுங்கள்' என்று யாராவது கேட்பார்களா? அப்படிப் பரிமாறினால்தான் அது நன்றாகயிருக்குமா? கொஞ்சம் பொறுங்கள், அந்த சமயம் வரும்போது அதை நானே பரிமாறுவேன்!'' என்று சிரித்துக் கொண்டே சொல்லி, ரசிகர்களின் மதிப்பை உயர்த்திய தோடு, தம்முடைய மதிப்பையும் உயர்த்திக் கொண்டார்.

அவருடைய வெற்றியின் ரகசியங்களில் இதுவும் ஒன்று என்பதை, அவருக்குப் பின்னால் வந்துள்ள பாடகர்கள் இது வரை உணரவில்லை; இனி மேலாவது உணரவேண்டும்.

அது மட்டுமா? மற்றவர்களுடைய கச்சேரிகளில் பொருத்தப்படும் ஒலிபெருக்கிகளெல்லாம் பெரும்பாலும் ரசிகர்களின் பக்கமாகவே இருக்கும்; ஒரே ஒரு ஒலிபெருக்கி கூடப் பாடகரின் பக்கமாக இருக்காது. ஆனால் பாகவதரின் கச்சேரிகளிலோ? ஓர் ஒலிபெருக்கி அவசியம் அவருடைய விருப்பப்படி அவருக்கு முன்னால் பொருத்தப் பட்டிருக்கும்.

ஏன்?

'தாம் பாடுவதை ரசிகர்கள் மட்டும் கேட்டால் போதாது; தாமும் கேட்கவேண்டும்' என்று அவர் நினைத்தார்.

எதற்காக?

'அப்போதுதான் தாம் பாடுவதிலுள்ள குண விசேஷங்களையும், குணதோஷங்களையும் தம்மால் உணரமுடியும்; உணர்ந்து திருந்த முடியும் என்று அவர் நினைத்தார்.

இந்த முறையை அவருக்குப் பின்னால் வந்துள்ள பாடகர்களும் பின்பற்றினால் எவ்வளவு நன்றாயிருக்கும்?

'புவளக்கொடி'க்கு அடுத்தபடியாகப் பாகவதர் நடித்த படம் 'சாரங்கதாரா'. இதிலும் எஸ்.டி.எஸ்.ஸே அவருக்கு ஜோடியாக நடித்தார். கே: சுப்பிரமணியம் டைரக்ஷனில்தான் இந்தப் படமும் வளர்ந்தது.

இப்போது சில படங்களில் ஒரு சில நட்சத்திரங்கள் வைத்ததுதான் சட்டம் என்று ஆகிவிட்டதல்லவா? அப்போது அப்படியில்லை; டைரக்டர்கள் வைத்ததுதான் சட்டமாயிருந்தது. காரணம், டைரக்ஷன் என்றால் என்ன?' என்று தெரிந்தவர்கள் மட்டுமே அந்த நாளில் டைரக்டராக முடிந்தது; அது தெரியாதவர்கள் டைரக்டராக முடிய வில்லை.

இப்போது?...

பிடிக்கவேண்டியவர்களைப் பிடித்து கொஞ்சம் இதமாக சொறிந்துவிட்டால் கூடப்போதும், யாரும் டைரக்டராகிவிடலாமே!

இதன் காரணமாகச் 'சாரங்கதாரா' படப்பிடிப்பின் போது பாகவதருக்கும் டைரக்டர் சுப்பிரமணியத்துக்கும் ஒரே ஒரு விஷயத்தில் கொஞ்சம் அபிப்பிராய பேதம் ஏற்பட்டது. ''ஞானகுமாரி நளின சிங்காரி என்ற பாடலைத் தயவுசெய்து 'சாரங்கதாரா'வில் சேர்த்துக்கொள்ள வேண்டும்'' என்றார் பாகவதர்; 'அந்தப் பாடலுக்கும் 'சாரங்கதாரா'வுக்கும் என்ன சம்பந்தம்?' என்றார் டைரக்டர்.

சம்பந்தம் இல்லைதான். அதனால் என்ன, நீங்கள் நினைத்தால் ஏதாவது ஒரு விதத்தில் அதைச் சம்பந்தப் படுத்திக் கொண்டு விடலாமே! அது என்னால் பிரபலப் படுத்தப்பட்ட பாட்டு மட்டுமல்ல; ஆகிவந்த பாட்டும்கூட. அதை இந்தப் படத்தில் சேர்த்துக்கொண்டால் வெற்றி நிச்சயமாயிருக்குமென்று என் உள்மனம் ஏனோ அடிக்கடி

குரல் கொடுத்துக் கொண்டே இருக்கிறது. அதனால்தான் சொல்கிறேன். அதற்கு மேல் உங்கள் இஷ்டம்!'' என்றார் பாகவதர்.

''நோக்கம் நல்ல நோக்கமாயிருக்கும்போது நானும் அதற்குக் குறுக்கே நிற்கவிரும்பவில்லை; அப்படியே ஆகட்டும்!'' என்றார் டைரக்டர்.

படம் முடிந்து வெளியே வந்தது. பாகவதர் சொன்னது சொன்னபடி அதன் வெற்றி முழக்கம் விண்ணை அதிரவைத்தது.

இந்த இரண்டு படங்களுக்குப் பிறகு எஸ்.டி. எஸ். பாகவதர் குழுவிலிருந்து விலகிக்கொண்டு விட்டார். காரணம் வேறேன்றும் இல்லை; கலைஞர்களுக்கு அவ்வப் போது இயற்கையாக ஏற்படும் உணர்ச்சி மாறாட்டங்கள் தான்.

இந்தப் பிரிவு பாகவதரைச் சற்றே கலங்கவைத்தது என்னவோ உண்மைதான். ஆனாலும் அதற்காக அவர் சோர்ந்து விடவில்லை; 'தியாகராஜா பிலிம்ஸ்' என்று தம் பெயராலேயே அவர் ஒரு சொந்த நிறுவனத்தைத் திருச்சியில் நிறுவினார். ஸ்டண்ட் படம் ஒன்று எடுத்தால் என்ன?' என்று தோன்றிற்று; அதற்காகச் 'சத்தியசீலன்' என்ற கதையைத் தேர்ந்தெடுத்தார். அப்போதிருந்த மனநிலையில் அவர் அந்தப் படத்தைச் சென்னையில் எடுக்க விரும்பவில்லை; பம்பாய்க்குப் போய் எடுத்தார்.

'சத்தியசீல'னில் அவருக்கு ஜோடியாக நடித்தவர் தேவசேனா. அவர் சொன்னபடி ஒருநாள் 'ஷூட்டிங்'குக்கு வரவில்லை. அதற்காகப் பாகவதர் என்ன செய்தார் என்கிறீர்கள்? மறுநாள் வந்ததும், ''இன்று அவுட்டோர் ஷூட்டிங்!'' என்று ஒரு போடு போட்டார்.

''எங்கே?'' என்றார் தேவசேனா.

''அடுத்தாற்போல் உள்ள மலைச்சாரலில்!'' என்றார் அவர்.

''அதற்கென்ன, போனால் போச்சு!'' என்றார் இவர்.

''சரி, வா!''என்று அவரைத் தம் குழுவுடன் மலைச்சாரலுக்கு அழைத்துக் சென்றார் பாகவதர்.

''இன்று என்ன காட்சி எடுக்கப்போகிறோம். தெரியுமா?'' என்றார் அவர்.

''தெரியாதே!''என்றார் இவர்.

''உனக்கு எங்கே தெரியப்போகிறது? சொல்கிறேன் கேள் – சத்தியசீலன் எதிரிகளால் உன்னிடமிருந்து பிரிக்கப் பட்டு விடுகிறான். நீ இந்தக் காடு மலையெல்லாம் ஏறி கல்லிலும், முள்ளிலும் கால் கடுக்க நடந்து, அவனைத் 'தேடு, தேடு' என்று தேடுகிறாய். இதுதான் இன்று எடுக்கப் போகும் காட்சி, எங்கே, இந்த மலையின்மேல் ஏறி அவனைத் தேடிக்கொண்டே நட, பார்க்கலாம்?'' என்று அவரைக் கொளுத்தும் வெயிலில் மலையின் மேல் ஏற்றி நடக்கவிட்டுவிட்டு, டைரக்டர் சம்பத்குமார் பக்கம் திரும்பினார் பாகவதர்.

''என்ன, எடுக்கலாமா?'' என்றார் அவர் குறிப்பறிந்து.

''ம்'' என்றார் இவர்.

''ரிஹர்சல்' என்ற பேரால் நாலைந்து முறை தேவசேனாவை மேலே அலைய விட்ட பிறகு, 'டேக்' என்றார் டைரக்டர் ;'ரெடி' என்றார் காமராமேன் ரஹிமான்.

'தத்ரூபமாக நடிக்கவேண்டும்' என்ற ஆவல் ஒரு பக்கம்; நாலைந்து முறை 'ரிஹர்சல்' பார்த்ததால் இயல்பாகவே ஏற்பட்டு விட்ட தளர்ச்சி இன்னொருபக்கம்; இந்த இரண்டுக்குமிடையே தள்ளாடித் தள்ளாடி, ரொம்ப ரொம்ப இயற்கையாக நடித்தார் தேவசேனா.

''கட்!'' என்றார் டைரக்டர்.

''ஓ.கே''என்றார் காமராமேன்.

பாகவதர் சிரித்தார்!

''ஏன் சிரிக்கிறீர்கள்?'' என்றார் தேவசேனா ஒன்றும் புரியாமல்.

காமிராவைக் காட்டினார் பாகவதர்.

அதில் பிலிம் இல்லை!

''அடக் கடவுளே! இதற்குத்தானா நான் அத்தனை பாடுபட்டு நடித்தேன்?'' என்றார் தேவசேனா.

''நேற்றுஏன் 'ஷூட்டிங்'குக்கு வரவில்லை? அதற்குத்தான் இந்தத் தண்டனை!''என்றார் பாகவதர்.

எல்லோரும் சிரித்தார்கள்; தேவசேனாவும் நடந்ததை மறந்து அவர்களுடைய சிரிப்பில் கலந்து கொண்டார்.

**ராதே உனக்குக் கோபம் ஆகாதடி!...**

''எம்.ஜி.ஆர்.தானே? அவருடன் எந்த நடிகையை போட்டாலும் படம் ஓடிவிடும்!''

''சிவாஜிகணேசன்தானே? அவருட்ன் எந்த நடிகையை போட்டாலும் படம் ஓடிவிடும்!''

இம்மாதிரிப் பேச்சுக்கள் சினிமா உலகில் இப்போது சர்வசாதாரணமாகப் பேசப்படுவதை நாம் கேட்கிறோம். இதன் பொருள் என்ன? ஒரு படத்தின் வெற்றிக்கு நடிகைகள் முக்கியமல்ல; நடிகர்கள்தான் முக்கியம் என்பதேயாகும்.

அதாவது, அவர்கள் இருவருடைய படங்களைப் பொறுத்தவரை!

இந்த 'நட்சத்திரப் பெருமை'யையும் முதன் முதலில் நடிகர் உலகத்துக்கு தேடிவைத்தவர் எம்.கே.டி. பாகவதர் தான்!

எம்.கே.டி.யின் முதல் இரண்டு படங்களான 'பவளக்கொடி'யிலும் 'சாரங்கதாரா'விலும் அவருடன்

சேர்ந்து நடித்தவர் எஸ்.டி.சுப்புலட்சுமி. இவருக்காவது எம்.கே.டி.யுடன் ஏற்கெனவே நாடகத்தில் சேர்ந்து நடித்திருந்ததால் கொஞ்சம் பெயரும் புகழும் உண்டு. மூன்றாவது படமான 'சத்தியசீல'னில் அவருடன் சேர்ந்து நடித்த தேவசேனாவுக்கோ அதுவும்இல்லை. அவர் சினிமா உலகத்துக்கு முற்றிலும் புதியவர்.

ஆம். திரையுலகத்துக்கு அந்த நாளிலேயே 'புதுமுகம்' தேடிக்கொடுத்த பெருமைகூட எம்.கே.டியைச் சேர்ந்தது தான்.

''அழகாகப் பாட மட்டுமல்ல; 'அட்டைக்கத்தி' பிடித்து 'அந்தர் பல்டி'அடிக்கவும் தெரியும் எனக்கு; அதிலும் நான்தான் முதல்!''என்பதைச் சத்தியசீலன் மூலமாக நிரூபித்த பிறகு, 'தப்பித் தவறிப் பெயரைக் கூட யாருக்கும் நினைவூட்டிவிடக் கூடாது; நினைவூட்டி விட்டால் நம்மை 'டைரக்டர்' என்று யாரும் ஒப்புக் கொள்ளமாட்டார்கள்' என்று இந்தக்கால டைரக்டர்களில் பலர் பயப்படும் அளவுக்கு அந்தக்காலத்தில் தமக்கிருந்த 'தொழில் தகுதி' ஒன்றையே பிரதானமாகக் கொண்டு பிரசித்தி பெற்றிருந்த திரு ராஜா சாண்டோ டைரக்ஷனில் 'திரு நீலகண்ட' ரைப் படமாக்கும் முயற்சியில் பாகவதர் இறங்கினார்.

அப்போது எம்.கே.டி.யைக் கொண்டு படம் எடுப்பதற்கென்றே 'ராயல் டாக்கீசார்' என்று ஒரு நிறுவனத் தார் மதுரையில் உருவானார்கள்.

இந்த நாளில் இன்று 'வாட்டர் பா'யாயிருப்பவன் நாளை 'புரொட்யூசராகி விடலாம்; இன்று 'எக்ஸ்ட்ரா சப்ளை' செய்பவன் நாளை 'புரொட்யூச'ராகிவிடலாம். படம் எடுப்பதற்கு இப்போது பணம் தேவையில்லை. வேறு 'எது'வோ தேவையாயிருக்கிறது. அந்த 'எது'வும் இல்லாமல் பணத்தையும் பரம்பரைப் பண்பையுமே கொண்டு படாதி பதிகளானவர்கள் ராயல் டாக்கீசார். கௌரவமாகத் தொழிலில் இறங்கிய அவர்களுடன் பாகவதரும் கௌரவமாக

ஒத்துழைத்தார். அதன் பயனாக எம்.கே.டி.யின் நாலாவது படமாக, ராயல் டாக்கீசாரின் முதலாவது படமாகச் 'சிந்தாமணி' வெளியாயிற்று.

இந்தப் படத்தில் பாகவதருக்கு ஜோடியாக நடித்தவர் அஸ்வத்தம்மா. கன்னட நடிகையான இவரும் தமிழ்ப்பட உலகத்துக்கு முற்றிலும் புதியவரே.

திரு.ஒய்.வி.ராவ் டைரக்ஷனில் உருவான இந்தப் படம் வாரக்கணக்கில் அல்ல; வருடக் கணக்கில் ஓடிற்று.

தங்கள் படத்தின் பாடல்களில் சிலவாவது மக்களிடையே பிரபலமடைய வேண்டும்; அதனாலாவது தங்களுடைய படம் முக்கி முனகி ஓடவேண்டும் என்பதற்காக இந்தக் காலத்துப் படாதிபதிகள் என்ன வெல்லாம் செய்கிறார்கள்!

படத்தை வெளியிடுவதற்கு முன்னாலேயே அதன் பாடல்கள் பதிவான 'ரிகார்டு'களை அவர்கள் பிடிக்க வேண்டியவர்களைப் பிடித்து, ரேடியோ ஸ்டேஷன்களுக் கெல்லாம் கொடுத்து, ஒலி பரப்பச் சொல்கிறார்கள். பொது விழாக்கள் எத்தனை உண்டோ, அத்தனை விழாக்களிலும் அந்த ரிகார்டுகளை வைத்து, ''இந்தப் பாட்டை நீ திரும்பப் திரும்பப் பாடிப் 'பாப்புல'ராக்குகிறாயா? இல்லை, உன் காதைச் செவிடாக்கட்டுமா?'' என்பதுபோல அவர்கள் ஊருக்கு ஊர், தெருவுக்குத் தெரு, சந்துக்குச் சந்து, மூலைக்கு மூலை 'மைக்'குகளைப் பொருத்தி அலற விடுகிறார்கள்!

இத்தனை முயற்சிகளுக்குப் பிறகு ஏதாவது ஒரு பாடலை நாலு பேர் முணுமுணுத்துவிட்டால் போதும்; அதை 'ஹிட்'என்றும், 'பாப்புலர்' என்றும் ஓயாமல் ஒழியாமல் சொல்லித் திரிகிறார்கள்.

அதனாலாவது அவர்கள் எடுக்கும் எல்லா படங்களுமே ஓடிவிடுகின்றனவா என்றால் அதுவும் கிடையாது. ''பாட்டு நன்றாயிருந்தால் என்ன, அதன்

ரிகார்டைத் தனியாகப் போட்டுக் கேட்டுக்கொண்டால் போச்சு; அதற்காகப் படத்தைப் பார்த்து வராத தலைவலியை வரவழைத்துக் கொள்வானேன்?'' என்று அவற்றில் பலவற்றை மக்கள் பார்க்காமலே இருந்து விடுகிறார்கள்!

பாகவதர் நடித்த 'சிந்தாமணி' அந்த மாதிரி சோதனைகள் எதற்கும் உள்ளாகவில்லை. அதன் பாடல் களைப் பிரபலப்படுத்த அதை வெளியிடுவதற்கு முன்னாலும் சரி, வெளியிட்ட பின்னாலும் சரி- அதனுடைய தயாரிப்பாளர்கள் எந்த விதமான முயற்சியும் செய்ய வில்லை. அப்படியிருந்தும் அந்தப்படம் மட்டுமா வருடக் கணக்கில் ஓடிற்று? அதன் பாடல்களும் வருடக் கணக்கில் பாடப்பட்டன.

நாடு நகரமெல்லாம், பட்டி–தொட்டியெல்லாம், வீதி வெளியெல்லாம், மூலை முடுக்கெல்லாம், சந்து பொந்தெல்லாம் –

குழாயடியில், கிணற்றடியில், கடற்கரையில், ஆற்றங்கரையில், அலுவலகங்களில், தொழிற்சாலைகளில், வயற்காடுகளில், குடிசைகளில் –

**எந்தப் பக்கம் யார் திரும்பினாலும் சரி –**

**'பேசும் தரமோ காதல் பரவசமானால்' . . .**

**'மாயப்பிரபஞ்சத்தில் ஆனந்தம் வேறில்லை'...**

**'பஜனை செய்வோம் கண்ணன் நாமம்**

**'ராதே உனக்குக் கோபம் ஆகாதடி!'**

**'ஞானக் கண் ஒன்று இருந்திடும் போதினிலே' . . .**

இந்தப் பாடல்கள் படித்தவர்களால் மட்டுமல்ல; பாமரர்களாலும் திரும்பத் திரும்பப் பாடப்பட்டன. அவற்றைக் கேட்டுக் கிறுகிறுத்த மக்களோ லட்சோப லட்சம்; கோடானுகோடி!

இப்போது மதுரையில் கட்டப்பட்டு நடந்து கொண்டிருக்கும் சிந்தாமணி டாக்கீஸ் இந்தப் படத்தின் வருவாயைக் கொண்டு, இதன் ஞாபகார்த்தமாகக் கட்டப்பட்டதுதான் என்பதை நான் மட்டும் என்ன, நீங்கள்கூடக் கேள்விப்பட்டிருப்பீர்களே?

'சிந்தாமணி'க்குப் பிறகு பாகவதரின் ஐந்தாவது படமாக, சேலம் சங்கர் பிலிம்ஸின் முதலாவது படமாக வெளிவந்தது 'அம்பிகாபதி'.இதைத் தயாரித்தவர்களும் பரம்பரைப் பண்பும் பணவசதியும் உள்ளவர்கள். அவற்றுடன் முறையாகப் படித்தவர்களும்கூட. ஆகவே இரவல் சில்க்சட்டை அணிந்து, வாயில் 'சார்மினார்' சிகரெட்டும், கையில் 555'காலி சிகரெட் டின்னுமாகச் சென்னை தியாகராயநகர் தெருக்களில் 'எடுப்புச் சாப்பா'ட்டை எதிர்பார்த்து உலாவரும் 'ஈயடிச்சான் காப்பி' எழுத்தாளர்களைத் தேடிச்சென்று 'அம்பிகாபதி'கதை-வசனத்தை எழுதச் சொல்லாமல், திரு.இளங்கோவனைத் தேடிச்சென்று எழுதச் சொன்னார்கள்.

இவர் உண்மையிலேயே அந்தத் துறைக்கு வேண்டிய தகுதியும் திறமையும் உடையவர். அத்துடன் இப்போது யாரோ வசனத்தில் 'புரட்சி'செய்துவிட்டதாகத் தம்பட்டம் அடித்துக் கொண்டிருக்கிறார்களே, அந்தப் 'புரட்சி'யைக் 'கண்ணகி' படத்தின் மூலம் எப்போதோ மௌனமாகச் செய்துவிட்டு, இன்றும் அதை வெளியே சொல்லாமல் மௌனமாக இருந்து கொண்டிருப்பவர்.

இல்லாவிட்டால் கர்ண பரம்பரைக்கதையான 'அம்பிகாபதி'யை அவ்வளவு அழகாக, பொருத்தமாக வரலாற்றுப் பின்னணியுடன் இணைத்து இந்நாட்டு ஷேக்ஸ்பியர் போல் அவரால் உரையாடல் எழுதியிருக்க முடியுமா?

உதாரணத்துக்கு அந்தக் கதையின் அமைப்பைத்தான் கொஞ்சம் பாருங்களேன்:

சோழநாட்டு அரசனான முதல் குலோத்துங்கன், கலிங்க நாட்டு மன்னனான சோடகங்கனைப் போரில் தோற்கடித்து விட்டு, மும்முரசுகள் முழங்க, வெற்றிக் கொடியுடன் தன் தலைநகரான உறையூருக்குள் பிரவே சிக்கிறான். அரசன் தன்னுடைய வெற்றி விழாவை தர்பாரில் கொண்டாடிக்கொண்டிருக்கும்போது, கவிச் சக்கரவர்த்தி யான கம்பர் தம் ராமாயணத்தை ஸ்ரீரங்கத்தில் அரங்கேற்றி விட்டு மிகுந்த குதூகலத்துடன் அங்கே வருகிறார். புவிச் சக்கரவர்த்தி, கவிச்சக்கரவர்த்தியை மிகவும் பாராட்டிப் பேசி, போர்க்களத்தில் தன் உயிரைக் காப்பாற்றிய கம்பர் மகன் அம்பிகாபதிக்கு வைர வாள் ஒன்றைச் சன்மானமாக அளிக்கிறான். ஜெயகோஷத்துடன் சபை கலைகிறது.

மறுநாள் சேனாதிபதி ருத்ரசேனனும், அம்பிகா பதியும் அரண்மனைக்கருகே சந்திக்கின்றனர். அம்பிகா பதியின் இடையிலிருந்த வைர வாளின் காரணமாக எழுந்த வார்த்தைகள் வலுத்து, அவர்கள் இருவரையும் கடைசியாக வாட்போரில் கொண்டு வந்துவிடுகிறது. அந்தப் போரில் ருத்ரசேனன் தோல்வியுற்றுக் கீழே விழுகிறான்.

இப்போரை உப்பரிகையிலிருந்து கவனித்துக் கொண்டிருந்த அமராவதியும், அவள் தோழி சுந்தரியும் கைகொட்டிச் சிரிக்கிறார்கள். ருத்ரசேனன் அவமானத்தால் வெட்கிச் செல்கிறான். அம்பிகாபதியின் வீரம், அழகு ஆகியவை அமராவதியின் மனத்தைக் கவர்கின்றன. அவள் அவன்மேல் மட்டற்ற காதல் கொள்கிறாள்.

ஒருநாள் இரவு அமராவதி, அம்பிகாபதியின் வரவை எதிர்நோக்கி உப்பரிகையில் இருக்க, அவன் அவளுடைய உப்பரிகையின் சமீபமாக வந்து நிற்கிறான். இளவரசி மாடியின் மேல் இருந்தபடி அம்பிகாபதியுடன் உரையாடுகிறாள். 'இன்றிரவு அரும்பும் நம்காதல் அரும்பு அடுத்ததடவை சந்திக்கும்போது, வசந்தத்தின் தென்றலால்

அழகான மலராக மலரட்டும். நான்சென்று வருகிறேன்' என்று கவி நயத்துடன் கூறி, அம்பிகாபதி அவளிடம் விடைபெறுகிறான்.

அன்றிலிருந்து அம்பிகாபதிக்குக் கனவிலும் நினைவிலும் அமராவதியின் ஞாபகமாகவே இருக்கிறது. இதையறிந்த கம்பர், ''பாடிப் பிழைக்கும் பாவலன் மகனுக்குப் புவியாளும் பூமகன் மகள் கிட்டுதல் அரிது'' எனப் புகல்கிறார். அதைக் கேளாது அம்பிகாபதி தன் காதலியை அடிக்கடி ரகசியமாகச் சந்தித்து வருகிறான்.

ஒருநாள் இரவு அரசன் தன் அமைச்சனுடன் மாறுவேடம் பூண்டு,' நகர சோதனை' செய்துவரும்போது, தன்னுடைய மகளின் கள்ளக்காதலைப்பற்றித் தோட்டக் காரமுனியனின் மனைவியான மருதாயியும், அவளுடைய கள்ளக்காதலனான கண்ணனும் பேசிக் கொள்வதைக் கேட்டு விடுகிறான். அதனால் கோபமுற்ற அரசன், அதன் உண்மையை அறிந்து சொல்லுமாறுஉடனிருந்த அமைச்ச னுக்கு உத்தரவிடுகிறான்.

இது இப்படியிருக்க, அமராவதியின் மேல் அம்பிகாபதி காதல் கொண்டிருப்பதை அறிந்த ருத்ர சேனனுக்கு அவன் மேல் பொறாமை உண்டாகிறது. அதன் காரணமாக அவன் அமராவதிக்கு அம்பிகாபதியின் மேல் வெறுப்பை உண்டாக்கி, அவளுடைய அன்பைத் தான் பெறுவதற்காகத் தனக்கு வேண்டிய தாசியான வஞ்சிக் கொடியின் மூலம் பல சூழ்ச்சிகள் செய்து வருகிறான். அம்பிகாபதி அந்த வஞ்சியின் வலையில் விழாமல் தப்பித்துக் கொள்கிறான். இதனால் ருத்ரசேனனின் கோபம் அதிகரிக்கிறது. அவன் பித்தம் பிடித்தவன் போலாகிறான்.

இந்த நிலையில் அரசனின் பிறந்த நாளை முன்னிட்டுப் புலவர்களுக்கு அரண்மனையில் ஒரு விருந்து வைக்கப்படுகிறது. அந்த விருந்து நடைபெறும்போது, தென்றலில் ஆடும் முல்லைக் கொடிபோல் வட்டிலைக்

கையிலேந்தி அமராவதி வருகிறாள். அவளை அந்தக் கோலத்தில் கண்ட அம்பிகாபதி அவள் அழகில் மயங்கித் தன்னை மறந்து,

"இட்டஅடி நோக எடுத்தஅடி கொப்பளிக்க

வட்டில் சுமந்து மருங் கசைய

என்று பாட ஆரம்பிக்கிறான். இதனால் அம்பிகாபதிக்கு ஏற்படப் போகும் ஆபத்தை உணர்ந்த கம்பர், உடனே கலைவாணியைத் தியானித்து, அம்பிகாபதி பாட ஆரம்பித்த செய்யுளை,

கொட்டிக் கிழங்கோ கிழங்கென்று கூவுவாள் நாவில்

வழங் கோசை வையம் பெறும்!"

என்று பாடிமுடிக்க, சாட்சாத் சரஸ்வதி தேவியும் அதற்கேற்றாற்போல் அங்காடிக் கூடைக்காரியாகி அப்போது அந்த வழியே 'கொட்டிக் கிழங்கோ கிழங்கு!' என்று கூவிக்கொண்டேவர, அரசனும் மற்றவர்களும் சந்தேகம் தீர்ந்து, கம்பரையும் அம்பிகாபதியையும் ஒருங்கே பாராட்டி மகிழ்கின்றனர்.

இன்னொருநாள் நடுநிசி; எங்கும் நிசப்தம். இடையில் உடைவாள் அணிந்த ஓர் உருவம் அரண்மனையில் உள்ள அமராவதியின் உப்பரிகையின் மேல் மெதுவாக ஏறி, அமராவதியின் பள்ளியறைக்குள் நுழைகிறது. ஆழ்ந்த நித்திரையிலிருந்த அமராவதியை அது தூக்கிக்கொண்டு போக முயலும்போது, விழித்துக் கொண்டுவிட்ட அமராவதி கூச்சலிடுகிறாள். அவளுடைய கூச்சலைக் கேட்ட தோழிகளும் காவலாட்களும் அங்கே விரைந்து வருகின்றனர். காவலர்களுக்கும் அந்த உருவத்துக்கும் வாட்போர் நடக்கிறது. அப்போரில் படுகாயமடைந்த அவ்வுருவம் உப்பரிகையிலிருந்து கீழே விழுந்து உயிர் விடுகிறது. அந்த உருவம் யாருடைய உருவம் என்பதை

அறியக் காவலர்கள் ஓடிப் போய்ப்பார்க்கிறார்கள். அது ருத்ரசேனனின் உருவம் என்று தெரிகிறது.

அந்த வருடம் வழக்கம்போல் சோழ நாடெங்கும் 'கிருஷ்ண ஜெயந்தி' கொண்டாடப்படுகிறது. அவ்விழாவை முன்னிட்டு அரண்மனையில் ஓர் இசைக் கச்சேரிக்கு ஏற்பாடு செய்யப்படுகிறது. அவையில் அரசனும், புலவர் பெருமக்களும் வீற்றிருக்கின்றனர். சபையில் அமர்ந்திருந்த அம்பிகாபதியும், உப்பரிகையிலிருந்த அமராவதியும் ஒருவரையொருவர் பார்ப்பதும் சிரிப்பதுமாக இருக்கின்றனர்.

இசை நிகழ்ச்சி முடியுமுன் தன்னுடனிருந்த தாய்க்குக் கூடத் தெரியாமல் அமராவதி அவ்விடத்தை விட்டுச் சென்று விடுகிறாள். அதே சமயத்தில் அம்பிகாபதியும் அவையைவிட்டு எழுந்து வெளியே செல்கிறான். இருவரும் கிளி மண்டபத்தில் சந்தித்து ஒருவரையொருவர் ஆலிங்கனம் செய்து கொண்டிருக் கையில் இவர்களைப் பின்தொடர்ந்து வந்த அரசன் தன் உடைவாளால் அம்பிகாபதியை அக்கணமே குத்திக் கொல்லமுயல்கிறான்; அமராவதி குறுக்கிடுகிறாள். அவளை உதறித் தள்ளிவிட்டு, அவ்விடத்துக்குக் கம்பரையும், ஒட்டக்கூத்தரையும் வரவழைத்து, கள்ளனும் கள்ளியும் கையும் மெய்யுமாகப் பிடிபட்டதை நிரூபித்துக் காட்டி, அம்பிகாபதியைச் சிறையிலிட்டு, அடுத்தநாளே அவனுக்கு மரணதண்டனையும் விதித்துவிடுகிறான் அரசன்.

கம்பரின் வேண்டுகோளுக்கு இணங்கி, ஒட்டக்கூத்தர் அரசனுக்கு ஒரு யோசனை சொல்கிறார். அம்பிகாபதி சிற்றின்பத்தை விட்டுப் பேரின்பத்தைப் பொருளாகக் கொண்டு நூறு பாடல்கள் பாடினால் அவனுக்கு விதித்த மரண தண்டனையை ரத்துச் செய்து விடலாம் என்பதே அந்த யோசனை. அரசன் அதற்குச் சம்மதிக்கிறான்.

இதையறிந்த அமராவதி அன்றிரவு சிறையிலிருந்த அம்பிகாபதியைச் சந்தித்து, அரசனுடைய முடிவைத் தெரிவித்து, மறுநாள் அவன் பாடப்போகும் நூறு பாடல்களையும் நூறு ரோஜா மலர்கள் கொண்டுதான் எண்ணுவதாகவும், கடைசிப் பாட்டைப் பாடி முடித்ததும், தான் மேலே இருந்து அவனைப் பார்ப்பதாகவும் சொல்லிவிட்டுப் போகிறாள்.

சோதனை தினம்; அவையில் எல்லோரும் கூடியிருக்கின்றனர். அம்பிகாபதி முதலில் 'காப்புச்செய்யுள்' பாடுகிறான். அமராவதி அதை முதலாவது செய்யுளாக எண்ணி, ஒரு ரோஜா மலரை எடுத்துப்போடுகிறாள். இது அவள் செய்த தவறு என்பதை அறியாத அம்பிகாபதி, தொடர்ந்து தொண்ணூற்றொன்பது செய்யுட்களைப் பாடி முடிக்கிறான். உடனே சொன்னது சொன்னபடி அம்பிகாபதிக்கு அமராவதியின் தரிசனம் கிடைக்கிறது. அதன் காரணமாக நூறாவது செய்யுள்,

" சற்றே சரிந்த குழலே துவளத் தாளவடத்
துற்றே யசையக் குழை யூசலாடத் துவர்கொள் செவ்வாய்
நற்றே னொழுக நடனசிங்கார நடையுடையாள்
பொற்றே ரிருக்கத் தலையலங்காரம்புறப்பட்டதே!"

என சிற்றின்பச் செய்யுளாக மாறிவிடுகிறது.

சபையில் ஒரே ஆரவாரம். அரசன்' இனி பொறுப்ப தில்லை' என்று கொதித்தெழுந்து அம்பிகாபதியை உடனே கொல்ல உத்தரவிடுகிறான். கம்பர் தம் மகனுக்கு உயிர்ப்பிச்சை கொடுக்குமாறு மன்றாடுகிறார். மன்னன் மனம் இளகவில்லை. அமராவதி மூர்ச்சையாகிறாள். அம்பிகாபதி கொலைக்களத்திற்கு அழைத்துச் செல்லப் படுகிறான்.

*சிதம்பர நாதா, திருவருள் தாதா!...*

கொலைக்களத்தில் சந்தித்த அம்பிகாபதியும் அமராவதியும் என்னவானார்கள் என்பது உங்களில் பலருக்குத் தெரிந்திருக்கும். 'துன்பியல் கதை'யான அந்தக்கதையை இலக்கிய நயத்தோடு மட்டுமல்ல; காவிய நயத்தோடு மட்டுமல்ல; புகழ் பெற்ற ஷேக்ஸ்பியரின் 'ரோமியோஜூலியட்'டுக்கு நிகராகத் திரு இளங்கோவன் எழுதியிருந்தார். அதை 'டைரக்ட்' செய்திருந்தவரோ எல்லிஸ் ஆர்.டங்கன்' படத்தின் வெற்றிக்குக் கேட்க வேண்டுமா? – சக்கைப்போடு போட்டது.

இந்தப் படத்துக்குப் பிறகு தயாரான பாகவதரின் ஆறாவது படம் 'திருநீலகண்டர்.'

இதன் படப்பிடிப்பின்போது ஒரு நாள்...

'ஷூட்டிங்கோ', 'ரிகார்டிங்'கோ இல்லாததால் பாகவதருக்குப் பொழுது போகவில்லை. அலுவலகத்தில் ஒரு மூலையில் வைக்கப்பட்டிருந்த தபேலாவை எடுத்து வைத்துக் கொண்டு, அதைத் தாமே வாசித்தபடி 'லாவணி' பாடிக் கொண்டிருந்தார். ''பேஷ் பேஷ், பிரமாத மாயிருக்கிறதே! அதுகூடத்தெரியுமா உங்களுக்கு?''என்று கேட்டுக்கொண்டே அங்கு வந்தார் என்.எஸ்.கிருஷ்ணன்.

''ஏதோ கொஞ்சம் தெரியும்'' என்றார் எம்.கே.டி.

''பாடுவதைப் பார்த்தால் கொஞ்சம் தெரிந்தாற் போல் இல்லையே?'' என்று தமக்கே உரிய பாணியில் சொல்லிக்கொண்டே அவருக்குப் பக்கத்தில் உட்கார்ந்தார் என்.எஸ்.கே.

அதற்குப் பதிலாக ஒரு புன்னகையை உதிர்த்து விட்டுப் பாகவதர் மேலே பாடினார்.

அதைக்கேட்டுக் கொண்டே இருந்த கலைவாணர், திடீரென்று ''வந்துவிட்டது, வந்துவிட்டது!'' என்று துள்ளிக் குதித்தார்.

''என்ன வந்துவிட்டது?''என்றார் இசைவாணர்.

''திருநீலகண்டரில் நாமும் ஒரு பாட்டுப்பாடி வைக்க வேண்டுமே, என்ன பாட்டுப்பாடலாம் என்று யோசித்துக் கொண்டிருந்தேன்; அந்தப் பாட்டுக்கு இப்போது 'ஐடியா' வந்துவிட்டது!''என்றார் என்.எஸ்.கே.

''என்ன ஐடியா?'' என்றார் எம்.கே.டி.

''காமன் கதையைப் பாட்டாகப் பாடுவதுதான் நம்முடைய கிராமங்களில் வழக்கமாயிற்றே? நானும் துரைராஜும் 'எரிந்த கட்சி, எரியாத கட்சி'யாயிருந்து, இதே 'லாவணி'யைப் பாடிவிட்டால் என்ன?'' என்றார் கிருஷ்ணன்.

''அப்படியே செய்யுங்கள்!'' என்று சொல்லி விட்டார் பாகவதர்.

அப்புறம் கேட்கவேண்டுமா? கலைவாணரின் கருத்துக்கிணங்க, அந்தப் படத்தில் 'மருதை'யாக நடித்த டி.எஸ்.துரைராஜ் பாடினார்:

''பங்கையன் நாவில் வாழும்
பான்மைபோல் அடியேன் நாவில்
மங்கையே நீ இருந்து
மாரவேள் கதை பாடம்மா!
துங்கமெய்ஞ் ஞான வாழ்வே,
சுருதிவியா கரண முடிவில்
தங்கியே பொருளை ஏத்தி
சரஸ்வதி நீ காப்பாயே!''

என்ற விருத்தத்தை அவர் பாடி முடித்து, பாட்டை இப்படி ஆரம்பித்தார்.

''மங்களமே மிகுந்த மாசிப் பிறையதனில்
மகரக் கொடியதனை நாட்டி நாட்டி,
சங்கையில்லாமல் டேப்பு துந்தனாத் தாளத்தோடு
சரமண்டலி மோர்சிங்கு கூட்டி கூட்டி,

சனகாதி நால்வருக்காய் கல்ஆலின் கீழிருந்து
சங்கரன்மீது மதன் கணை தொடுத்து
அனலாய் எரிந்தழிந்த இந்தச் சரித்திரத்தை
ஆகம விதிப்படி கவி தொடுத்து..."

இந்த இடத்தில்தான் 'சொக்க'னாக நடித்த என்.எஸ். கே. குறுக்கிட்டு.

"காமன் கதை பாட வந்த ஆரம்பத்தில்
நாமகள் என்றொரு பெண்ணைத் துதித்ததென்ன?
நாவில் அவள் குடியிருப்பாள் என்றதென்ன?
நாலுபேர் அறிய அதைக் கூறுமாதே!"

என்ற விருத்தத்தைப் பாடிவிட்டு,

"கல்விக்குத் தமிழ்ச் செல்வி என்றொரு பெண்ணைக்
கைதொழுதீரே, அந்த மங்கை மங்கை,
மறையவன் நாவில் அவள் உறைவது நிஜமானால்
மலஜலம் கழிப்பது எங்கே, எங்கே?"

என்று கேட்டு, அந்த நாளிலேயே, அந்தப் படத்திலேயே தம் 'பகுத்தறிவுப் பிரசார'த்தை ஆரம்பித்து வைத்தார். அதற்காக அவர் தம் நகைச்சுவையையும் கைவிட்டுவிடவில்லை;

"அந்தக் கணபதிக்குத் தொந்தி வந்த விதத்தைத்
தெரியச் சொல்லும் எந்தன் முன்னே முன்னே!"

என்று 'மருதை'யாக நடித்த டி.எஸ்.கே. திருதிருவென்று விழித்து திக்கு முக்காடித் திண்டாடி.

"அந்தக் கணபதிக்கு... அந்தக் கணபதிக்கு...
தொந்தி பெருத்தவிதம், தொந்தி பெருத்தவிதம்...
கொழுக்கட்டை தின்னதினால் அண்ணே, அண்ணே!"

என்று சொன்னதைக் கேட்டுச் சிரிக்காதவர் யார்?

இப்படிச் சிரிப்புக்கிடையே சிந்தனையையும் தூண்டிவிட்ட பெருமை கலைவாணரைச் சேர்ந்ததுதான் என்றாலும், அந்த முயற்சிக்கு எடுக்கும்போதே இடம்

கொடுத்து, அந்த வகையில் அவரை ஊக்கிவிட்ட பெருமை இசைவாணரையே சேரும்.

அதுமட்டுமா? ஆத்திகனுக்கு ஆத்திகன் நண்பனாயிருக்கலாம்; நாத்திகனுக்கு நாத்திகன் நண்பனாயிருக்கலாம். ஆத்திகனுக்கு நாத்திகனும், நாத்திகனுக்கு ஆத்திகனும் நண்பனாயிருக்க முடியுமா?

'இருக்கமுடியும்' என்று நிரூபித்துக் காட்டியவர்கள் இசைவாணரும், கலைவாணரும் ஆவார்கள்.

அதற்கு வேண்டிய பரந்த மனம் பாகவதரிடம் இருந்தது. அது மட்டுமல்ல; 'உன்னை நான் நேசிக்கிறேன்; உண்மை. அதற்காக உன் கொள்கையை, கோட்பாட்டை நான் நேசிக்கமாட்டேன்!' என்று சொல்வதற்கு வேண்டிய உரமும் அவருடைய நெஞ்சில் இருந்தது,

இல்லையென்றால் தெய்வ பக்திமிக்க பாகவதர், அந்த தெய்வபக்திக்காகவே 'திருநீலகண்ட'ரை எடுத்த பாவகதர், அப்படி ஒரு காட்சியை அதில் புகுத்த என்.எஸ்.கிருஷ்ணனை அனுமதித்திருப்பாரா?

அவருடைய பெருந்தன்மைக்கு இதோ இன்னும் ஓர் எடுத்துக்காட்டு:

'திருநீலகண்ட'ரில் ஒரு காட்சி; அந்தக் காட்சியில் யோகியாக நடித்த சிறுகளத்தூர் சாமா, நீலகண்டராக நடித்த பாகவதரை உதைத்துத் தள்ளவேண்டும்.

வெறும்நடிப்புத்தான்; இருந்தாலும் மனம் வரவில்லை சாமாவுக்கு. ''பாகவதரையா? நானா? உதைப்பதா? மாட்டேன், மாட்டவே மாட்டேன்!'' என்றார்.

கண்டிப்புக்குப் பெயர் போன டைரக்டரான ராஜா சாண்டோ, ''உதைக்கத்தான் வேண்டும்!'' என்றார்.

''இவர் புகழ்பெற்ற பாகவதர் மட்டுமல்ல; நம்முடைய முதலாளியுங்கூட. எப்படி உதைப்பேன்?'' என்று சாமா தயங்கினார்.

''நான் முதலாளி, நீங்கள் தொழிலாளி என்பது ஒரு பக்கம் இருக்கட்டும். இன்னொரு பக்கம் பார்த்தால் பிறப்பால் உயர்ந்த பிராமணர் நீங்கள்; நானோ பிறப்பால் தாழ்ந்த விஸ்கர்மா. என்னை விட வயதில் மூத்தவர் நீங்கள்; உங்களைவிட வயதில் சிறியவன் நான். இவற்றுக்காக வாவது நீங்கள் என்னை உதைக்கலாமே!''

சாமா சொன்னார்

''உங்களைவிட நான் வயதில் மூத்தவன் என்பதை ஒப்புக்கொள்கிறேன்; பிறப்பால் உயர்ந்தவன் என்பதை என்னால் ஒப்புக்கொள்ளமுடியாது. ஏனெனில், சிறப்பை வைத்துப் பார்த்தால் நீங்கள் எங்களைவிட உயர்ந்தவர்!''

''சரி, எதை ஒப்புக்கொண்டாலும், எதை ஒப்புக் கொள்ளாவிட்டாலும் இந்தக் காட்சிக்காக என்னை உதைக்க வாவது ஒப்புக்கொள்ளுங்கள்!'' என்றார் பாகவதர்.

அதற்குமேல் 'இதற்காக கடவுள் என்னை மன்னிக் கட்டும்' என்று 'செட்டின் கூரையைப் பார்த்து முணு முணுத்துக்கொண்டே நீலகண்டராக நடித்த பாகவதரை யோகியாக நடித்த சாமா எட்டி உதைத்தார்.

அந்தக் காட்சியை அப்படியே படமாக்கிவிட்டு, ''ஏ ஒன்,ஓ.கே!'' என்றார் ராஜா சாண்டோ.

### சந்திர சூரியர் போம் கதி மாறினும்...

புராணக் கதைகளுக்கும் வரலாற்றுக் கதைகளுக்கும் சமூகப் படங்களில் ரசிகர்கள் எதிர்பார்க்கும் அத்தனை அம்சங்களையும் அவற்றிலும் புகுத்தி எழுதமுடியுமா?

'முடியும், சாத்தியம்'என்று அந்த நாளிலேயே தெள்ளத்தெளிவாக நிரூபித்துக் காட்டியவர் திரு இளங் கோவன்.

'திருநீலகண்ட'ரில் ஒரு காட்சி – தாசி கலாவல்லி, நீலகண்டரைத் தன் மாய வலைக்குள் சிக்க வைக்கப் பார்ப்பாள். அப்போது அவர்கள் இருவருக்கும் வாக்கு வாதம் நடக்கும். அந்த வாக்குவாதம் எப்படியிருந்தது? 'எத்தனையோ பேருகிட்டே எலந்தப்பயம் பார்த்தியே, எடுத்துப்பார்த்த பயங்களிலே இம்மா சைசு பார்த்தியா?' என்பது போலவா இருந்தது? இல்லை; அவர்களுக்கு இடையே நடந்த உரையாடல்கள் மனிதனைத் தேவனாக்க முயலாவிட்டாலும் மிருகமாக்க முயலாமல் குறைந்தபட்சம் மனிதனை மனிதனாகவாவது வைத்திருக்க முயன்றன. அவற்றில்தான் தர்க்க ரீதியான கேள்விகள் எத்தனை! தத்துவமயமான பதில்கள் எத்தனை!

அந்தக் கேள்விகளிலும் பதில்களிலும் இளங்கோ வனையும் அவருடைய அசாதாரணமான எழுத்துத் திறமையையும் மட்டுமா நாம் கண்டோம்? மகாகவி ஷேக்ஸ்பியரையும் மனத்தைக் கவ்விப்பிடிக்கும் அவ ருடைய மதி நுட்பத்தையும்கூட அல்லவா கண்டோம்

ஆம், ஷேக்ஸ்பியர் தம்முடைய இளமைப் பருவத்தில் எழுதிய 'ரேப் ஆப் லுக்ரீஸ்'என்ற நூலிலிருந்தும், 'வீனஸ் அண்டு அடோனிஸ்'என்ற காவியத்திலிருந்தும் சில சுவையான பகுதிகளை எடுத்து அதில் அவர் கையாண் டிருந்தது என்னவோ உண்மைதான். ஆயினும் அந்தத் திறமைதான் இன்றுள்ள சினிமா கதை வசன கர்த்தாக்களில் எத்தனை பேருக்கு இருக்கிறது? அவர்களில் சிலர் தமிழி லிருந்து எடுத்துத் தமிழிலேயே எழுதக்கூட அல்லவா தெரியாதவர்களாக இருக்கிறார்கள்!

அது மட்டுமா? அந்த நாளில் எழுத்துத் தொழில் புனிதமான தொழிலாக மதிக்கப்பட்டு வந்தது. அதை மேற் கொண்டிருந்தவர்களும் அந்தத் தொழிலின் புனிதத்தைத் தங்களால் முடிந்தவரை காக்கக் கூடியவர்களாயிருந்தார்கள். முக்கியமாக, இளங்கோவனைப் போன்றவர்கள் ஒரு

படாதிபதி தாமாகவே வந்து தம்மை விரும்பி அழைக்காத வரை எந்த சினிமாக்கம்பெனியின் படியிலும் ஏற மாட்டார்.

இதனால் என்ன நடந்தது?...

படே படே படாதிபதிகள் கூட இளங்கோவனுக்கு முன்னால் சிகரெட் குடிக்க யோசித்தார்கள்; மது அருந்தத் தயங்கினார்கள்; மனைவியைத் தவிர, பிற மங்கைகளுடன் பேச அஞ்சினார்கள்.

இன்று?...

கதை வசன கர்த்தாக்களில் சிலர் எந்த விதமான அழைப்பும் இல்லாமலே 'நடையிலேயே நடனம் பயிலும்'யாராவது ஓர் இளம்பெண்ணுடன் பல சினிமாக் கம்பெனிகளின் படிகளை ஏறி இறங்குகிறார்கள். அதன் பயனாகத் தங்களுடன் வரும் பெண்ணுக்கு 'நட்சத்திரப் பதவி' கிடைத்தால், அவளுடைய நிழலில் அவர்கள் ஒதுங்க நினைக்கிறார்கள்; தங்களுக்குக் கதை வசன கர்த்தா'என்ற 'அந்தஸ்து'கிடைத்தால், தங்களுடைய நிழலில் அந்தப் பெண்ணை ஒதுங்க விடுகிறார்கள்!

இது என்ன சாபக்கேடு? எழுத்துலகத்தைப் பிடித்த இந்தச் சாபக்கேடு என்று ஒழியும்?

'சொல்லக் கொதிக்குதடா நெஞ்சம், வெறும் சோற்றுக்கோ வந்த திந்தப் பஞ்சம்?' என்று அன்று பாடினான் பாரதி. அதே மாதிரி இதைச் சொல்ல இன்று என் நெஞ்சமும் கொதிக்கிறது.

இந்த லட்சணத்தில் எழுத்துத் தொழில் புனிதமான தொழிலாயிருக்க முடியுமா! அந்தத் தொழிலை மேற் கொள்பவர்களால்தான் அதன் புனிதத்தை ஓரளவாவது காப்பாற்ற முடியுமா?

இந்த நிலையில் எந்தப் படாதிபதி கதை வசன கர்த்தாவுக்கு முன்னால் சிகரெட் குடிக்க யோசிப்பார்? மது

அருந்தத் தயங்குவார்? மனைவியைத் தவிர, பிற மங்கைகளுடன் பேச அஞ்சுவார்?

இப்பொழுது எழுத்தாளர்களே அல்லவா பெங்களூருக்கும் பாண்டிச்சேரிக்கும் போனால்தான் 'மூட்' வருமென்று சொல்கிறார்கள்!

கடவுள், மனிதன் தன்னை எளிதில் நெருங்கி விடக்கூடாது என்பதற்காகவோ என்னவோ, 'மங்கை' என்று ஒருத்தியைப் படைத்தான். அவள் தன்னை ஆட்டிப் படைப்பது போதாதென்று மனிதன்'மது' என்ற ஒன்றையும் தனக்குத்தானே தயார் செய்து கொண்டுவிட்டான்!

இந்த இரண்டு மற்ற துறைகளில் நடமாடுவதைவிட, சினிமாத்துறையிலே அதிகமாக நடமாடுகின்றன. காரணம், அவற்றுக்கு அங்கே சொந்தப் பணந்தான் வேண்டும் என்பதில்லை; எது எதையோ எதிர்பார்த்து வரும் பிறத்தியார் வீட்டுப் பணமே அவற்றுக்கு அங்கே கை கொடுக்கிறது. இதனால் படாதிபதிகள் மட்டுமா பல விதமான சோதனைக்குள்ளாகிறார்கள்? அவர்களோடு தொழிலில் சம்பந்தப்பட்ட அனைவருமே சோதனைக்குள்ளாகிறார்கள்!

இதற்குப் பாகவதர் மட்டும் எப்படி விதிவிலக்காயிருக்க முடியும்? அதிலும், அந்த நாள் 'அழகு மன்ன'னாக அவர் இருந்து கொண்டு?

'அம்பிகாபதி'யில் தம்முடைய காதலி 'அமராவதி'யாக நடித்த திருமதி சந்தானலட்சுமியின் தலையோடு தலைசேர்த்து,

"சந்திர சூரியர் போம் கதி மாறினும்
வீழினும் நமக்கென்ன? இந்த இன்பமே
சொந்தம தானால் வானுலகும் வேண்டாம்!"

என்று அவர் பாடி நடித்தாலும் நடித்தார், நிஜமாகவே பல பெண்கள் அவருடைய தலையோடு தலைசேர்த்து, அதே மாதிரி வந்து விட்டார்கள்.

மாதருக்கு அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு என்று சொல்வார்களே, அந்த நால்வகைக் குணங்களும் பாகவதரைக் கண்ட மாத்திரத்தில் பஞ்சாய்ப் பறந்தன. அவருடைய மோகனமான சௌந்தரியத்திலிருந்து அந்தப் பெண்களைக் காக்க அவரவர்களுக்கு உரியவர்கள் படாத பாடு படவேண்டியிருந்தது.

'நீலகண்ட'ருக்காக வெளிப்புறக் காட்சிகள் சிலவற்றை எடுப்பதற்குப் பாகவதர் சிதம்பரம் வந்திருந்த போது, அவரைச் சூழ்ந்துகொண்ட பெண்களை விலக்கப் போலீசார் வரவேண்டியிருந்தது என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்!

ஆனானப்பட்ட விசுவாமித்திரராலேயே ஒரு மேகலையை வெல்ல முடியவில்லையென்றால், பாகவதரால் அத்தனை 'மேகலை'களை எப்படி வெல்லமுடியும்?

பிறருடைய பொறாமையை வளர்ப்பதற்குப் பெரிதும் துணையாயிருந்த இந்த ஓர் அம்சமே பாகவதரின் வளர்ச்சிக்கு மட்டுமல்ல, வீழ்ச்சிக்கும் காரணமாயிருந்தது என்பதை இங்கே நான் வருத்தத்துடன் குறிப்பிடத்தான் வேண்டியிருக்கிறது.

இது தமிழிசையின் துர்ப்பாக்கியமேயாகும். இல்லாவிட்டால் கேட்ட மாத்திரத்தில் சிலரைச் காதவழி ஓடவைக்கும் 'கர்நாடக இசை'யைக்கூட 'மெல்லிசை' யாக்கிப்பாடி, மக்கள் அனைவரையுமே மகிழ்வித்த அந்த மேதையை இதற்குள் நாம் இழந்திருக்கமாட்டோம்.

பாகவதரிடம் இயல்பாகவே அப்போது புகை பிடிக்கும் வழக்கமில்லை; மது அருந்தும் வழக்கமும் இல்லை. அவை இரண்டும் இல்லை என்பதற்காகப் பிற மங்கையருடன் பேசும் வழக்கத்தையாவது அவர் இளங்கோவனுக்கு முன்னால் வைத்துக் கொண்டாரா என்றால் அதுதான் இல்லை. எழுத்தை மதிக்கத் தெரிந்

திருந்தது. அதன் காரணமாக அவர் இளங்கோவனிடம் மட்டுமல்ல, எல்லா எழுத்தாளர்களிடமுமே மதிப்பும் மரியாதையும் வைத்திருந்தார்.

'நீலகண்ட'ரில் தாசி கலாவல்லி வரும் காட்சிகள் அவ்வளவு தத்ரூபமாக அமைந்திருந்ததற்குக் காரணம் ஒரு விதத்தில் இளங்கோவனும் பாகவதரும்தான் என்றாலும், இன்னொரு விதத்தில் கொத்தமங்கலம் திரு சுப்புவும் அதற்குக் காரணம் என்று சொல்ல வேண்டும். அந்தக் காட்சிகளில் அவர் 'மாமா'வேடத்தை ஏற்று நடித்திருந்த விதம் அடாடா!'அசல் மாமாக்'களைக் கூடத் தூக்கி அடித்துவிட்டார் என்றே சொல்லவேண்டும்.

அத்தகைய சிறப்பு வாய்ந்த நடிகர் இன்று கதை வசனம் டைரக்ஷன் என்று போய், எதிலும் கால் ஊன்ற முடியாமல் நிற்பது நம்மனதுக்கு எவ்வளவு சங்கட மாயிருக்கிறது!

அதே மாதிரிதான் திரு சீதாராமனும் – இளங்கோ வன் வசனம் எழுதிய 'ஏழை படும் பாட்'டில் அவர் ஜாவராக நடித்தது இன்றும் நம் நினைவில் நிற்கிறது. மற்றவை...

இதைத்தான் 'தலையெழுத்து' என்று சொல்கிறார்கள் போலும்!

'திருநீலகண்டர்' படப்பிடிப்பின் போதுதான் இரண்டாவது உலக மகா யுத்தம் மூண்டது. அந்தச் சந்தர்ப்பத்தில் தான் பாகவதரின் இன்னொரு விஷேசமான குணமும் வெளிப்பட்டது.

அதாவது, சமீபத்தில் 'தனி நபர் வழிபாடு கூடாது. அதனால் தேசத்துக்கும் சரி, தேச மக்களுக்கும் சரி; நன்மையில்லை' என்று ஒரு புதிய முழக்கத்தை இந்த உலகமே அதிரமுழங்கி, ரஷ்யாவில் இருந்த 'ஸ்டாலின் வழிபாட்டைத் தூக்கிஎறிந்தாரல்லவா'குருஷ்சேவ், அந்தத்

'தனிநபர் வழிபாடு' தமக்கும் உடன்பாடு இல்லை என்பதை அந்த நாளிலேயே செயலில் காட்டியவர் எம்.கே.டி.

மகாத்மா காந்தியிடம் அவர் அளவற்ற மதிப்பும் மரியாதையும் வைத்திருந்தது என்னவோ உண்மைதான்; 'காந்தியைப் போலொரு சாந்த சொரூபனைக் காண்பது எளிதாமோ?' என்று அவர் பாடியதும் என்னவோ உண்மை தான். ஆனால் அவற்றுக்காக அவர் தமக்கென்ற ஒரு தனிவழி வகுத்துக் கொண்டிருந்ததை விட்டுக் கொடுக்கத்தயா ரில்லை.

''இந்திய விடுதலைக்கு இணங்காதவரை இரண் டாவது உலக மகா யுத்தத்தில் இந்தியா பிரிட்டிஷாரோடு ஒத்துழைக்காது''என்றார் காந்திஜி. ''இந்திய விடுதலை வேறு; இரண்டாவது உலகமகாயுத்தம் வேறு!''என்றார் பாகவதர்.

இப்படிச் சொன்னதோடு அவர் நிற்கவில்லை. அப்போது சென்னை கவர்னராயிருந்த ஸர் ஆர்தர் ஹோப், ''யுத்த நிதிக்காக நீங்கள் எங்களுக்குச்சில நாடகங்கள் நடத்திக் கொடுத்து உதவ வேண்டும்''என்று கேட்டுக் கொண்ட போது'' அதற்கென்ன, நடத்திக் கொடுக்கிறேன்!'' என்று நடத்திக் கொடுத்தார்.

அப்போது புகழ் பெற்ற காங்கிரஸ் தலைவர்களில் ஒருவராயிருந்த திரு சத்தியமூர்த்தி சொன்னார் – ''ஓய், பாகவதரே! யுத்த நிதிக்கு நீர் நாடகமா நடத்திக் கொடுக்கப் போகிறீர், நாடகம்? இரும் இரும், உம்முடைய பாகவதர் பட்டத்தையே நான் பறிமுதல் செய்து விடுகிறேன்!'' என்று.

அதைக்கேட்ட பாகவதர் என்ன செய்தார்? – வேறொன்றும் செய்யவில்லை; சிரித்தார்.

அதற்குப் பின் கவர்னர் ஹோப் தலைமையில் ஊருக்கு ஊர் பாகவதரின் நாடகம் நடந்தது; பணமும் லட்சக்கணக்கில் குவிந்தது.

'நன்றி'க்குப் பேர் போன பிரிட்டிஷார் சும்மா இருப்பார்களா? பாகவதருக்கு உடனே 'திவான் பகதூர் பட்டம், கொடுக்க முன்வந்தார்கள்.

பாகவதர் என்ன செய்தார்? வேறொன்றும் செய்ய வில்லை; அதற்கும் சிரித்தார்.

''ஏன் சிரிக்கிறீர்கள்?'' என்று பிரிட்டிஷார் கேட்டார்கள்.

பாகவதர் சொன்னார் :

''பட்டத்துக்காக நான் உங்களுக்கு உதவில்லை; இந்திய மக்களைப் போலவே இந்த உலகத்து மக்கள் அனைவருமே க்ஷேமமாயிருக்கவேண்டும் என்பது என் லட்சியம். அதற்காகவே ஏதோ என்னால் முடிந்த உதவியைச் செய்தேன். உங்கள் பட்டம் எனக்கு வேண்டாம்; போய்வாருங்கள்!''

**கைமாறு செய்வதுண்டோ?...**

இப்போது ஒரு நடிகர் சேர்ந்தாற்போல் பத்துப் படங்களில் கூட நடிக்கிறார். இது அவருக்குக் கொண்டாட்ட மாகவும், அவரை வைத்துப் படம் எடுப்பவர்களுக்குத் திண்டாட்டமாகவும் இருக்கிறது. தம்மை வைத்துப் படம் எடுப்பவர்களை இந்தத் திண்டாட்டத்துக்கு உள்ளாக்கப் பாகவதர் எப்போதுமே விரும்புவதில்லை. ஒருபடத்தில் நடித்துக் கொண்டிருக்கும்போது இன்னொரு படத்தில் நடிக்க அவர் ஒரு நாளும் ஒப்புக்கொள்ள மாட்டார். ஒன்று முடிந்த பிறகே இன்னொன்றில் நடிக்க ஒப்புக் கொள்வார். இதனால் தமக்குத்தான் நஷ்டம் என்பதை அவர் உணராமல் இல்லை; உணர்ந்தும் தம்மால் பிறர் கஷ்டத்துக்கு உள்ளாகக்கூடாது என்று நினைக்கக் கூடிய 'பொன் மனம்' அவருக்கு அப்போது நிஜமாகவே இருந்தது.

இத்தனைக்கும் ஒரு படத்தில் நடிப்பதற்கு அவர் அந்த நாளில் என்ன ஊதியம் வாங்கிக் கொண்டிருந்தார் என்கிறீர்கள் – இப்போது சில நடிகர்கள் வாங்குவதாகச் சொல்கிறார்களே; மூன்று லட்சம், நான்கு லட்சம் என்று – அப்படியா வாங்கிக் கொண்டிருந்தார்? இல்லை. ஆனானப்பட்ட 'அம்பிகாபதி'க்கே சேலம் சங்கர் பிலிம்சார் அப்போது அவருக்குக் கொடுத்த தொகை ரூபாய் பதினோராயிரம் தானாம்!

இப்படிச் சில உண்மைகளை எடுத்துச் சொல்லும் போது சிலர், 'அந்தக்காலம் வேறு, இந்தக்காலம் வேறு' என்று சொல்லி, ஓரேயடியாக அந்த உண்மைகளைத் தார் பூசிமறைக்கப் பார்க்கிறார்கள். அது முற்றிலும் தவறானது மட்டுமல்ல; தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொள்வது மாகும். ஏனெனில், காலம் வெவ்வேறான காலமாயிருக்கலாம்; அந்தந்தக் காலத்துக்கு ஏற்றாற் போல் பணத்தின் மதிப்பும் கூடலாம், குறையலாம். அதற்காக மனம் ஒரு சமயம் 'பித்தளை மன' மாகவும் இன்னொரு சமயம் 'பொன்மன'மாகவும் மாறிவிடக்கூடாது அல்லவா?

அப்படி எந்த விதமான மாற்றத்துக்கும் உள்ளாகாத மனம் பாகவதருக்கு இருந்தது. அதுவே அவருடைய தனிச்சிறப்பு.

அத்தகைய சிறப்பு வாய்ந்த நடிகர் பெருமகனார் ஒரு சமயம் 'திருநீலகண்ட'ருக்காக வெளிப்புறக் காட்சிகள் சிலவற்றை எடுப்பதற்காக வெயிலை எதிர்பார்த்து மரத்தடி நிழலில் உட்கார்ந்திருந்தபோது, ''ஐயா, தருமராசா!''என்று குரல் கொடுத்துக் கொண்டே அவரை நோக்கி வந்தாள் ஒரு கர்ப்பிணிப் பெண்.

''நான் யாரிடமும் என்னுடைய மனைவியை வைத்துச் சூதாடவில்லையே?'' என்றார் பாகவதர் சிரித்துக் கொண்டே.

''அந்த மாதிரி கதியெல்லாம் உங்களுக்கு வர வேணாம். மகாராசா! நீங்க நல்லாயிருக்கணும்; உங்களாலே ஏழைங்க பிழைக்கணும்.''

''சரி, இப்போ எதுக்கு நீ என்னைத்தேடி வந்தே?''

''ஆஸ்பத்திரிக்குப் போறேன். புண்ணியவானே; கையிலே காலணா இல்லே!''

''புத்திர பாக்கியத்துக்கு உன்னை உள்ளாக்கிய புண்ணியவான் எங்கே போயிட்டாரு?''

''அவன் ஒரு சோமாறி; எங்கேயோ எதையோ திருடிவிட்டு ஜெயிலுக்குப் போயிட்டான்!''

''ஸ்! அப்படியெல்லாம் பேசக்கூடாது. கல்லா னாலும் கணவன்; புல்லானாலும் புருஷன்!''

''கல், கணவன்; புல், புருஷன்; திருடன்?''

''அவனை என்ன சொல்றதுன்னு அந்தப் பெரிய வங்க சொல்லலையே?''என்று கையை விரித்தார் பாகவதர்.

பிச்சைக்காரி சிரித்தாள்.

''உன்னால் சிரிக்கக்கூட முடிகிறதா? சிரி, சிரி!'' என்று சொல்லிக் கொண்டே தம் சிப்பந்திகளில் ஒருவரைக் கூப்பிட்டு, அவளிடம் ஒரு பத்துரூபாய் கொடுக்கச் சொன்னார் பாகவதர். அதைப் பெற்றுக்கொண்டு அவள் இரண்டடிகள் எடுத்து வைத்ததுதான் தாமதம், ''ஏமாந்தீரா?'' என்று சொல்லிக் கொண்டே அவரை நோக்கி வந்தார் என்.எஸ்.கிருஷ்ணன்.

''ஏமாந்தேனா? நானா? யாரிடம்?'' என்று பாகவதர் கேட்டார்.

''இப்போது இங்கே வந்து போனாளே, அந்தப் பிச்சைக்காரியிடம்''

''ஓ, அதைச் சொல்கிறீர்களா? அவள் நிஜக் கர்ப்பினி இல்லை; வயிற்றில் தலையணையை வைத்துக் கட்டிக்

கொண்டிருக்கிறாள்' என்று சொல்லப் போகிறீர்கள்; அப்படித் தானே?'' என்றார் பாகவதர், சர்வசாதாரணமாக.

என்.எஸ்.கிருஷ்ணனுக்கு ஆச்சரியம் தாங்க வில்லை. ''அது தெரிந்துமா அவளுக்குப் பத்து ரூபாய் கொடுக்கச்சொன்னீர்?'' என்றார் வியப்புடன்.

''ஆமாம்.''

''நான் ஏமாந்து போய்க் கொடுக்கச் சொன்னதாக அல்லவா நினைத்தேன்?''

''ஏமாறாமல் நாம் யாருக்கு என்ன கொடுத்து விடுகிறோம்?''

இதைக் கேட்டதும் என்.எஸ்.கிருஷ்ணனுக்குத் தூக்கிவாரிப்போட்டது போலிருந்தது. ''எவ்வளவு பெரிய உண்மையை எவ்வளவு சர்வசாதாரணமாகச் சொல்லி விட்டீர்!'' என்று சொல்லிக் கொண்டே அவர் ஒரு கணம் அப்படியே நின்றார். மறுகணம்''உண்மை; நீர் சொன்னது, முக்காலும் உண்மை; முற்றிலும் உண்மை. எந்த மனிதனும் ஏதாவது ஒரு விதத்தில் ஏமாறாமல் யாருக்கும் எதையும் கொடுத்துவிடுவதில்லை; ஏமாந்தே கொடுக்கிறான். காரணம், பொதுநலத்தைப் பற்றி அவன் என்னதான் வாய்கிழியப் பேசினாலும் உடன் பிறந்த சுயநலம் அவனை விட்டு எந்த நிலையிலும் போகாமல் இருப்பதுதான்!'' என்றார்.

''அதனால்தான் அவனிடம் உதவி பெற வருபவர்களும் ஏதாவது ஒரு விதத்தில் அவனை ஏமாற்றியே உதவி பெறப்பார்க்கிறார்கள். அதற்கு இங்கே வந்த பிச்சைக்காரி மட்டும் எப்படி விதி விலக்காயிருக்க முடியும்?'' என்றார் பாகவதர்.

இதைக்கேட்டதும் என்.எஸ்.கிருஷ்ணனுக்கு என்ன தோன்றிற்றோ என்னமோ, ''இதில் நம்மைப் போன்றவர்களுக்கு இன்னொரு ஆபத்து இருக்கிறது!'' என்றார்.

''அது என்ன ஆபத்து?'' என்றார் பாகவதர்.

''இரண்டு நாட்கள் பொறும் சொல்கிறேன்!'' என்றார் அவர்.

இரண்டு நாட்கள் சென்றன.

''ஏதோ ஆபத்து என்றீர்களே, அது என்ன ஆபத்து?'' என்று அவரை மறக்காமல் கேட்டார் எம்.கே.டி.

என்.எஸ்.கே.பதிலுக்கு ஒன்றும் சொல்லாமல் தம் சட்டைப் பையில் படுபத்திரமாக மடித்து வைத்திருந்த ஒரு 'மஞ்சள் பத்திரிகை'யை எடுத்து அவருக்கு முன்னால் போட்டார். அதன் முதல் பக்கத்தில் வெளியாகியிருந்த ஒரு செய்தியைப் படித்தார் பாகவதர்.

அதற்கு மேல் பாகவதர் அந்தப் பத்திரிகையைப் படிக்கவில்லை. அப்படியே மடித்து என்.எஸ். கிருஷ்ண னிடம் கொடுத்துவிட்டு, ஒரு நீண்ட பெருமூச்சு விட்டார். ''இனி இது எதுக்கு என்னிடம்? உம்மிடம் காட்டத்தான் வைத்திருந்தேன்!'' என்று சொல்லிக்கொண்டே அதைக் கிழித்தெறிந்துவிட்டு, ''இம்மாதிரி பத்திரிகைக்காரர்களும் ஒரு விதத்தில் மக்களை ஏமாற்றித்தான் பிழைக்கிறார்கள், இல்லையா?'' என்றார் என்.எஸ்.கே.

''என்ன இருந்தாலும் இப்படி ஏமாற்றிப் பிழைக்கக் கூடாது!'' என்றார் எம்.கே.டி. வருத்தத்துடன்.

இந்தச் சம்பவம் நிகழ்ந்த சில நாட்களுக்கெல்லாம் 'திருநீலகண்டர்' வெளியிடப்பட்டது. வழக்கம்போல் அதுவும் வெற்றிப் படமாக அமைந்தது.

இப்போது ஒரு படம் 'இருபத்தைந்து நாட்கள்' தொடர்ந்து ஓடினால் 'வெள்ளிவிழா' கொண்டாடுகிறார்கள் அல்லவா? அப்போது 'இருபத்தைந்து வாரங்கள்' தொடர்ந்து ஓடினால்தான் 'வெள்ளி விழா' கொண்டாடு வார்கள். அதன்படி 'திருநீலகண்ட'ருக்கும் 'வெள்ளி விழா'

கொண்டாடுவதென்று தீர்மானித்தார்கள். அந்த விழாவுக்குத் தலைமை தாங்க யாரை அழைக்கலாம் என்ற பேச்சு வந்த போது பாகவதர் சொன்னார்:

''சத்தியமூர்த்தியை அழையுங்கள்!''

ஆம், யுத்த நிதிக்கு உதவி நாடகங்கள் நடத்திக் கொடுத்ததற்காக எந்தச் சத்தியமூர்த்தி தம்முடைய பாகவதர் பட்டத்தைப் பறித்துவிடுவேன் என்று மிரட்டினாரோ, அந்தச் சத்தியமூர்த்தியைத்தான் அவர் அழைக்கச் சொன்னார்.

அப்படியே அழைத்தார்கள்; அவரும் மகிழ்ச்சியுடன் அழைப்பை ஏற்றுக்கொண்டு விழாவுக்கு வந்தார். பாகவதரையும் அவருடைய பாட்டின் திறத்தையும் வாயாற, மனமாறப் பாராட்டிவிட்டுத் தமக்கு அவர் அணிவித்த மலர்மாலையைக் கழற்றி அவருக்கு அணிவிக்கப்போனார். அதை ஏற்றுக் கொள்வதற்காகப் பாகவதர் சற்றே குனிந்தபோது, அவருடைய சரிகை அங்கவஸ்திரம் நழுவிக் கீழே விழுந்தது. அதை எடுப்பதற்காக மேலும் குனிந்த அவரைத் தடுத்து, ''இன்றுடன் இந்த சில்க் சட்டையையும் சரிகை அங்கவஸ்திரத்தையும் விட்டுவிடுங்கள். அவற்றுக்குப் பதிலாகக் கதர் ஜிப்பாவையும் கதர் அங்கவஸ்திரத்தையும் அணியுங்கள்!'' என்று சொல்லிக் கொண்டே தாம் அணிந்திருந்த அங்கவஸ்திரத்தை எடுத்து அப்போதே அவர் கழுத்தில் போட்டும் விட்டார் சத்தியமூர்த்தி.

ரசிகர்களின் உற்சாகத்திற்குக் கேட்க வேண்டுமா? காற்றில் உதிரும்புளியம்பழங்களைப் போல் கைதட்டி ஆரவாரித்து, அவர் சொன்னதை அப்படியே ஆமோதித்தார்கள்.

அன்றிலிருந்து பாகவதரின் சில்க் சட்டை மறைந்தது; சரிகை அங்கவஸ்திரமும் மறைந்தது.

ஆம், பிறருடைய பொறாமையை வளர்க்கும் ஆடம்பரத்தைக் கைவிட்டுவிட்டு, அவர் எளிமையில் இன்பம் காண ஆரம்பித்துவிட்டார்.

### கொடையில் சிறந்த கோட்டையூரா!...

பாகவதரின் உள்ளம் வலிமையானது மட்டுமல்ல; மென்மையானதும்கூட' என்பதற்கு இதோ ஓர் உதாரணம்:

ஏறக்குறைய முப்பது ஆண்டுகளுக்கு முன்னால் தம்முடைய ஒரே மகள் செல்வி உமையாளுக்கு டாக்டர் ஆர்.எம்.அழகப்பச் செட்டியார் அவர்கள் கோட்டையூரில் செய்து வைத்த திருமணத்தை இன்னும் கூட யாரும் மறந்திருக்கமாட்டார்கள். திருமணம் என்றால் ஒருநாள் திருமணமா, இரண்டு நாள் திருமணமா?– ஐந்து நாள் திருமணம். அந்த ஐந்து நாள் திருமணமும் வெறும் திருமண விழாவாக மட்டும் நடக்கவில்லை; இசை விழாவாகவும் நடந்தது. பகலில் தென்னிந்திய வித்வான்களின் கச்சேரிகள்; இரவில் வட இந்திய வித்வான்களின் கச்சேரிகள். இவ்வளவு கோலாகலமாக நடந்த அந்த இசைவிழா மேடையிலே அமைக்கப்பட்டிருந்த ஒலிபெருக்கிகள் எத்தனை இருக்கும்?

பத்து இருக்குமா, இருபது இருக்குமா?...

அதெல்லாம் எந்த மூலைக்கு? அங்கே அமைக்கப் பட்டிருந்த ஒலிபெருக்கிகளின் மொத்த எண்ணிக்கை ஐம்பத்தாறு!

கலியாணக் கச்சேரிதானே? அதைக் கேட்க வந்திருந்தவர்கள் எத்தனை பேர் இருக்கும்?

ஆயிரம் இருக்குமா, ஐயாயிரம் இருக்குமா?...

அவ்வளவுதான் இருந்தது மற்றவர்களின் கச்சேரி களில்; ஆனால் பாகவதரின் கச்சேரியிலோ?...

ஒரு லட்சம் பேர்!

அன்றைய தினசரிப் பத்திரிகைகள் பலவற்றில் எது முக்கியச் செய்தி என்கிறீர்கள்? – இதுதான் முக்கியச் செய்தி!

அத்தனை பேர் கூடியிருந்தும் அங்கே நிலவிய அமைதி...

ஒரு தும்மல் சத்தம் இல்லை; ஓர் இருமல் சத்தம்கூட இல்லை.

அதுமட்டுமா?'அட, கச்சேரி கெடக்குது; உங்க பையனுக்கு மெடிகல் காலேஜிலே இடம் கெடச்சிடிச்சா? எவ்வளவு கொடுத்தீங்க?' என்பது போன்ற 'தகவல் சேகரிப்புக'ளோ 'மாமியார் வந்திருந்தாளே, ஊருக்குப் போயிட்டாளா?' என்பது போன்ற 'துக்கவிசாரிப்புக'ளோ அங்கே நிகழவில்லை.

தங்களுக்குள்ள எத்தனையோ அவசர அவசிய அலுவல்களுக்கிடையேயும் ஒரு மரியாதைக்காக வந்து கொஞ்ச நேரம் இருந்துவிட்டுப் போய் விடுவார்களே – ராஜா சர் முத்தையா செட்டியார், சர் ஆர்.கே. சண்முகம் செட்டியார், சர்.சி.பி ராமசாமி அய்யர் போன்றவர்கள் – அவர்கள்கூட அன்று கடைசிவரை உட்கார்ந்திருந்தார்கள்.

ஆம், அன்றொரு நாள் பாகவதரின் பாட்டுக்குப் பாம்பு கட்டுப்படவில்லையா? அதே மாதிரி அன்று மக்களும் கட்டுப்பட்டிருந்தார்கள்.

கச்சேரி ஆரம்பமாயிற்று. ''மன்னன் என்னமாய்ப் பாடுகிறான்!'' என்று ஒரு பக்கம் வியப்பு; 'தமிழிசை இவனால் நிச்சயம் தழைக்கும்' என்று இன்னொரு பக்கம் நம்பிக்கை; 'எந்த ராகத்தையும் எந்தவிதமான பிரயாசையும் அங்கசேஷ்டையும் இல்லாமலே இவனால் எப்படி இவ்வளவு அட்சர சுத்தமாகப் பாட முடிகிறது?' என்று

மற்றொரு பக்கம் மலைப்பு – இப்படியாக அன்றையக் கச்சேரி நடந்துகொண்டிருந்தது.

இடையில் அங்கே வந்திருந்த பெரியோர்களின் ஆசியைப் பெறுவதற்காக டாக்டர் செட்டியார் அவர்கள் உள்ளே பிரவேசித்ததுதான் தாமதம், 'கொடையில் சிறந்த கோட்டையூரா!' என்று கம்பீரமாகத் தம் குரலை ஒரு தூக்குத்தூக்கிப்பாட ஆரம்பித்தார் பாகவதர். அவ்வளவு தான்; அங்கே எழுந்த கையொலி கோட்டையூர் முழுவதையுமே கலகலக்க வைத்தது.

'ஆகா!' என்றனர் சிலர்; 'ஆகாகா!' என்றனர் பலர்.

இவர்களுக்கிடையே இன்னும் ஓர் ஒலி கேட்கிறதே, அது என்ன ஒலி? ...

பாடிக்கொண்டே அதைக் காதுகொடுத்துக் கேட்கிறார் பாகவதர்.

'சூச்சூ!' என்று 'சூ' கொட்டுவோர் ஒரு பக்கம்; 'அடாடா!'என்று அனுதாபம் காட்டுவோர் இன்னொரு பக்கம்...

எதற்காக இந்த அனுதாபம்? யாருக்காக இந்த அனுதாபம்?...

பாடிக்கொண்டே அதையும் கவனிக்கிறார்; பாக வதருக்கு புரிந்துவிடுகிறது; அவருக்கு மிக நன்றாகப் புரிந்து விடுகிறது.

ஆம். அந்த அனுதாபம் கொடைவள்ளலுக்காக; தொழு நோய் என்னும் பேரால் அவரைப் பிடித்திருந்த கொடு நோய்க்காக.

பாகவதரின் மனம் அதைத் தாங்கவில்லை. தாங்கவில்லை என்பது மட்டுமல்ல; அதை விரும்பவும் இல்லை.

ஆம்; சில விஷயங்களில் மக்கள் அனுதாபம் காட்டுவதை விட, காட்டாமலிருப்பதே நல்லது என்பது அவருடைய கருத்து.

அந்தச் சில விஷயங்களில் ஒன்றாக அதையும் கொண்டு விட்டார் அவர்.

அதற்குமேல் அவரால் உற்சாகத்தோடு பாடமுடிய வில்லை; கச்சேரியைச் சீக்கிரமாகவே முடித்துக் கொண்டு விட்டார்.

திரைக்குப் பின்னால் வந்ததும், ''என்ன இப்படித் திடீரென்று முடிந்துவிட்டீர்?''என்றார் அவருடைய அந்தரங்கநண்பர்களில் ஒருவர்.

''நீங்கள் தடுக்கி விழுவதாக வைத்துக் கொள்ளுங் கள்; அப்போது உங்களைப் பார்த்து யாராவது சிரித்தால் உங்களுக்கு எப்படி இருக்கும்?'' என்று அவரைத் திருப்பிக் கேட்டார் பாகவதர்.

சிரித்தால் மட்டுமா! தூக்கிவிட்டால் கூட அப்போது பிடிக்காது!'' என்றார் அவர்.

''அப்படித்தான் இதுவும்!'' என்றார் பாகவதர்.

நண்பருக்குப் புரியவில்லை; ''எதுவும்?'' என்றார் அவர் மீண்டும்.

''கொடு நோய்க்கு உள்ளான கோட்டையூராரைப் பார்த்துச் சிலர் 'சூச்சூ' என்றதும், இன்னும் சிலர் 'அடடா!'' என்றதும்!'' என்றார் பாகவதர்.

''அதற்கு...?''

''கோட்டையூராரே கவலைப்படாதபோது நீங்கள் ஏன் கவலைப்படுகிறீர்கள் என்று கேட்கிறீர்களா? என்ன செய்வேன், அதை என்மனம் தாங்கவில்லையே?'' என்றார் பாகவதர், அதற்குள் தம் கண்களில் தளும்ப ஆரம்பித்து விட்ட கண்ணீரை அவருக்குத் தெரியாமல் மறைப்பதற் காகத் தம்முடைய அறைக்குள் நுழைந்து கொண்டே.

இதே மாதிரி, பாகவதரின் இன்னொரு 'மறக்க முடியாத கச்சேரி' நாகர்கோயிலில் நடந்தது. 'அது எந்தச் சமயத்தில்?' என்கிறீர்களா? திரு என்.எஸ்.கிருஷ்ணன் அங்கே புதுவீடுகட்டி, 'புதுமனை புகுவிழா' நடத்திய சமயத்தில்.

அந்தக் கச்சேரிக்கு வந்திருந்தவர்களில் இருவர் விசேஷமாகக் குறிப்பிடத்தக்கவர்கள். அவர்களில் ஒருவர் கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை; இன்னொருவர் திருவாடுதுறை ராஜரத்தினம்பிள்ளை.

'எந்த ராஜரத்தினம் பிள்ளை?' என்று இதற்குள் யாரும் கேட்க மாட்டீர்கள் என்று நினைக்கிறேன். 'சங்கீதச் சக்கரவர்த்தி' என்று சொல்ல மனம் இல்லாமல் 'நாதசுவரச் சக்கரவர்த்தி' என்று சிலர் 'நாதசுவரம்' என்பதற்கு மட்டும் ஒரு தனி அழுத்தம் கொடுத்துச் சொல்லிக் கொண்டிருக்கிறார்களே, அந்த 'சங்கீதச் சக்கரவர்த்தி' தான்!

பாகவதருடைய பாட்டின் மயக்கமோ என்னவோ, அன்று சாட்சாத் ராஜரத்தினம் பிள்ளை சாட்சாத் ராஜரத்தினம் பிள்ளையாக நடந்து கொள்ளவில்லை; சாதாரண 'காலரி மாஸ்டர்' போல் பாகவதருக்கு எதிர்த்தாற்போல் உட்கார்ந்து, 'ராதே, உனக்குக் கோபம் ஆகாதடி பாடுங்கள், உனைக் கண்டு மயங்காத பேர்களுண்டோ பாடுங்கள்!' என்று கேட்டுக்கொண்டே இருந்தார்; பாகவதரும் புன்னகையுடன் அவர் கேட்டுக் கொண்டிருந்த பாடல்களையெல்லாம் ஒன்று விடாமல்' பாடிக்கொண்டே இருந்தார்.

இதனால் என்ன ஆயிற்று என்கிறீர்கள்? 'பாகவதர் சாதாரண மக்களுக்காகப் பாடுகிறார்; நாங்களோ சங்கீத விற்பன்னர்களுக்காகப் பாடுகிறோம்' என்று சொல்லிக் கொண்டிருந்த சில மகா வித்வான்களின் கொட்டம் அடங்கிப்போயிற்று.

கச்சேரி முடிந்தது. கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை எழுந்தார்; பேசினார்:

''இதற்கு முன் பாகவதரின் பாடல்கள் சிலவற்றை நான் கிராமபோன் ரிகார்டுகளின் வாயிலாகக் கேட்டிருக்கிறேன். இப்போதுதான் முதன்முறையாக நேரில் பாடக் கேட்கிறேன். முன்னது கத்தரிக்காய் வற்றலைச் சமைத்து சாப்பிடுவதுபோல் இருந்தது; பின்னது அன்று பறித்த கத்தரிக்காயை அன்றே சாப்பிடுவது போல் அவ்வளவு சுவையாக இருக்கிறது. காரணம், ரிகார்டு எடுக்கும்போது பாட்டைவிட நேரத்தைத்தான் அதிகமாகக் கவனிப்பார்கள்; குறிப்பிட்ட நேரத்திற்குள் குறிப்பிட்ட பாட்டைப் பாடி முடிக்க வேண்டும் என்பார்கள். இங்கே அப்படியெல்லாம் ஒன்றுமில்லை. பாகவதரும் சுதந்திரமாகப் பாடினார்; நாமும் சுதந்திரமாகக் கேட்டோம். இதனால் எனக்கு இன்னும் ஓர் அனுகூலம் - இங்கே வரும்போது நான் நோயுற்று வந்திருந்தேன்; இப்போது அந்த நோய் நீங்கிப் போகப்போகிறேன். ஆம், பாகவதரின் சங்கீதம் என் நோய்க்கு யாரும் அளிக்க முடியாத சிகிச்சையை அளித்து விட்டது.''

கவிமணியின் நோயைப் போக்கிய பாகவதரின் சங்கீதம் கடைசி காலத்தில் அவருக்கு வந்துற்ற கண்ணின் நோயையும் போக்கியிருந்தால் எவ்வளவு நன்றாயிருந்திருக்கும்!

**மெஞ்ஞானத் தங்கமிது, மேலான தங்கமிது**

பாகவதருக்கும் திரு அண்ணாதுரைக்கும் ஏதாவது தொடர்பு உண்டா?

இது என்ன கேள்வி, நிச்சயமாக உண்டு.

அண்ணாதுரை திருச்சிக்கு வரும் போதெல்லாம் பாகவதரைப் பார்க்காமல் போகமாட்டார். அதுமட்டுமல்ல; அவரைப் பாட வைத்துக் கேட்காமலும் திரும்பமாட்டார்.

வெறும் அரசியல் தலைவர் மட்டும் அல்லவே அண்ணாதுரை? கலைஞரும் அல்லவா?

முதன்முறையாக அவர் பாகவதரைச் சந்தித்த போது, ''எங்கே ஒரு பாட்டு பாடுங்கள்!'' என்றார் வினயத்துடன்.

'' சிவபெருமான கிருபை வேண்டும்!
வேறென்ன வேண்டும்?
சிவபெருமான் கிருபை வேண்டும்!''

என்று வழக்கமான புன்னகையுடன் ஆரம்பித்தார் பாகவதர். ''யாருக்கு?''என்று திடுக்கிட்டுக் கேட்டார் அண்ணாதுரை.

''உங்களுக்குத்தான்!'' என்றார் பாகவதர், அவருடைய ஆட்சேபம் புரிந்தும் புரியாதவர்போல்.

''எனக்கு அவருடைய கிருபை வேண்டாம்; அது உங்களுக்கே இருக்கட்டும்!'' என்றார் அண்ணாதுரை. மென் சிரிப்புடன்.

பின்னால் ஆஸ்திகர்களையும் ஓரளவாவது கவர வேண்டும் என்பதற்காக 'ஒன்றே குலம், ஒருவனே தேவன்' என்று அவர் தம் கொள்கையைச் சற்றே மாற்றிக்கொண்டு விட்டாலும் அதற்கு முன்னால் அவர் திரு ஈ.வே.ரா.வின் அடிச்சுவட்டை அப்படியே பின்பற்றி நாஸ்திகராயிருந்தது தான் நமக்கெல்லாம் தெரியுமே? அதனால் அவர் அப்போது 'சிவபெருமான் கிருபை'யை விரும்பவுமில்லை! வேண்டவு மில்லை.

இதைப் புரிந்துகொண்ட பாகவதர், அத்துடன் அந்தப் பாடலை விட்டுவிட்டு,

'' மெஞ்ஞானத் தங்கமிது, மேலான தங்கமிது,
அஞ்ஞானத் தங்கமெல்லாம் என் தங்கமே,
அநித்திய தங்கமடி, ஞானத் தங்கமே! ''

என்று ஆனந்தமாகப் பாட ஆரம்பித்தார்; அண்ணாதுரையும் அதைப் பரவசத்துடன் கேட்டு அனுபவித்தார்.

பாட்டு முடிந்தது; ''வேதநாயகனைப் பிடிக்கா விட்டாலும் வேதாந்தத்தைப் பிடிக்கும் போலிருக்கிறதே உங்களுக்கு?'' என்றார் பாகவதர்.

'அதையும் பிடிக்காதுதான்! ஆனால் வயதானவர்களுக்குமட்டுமல்ல, வயதாகாதவர்களுக்கும் இந்தக் காலத்தில் வேதாந்தம் ஒரு சுவையான பொழுது போக்காயிருக்கிறது. அந்த வகையில் அது எனக்கும் பிடிக்கிறது. ஆனால் பிறரை ஏமாற்றுவதற்காகச்சிலர் அதைப்பயன்படுத்துகிறார்கள். நான் அதை அவ்வாறு பயன்படுத்துவதில்லை'' என்றார் அண்ணாதுரை.

இதற்குப் பின் திரு அண்ணாதுரை வந்தால் அவர் கேட்காமலே வேதாந்தப்பாடல்கள் சிலவற்றைப் பாகவதர் பாடுவதும், அவற்றைக் கேட்டு அனுபவித்து விட்டு அவர் போவதும் வழக்கமாயிற்று.

இப்படியாக இவர்கள் நட்பு முதிர முதிர, 'பாகவதருக்கென்றே ஒரு கதை எழுதி, அவரை வைத்துப் படம் எடுத்தால் என்ன?' என்ற ஓர் எண்ணம் அண்ணாதுரையின் உள்ளத்தில் உதயமாயிற்று. அதைச் செயல்படுத்த அவர் உடனே பாகவதருக்குரிய கதையை அவரிடம் படித்துக் காட்டி, ''இந்தப் படத்தில் நீங்கள் நடிக்க வேண்டும்'' என்றார்.

''மன்னிக்க வேண்டும்'' என்றார் பாகவதர்.

''எதற்காக?''

''இந்தப்படத்தில் நான் நடிக்கமுடியாமல் இருப்பதற்காக.''

''ஏன்?''

''உங்கள் கதைக்கு ஏற்ற கதாநாயகன் நான் அல்ல.''

''உங்களுக்கென்றே நான் இந்தக் கதையை எழுதியிருக்கும்போது நீங்கள் அவ்வாறு சொல்லக் காரணம்?''

''தெரிந்தோ தெரியாமலோ, நடிக்கும் படங்களில் மட்டுமல்ல; வாழ்க்கையிலும் நான் தெய்வ பக்தி

உள்ளவனாக இருக்கிறேன் என்பது உங்களுக்குத் தெரியும். உங்கள் கதாநாயகனுக்கோ அந்த பக்தி இல்லை. அவனை மையமாக வைத்து எழுதப்பட்டிருக்கும் கதையில் நான் எப்படி நடிப்பேன்? நடிப்புக்காகத் தெய்வ நிந்தனை செய்யக்கூட என்மனம் துணியவில்லையே!''

''உங்கள் கொள்கை அதுவானால், அதில் நீங்கள் உறுதியோடு இருப்பது உண்மையானால், அதற்கு நான் தலைவணங்குகிறேன்!'' என்றார் அண்ணாதுரை, தமக்கே உரிய பெருந்தன்மையுடன்.

''கொள்கை எதுவாயிருந்தாலும் பிறருடைய விருப்பத்துக்கு விரோதமாக அவற்றைத் திணிக்க விரும்பாத உங்கள் பெருங்குணம் என்னை வெகுவாகக் கவருகிறது'' என்று அவரை மனமுவந்து பாராட்டினார் பாகதவர்.

''நீங்கள் மட்டும் அதற்குச் சளைத்தவரா, என்ன? பக்திப் பாடல்கள் என்னுடைய கொள்கைக்கு உடன்பாடு இல்லை என்பதற்காக நீங்கள் வேதாந்தப் பாடல்கள் பாடி என்னை மகிழ்விக்க வில்லையா?'' என்றார் அண்ணாதுரை.

''அதற்காகப் பக்திக் கதை எழுதி, அதில் நீங்கள் என்னை நடிக்கச் சொல்லமாட்டீர்கள் என்று நான் நினைக்கிறேன்!''என்றார் பாகவதர் சிரித்துக் கொண்டே.

''அது நடக்காத காரியம்; நானும்கொள்கைப் பிடிப்பில் உங்களுக்குப் பின் வாங்கியவனல்ல'' என்று அண்ணாதுரை சிரித்துக்கொண்டே எழுந்து நடந்தார்.

'அது என்ன கதை?' என்று தெரிந்துகொள்ள நீங்கள் விரும்புகிறீர்களல்லவா?

அதுவே 'சொர்க்க வாசல்'.

பாகவதருக்குப் பதிலாக அதில் நடித்தவர் யார்?

அவரே திரு கே. ஆர்.ராமசாமி.

பொது வாழ்வில் இவ்வளவு கொள்கைப் பிடிப்போடு இருந்த பாகவதர், தம் சொந்த வாழ்விலே

எப்படி இருந்தார்? தம்மைச் சேர்ந்த சுற்றத்தாரிடையே எப்படி வாழ்ந்தார்?

அதுவும் வியப்புக்குரியதே!

பொதுவாக வறிய குடும்பத்தில் பிறந்த ஒருவர் வளமான வாழ்வு பெற்றால், தம்மைச் சேர்ந்த சுற்றத்தாருக் கெல்லாம் வேண்டாதவராகப் போய்விடுவது உலக இயல்பு.

காரணம் பணந்தான்; அதைக்கொண்டு யாரை யாரால் திருப்தி செய்யமுடியும்?

இந்த நிலையில், ஏதாவது நடக்க முடியாதது நடந்து விட்டால், 'அடேயப்பா, அசுர சாதனையாக அல்லவா இருக்கிறது இது!' என்று சொல்லி மலைத்துக் கொண்டிருந்த பாகவதர், அந்த மலைப்புக்குரிய 'அசுர சாதனையை'யும் தாமே செய்தார். அதாவது, இன்று வரை தம் சுற்றத்தார் யாரும் தம்மைத் திட்டும்படியாக அவர் நடந்து கொள்ளவில்லை. மாறாக, அவருடைய மைத்துனர் ஒருவர் சொல்வதைக் கேளுங்கள்:

''தாம் வாழ்ந்த வாழ்வுக்கு அவர் தம் தங்கையை வளமான ஓர் இடம் தேடிக்கொடுத்திருக்கலாம். அவ்வாறு கொடுக்க அவர் விரும்பவில்லை; தம்மால் ஒரு வறியவ னாவது வளம் பெறட்டுமே!'' என்ற உன்னதமான நோக்கத்தோடு அவர் என்னைத் தேடித் தம் தங்கையைக் கொடுத்தார். ஐயாயிரம், பத்தாயிரம் அல்ல; எல்லாம் மலிவாக விற்ற அந்தக்காலத்திலேயே என்னுடைய கலியாணத்துக்கு அவர் ரூபா ஐம்பதாயிரத்துக்கு மேல் செலவுசெய்தார். அப்போதும் ஒரு நிலைக்கு வரமுடியாமல் நான் திணறிக்கொண்டிருந்தேன். இதை அறிந்த அவர் ஒவ்வொரு மாதமும் ஒண்ணாந்தேதியன்று எங்கள் வீட்டுக்கு வருவார். சுற்றுமுற்றும் பார்த்துக்கொண்டே பூஜை அறைக்குள் நுழைவார். அங்கே சாமி கும்பிடுவது

போல் கும்பிட்டுக் கொண்டே முந்நூறு ரூபாயை எடுத்துக் கணபதியின் விக்கிரகத்துக்குக் கீழே வைத்துவிட்டு போவார். 'இதற்காக நீங்கள் இவ்வளவு தூரம் வருவானேன்? யாரிடமாவது கொடுத்தனுப்பலாமே அல்லது மணியார்டராவது செய்யலாமே?' என்றேன் நான் ஒரு நாள். அதற்கு அவர் சொன்ன பதிலை இன்று நினைத்தாலும் என் நெஞ்சு நெகிழ்ந்து விடுகிறது. யாரிடமாவது கொடுத்தனுப்பினாலோ அல்லது மணியார்டர் செய்தாலோ அது தம் தங்கைக்குத் தெரிந்துவிடுமாம்; தெரிந்தால் அவள் உன்னை மதிக்கமாட்டாளாம். அதற்காக ஒவ்வொரு மாதமும் அவரே வந்து அவளுக்குத் தெரியாமல் அதைப் பூஜை அறையில் வைத்துவிட்டுப் போகிறாராம். இப்படி ஓர் உத்தமரை இனி நான் எந்த ஜன்மத்தில் காணப்போகிறேன்?

அவரால் மட்டுமென்ன, நம்மாலுந்தான் காண முடியப் போகிறதா, என்ன?

**தியானமே எனது மனது நிறைந்தது...**

பாகவதரின் ஏழாவது படமாக வெளிவந்தது 'அசோக்குமார்'. இந்தப் படத்தில் அவருடன் கதாநாயகியாக நடித்தவர் குமுதினி, இவரும் புதுமுகமே.

நடிப்பதற்கு மட்டும்தான் பாகவதர் புதுப்புது முகங்களை அறிமுகப் படுத்திக் கொண்டிருந்தார் என்பதில்லை; பின்னணி பாடுவதற்கும் அவர் புதுப்புது முகங்களை அறிமுகப்படுத்திக் கொண்டிருந்தார். அவர்களில் குறிப்பிடத் தக்கவர்கள் இருவர். ஒருவர் திருமதி எம்.எல். வசந்தகுமாரி, இன்னொருவர் சூலமங்கலம் ராஜலட்சுமி.

புகழ்பெற்ற டைரக்டர் திரு ராஜா சந்திரசேகரால் டைரக்ட் செய்யப்பட்ட இந்தப் படத்தில் திரு எம்.ஜி.ஆர் மகேந்திரன் என்னும் ஒரு சிறு பாத்திரத்தை ஏற்று நடித்தார். அதைக் காரணமாக வைத்துக்கொண்டு இப்போது 'அசோக் குமா'ரை எங்கேயாவது திரையிடுபவர்கள், 'எம்.ஜி.ஆர்

நடித்த அசோக்குமார்' என்று விளம்பரம் செய்கிறார்கள். இது பாகவதருடைய சகோதரர்களின் மனத்தையும், ரசிகர்களின் மனத்தையும் எவ்வளவு தூரம் புண்படுத்துகிறது என்பதை நான் அறிவேன். அவருடைய சகோதரதர்களில் ஒருவரான திரு. சண்முகம் ஒரு சமயம் இதுகுறித்துச் சொன்னார்:

''எத்தனையோ வகைகளில் சிறந்து விளங்கும் எம்.ஜி.ஆர். இதை எப்படி அனுமதிக்கிறார் என்று எனக்குத் தெரியவில்லை!''

நான் சொன்னேன்:

''அவருக்கு இது தெரிந்திருக்காது; தெரிந்திருந்தால் நிச்சயம் அனுமதித்திருக்கமாட்டார்.''

ஆம், பிறருடைய புகழில் பங்குபெறும் விரும்பத் தகாத எண்ணம் வேறு யாருக்காவது இருக்கலாம்; 'பொன் மனச்செம்ம'லான எம்.ஜி.ஆருக்கு இருக்க முடியாதல்லவா?

'அசோக்குமா'ரில் பாகவதரால் பாடப்பட்டுப் பிரபலமான பாடல்களில் ஒன்று 'பூமியில் மானிட ஜென்மம் எடுத்தும் ஓர்...' என்ற பாடலாகும். இது பெரியவர்களை மட்டுமல்ல; குழந்தைகளையும் எவ்வளவு தூரம் கவர்ந்தது என்பதற்கு இதோ ஒரு கடிதம்:

புதுக்கோட்டை 4.1.69.

இரண்டாவது உலகப்போரின் இறுதிக்கட்டம்; சிங்கப்பூர் மீது ஜப்பானிய விமானங்கள் குண்டுமாரி பொழிந்து கொண்டிருந்தன. எதிரியின் விமானங்கள் வந்தால்போதும்; மூலைக்கு மூலை பொருத்தப்பட்டிருந்த அபாய அறிவிப்புச் சங்குகள் 'ஓ'வென்று அலறும். உடனே எல்லோரும் வீட்டைவிட்டு வெளியே ஓடிவந்து, வீதிகளிலே தோண்டிவைக்கப்பட்டிருக்கும் பாதுகாப்புக் குழிகளில் பதுங்கிக் கொள்வார்கள். அப்படிப் பாதுகாப்புக் குழிகளுக்கு ஓடும் போதெல்லாம் ஒரு குடும்பத்தினர்

மட்டும் தங்கள் குழந்தை குட்டிகளோடு ஒரு கிராமபோன் பெட்டியையும், ஓர் இசைத் தட்டையும் சேர்த்து எடுத்துக் கொண்டு ஓடுவார்கள். காரணம், அந்த வீட்டுச் சிறுமி. அவள் படுசுட்டி; கொஞ்சநேரம் சும்மா இருக்கமாட்டாள். ஆனால் இசை என்றால் அவளுக்கு இனிக்கும். ஜப்பானியரின் குண்டு வீச்சுக்குப் பயந்துஓடிப் பாதுகாப்புக் குழியில் பதுங்கிக் கொள்ளும் போதுகூட அவள் சும்மா இருக்க மாட்டாள். வெளியே போகவேண்டுமென்று அழுவாள்; அடம் பிடிப்பாள். ஓடுபவளைத்தடுத்துப் பிடித்தால் திமிறுவாள். அப்போது அவளுடைய பெற்றோர் கையோடு கொண்டு வந்த கிராமபோன் பெட்டிக்குச் சாவி கொடுத்து, அதில் தாங்கள் எடுத்து வந்த இசைத்தட்டை வைத்துச் சுழல விடுவார்கள். அவ்வளவுதான்; அடுத்த நிமிஷமே அவளுடைய அழுகை நின்றுவிடும். அத்துடன் அவள் வெளியேபோக அடம் பிடிப்பதையும் விட்டுவிட்டு, இசைத் தட்டிலிருந்து வரும் இனிய கீதத்தைக் கேட்க ஆரம்பித்துவிடுவாள். அந்தக்கீதம் என்ன கீதம், தெரியுமா? எழிலிசை மன்னர் திரு எம்.கே.தியாகராஜபாகவதர் 'அசோக்குமா'ரில் பாடிய 'பூமியில் மானிட ஜென்மம் எடுத்தும் ஓர் ...' என்ற கீதம்தான்.

– ப. சரஸ்வதி.

இப்படியாக ஜப்பானியர் குண்டு வீச்சிலிருந்து அந்தப் பால் மணம் மாறாப் பச்சிளங்குழந்தையைப் பாதுகாத்து வந்த அப்பாடல் அவளையும், அவளைப் போன்ற ஆயிரமாயிரம் குழந்தைகளைப் பெற்றெடுத்திருந்த தமிழர்களையும் மட்டும் கவரவில்லை; ஆங்கிலேயர்களையும் கவர்ந்தது. அதற்கு உதாரணம் வேண்டுமானால் வேறெங்கும் போகவேண்டியதில்லை; 'எலிபெண்ட்வாக்' என்ற ஆங்கிலப்படத்தைப் பார்த்தால்போதும். இலங்கையிலுள்ள தேயிலைத்தோட்டங்களில் தமிழர்

வேலை செய்வதுபோல் அதில் ஒரு காட்சி வருகிறது. அந்தக் காட்சியில் அவர்கள் வேலை செய்து கொண்டே பாடும் பாட்டு என்ன என்கிறீர்கள்? – 'பூமியில் மானிட ஜென்மம் எடுத்தும் ஓர் ...' என்ற பாட்டுத்தான்!

இப்படியெல்லாம் புகழின் உச்சிக்கே போய்க் கொண்டிருந்த பாகவதரை வெறுமனே பார்த்துக் கொண்டிருக்க இந்த உலகத்திலுள்ள எல்லோருமே மகாத் மாக்களா, என்ன? அந்தமகாத்மாவுக்கே 'கோட்சே'. என்ற ஒரு துராத்மா எங்கிருந்தோ முளைத்தபோது, பாகவதருக்கு முளைக்கக் கேட்கவாவேண்டும்? பல விரோதிகள் பல விதங்களில் முளைத்தார்கள். இதனால் அமைதியை இழந்த பாகவதர், இழந்த அமைதியை மீண்டும் பெறுவதற்காக எங்கெல்லாமோ சென்றார். அம்மாதிரி சமயங்களில் அவருக்கு உற்ற துணையாயிருந்தவர், இப்போது ஈரோடி லுள்ள உயர்தரப்பள்ளி யொன்றில் சங்கீத வாத்தியாரா யிருக்கும் திரு.ஏ.நாகரத்தினம் என்பவராவார்.

இவர் பாகவதரோடும், அவருடைய மூத்த தம்பி திரு கோவிந்தராஜ பாகவதரோடும் ஆலத்தூர் சகோதரர்களில் ஒருவரான திரு சுப்பய்யா என்பவரிடம் முறையாக சங்கீதம் பயின்றவர். இவரை வெறும் நண்பராக மட்டுமல்ல; தம் தம்பிகளில் ஒருவராகவே பாகவதர் கருதிவந்தார். இவர் அவர்பால் ஏற்பட்ட ஆன்ம நேயத்தால் அவரை 'அண்ணா, அண்ணா' என்றே அழைத்துவந்தார். பின்னால் பிறருடைய வற்புறுத்தலுக்கு இணங்கி இவர் திருமணம் செய்து கொண்டாலும், இளமைப் பிராயத்தில் துறவறத்தில் பற்றுக்கொண்டு இவர் திருப்பராய்த்துறையிலுள்ள ராம கிருஷ்ண தபோவனத்தில் வாசம் செய்து வந்தார். அப்போது தபோவனத்தின் தலைவராயிருந்தவர் சுவாமி சித்பவா னந்தர். அவரிடம் அனுமதி பெற்று இவர் பாகவதருக்கு ஒரு கடிதம் எழுதினார். அந்தக் கடிதத்தின் சுருக்கம் இது;

''பல காரணங்களால் தற்போது நீங்கள் மன அமைதி இழந்து தவிப்பதாக நான் அறிகிறேன். இது உண்மையானால், உங்களுக்கு நான் ஒரு யோசனை சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். வங்காளத்தில் ஒரு சமயம் மன அமைதி இழந்து தவித்த நடிகர் திரு கிரீஸ்சந்திர கோஷை மகா புருஷராக்க அங்கே ராமகிருஷ்ண பரமஹம்சர் இருந்தார். அவரைப்போலவே உங்களையும் மகாபுருஷராக்க இங்கே சுவாமி சித்பவானந்தர் இருக்கிறார். வாருங்கள்; வந்து அவருடைய அருளைப் பெற்று அமைதியுறுங்கள்.''

அப்போதிருந்த நிலையில் பாகவதர் அந்தக் கடிதத்தை அலட்சியம் செய்யவில்லை; உடனே திருப்பராய்த் துறைக்குப் போனார். சுவாமி சித்பவானந்தரை மனம், மொழி, மெய்களால் வணங்கினார். சில நாட்கள் அங்கேயே தங்கியிருந்து, அவருடைய அருளைப் பெறவும் விரும்பினார். ஆனால் மக்கள் அதற்கு இடம் கொடுக்கவில்லை; அவர் தபோவனத்திற்கு வந்திருக்கும் செய்தியை எப்படியோ அறிந்து கொண்டுவிட்ட அவர்கள், அங்கே 'திமுதிமு' வென்று திரள ஆரம்பித்துவிட்டார்கள்.

இந்த 'அன்புத்தொல்லை'யைப் பார்த்தார் நண்பர்; 'இனி இந்த இடத்தில் பாகவதர் அமைதி பெறமுடியாது' என்ற தீர்மானத்துக்கு வந்தார். சுவாமி சித்பவானந்தரிடம் விடைபெற்றுக் கொண்டு, நேராகச் சோளிங்கபுரத்துக்கு வந்தார். அங்குள்ள சஞ்சீவித் தீர்த்தத்தில் அவரை நீராட வைத்தார். அப்படியே திருப்பதிக்குச் சென்று இருவரும் வேங்கடாசலபதியைத் தரிசித்தார்கள்.

அதற்குள்''எங்கே பாகவதரைக் காணோம்?'', ''பாகவதர் எங்கே போய்விட்டார்?'' என்று சென்னையிலிருந்த படாதிபதிகள் அவரைத் 'தேடு,தேடு' என்று தேட ஆரம்பித்துவிட்டார்கள்.

''திருச்சியிலிருந்து அந்தச் சேலம் நாகரத்தினத்துடன் அவர் எங்கேயோ போனாராம்'' என்றார் ஒருவர்.

''அந்தச் சாமியார் பயல் தன்னைப்போல் பாகவதரையும் சாமியாராக்காமல் விடமாட்டான் போலிருக்கிறதே!'' என்றார் இன்னொருவர்.

சென்னையிலிருந்து வந்த யாத்திரிகர்கள் மூலம் இந்தச் செய்தியை அறிந்த நாகரத்தினம் இதைப் பொருட்படுத்தவில்லை. பாகவதரை அழைத்துக்கொண்டு காஞ்சிக்கு வந்தார். திரு அண்ணாதுரை திருச்சிக்கு வந்தால் எப்படிப் பாகவதரைப் பார்க்காமல் போக மாட்டாரோ, அப்படியே பாகவதரும் காஞ்சிக்கு வந்தால் அண்ணா துரையைப் பார்க்காமல் போகமாட்டார். அந்த வழக்கத்தை யொட்டிக் காஞ்சி வரதராஜப்பெருமாளைத்தரிசித்தது போலவே அண்ணா துரையையும் தரிசித்தார் பாகவதர். உண்மையான பக்தனுக்கு 'மனிதன் –தெய்வம்' என்ற வேறுபாடு ஏது? அவன் மனிதனில் தெய்வத்தையும், தெய்வத்தில் மனிதனையும் காணக்கூடியவனல்லவா?

அதற்குப் பின்னும் அவர்கள் காஞ்சியோடு நிற்கவில்லை; தமிழ் நாட்டிலுள்ள அத்தனை தலங்களுக்கும் சென்றார்கள். அந்தந்தத் தலங்களுக்குரிய பாடல்களை மனம் உருகப் பாடி மன அமைதி பெற்றார்கள்.

இந்தத் தீர்த்த யாத்திரையின் போதுதான் தருமபுர ஆதீனத்தில் கச்சேரி செய்யும் வாய்ப்பு பாகவதருக்குக் கிடைத்தது. அதன் காரணமாக 'எழிலிசை மன்னர்' என்ற பட்டத்தையும் அவர் பெற்றார்.

இது தவறு என்றும், 'ஏழிசை மன்னர்' என்பதுதான் சரி என்றும் சிலர் சொல்கிறார்கள்.

எதுவாயிருந்தால் என்ன? இரண்டு பட்டங்களுமே பாகவதருக்குப் பொருந்துமல்லவா?

*ஆஹா என்ன பேரானந்தம்!...*

*உண்மை சில சமயம் பிரமை போலவும், பிரமை சில சமயம் உண்மை போலவும் தோற்றமளிப்பதுண்டு. இந்த மாயையில் முதலிடம் வகிப்பது சினிமா உலகம்.*

*அந்த உலகத்தைச் சேர்ந்த சிவாஜி கணேசனுக்கும், எம்.ஜி.ஆருக்கும் ஏதோ விரோதம் போன்ற ஒரு பிரமை இப்போது அவர்களுடைய ரசிகர்களுக்கிடையே இருந்து வருகிறதல்லவா? அதற்காக வரட்டிக்கும், வயல்வெளி களுக்கும் பயன்படக்கூடிய மாட்டுச் சாணம் கூட வீணாகி வருகிறதல்லவா? அந்தப் பிரமை எம்.கே.டி பாகவதர், பி.யு சின்னப்பா ஆகியோரின் ரசிகர்களுக்கிடையேயும் அந்த நாளில் இருந்து வந்தது. அதற்காக எம்.ஜி.ஆரும் சிவாஜி கணேசனும் இன்று தங்கள் அபிமானிகளிடம் சொல்லி வருவதுபோலவே சின்னப்பாவும், பாகவதரும் அன்று சொல்லி வரவேண்டியிருந்தது;*

*''பாகவதரா! அவருடைய பாட்டென்றால் எனக்கு உயிர்; அவரும் நானும் இந்த உலகத்தில் பிறப்பதற்கு முன்னாலேயே பிரேமையில் மறந்து இருந்தோம்!'' என்பதுபோல் சின்னப்பா ஏதாவது சொல்லிவைப்பார் தம் அபிமானிகளிடம்.*

*''சின்னப்பாவா! அவருடைய பாட்டைக் கேட்காமல் எனக்குத் தூக்கமே பிடிக்காது; எங்கள் நட்பு ஏழேழு ஜன்மத்துக்கும் யாராலும் பிரிக்கமுடியாதது!'' என்பது போல் பாகவதரும் ஏதாவது சொல்லிவைப்பார் தம் அபிமானிகளிடம்.*

*இதைக் கேட்கும் அபிமானிகள் என்ன செய்வார்கள் பாவம். அவர்களும் அதை நம்புவதுபோல் நடித்துவிட்டுப் போவார்கள்.*

*அந்த நாளில் மட்டும் என்ன, இந்த நாளிலும் நடிப்பு, நாடகத்துறை, சினிமாத் துறையோடு நிற்காமல் வாழ்க்கைத்*

துறையிலும் இடம் பெற்றுத்தானே இருக்கிறது? இல்லா விட்டால் திருடன் கூட 'நான் ஒரு சோஷலிஸ்ட்; இல்லாதவனுக்காக இருப்பவனிடமிருந்து திருடுகிறேன்!'' என்று சொல்ல, நடிக்க ஆரம்பித்திருப்பானா?

உண்மை என்னவென்றால், தொழில் எதுவா யிருந்தாலும் அதில் போட்டியும் பொறாமையும் இருப்பது இயற்கை; இருக்கவும் வேண்டும். இல்லாவிட்டால் எந்தத் தொழிலும் வளராது; வாழாது. நஞ்சைக்கூட ஓரளவுக்கு மருந்தில் சேர்த்துக்கொண்டால் அது உடற்பிணியைப் போக்கி உயிரைக் காக்கிறதல்லவா? அதே மாதிரி தான் போட்டியும் பொறாமையும் கூட ஓரளவுக்கு இருந்தால் அவை கலையைக் காக்கின்றன; கலைஞனையும் காக்கின்றன.

இந்த உண்மையைச் சிலர் ஒப்புக் கொள்ளத் தயங்குவதால் என்ன நடக்கிறது? திரையிலும் மேடையிலும் நடிப்பது போதாதென்று வாழ்க்கையிலும் நடிக்க வேண்டியதாகிவிடுகிறது. பொதுவாக மனிதனுக்குள்ள பலவீனங்களில் இதுவும் ஒன்றுதான் என்றாலும், இதைச் சம்பந்தப்பட்ட நடிகர்களும் உணருவதில்லை; இதனால் அவர்கள் பொய்யை உண்மை போலவும், உண்மையைப் பொய்போலவும், பேச வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உள்ளாகி விடுகிறார்கள்.

இத்தகைய ரசிகர் ஒருவர் நெல்லை மாவட்டத்திலே இருந்தார். அவர் பி.யு.சின்னப்பாவின் படம் வந்தால் போதும், பார்க்காமல் இருக்கமாட்டார்; அவருடைய பாடல் எது வாயிருந்தாலும்கேட்காமல் விடமாட்டார். அதுமட்டுமா? நினைத்த போதெல்லாம் அவருடைய பாடல்களைக் கேட்டுக்கொண்டே இருக்கவேண்டும் என்பதற்காக அந்தரசிகர் தம்வீட்டில் அதற்கென்றே ஒரு கிராமபோன் பெட்டியையும், அதில் போட்டுக் கேட்கச் சின்னப்பாவின் ரிகார்டுகளையும் ஒன்று விடாமல் வாங்கி வைத்திருந்தார்.

அப்படிப்பட்ட ரசிகர் ஒருநாள் நெல்லையில் நடந்த பாகவதரின் கச்சேரியை நேருக்கு நேராகக் கேட்க நேர்ந்தது; அவ்வளவுதான் - கச்சேரி முடிந்ததும் அவர் வீட்டுக்கு வந்தார்; சின்னப்பாவின் ரிகார்டுகளை ஒன்று விடாமல் பொறுக்கி எடுத்தார்; சுத்தியலும் கையுமாக உட்கார்ந்து அவற்றை அடித்து நொறுக்கி, அவை மூலைக்கு மூலை சிதறி விழுவதைக் கண்டு சிரித்தார், சிரித்தார், சிரித்துக் கொண்டே இருந்தார்.

'கச்சேரிக்குப் போகும்போது நன்றாய்த்தானே போனார்? திரும்பிவந்ததும் இவருக்கு என்ன வந்துவிட்டது?' என்று தெரியாமல் வீட்டிலிருந்தவர்கள் திகைத்தார்கள்; 'ஒருவேளை சித்தப் பிரமையாக இருக்குமோ?' என்று அவரைச் சந்தேகக்கண்ணோடு பார்த்தார்கள்.

அப்போது எதிர்பாராத விதமாகத் திரு என்.எஸ். கிருஷ்ணன், பாகவதருடன் அங்கே வந்தார். அவருக்கு ஏற்கெனவே அந்த ரசிகரைத் தெரியும்; இருவரும் நண்பர்கள் கூட. எம்.கே.டிக்கு அவரை அறிமுகப்படுத்தி வைத்தார் என்.எஸ்.கே.

அங்கே சிதறிக் கிடந்த கிராமபோன் பிளேட் சில்லு களைக் கண்ட.பாகவதர், ''இதெல்லாம் என்ன?'' என்று ஒன்றும் புரியாமல் கேட்டார்.

''ரிகார்டுகள் ஹஹ்ஹஹ்ஹா... பி.யு.சின்னப்பா வின் ரிகார்டுகள்!'' என்று அப்போதும் சிரித்தார் அந்த ரசிகர்.

''அடாடா! இதை ஏன் இப்படி உடைத்து எறிந்தீர்கள்?''

''உங்கள் கச்சேரியை முதன்முறையாகக் கேட்டேன்; அதற்குப்பின் இவருடைய பாடல்களைக் கேட்க எனக்குப் பிடிக்கவில்லை. அதனால் உடைத்தெறிந்துவிட்டேன்!''

பாகவதர் சிரித்தார்; ''ஏன் சிரிக்கிறீர்கள்?'' என்று கேட்டார் ரசிகர்.

''சின்னப்பா நேரில் பாடக்கேட்டால் என்னுடைய ரிகார்டுகளைக் கூட இப்படித்தான் உடைத்தெறிந்து விடுவீர்களா, என்ன?'' என்றார் எம்.கே.டி.

ரசிகரின் முகம் சுருங்கிற்று; பாகவதர் மேலும் சொன்னார்;

''எந்த வகையில் பார்த்தாலும் இது அநியாயம்! தொழில் முறையில் எனக்கும் சின்னப்பாவுக்குமிடையே ஓரளவு போட்டி இருக்கலாம்; பொறாமையும் இருக்கலாம். அதற்காக இந்த வெறியை என் மனம் தாங்காது. அத்துடன் நானும் அவரும் ஒரே பாணியில் பாடுபவர்கள்கூட அல்லவே? இருவரும் வேவ்வேறு பாணியிலல்லவா பாடு கிறோம்? உங்களைப் போன்ற ரசிகர்கள் எங்கள் இருவருடைய பாடல்களையுமே கேட்டு அனுபவிக்கலாமே!''

இந்தச் சமயத்தில் என்.எஸ்.கே குறுக்கிட்டு, ''நேற்று வரை இவர் அப்படி அனுபவித்துக் கொண்டிருந்த வர்தான். இன்று என்னவோ தெரியவில்லை. நீங்கள் நேரில் பாடக் கேட்டதும் இப்படி ஒரு வெறி இவருக்கு வந்திருக்கிறது. அதனாலென்ன, நம்மைவிடவயதில் குறைந்த இவரிடம் நாமும் நமக்குள்ள நிதானத்தை எதிர்பார்க்கக் கூடாதல்லவா?''என்றார்.

மூவரும் சிரித்துக் கொண்டே உள்ளே போனார்கள். அந்த ரசிகர் யாராயிருக்கும் என்பதை நேயர்களில் பலர் இதற்குள் ஊகித்திருக்கக்கூடும் – அவரே முக்கூடல் பீடிச் சக்கர வர்த்தியாயிருந்து அண்மையில் மறைந்த திரு அரிராம் சேட்.

மறுநாள் காலை என்.எஸ்.கே. ஏதோ வேலையாக அப்படியே நாகர்கோயிலுக்குப் போய்விட்டார். பாகவதர் மட்டும் தம் காரில் சென்னைக்குத் திரும்பிக் கொண்டிருந்தார். வழியில் ஒரு சிற்றூர். அதைக் கடந்து வரும்போது ரயில்வே கேட்' ஒன்று குறுக்கிடவே பாகவதரின் கார் நின்றது.

யாரோ ஒரு கட்டை வண்டிக்காரன்; அருகிலிருந்த காட்டிலிருந்து விறகு வெட்டி எடுத்துக் கொண்டு அந்த வழியே வந்து கொண்டிருந்தான்.

''ஆஹா, என்ன பேரானந்தம்!''...

பாகவதரின் பாட்டுத்தான். ஆனால் பாடியவர் பாகவதர் அல்ல; கட்டை வண்டிக்காரன்.

காருக்கு வெளியே தலையை நீட்டி அவனைப் பார்த்தார் பாகவதர். அவ்வளவுதான்; ''சாமி, நீங்களா?'' என்று வாயெல்லாம் பல்லாகச் சொல்லிக்கொண்டே அவன் வண்டியை நிறுத்திவிட்டுக் கீழே இறங்கினான். ''எத்தனை நாளா என் சாமியைப் பார்க்கணும்னு நான் நெனைச்சிக் கிட்டு இருந்தேன்? - இன்னிக்குப் பார்த்துட்டேன் சாமி, என் கண் குளிரப் பார்த்துட்டேன் - இருங்க, சாமி! இன்னிக்கு என்கையாலே ஒரு சோடாவாச்சும் வாங்கிச் சாப்பிடாம நீங்க இங்கேயிருந்து போகவேகூடாது - ஆமாம்!'' என்று படுகறாராகச் சொல்லிக்கொண்டே அவன் அங்குமிங்கும் ஓடினான்; எங்கிருந்தோ ஒரு கோலிச் சோடாவை வாங்கிக் கொண்டு அவசரம் அவசரமாக வந்து அவரிடம் நீட்டினரன்.

'அவரு இந்தச் சோடாவையெல்லாம் குடிக்க மாட்டாரு, ஐயா!'' என்றார் டிரைவர்.

'இங்கே சோடாவா பெரிது, அதைக்கொடுக்கும் அன்புக் கையல்லவா பெரிது!'' என்று சொல்லிக் கொண்டே பாகவதர் காரைவிட்டுக் கீழே இறங்கி, வண்டிக்காரன் கொடுத்த சோடாவை இருகைகளாலும் வாங்கி, 'மடக், மடக்' கென்று குடித்தார்.

பரம திருப்தி வண்டிக்காரனுக்கு; ''ஆஹா, என்ன பேரானந்தம்!''என்று அவன் மறுபடியும் பாடவே ஆரம்பித்து விட்டான்.

அதற்குள் 'கூகுக்' என்று கூவிக்கொண்டு ரயில் வந்து விடவே, டிரைவர் காரைக் கிளப்ப முயன்றார். என்ன ஆச்சரியம்! பாகவதரைத் தம் பெட்டியிலிருந்தபடியே எப்படியோ பார்த்துவிட்ட 'கார்டு' சிவப்புக்கொடி காட்டி ரயிலை நிறுத்திவிட்டு, ''ஆஹா, என்ன பேரானந்தம்!'' என்றார்.

அதைக்கேட்ட பாகவதரின் கண்களில் உணர்ச்சிப் பெருக்கால் நீரே துளிர்த்துவிட்டது. ''நீங்களெல்லாம் என்னிடம் இத்தனை அன்புகாட்ட உங்களுக்கு நான் என்ன செய்துவிட்டேன், என்ன செய்யப்போகிறேன்?'' என்று கரம் குவித்தார்.

''ஒன்றும் செய்யவேண்டாம். நீங்கள் ஆனந்தமாகப் பாடிக்கொண்டே இருங்கள்; நாங்கள் ஆனந்தமாகக் கேட்டுக்கொண்டே இருக்கிறோம்!'' என்ற 'கார்டு' பச்சைக்கொடி காட்டி ரயிலை அங்கிருந்து நகர்த்தினார்.

அந்த ரயிலுடன் பாகவதரின் இதயமும் நகர்ந்தது!

### கடவுள் பதம் பணிவது நமது கடன்...

பாகவதருடன் நெருங்கிப் பழகிய சிலர் அவரைச் சித்தர் என்று சொல்வதுண்டு. எதற்காக? தம் வாழ்நாளில் சித்தர் சிலருடன் அவர் தொடர்பு கொண்டிருந்ததற்காகவா? இல்லை, இந்த உலகத்தோடு அவர் ஒட்டியும் ஒட்டாமல் இருந்ததற்காக; சமூகத்தோடு அவர் சேர்ந்தும் சேராமல் சமாளித்தற்காக; குடும்பத்தோடு அவர் பட்டும் படாமல் வாழ்ந்ததற்காக.

அப்படிப்பட்ட சித்தர், 'எங்கேயாவது, எப்பொழு தாவது சொற்பொழிவு ஆற்றியதுண்டா?'என்று இக்கால நடிகர்கள் சிலரை மனத்தில் வைத்துக்கொண்டு என்னைச் சிலர் எழுதிக் கேட்கிறார்கள்.

ஆற்றியிருக்கிறார் – எங்கே, அரசியல் கூட்டங் களிலா? இல்லை. அந்த வம்புக்கே அவர் போவதில்லை. தம்முடைய துறையில் முன்னேற அது அவருக்கு அவசிய மாகவும் இருந்ததில்லை.

அது மட்டுமல்ல; தம்மைப் பற்றியோ, தம்முடைய நடைமுறைகளைப் பற்றியோ பத்திரிகைகளுக்கு அவ்வப் போது செய்தி கொடுத்துக்கொண்டிருக்க அவர் யாரையும் தம் சொந்தப் பொறுப்பிலோ, கம்பெனிப் பொறுப்பிலோ மாதச் சம்பளத்தில் நியமித்துக்கொண்டதும் கிடையாது.

இந்த நாளில் சகோதர எழுத்தாளர்களில் சிலர், வயிற்றுக்கொடுமையால் 'நட்சத்திரதாசர்'களாக இருக்கும் அவல நிலையை நாம் பார்க்கிறோம். அவர்கள் இரவென்றும் பகலென்றும் பாராமல் பத்திரிக்கைக் காரியா லயங்களை நோக்கி 'ஓடு,ஓடு' என்று ஓடிக்கொண்டிருக்கி றார்கள். மிக்க சிரமத்துடன் அவர்களைத் தடுத்து நிறுத்தி ''என்ன விஷயம்?'' என்று விசாரித்தால், ''ரொம்ப ரொம்ப முக்கியமான விஷயம்'' என்று இரைக்க இரைக்கச் சொல்லிக் கொண்டே அவர்கள் நிற்கிறார்கள்.

''உங்களில் நான் ஒருவன் அல்லவோ, என்னிடம் அது என்ன விஷயம், சொல்லீரோ?'' என்றால், ''அடா டாடாடா! இன்றைக்கு எங்கள் 'பாஸ்' ஒரு தும்மல போட்டார் பாருங்கள், பேஷான தும்மல்! படு பிரமாதமான தும்மல்! அந்த மாதிரி ஒரு தும்மலை இதுவரை வேறு யாரும் போட்டு நீங்கள் பார்த்திருக்க மாட்டீர்கள். சுற்றியிருந்தவர்க ளெல்லாம் சும்மா அப்படி அப்படியே சாய்ந்து சாய்ந்து விழுந்துவிட்டார்கள். அந்தப் பரபரப்பான செய்தியைப் பத்திரிகைகளுக்குக் கொடுத்துவிட்டுவரத் தான் இப்போது நான் பஞ்சாய்ப் பறந்து கொண்டிருக்கிறேன்!'' என்று 'சகவாசதோஷ'த்தால் ஏற்பட்ட சாகசத்துடன் அவர்கள் சொல்கிறார்கள்.

''இதில் ஏன் இவருக்கு இவ்வளவு அக்கறை?'' என்று நாம் வியக்கும்போது, ''சும்மா இல்லை, சுவாமி! அதற்காக அவருக்கு மாதம் பிறந்தால் சம்பளம் உண்டு!'' என்கிறார் நம்மைவிட அவரை நன்கு அறிந்த ஒருவர்.

''அப்படியா? ஏதோ காலத்தை ஓட்டட்டும்!'' என்று நாம் திருப்தியுறுகிறோம்...

இம்மாதிரி நாம் திருப்தியுறுவதற்காகக் கூடப் பாகவதர் யாரையும் தம்மிடம் வேலைக்கு அமர்த்திக் கொள்ளவில்லை. அதன் பலன்? - அவரைப் பற்றிய செய்திகள் பல பத்திரிகைகளுக்கு எட்டாமலே போய் விட்டன. இப்போது நாமே முனைந்து அவற்றைச் சேகரிக்கும் போது நமக்குக் கிடைப்பவை ஒரு சிலவே.

அவ்வாறு நான் சேகரித்த செய்திகளிலிருந்து அவர் தம் வாழ்நாளில் பொது மக்களுக்கு முன்னால் இருமுறை பேசியதாகத் தெரிகிறது. ஒருமுறை இலங்கையைச் சேர்ந்த யாழ்ப்பாணத்தில், இன்னொரு முறை தமிழ் நாட்டைச் சேர்ந்த திருவையாற்றில்.

அதுவும் எதற்காக? - 'பேசித்தான் தீரவேண்டும்' என்ற நிர்ப்பந்தத்துக்காக.

யாழ்ப்பாணத்தில் ஒரு கச்சேரி; உதவி நிதிக் கச்சேரி; எதற்காக? ஒரு கல்லூரிக்காக.

புகழ் பெற்ற பக்க வாத்தியக்காரர்களுடன் பாகவதர் பாடினார்; கச்சேரி முடிந்தது. தலைவர் பேசுவதற்காக எழுந்தார். பாகவதரைப் 'பாராட்டு, பாராட்டு ' என்று பாராட்டித் தீர்த்த அவர், பக்க வாத்தியக்காரர்களைப் பாராட்ட மறந்தே விட்டார்.

இது பாகவதருக்கு என்னவோ போலிருந்தது; சர்க்கரை இல்லாமல் காப்பி சாப்பிட்டவர்போல் முகத்தை வைத்துக்கொண்டு எழுந்தார். 'எனக்குப் பாடித்தான்

பழக்கம்; பேசிப் பழக்கம் இல்லை'' என்ற அவையடக்கத்துடன் தம் பேச்சை ஆரம்பித்தார். ''உப்பி ல்லாமல் எந்த உணவும் ருசிக்காது; அதே மாதிரி பக்க வாத்தியக் காரர்கள் இல்லாமல் எந்தப்பாட்டும் ரசிக்காது. இங்கே நான் பாடிய அத்தனை பாடல்களும் உங்களை இன்பக் கடலில் ஆழ்த்திய தென்றால் அதற்கு நான் மட்டும் காரணமல்ல; பக்க வாத்தியக்காரர்களும் காரணமாவார்கள். அவர்கள் இல்லாமல் நான் இல்லை; நான் இல்லாமல் அவர்கள் இல்லை. பாட்டைத் தனியாக ரசிக்கமுடியும். இங்கே என்னைப் பாராட்டிப் பேசிய தலைவர், அவர்களைப் பாராட்டிப் பேசமறந்ததற்குக் கூட அவர்களுடைய வாசிப்பில் அவர் தம்மையே மறந்திருந்ததுதான் காரணம் என்று நான் நினைக்கிறேன்!'' என்று அவர் தொடர்ந்தாரோ இல்லையோ, சபையில் எழுந்த கையொலி அடங்க நீண்ட நேரமாயிற்று.

அடுத்தாற்போல் திருவையாற்றில்:

இரவு எட்டுமணிக்குக் கச்சேரி; அந்தக் கச்சேரிக்குப் பஞ்ச நதீஸ்வரர் கோயில் தெற்குப் பிரகாரத்தில் உள்ள பொற்றாமரைக் குளத்தருகே ஓர் அழகான மேடை அமைக்கப்பட்டிருந்தது. கூட்டத்துக்குக் குறைவில்லை, திருவையாறே திரண்டிருந்தது. பாகவதர் பாடினார்; ஒவ்வொரு பாடலும் பஞ்சாமிர்தமாகச் சுவைத்தது. கச்சேரி முடிந்ததும் கோயில் நிர்வாகிகள் தெற்குக் கோபுர வாசலி லிருந்த ஆள்கொண்டார் சன்னிதிக்கு அவரை அழைத்துச் சென்றார்கள். பாகவதரின் வருகையை முன்னிட்டு அன்று ஆள் கொண்டாருக்கு விசேஷ அபிஷேக அலங்கார மெல்லாம் செய்யப்பட்டிருந்தது. குழந்தைகளும் குட்டி களுமாகக் கோயிலில் ஏகக் கூட்டம். ஆள் கொண்டாருக்கு ஆரத்தி காட்டிய கற்பூரத்தட்டை எடுத்துக்கொண்டு பாகவதரை நோக்கி வந்த அர்ச்சகர், குறுக்கே வந்து விழுந்த குழந்தைகளின் தலைகளில் குட்டி, அவர்களை விரட்டிக்

கொண்டு வந்தார். அதைப் பார்த்த பாகவதர் அந்தக் குட்டுக்கள் அத்தனையும் தம் தலையில் விழுந்தாற்போல் தடவிக்கொண்டார். சுற்றியிருந்தவர்களுக்கு ஒன்றும் புரியவில்லை; முகத்தில் கேள்விக் குறியுடன் அவரையே பார்த்துக் கொண்டிருந்தனர். அதற்குள் ஆரத்தி அவரை நெருங்கிற்று; தொட்டுக் கண்ணில் ஒற்றிக் கொண்டார். விபூதி குங்குமத்தையும் எடுத்து அணிந்து கொண்டு, ஆள் கொண்டாரைப் பயபக்தியுடன் சேவித்தார். ''கொஞ்சம் இருங்கள்!'' என்று சொல்லிக் கொண்டே மறுபடியும் கோயிலுக்குள் சென்ற அர்ச்சகர், பெரிய ரோஜாப்பூ மாலையுடன் திரும்பிவந்து, அதைப் பாகவதரின் கழுத்தில் போட்டுவிட்டு நின்றார்.

''அன்பர்களே!''

திடீரென்று இப்படி ஒரு குரல் ஒலித்ததும் 'பேசுவது யார்?' என்று தெரியாமல் எல்லோரும் ஒருவரையொருவர் பார்த்து விழித்தனர்.

''நான் தான் பேசுகிறேன், அன்பர்களே!'' என்றார் பாகவதர். உடனே எல்லோரும் அவரை நோக்கித் திரும்பினார்கள்.

''எனக்கு ஒரு குருநாதர் அல்ல; பல குருநாதர்கள் உண்டு. அவர்களில் ஒருவர் கோடையிடி ராமசாமி பக்தர்.அவர் இந்த ஊர் மேலவீதியிலே குடியிருந்தார். நான் பத்துப் பன்னிரண்டு வயது பாலகனாக இருந்தபோது அவரிடம் சங்கீதம் கற்றுக் கொள்வதற்காக விடப்பட்டேன். அவர் எனக்குக் குருநாதர் மட்டுமல்ல; ஒரு விதத்தில் உறவினரும் கூட. ஆகவே அவர் ஏதாவது வாங்கித் தின்பதற்காக அடிக்கடி எனக்குக் காசு கொடுப்பார். அந்தக்காசை எடுத்துக்கொண்டு நான் இந்தக் கோயிலுக்கு வருவேன்; குங்கிலியம் வாங்கி, அதோ இருக்கிறதே, அந்த அக்கினிக்குழியில் போட்டுவிட்டு ஆள்கொண்டாரை

வணங்கி ஆசிபெறுவேன். வெள்ளிக் கிழமைகளில் வட மாலை சாத்துவோரும், சிதறு தேங்காய் விடுவோருமாக இங்கே பக்தர்கள் கூட்டம் நிரம்பி வழியும். குழந்தைகளின் கூச்சல் தாங்காது. அவர்களில் சிலர் என்னுடைய பின்னலைப் பிடித்து இழுத்துவிட்டுச் சிரிப்பார்கள். அவர்களுக்கு அது சிரிப்பாயிருக்கும்: எனக்கோ அது தாங்கமுடியாத வலியாயிருக்கும் – அழுவேன். அர்ச்சகர்– இதே அர்ச்சகர்தான் – பூஜையை முடித்துக்கொண்டு பிரசாதம் வழங்குவதற்காக வெளியே வருவார். 'மாமா, மாமா! எனக்கு மாமா, எனக்கு மாமா!'' என்று குழந்தைகள் இவரைச் சூழ்ந்து கொள்ளும். இவரால் அவர்களைச் சமாளிக்க முடியாது. என்ன செய்வார், பாவம்! அவர்கள் கையில் இவர் பிரசாதமும் கொடுப்பார்; தலையில் குட்டும் கொடுப்பார். அந்தக் குட்டை அப்போது வாங்கியவர்களில் அடியேனும் ஒருவன். அன்று என்னைக்குட்டியவர் இன்று என்ன செய்கிறார்? எல்லோருக்கும் முன்னால் எனக்குப் பிரசாதம் வழங்கியதோடு, ரோஜாப்பூ மாலையையும் கொண்டுவந்து போட்டிருக்கிறார். இதெல்லாம் ஆள் கொண்டாரின் அருள்தான் என்றாலும், ஒன்றுமட்டும் உண்மை – அதாவது, இன்று இவரிடம் குட்டு வாங்கும் குழந்தைகள் நாளைக்கு என்னைப்போல் இவருடைய கையால் மாலையும் போட்டுக்கொள்ளலாமல்லவா?''

பேசி முடித்த பாகவதர் பொருட்செறிவுடன் ஒரு சிரிப்புச் சிரித்தார்; அவரைத் தொடர்ந்து அர்ச்சகர் உள்பட எல்லோரும் சிரித்தார்கள்.

இப்போது புரிந்துவிட்டது – சிறிது நேரத்துக்கு முன்னால் அர்ச்சகர் தம்மை வழி மறித்த குழந்தைகளைக் குட்டும்போது பாகவதர் ஏன் தம்முடைய தலையைத் தடவிவிட்டுக் கொண்டார் என்று!

**எல்லாம் சிவன் செயல் என்றெண்ணி...**

பாகவதரின் எட்டாவது படம் 'சிவகவி'. தமிழ் இலக்கிய உலகில் புகழ் பெற்ற பொய்யாமொழிப்புலவரின் வாழ்க்கை வரலாற்றுக்குத்தான், அதைத் திரைக்கதையாக்கி வசனம் எழுதிய திரு இளங்கோவன் 'சிவகவி' என்று பெயர் வைத்திருந்தார். ஏற்கனவே பல வெற்றிப் படங்களை எடுத்து வெளியிட்டிருந்த கோவை பட்சி ராஜாபிலிம்ஸார் இதையும் எடுத்து வெளியிட்டிருந்தார்கள். பாகவதரின் வாழ்விலும் தாழ்விலும் பங்கு கொண்ட திரு எஸ். எம்.ஸ்ரீராமுலு நாயுடு இதை டைரக்ட் செய்திருந்தார். அந்த நாள் திரையுலகத் தாரகையான டி.ஆர்.ராஜகுமாரி பாகவதருடன் முதன் முதலாக நடித்த படம் இதுவே, ஆனால் கதாநாயகியாக அல்ல; சோழ நாட்டுப் புலவர் பெருமக்கள் குழுவைச் சேர்ந்த வஞ்சியாக.

ராஜா. சர் அண்ணாமலை செட்டியார், திரு ஆர்.கே.சண்முகம் செட்டியார், திரு.டி.கே. சிதம்பரநாத முதலியார், திரு கல்கி ரா.கிருஷ்ணமூர்த்தி, 'திருமதி எம்.எஸ்.சுப்புலட்சுமி ஆகியோருடன் சேர்ந்து அப்போது தமிசையை வளர்த்துக்கொண்டிருந்த பாகவதர், இந்தப் படத்தில்,

> "தமியேன் பைந்தமிழ் அன்னையின் பாலருந்தித்
> தமிழ்ப் பாலன் தமிழ் வளர
> உயிர் வாழும் ஊழியனென் றுலகறியும்..."

என்று பாடித் தமிழையும் வளர்த்தார். இதற்குப் பின் ஒன்பதாவது படமாக வந்து, ஏறக்குறைய ஆயிரம் நாட்கள் ஒரே தியேட்டரில் ஓடியபடம் 'ஹரிதாஸ்.' பாகவதரின் வாழ்க்கையில் பல திருப்பங்களை உண்டாக்கி வைத்த படமும் இதுவே.

இந்தப் படம் அந்த வருடத் தீபாவளியன்று வெளியாயிற்று. பாகவதர் அப்போது தம்முடைய திருச்சி மாளிகையிலே தீபாவளிக் கொண்டாட்டத்தில் ஈடுபட்டிருந்தார். மாளிகை என்றால் சாதாரண மாளிகையா? 'எழிலிசை மன்னரு'க்கேற்ற 'எழில் மாளிகை' அது. யுத்த காலத்தில் வெள்ளை ராணுவ அதிகாரிகள் தங்குவதற்காக அதைக் கொடுத்துதவியிருந்தார் பாகவதர். அந்த மாளிகையின் வாசலில் வெள்ளையர்கள் என்ன எழுதிவைத்திருந்தார்களாம், தெரியுமா? 'உள்ளே வருபவர்கள் தயவு செய்து தங்கள் கால்களில் உள்ள பூட்சுகளைக் கழற்றி வெளியே வைத்துவிட்டுவரவும்' என்று எழுதி வைத்திருந்தார்களாம். சாப்பிடும்போது கூடக் கால்களில் உள்ள பூட்சுகளைக் கழற்றாமல் சாப்பிடும் வழக்கமுடைய அவர்களையே அந்தமாளிகை அப்படி எழுதவைத்தது என்றால், அதன் அழகு எத்தகைய அழகாயிருந்திருக்க வேண்டும் என்பதை நீங்களே ஊகித்துக் கொள்ளுங்கள்.

அந்த அழகு மாளிகையில் அழகழகான கார்கள் மட்டுமல்ல; வெண்குதிரை பூட்டிய வண்டியொன்றும் இருந்தது. புதுமையில் மட்டுமின்றிப் பழமையிலும் பற்று கொண்டிருந்த பாகவதருக்கு அந்த வண்டியில் ஏறிச்சவாரி செய்வதில் ஓர் ஆனந்தம். அந்த ஆனந்தம் காரணமாக அவர்தாம் விரும்பும்போதெல்லாம் அதில் ஏறி, அதைத் தாமே ஓட்டிச்செல்வதுண்டு.

அந்த வழக்கத்தையொட்டி, தீபாவளியன்று சில நண்பர்களைநேரில் சென்று விசாரிக்கவேண்டுமென்று நினைத்த பாகவதர், குதிரை வண்டியில் போனார். நண்பர்களைப் பார்த்து விசாரித்து விட்டுத்திரும்பும்போது ஒரு விபத்து – ரோடு போடுவதற்காக வழியில் கொட்டி வைக்கப் பட்டிருந்த ஒரு கருங்கல் குவியலின் மேல் அவருடைய வண்டிச்சக்கரம் ஏறிற்று. அதிலிருந்து வண்டியைத் திருப்பப் பாகவதர்முயன்றார். அவ்வளவுதான் – வண்டி குடை

சாய்ந்தது; அவரும் அதனுடன் சாய்ந்து கீழே விழுந்து விட்டார்.

அதன் பலன்? — முழங்கால் இரண்டிலும் நல்ல அடி; தாமாக எழுந்து நிற்கக்கூட முடியவில்லை அவரால்.

நல்லவேளையாக இந்த விபத்து அவருடைய மாளிகைக்கு எதிர்த்தாற்போலவே நடந்ததால், இதைக் கண்டு வெளியே ஓடிவந்த நண்பர்களில் சிலர் அவரை அப்படியே தூக்கிக் கொண்டு உள்ளே போனார்கள். உடனே டாக்டர் வரவழைக்கப்பட்டார். தக்க சிகிச்சைக்குப்பின் அவருடைய கால்கள் பழைய நிலைக்குத் திரும்பப் பத்துப் பதினைந்து நாட்கள் ஆயின. அதுவரை அவர் 'நொண்டி யாகவே இருக்க நேர்ந்தது.

இதில் ஒரு விசேஷம் என்னவென்றால், அன்று வெளியான 'ஹரிதாஸ்' படத்திலும் அவர் 'நொண்டி'யாக நடித்திருந்ததுதான்!

இந்த 'ஒற்றுமை', காரணமாக இதை அன்று பலர் 'அபசகுன'மாகக் கருதினார்கள். ஆயினும் அமோக ஆதரவு. அதனால் மேலும் மேலும் வளர்ந்த பாகவதரின் புகழ் – எல்லாமாகச் சேர்ந்து அந்த 'அபசகுனத்தை'ப் பொய்யாக்கி வந்தன.

அதற்கேற்றாற்போல் 'ஒரு படத்தில் நடிக்கும்போது இன்னொரு படத்தில் நடிக்க ஒப்புக்கொள்ளமாட்டேன்!' என்று அதுவரை மறுத்துவந்த பாகவதரை, அந்த வருடம் சேர்ந்தாற்போல் பத்துப்படங்களில் நடிக்கப் படாதிபதிகள் எப்படியோ ஒத்துக் கொள்ள வைத்துவிட்டார்கள். அது மட்டுமல்ல; அதுவரை ஒரு படத்தில் நடிக்க ஒரு லட்சம் ரூபாய் கொடுத்துவந்தவர்கள், இப்போது இரண்டு லட்சம் ரூபாய் கொடுக்கவும் முன்வந்தார்கள்.அதன் பயனாக ராஜயோகி, ஸ்ரீமுருகன், வால்மீகி, உதயணன், பக்தமேதா, பில்ஹணன், ஜீவகன், காளிதாஸ், நம்பியாண்டார் நம்பி

# ஒரு வேண்டுகோள்

விதி வசத்தால் பாகவதர் சிறை செல்ல நேர்ந்த பொழுது அவர் நடித்துக்கொண்டிருந்த வசந்தசேனா, ஸ்ரீவள்ளி, ராஜயோகி போன்ற பல படங்கள் முற்றுப்பெறாத காரணத்தால் வெளிவ்ராமலே போயின. அவற்றுள் ஏவி. எம்.நிறுவனத்தாரின் ராஜயோகியில் எட்டு அற்புதமான பாடல்களை அவர் பாடியிருக்கிறார் என்றும், அந்தப்படம் வெளிவந்திருந்தால் ஹரிதாஸ்கூட அவ்வளவு வெற்றி கண்டிராது என்றும் திரு டி.கே.பகவதி ஒரு பொதுக் கூட்டத்தில் சொல்ல நான் கேட்டிருக்கிறேன். பாகவதர் இருந்த காலத்தில் அவருடைய படங்கள் பாடல்களுக் காகவே வருடக்கணக்கில் ஓடின ஆகையால் 'ராஜயோகி' போன்ற படங்கள் முற்றுப்பெறாமற் போனாலும் அம் மாதிரிபடங்களில் அவா பாடியுள்ள பாட்டுக்களை இசைத் தட்டுக்களாகவாவது வெளியிட ஏவி.எம்.அவர்களின் குமாரர்கள் முயற்சி எடுக்கவேண்டுகிறேன்.

அத்துடன், இரண்டு ஆண்டுகளுகககு முன் '67–ல் கலைவாணர்' என்று ஒரு படத்தை, அவர் நடித்த படங் களிலிருந்து சில காட்சிகளைத் தொகுத்து வெளியிட்டு, அன்னாருக்கு அஞ்சலி செலுத்தினார்கள். அதைப்போல் இசைவாணருடைய அமர காவியங்களான சாரங்கதாரா, சிந்தாமணி, அம்பிகாபதி, திருநீலகண்டர், அசோக்குமார், சிவகவி, ஹரிதாஸ்போன்ற படங்களிலிருந்து பாடல்கள் உள்ள சில காட்சிகளை முறையாகத் தொகுத்து வெளியிட்டால் என்போன்ற பாகவதர் பித்தர்கள் மனம் மகிழ்வார்கள்

*சென்னை–28.* *என்.ரங்கராஜன்.*



ஏழிசை மன்னர் என்று அழைக்கப்பட்ட எம்.கே.டி. பாகவதர் திரைப்பட வரலாற்றில் வாழ்ந்து கொண்டிருப்பவர்.

தன் மதுரமான குரலில் கர்நாடக இசையின் மீது எல்லோரையும் பற்றுக் கொள்ள வைத்தவர்.

இவருடைய இசை நிகழ்ச்சிக்கு தேனுண்ணும் வண்டாக மக்கள் கூட்டம் அலைமோதும்.

பாகவதர் ஒரு நடிகர், பாடகர் என்ற சிறப்புகளுக்கு அப்பால் அவர் சொந்த வாழக்கையில் பாசம் கொண்ட குடும்பத்தலைவராக, மற்றவர் துயர்துடைத்த மனத்தினராக, தன்னுடன் பணியாற்றிய இசைக் கலைஞர்கள் நலனில் அக்கறை கொண்ட மனிதராக, அவருடைய பன்முகப் பார்வைபற்றியும், குழந்தை உள்ளத்தையும் பல கோணங்களில் விந்தன் அறிய செய்திகளைத் திரட்டி இந்த வரலாற்று நூலை சுவையாக எழுதியுள்ளார்.

000052